வயிரவன்கோயிற்
புராணம்.

உ
சிவமயம்.
கணபதிதுணை.
திருச்சிற்றம்பலம்.

வயிரவன்கோயிற் புராணம்.

இஃது
தருமபுராதீன வித்துவான்
சேந்தன்குடி
ஸ்ரீ
வி - நடராசகவிராயர்
அவர்களாலியற்றப்பட்டு,

தேவிகோட்டை
மகாகனம் பொருந்திய
வித்துவச்சிகாமணி
வீர. லெ.
சிந்நயச்செட்டியாரவர்களால்
பெரும்பான்மையும் புதுக்கப்பெற்றது.

சென்னை:
ஊ - புஷ்பரதசெட்டி அண்டு கம்பினியாரால்
கலாரத்நாகரம் என்னும்
அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

மன்மதஞு சித்திரைமீ. 1895

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்.

தஞ்சைமாநகரம், சதாவதானம்

ஸ்ரீமது சுப்பிரமண்ணிய ஐயரவர்கள்

இயற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காசினியிற் சித்தரொலா மரபின்றி யுறுசெம்பின் காசை யோச்சி
வாசியெடை குறைபொன்னு மாற்றுவர்மன் சிங்கயப்பேர் வணிகர் கோமா
னேசில்வயி ரவபுரச்சீர் பகர்நடரா சன்கவிச்செம் பின்கா சோச்சி
வாசியெடை குறையாத பொன்னுமாற் றினன்மாற்றார் மரபான் மாதோ.

அமராபதிப்புதுவூர், வயி. நாக. ராம. அ.

ம-௱-௱-ஸ்ரீ இராமநாதச்செட்டியா ரவர்களால்

இயற்றப்பட்டது.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

திருவளர்பாண்டியநாட்டுவேண்டியநாட்டுறுகருணைச்செழுங்கைக்காங்குக்
கருவளர்வான்றிரிதருபுட்கலாவருத்தமேக்கறுக்குங்கவின்சேர்ச்செல்வத்
திருவளர்மாதனவணிகர்கோயில்களொன்பதிலொன்றென்றோங்கிநீடு
மருவளர்பூஞ்சோலைபுடைமலியொலிநீர்வடுகேபுரமாண்பிற்றுமால். (௧)

மேற்கூறுவளநகர்மான்மியவடநூறனையினிதுவிளங்கவான்றீம்
பாற்கூறுசுவையதமிழ்ப்பாவினியற்றினனென்பபரவுவிண்ணுங்
காற்கூறுநிகர்கிடையாமாயூரவடகுபக்கண்ணிற்கண்ணிற்
சேற்கூறுசெயுமடவார்செறிசேர்தன்குடிவாழ்க்கைசிறந்தான்மன்னோ. (௨)

மதிமலியுஞ்சடாபாரத்திறையவனையிறையேனுமறவாநாளுந்
துதிமலியும்பூசனையாற்றலிற்பொழுதுபழுதாக்காத்தூய்மையாள
னதிமலியுமதியுடையநடராசகவிபோனுமதையாராய்வா
னிதிமலியுமேழகப்பேர்த்திருவானநகரத்தார்நேடிமாதோ. (௩)

காந்துமணிப்பணிச்சுடிகைமீக்கிடந்தபூதலத்திற்கற்றோர்க்கெல்லா
மாந்துசுவைத்தாகவிலக்கணம்புணர்த்திச்செவிக்குமினிமையதாவெங்கட்
கேந்துநெடும்புகழ்தழைக்கவிம்மைமறுமைப்பயனுமெய்துகென்னப்
போந்துமிகவேண்டுமொழிசெவிசார்த்திப்புன்முறுவல்புரிந்துபின்னர். (௪)

பார்வதியுந்தரங்கமுறப்படர்கங்காநதியுநறும்பசும்பொற்கொன்றைத்
தார்வதியுங்குடிலசடிலத்துமிடப்பாகத்துந்தணவாவையத்
தேர்வதியுந்தயாவாரிதெய்வகதையாகலினுஞ்செய்தானென்னும்
பேர்வதியுமவன்கணருளுடைமையினுமன்னதற்குப்பெரிதிசைந்தே. (௫)

குறியவகத்தியமுனியுமகிழ்சிறந்துநெடிதோங்கக்குவலையத்தோர்
நறியவகத்தியமென்னவேத்தெடுப்பவையமுரணவைகள்யாவு
மெறியவகத்தியவுளர்தெள்ளமுதவிருந்தென்றுண்ணுவிருந்தேமாப்பச்
செறியவகத்தியமில்லாச்செய்யுட்காவியம்புறம்போய்ச்சிதறுகிற்ப. (௬)

உழைக்குமிலக்கியமுமிலக்கணமுமொருங்கோரிடத்தேயுய்த்ததென்ன
விழைக்கும்வெகுவிதநுட்பக்கற்பனைபற்பலகுழுமியெவணும்போர்ப்பக்
குழைக்குமறன்பொருளின்பம்வீடிவற்றினியன்முழுதுங்கொளுவியாருந்
தழைக்கும்வகைபுதிதளித்தானத்தகையோன்யாவனெனிற்சாற்றக்கேண்மின். ()

ஏற்றோர்விட்புலப்புலவரொணினுமவர்க்கிட்டபெயர்க்கிணங்கமற்றும்
வேற்றோர்லகரமெய்சேர்த்தளித்துப்போக்குதலன்றிமிடியிற்றுழூஉ
வாற்றேமென்பார்க்குநிதியடையாளலகரமெய்சேர்த்தளியாநிற்கும்
பேற்றோர்பொன்மாற்றாணைஞ்ஞூற்றீசர்த்தொழுமன்னர்பின்னருள்ளால். (அ)

உருத்தேவைப்பதிபடவெய்துருத்தேய்வையெய்துமதனெடுங்குஞ்செம்மைக்
குருத்தேவைப்பதிதசயிரிபங்கடவுங்கொடியனுரங்குமைக்குங்கோவைக்
கருத்தேவைப்பதிகமுறீஇச்சிவானந்தக்களிப்புடையான்கல்விச்சிங்கந்
திருத்தேவைப்பதிவதியுங்கவிச்சிம்புள்சிந்நயப்பேர்ச்செல்வனம்மா. (கூ)

அரியக்குடி
ம-ா-ா-ஸ்ரீ சா. கி. அரங்கநாதச் செட்டியாரவர்கள்
இயற்றியது.

நேரிசைவெண்பா.

மன்னு வடுகபுரி மான்மியமாம் பேருவரி
தன்னைநட ராசன் றரத்தமிழாற் - சிந்நயனென்
றெண்ணியபேர்த் தேவை யெழிலியதைத் தூய்தாக்கி
யண்ணியபூ மிக்களித்த தால்.

தேவிகோட்டைச்
சைவப்பிரகாசவித்தியாசாலைத் தலைமையுபாத்தியாயர்
குரு. சுப்பிரமணியையரவர்கள்
இயற்றியது.

நிலைமண்டில வாசிரியப்பா.

விதுவளர் மதலை விடபியைப் பார்த்துக்
கதுமெனப் போந்து கண்ணுத லோனென
வெள்ளியங் கிரியில் வேத்திரப் படையடிக்
குள்ளுடைந் தண்ண லுருவ நோக்கா

மாயோன் மகிழ்ந்து வழிபடு முல்லையுஞ்
சேயோன் வள்ளிபோற் சேர்த்த மடவியர்
நாடிற் கிடைப்பர் நமக்கினு மெனத்தினங்
கூடிக் குடிகொளுங் கோடியர் குறிஞ்சியுங்
களைகடு கன்னியர் கவின்முகங் காணூஉ
விளைமதுக் குவளை மிக்கலர் மருதமும்
வெண்மணற் குன்று வியன்பெருங் கயிலையிற்
கண்ணகன் றோங்குங் கடற்கழி நெய்தலும்
பல்வளந் தரவுயர் பாண்டிநன் னாட்டிற்
செல்வளர் பொதும்பர் திகழ்திருப் புத்தூர்க்
கருகொளிர் பதியு மாவியிற் பிறழ்கயல்
வருமுலை வஞ்சியர் வாள்விழி வெரீஇ
யங்குறு கமலத் தடைக்கலம் புகுத
விங்கிதென் னென்று வெழில்கொளங் நளின
மெஞ்செய லுமதுபோன் மென்றவைக் குணர்த்தி
யஞ்சி யெழினியிட் டவணொளித் தாங்குத்
திரையினுட் கிளருஞ் செழுநீர்த் தடஞ்சூழ்
வரையறை யறியா மல்லற் பதியு
மெக்கட வுளர்க்கு மிறைவனு மெம்பிரான்
மைக்கருங் குழலி வடிவுடை யாளுடன்
வளரொளி நாதப் பெயர்கொடு மருவ
வளவறு பணிமணி யளவுறு பணிமணிச்
சினகரக் கதிராற் செறியிருட் படலை
தினகரற் கண்டெனத் திசைதொறு மிரிய
வானுல கத்தை வணக்கும் பதியு
மான வயிரவன் கோயிற் கமைபுகழ்
சேர்ந்திடு கதையைச் சேந்தன் குடிவயி
னூர்ந்த நடேச வபிதா னத்தோன்
றென்மொழி யாலே செப்பச் செப்ப
வின்மொழி புணர்த்தி யிலக்கண வழுக்களைந்
தணிபல கொளீஇ யைங்காப் பியத்தினும்
மணிமிக வொன்பா னிரதமும் வகுத்துச்
சித்தாந் தத்தைத் திரட்டிப் புகுவித்
தித்தா ரணியோ ரினிதுகூட் டுணப்புதி

தாக்கி நல்கின னன்னோன் யாரெனின்
வாக்கபி ராமியு மாமியும் புணருந்
தேவி கோட்டைத் திருநகர்த் தலைவன்
பூவையர் விரும்பும் பொற்பிற் பொலிபவன்
நலக்குல மேவி நகுவி ரப்பக்
குலக்கட லெழுதரு மிலக்கு மணனுங்
கனமீன் றெடுத்த கனமார் மாமணி
தனையே நிகர்த்த சைவ சிகாமணி
தலக்கு ணிவந்தன சம்பத் துடைமையா
லிலக்கு மணப்பே ரேய்ந்த சீரிய
னன்றியு மெம்மனோர்க் கறிவை யளித்தலாற்
றுன்றிய சிங்கயத் தொல்பெயர் புனைந்தோன்
றனவை சியகுலந் தழைந்து நிலவ
மனவணி யணியும் வரன்றிரு வருளால்
வந்தவ தரித்துளான் வாணியை வெற்றிகொண்
டந்தகு தன்னு வகன்சிறை வைத்தலும்
பீடுசால் சேடன் பெண்ணினை வேற
லாடவர்க் கழகி தன்றெனக் கழறித்
தருக்கல்கண் டவனைத் தாலுப் போழ்ந்துதா
னிருக்குமன் சுமப்பித் திடுதமிழ்ச் சரபம்
மதிக்க ணுட்பமும் வரம்பினூற் கல்வியுங்
கதித்த கேள்வியுங் கட்டுரை வன்மையுந்
தொழுதகைச் சுவைக்கவித் துவமு மென்றிம்
முழுது நிரம்பிய முதற்புல வோனே.

யாழ்ப்பாணத்துப்புலோலி வித்துவான்
ம. தில்லைநாதப்பிள்ளையவர்கள் மாணாக்கர்
பெருந்தோட்டம்
தெ. சி. துரைச்சாமிப்பிள்ளை யவர்கள்
இயற்றியது.

நிலைமண்டில வாசிரியப்பா.

திருமலி பொன்னு மருமலிந் தோங்கு
சந்திர திலகமுஞ் சிந்துரக் கோடு
மாரமு மெழின்மா யூரத் தோகையுஞ்
சுடர்விடு மணியும் படர்திரைக் கரத்தால்

வீசுநீர்ப் பொன்னித் தேசுறு தீரத்
தம்பிகை மஞ்ஞையா யெம்பிராற் சபரியை
பண்ணிய மயிலைப் புண்ணிய நகர்க்கொரு
சாருற் றிலங்கு மேருறு சேந்தன்
குடியெனும் பதிவயிற் குடிகொளு நல்லோ
னும்பர்நா யகனுஞ் சம்புவின் பாதப்
போதினி லன்பினுற் ருதிவர் மலர்தூஉய்
நித்தலு மேத்தும் பத்திமை யாளன்
ருளாண்மை யோங்கும் வேளாண் குலத்தோ
னன்னடை யாவு மன்னுறக் கொண்டோன்
றிடனுர் புகழ்சேர் நடராச கவிஞன்
மெய்யது பிறங்குஞ் செய்யதென் னுட்டி
னற்றட மாடும் பொற்றொடி மாதர்தங்
கனிவா யெயிற்றி னினியதென் ணிலவாற்
றுங்கமார் பகலினும் பங்கயங் கூம்பக்
கயிரவ மலரும் வயிரவன் கோயிற்
புலவர் போற்றுந் தலபுரா ணத்தை
வளமார்ந் திலங்கு மளகை யாளி
தனைத்தோ ழனுக்கொள் கனக்கண் டற்குப்
பூவுல கந்தனின் மேவிய நகரொலாம்
பொற்பணி புரிதற் கற்புளந் துன்னி
யிருநிதி நிலவும் பொருவில்பல் வணிகரா
யுற்றன னென்றே நற்றவ மேதையர்
கூறு மிரும்புக ழேறு மேழகப்
பெருந்திரு வாள ரிரும்புவி மாந்தர்
யாவரு முயத்தமிழ்ப் பாவினு லியற்றித்
தருக வென்னப் பெருகு மன்பாற்
கனாந்திட வதன்கண் ணிரம்பிய வழுவைச்
சோதனை புரிந்தென நூதனத் தியற்றி
யினியவைக் கெல்லா நனியினி தென்ன
வாக்கி யீந்தனன் மேக்குய ரிக்கின்
றரளத் திரளை விரிசிறைப் பவளவாய்
மராளங் கண்டு விராவு காதலாற்
சினையென் றடைசெயுங் கனைபுனற் கழனியுஞ்

சில்லியொன் றுடைய வெல்லி சந்தன
மீர்த்தே கும்பரி சீர்த்தா நிமிர்த்துக்
குழையயில் பொழிலு மழைதவழ் பன்மணி
மாடமும் பிரசமா ரோடவிழ் கமல
வாவியுஞ் சூழுந் தேவி கோட்டைத்
திருநகர் வாழு மிருநிதி வணிக்குலத்
திலக்கு மணப்பெயர் நலத்தகு செம்ம
லாற்றுநோன் பாற்புவி போற்றிய வுதித்தோன்
றூன்மையி னேங்கு நன்னிதி யாளன்
மாதவன் போற்றுஞ் சேதுவி லோதன
சத்திர மியற்றிய வுத்தம தரும
வீரப்ப வள்ளலின் சீருறு பவுத்திர
னற்புத நீற்றொடு சிற்பரன் கண்மணி
பொற்புறு மேனியி லற்புட னணிவோன்
சொற்பனந் தனிலும் பொற்பொதுக் குனிக்கும்
பங்கய மறவாத் துங்கமா ருளத்தன்
கருதின வளிக்கும் பொருவில்சிந் தாமணி
கைம்மா றெண்ணு தெம்மா நிதியு
மாதுலர் கொளப்பொழி மேதகு கொண்மூ
நிலவுசெந் தமிழுணர் மலயமா தவனு
மாணிறை வடநூற் பாணினி முனியுமா
மிருவருங் கூடி யொருதிரு வுருவாய்
வந்தன னெனவிரு சுந்தர மொழிக்கடற்
றீரங் கண்ட தீரனுற் றுனா
யாவிபோல வோவா தளிப்பவன்
கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தகவெனு நீணெறி
வள்ளுவ ருரைக்குத் தெள்ளுதா ரணமா
விற்பனர் கூறுஞ் சற்சன சிகாமணி
யென்னுளத் தகத்து மென்றும் வாழ்பவன்
சிங்கய நாம மன்னிய மன்னே.


சிறப்புப்பாயிர முற்றிற்று.

உ

சிவமயம்.

வைரவன் கோயிற்புராணம்

படல அட்டவணை.



உ

சிவமயம்.

வைரவன்கோயிற் புராணம்.

பாயிரம்.

விநாயகர் காப்பு.

சீர்பெற்றோங்குஞ்சிவசத்திகுஞ்சரப்
பேர்பெற்றீன்றபெரும்பெயர்ப்பிள்ளையை
நார்பெற்றுள்ளநளினத்திருவினர்
பார்பெற்றெய்துவர்பல்வகைச்செல்வமும். (க)

வாழ்த்து.

அந்தணர்வானத்துள்ளாரானினஞ்செழித்துவாழ்க
கொந்தணிமுகில்வழாதுகுளிர்மழைபொழிககோமான்
செந்தனிக்கோல்படர்ந்துதிசையெலாங்காக்கவையஞ்
சந்ததமார்கவின்பஞ்சைவசித்தாந்தம்வெல்க. (உ)

பயன்.

வயிரவன் கோயிற் றலபுரா ணத்தை மல்கிய விருப்பொடு கேட்போ, ரயிரவண் மண்டு கனைபொரு தரங்கத் தாழிசூ ழவனிமே லூருண், டெயிரவ ராகிப் பிணியொரீஇச் செல்வத் தோங்குபு நன்மகார்ப் பெற்றுக், கயிரவ மலர்வாய்க் கௌரியோர் பாகன் கழனிழன் முடிவினிற் கலப்பார். (௩)

வளரொளிநாதர்துதி.

சீர்மலியும்பொருண்மலியுஞ்சிற்பரனாருண்மலியும்
வார்மலியுந்தனத்தாயாம்வடிவுடையாளொருபாகன்
கார்மலியுங்கண்டத்தெங்கண்ணுதலான்வளரொளிப்பேர்த்
தார்மலியும்பரசிவன்றாடலமலியவணங்கிடுவாம். (ச)

வடிவுடையம்மை.

எழுதாமறையின்மின்னருமெழுதாமறையுமினிதேத்தித்
தொழுதாயனந்தவுயிரகத்துந்தூய்தாயரியமந்தணமாய்
முழுதாய்மனுவாய்மூதுலகாய்முதிருஞ்சுவைப்பாற்கரந்துறையு
மிழுதாயெவையுங்கலந்தவடிவுடையாளிணைத்தாளிறைஞ்சிடுவாம்

நடேசர்.

பெண்ணுடாணலியென்றேதும்பிரபஞ்சத்துயிர்களுய்வான்
றெண்ணிலமதிமுகத்துச்சிவகாமவல்லிகாண
வண்ணுமைந்தொழில்பயக்குமானந்தநடஞ்செய்கின்ற
புண்ணியன்குஞ்சிதச்செம்பொன்னடிபோற்றிவாழ்தும். (சு)

தக்ஷிணாமூர்த்தி.

காரணமாகியனைத்துலகினுக்குங்களைகணுயாதியோடந்த
நாரணன்பிரமனின்னமுந்துருவிநண்ணருநுண்ணியபொருளாய்ச்
சீரணவுறுமாநால்வரைச்செய்ததேசிகசிகாமணியாகி
யாரணம்பழிச்சுமானிழலமர்ந்தவடிகளையகத்திடையமைப்பாம். ()

விநாயகர்.

பணிகொள்பாயும்பாட்டளிசேர்பதுமாதனமும்புட்பகமுந்
திணிகொளயிராவதக்களிறுஞ்சிறந்தகயிலைப்பெருவாழ்வுந்
தணிகொள்சென்னித்திருத்தொண்டர்தமக்குநல்குமைங்கரத்தா
னணிகொள்செய்யதுணைப்பாதத்தன்புபுரிவாமனவரதம். (அ)

சிதம்பரவிநாயகர்.

கதம்பெறுகயமுகக்கயவற்காய்ந்துமு
னிதம்புரிந்துயிர்க்கெலாமிடுக்கணீக்குபு
விதம்படுசீர்த்தியாலுலகைவேய்ந்துள
சிதம்பரவிநாயகத்தேவைப்போற்றுவாம். (கூ)

வை ர வ ர்.

படைக்கும்பரிசும்படியளிக்கும்பண்பும்பதுமப்பண்ணவற்குந்
தொடைப்பைந்துளவத்திருமாற்குஞ்சுதந்தரத்ததொழிலன்மை
முடைப்புன்றலைவெண்கலன்கரியமுழுக்கஞ்சுகமென்றிவ்வுணர்த்த
மடைத்தண்புனல்போலருள்வழங்கும்வடுகநாதன்வழித்துணையே.

சுப்பிரமணியர்.

புள்ளிப்பிணைமேனாட்பயந்தபொன்னங்கொம்பரன்னாளை
வள்ளிப்பொருப்பில்வாழ்மயிலைவடிவுமுதிர்ந்தகௌமாரந்
தள்ளிக்கிழமாதவனாகித்தனித்துப்புணர்ந்தவிளஞ்சேயின்
கள்ளிற்பொலியுங்கடிகமழ்பூங்கமலமலர்த்தாள்கைதொழுவாம். ()

திருநந்திதேவர்.

அறிவருங் காமி காதியா கமப்பே ரார்கலிக் களவுகோ லாகிச், செறிவினாற் பவஞ்ச முழுவதுஞ் சுத்த சிவபரஞ் சுடரொனத் தெளிந்து, நெறிகெழு சனற்கு மாரனுக் குண்மை நிலையினை மலைவற நிகழ்த்திப், பிறிவில வின்ப வெள்ளத்துட் டிளைக்கும் பெருந்தகை நந்திதாள் பெட்பாம். (கஉ)

திருஞானசம்பந்தர்.

எண்ணிறைந்தபல்வேதத்தியன்றுள்ளபொருளொருங்கே
பண்ணிறைந்தபதிகத்திலமைத்திசைத்துப்பண்டென்பு
பெண்ணிறைந்தவுருவெய்திப்பிழைத்தெழுமாகடைக்கணித்துக்
கண்ணிறைந்தநுதற்பதியைக்கலந்தபிரான்கழல்போற்றி. (கங)

திருநாவுக்கரசர்.

திருநீறு மைந்தெழுத்துங் கண்டிகையு மெய்ப்பொருளாந் திறந் தெரிப்பான், பெருநீறு நிறையறைபுக் கொருதீங்கு மின்றியெழீஇப் பிறவித் துன்பக், கருநீறு படப்புரிந்து பகலூரும் புகலூரிற் கடவு ளோர்மெய், வருநீறு புனைபெருமான் றனைவிரவு நாவரசின் மலர்த்தாள் போற்றி. (கச)

தம்பிரான்றோழர்.

உருவெண்ணெ யுவாமதிய மொளிர்படிக மெனக்கொண்டவுலக நாதன், திருவெண்ணெய் நல்லூரில் வலிந்தாளு மரும்பேறு

சிறக்கப் பெற்றுத், தருவண்ணல் சதுர்முகன்மா ருழ்ந்திறைஞ்சக் கயிலைக்குத் தந்தி மேற்செல், பெருவண்ணல் சுந்தரனை யந்தர மின் றெஞ்ஞான்றும் பேணி வாழ்வாம். (கரு)

திருவாதவூரர்.

அனற்படுபூதிசாதனமெழுத்தைந்தாகமமென்னுகாலங்கத்
தினப்புலப்பகைஞாவனாவென்ருங்கினியபேரின்பநாடெய்தி
மனத்திடைவெகுளிமாறுருமாறன்மாறுசொண்டோச்சவெம்மானை
வனச்சடைமுடிமேன்மண்சுமப்பித்தமன்னனைவைகலுந்துதிப்பாம்

சண்டேசர்.

சும்மைவான் புகழ்ச்சேய்ஞ லூருதித்து மண்ணிநதிச் சூழ லோர்சார், செம்மைசேர் செழுமறையோர் திருந்துமனைக் கோத னம்பெய் தீம்பால் கொண்டே, யெம்மையா ளிறைவழிபா டியற்று மிடை வெகுண்டெழுந்த வின்றேற் செற்ற, வம்மையா னடிச் சண்டிப் பெருமானுக் கடியார்கட் கடிமை பூண்டு.* (கள)

அறுபத்துமூவர்.

ஈசனடிமைத்திறனிற்றென்றெவருந்தெளியவுணர்பாக்கு
மாசிலாதவொரோவிரதவாய்மைநாளுங்கடைப்பிடித்துப்
பாசமொருவித்தமசீர்த்திபாரிற்பரப்பூஉப்பரகதிசே
ராசிலறுபான்முத்தொண்டரம்பொற்பாதத்தன்புறுவாம். (சஅ)

சேக்கிழார்.

பத்திஞானமெய்த்தவமோர்படிவங்கொண்டுவந்தாங்குத்
தொத்தினிடுபசியபொழில்சுலவுங்குன்றத்தூருதித்து
முத்திமேயதிருத்தொண்டர்முதிர்சீர்முழுதும்விரித்துரைத்த
தித்தியாநின்றுருக்குமொழிச்சேக்கிழார்தாள்சிரம்புனைவாம். (கசு)

பட்டினத்தார்.

வலம்புரிகள்கிடந்தலறிவயிறுளைந்துமணியீனும்வாரிசூழ்ந்த
நிலம்புரியுநெடுநோன்புபலிப்பவெழிற்பூம்புகார்நிலவச்சான்றோர்
குலம்புரியவணிகர்குலத்தவதரித்துப்பெருநிதியக்குப்பைநீத்த
வலம்புரியபுகழ்ச்சைவசிகாமணிபட்டினத்தடிகளடிகள்போற்றி ()

---

* பூண்டு - தன்மையொருமை முற்று.

சேந்தமிழ்ப்பாமாசாரியர்.

தேவதேவனார்திருவுளக்குறிப்பினுக்கிசைந்து
பாவகற்பொருமணிகிளர்பனிவரையொருவிப்
பூவர்சந்தனஞ்செந்தமிழ்மணங்கழ்பொதியின்
மேவகத்தியமுனிவனைவெஃகுதலஃகாம். (உக)

நாமகள்.

தளர்ந்துழியுதவியழிவுறுக்கல்வித்தனத்தினையேற்றவர்க்கீந்தே
யிளங்களியளிசூழ்தவளமுண்டகத்திலினிதுவீற்றிருப்பதுபோல
வளந்தறியாதவான்மகோடியினுவகந்தொறுமமர்ந்துநான்முகற்குத்
துளங்கலில்சுகஞ்செய்சுந்தரிபாதத்துணைமலர்துணைமலர்தருமே.

அவையடக்கம்.

துருமக்கோட்டங் குறித்ததன்பாற் றோன்றும்புறமுட் சுவைக்கனி
மருவிக்கோடல்புரிந்திரதமாந்தாமாந்தருண்டேயோ [யை
பொருளிற்புல்லாப்புல்லேன்வாய்ப்பூத்தவிந்நூற்பயன்கொள்ப
வருளிற்பெரியசிவன்சரிதமாதல்பற்றியறிந்திசினோர். (உ௩)

கள்ளியகத்துப்பிறந்தமையாற்காழ்த்தவகிலைமுனியுநரு
மள்ளன்முளைத்ததெனக்கமலமகற்றுவாருமிலரன்றே
வெள்ளமுடித்தவளரொளியார்மேன்மைக்காதைவிரிக்குமிது
பொள்ளன்மனத்தேன்றந்ததெனப்போற்றாதொழியார்புலமையினோர்.

புலமைநெறி யெட்டுணையும் புக்கறியேன் புகன்றவழுப் பொதிபுன் சொல்லைக், கலவுமிலக் கணவிதியைக் கதுவுறா மொழியென்னக் கடிதல் செய்யார், தலனினுயர் தருகூடற் றம்பிரான் றமிழ்க்கிழுக்குச் சாற்று கீர, னலனடைய வப்பெருமான் றனையிரந்தார் வாழ்நாட்டி னண்ணுந் தக்கோர். (உ௫)

பாயிர முற்றிற்று.

சிவமயம்.

வைரவன்கோயிற் புராணம்.

நாட்டுப்படலம்.

அகரவுயிர்போல்வேற்றுமையற்றாவிதோறுங்கலந்தியக்கி
நிகரிலிறைவன்வழுதியெனநீதிபுரிந்தவியற்றாகிப் [ச்சைவ
புகரினொருவிப்பொலிந்தினிமைப்பொருள்சேர்தமிழ்த்தாய்ப்புகழ்
நகரநிரம்புதென்பாண்டிநாட்டுவளத்தைநாட்டுவமால். (க)

ஆலிற்கிடந்தமாலாதியமரர்மதிக்கவந்நாளி
லோலிட்டினியதெள்ளமுதமுதவுமுததிநடந்தெனவிண்
மேலிற்படர்ந்துவீழ்ந்துவரிவியனீர்பருகியனையகட
லேலுற்றெழுந்துதிருமியாங்கெண்மூக்கொண்மூமீண்டன்றே. (உ)

சந்துந்தமிழுங்கமழ்கிற்குஞ்சாரலுடுத்தபொதியிலிடை
யுந்துந்தவத்தின்மேம்பட்டாருலப்பிலாதார்புடைசூழ
நந்துஞ்சிறப்போடினிதிருக்குநலத்தபெருஞ்சீர்க்குறுமுனிவன்
சிந்துந்திவலையெனத்தன்னைச்செய்தாசமித்ததிறநோக்கி. (௩)

தரணிசுலவுமிரும்புணரிதானங்கெழுந்துபொதியவரை
யரணிலுறையுமன்னோனையாரவாரத்துடன்பொங்கி
யிரணமுறுமாபொரவளைத்தாங்கெழிலியீட்டஞ்சூழ்ந்ததவட்
கரவினிரவிகதிரொளிப்பக்கறுத்துத்தடித்துக்குமுறியே. (௪)

புவியினுவமையிகந்தோங்குபொதியப்பொருப்பிற்போர்த்தமுகி
லவிதலின்றியருட்புலவரான்றகவிதைபொழிவதென
நவியுமுழுவைக்குழுவுங்கைந்நாகத்தினமுங்கோளரியுங்
குவியுங்குகைவாய்ப்புக்கொளிப்பக்குளிர்நீர்ச்சோனைபெய்தனவே

முன்னமொருகான்மதுரைநகர்முடிகொள்வழுதிநம்மையெலா
மின்னலுறுமாதளைபூட்டியிடுதற்கிடனாய்நின்றதிது
வென்னநினைந்துமலயத்தையிறுப்பான்முயன்றாங்குய்த்தனகார்
மின்னல்வடிவாள்விதிர்த்திடித்துவில்லிட்டம்புமாரியினை. (௬)

வே று.

திண்ணனார்திருவாயிற்செறிபுன
லண்ணல்காளத்தியப்பனையாட்டல்போல்
வண்ணமஞ்சினம்வாய்ப்பெய்யறலினுன்
மண்ணல்செய்ததுவண்டமிழ்க்குன்றையே. (எ)

ஆதியீசனணிதிகழ்மாமுடி
மீதிழிந்தவியன்புனல்போன்மெனக்
கோதிறென்மலைக்கோட்டொழுகின்றரோ
தீதினீங்கியசெய்யகமலமே. (அ)

அத்திக்கோட்டினணிகிளர்முத்தமும்
பத்திக்காம்புபகவுகுமுத்தமு
மெத்திக்கூடுமிறைத்துயர்வள்ளியோ
ரொத்தியங்கிற்றுலகிடைநீத்தமே. (கூ)

தமிழ்குலாவியசந்தனமால்வரை
யுமிழுமின்சுவையொண்புனன்மன்பதைக்
கமிழ்தமாகியதன்றிநறுமணங்
கமழுடைப்பொருளாயுங்கவினிற்றே. (க0)

கோங்குமாதவிகுங்குமங்காரகில்
வீங்குசந்தம்விரைமலர்ப்பாதிரி
யீங்குவற்றினையீர்த்துப்பொருநைதா
னேங்குவான்குறிஞ்சிக்கணுலாயதே. (கக)

வே று.

எய்யாதிரந்தார்க்குலோபியர்தாமியம்புமொழிநேரிடுகிடையு
மையார்குழலும்வாணுதலும்வாய்த்தமறவர்மகளிர்குழாம் [வாழ்
பொய்யாதென்றும்பொலியும்வளரொளியெம்பெருமான்புரிசடை
தய்யானீயிங்குற்றதெவன்சாற்றுகென்னுச்சார்ந்தனரால். (கஉ)

நெற்றிவிழியின்வளரொளிப்பேர்நிமலன்குலக்குமெங்குலக்கும்
பற்றினகலாமங்கலசம்பந்தமுண்மையானிங்ங
னுற்றகங்காநதியினைக்கண்ணுற்றுச்சாலவுபசரித்தன்
முற்றுமுறைமைநெறித்தென்னுமொய்த்துத்தொழுதார்குறமாதர்

முன்னநின்கான்முளையாயமுருகனெமதுமுகிழ்த்தமுலை
யன்னமனையாடனைக்களவிலணைந்துகவர்ந்துசென்றனனு
லென்னகருதிநீயீண்டீண்டெய்தியுள்ளாயென்றறியேம்
பன்னல்வேண்டுங்குறித்ததெனப்பகர்ந்துநகைத்தாரொயிற்றியரோ.

முந்தோர்கிரிக்குக்குமரியெனமுளைத்தாணம்மாற்றவணுமுஞ்
சந்தார்மலைக்குப்பெயர்மாறித்தனையையாதுமெனநினைந்து
வந்தாள்பாகீரதியென்னுமறவர்மடவார்வாழ்த்தெடுத்துக்
கொந்தார்நறுமென்போதுதூய்க்குரவையாடிப்பாடினரால். (கரு)

அளியரோமைக்காத்தியெனவன்பிற்போற்றியிரந்திட்ட
விளியின்குதலைக்குறத்தியர்தாமிரங்கிக்கலுழ்ந்துவயிறலைப்ப
முளிபுல்வேய்ந்தகுரம்பையினைமுழுதும்வாரிக்கொடுமுடுகிற், ரெரு
ளியன்பருளில்லான்கொடுங்கோலோச்சுமொருமன்னவனேபோல்.

பாடலோவாதளிமிழற்றும்பசியதுளவப்படலைமிடை
யாடன்மார்பிற்றிருமகளையமைத்துமணக்குமுன்னேனை
நாடவேகத்தொடுபடர்ந்துநணுகியாங்குப்புக்கன்றுற்
கோடனீடுகுறிஞ்சியொரீஇக்கொழுந்தண்பொருந்தம்புறவத்தே.

வேறு.

கல்லினைக்கவிகையாக்கிக்கனமழைகடிதுகாத்த
வல்லன்செய்விருந்துண்டென்னவாசநெய்தயிர்பாறெவ்வி
நல்லமான்மதமளைந்துநறைமலர்நிறையச்சூடி
யொல்லையங்ககன்றுவேந்தற்குரியவைப்புற்றதன்றே. (கஅ)

முத்தொடுமணியும்பொன்னுமுழங்குதிண்கரிவெண்கோடுஞ்
சித்திரம்வகுத்தாலென்னத்திகழ்வரியுழுவைத்தோலு
மெத்திசைப்பொருளுங்கொண்டேயேழகத்திருவினோராம்
பத்திகூர்வணிகர்மானப்படர்ந்ததுபொருநையங்கண். (கசு)

பூரணபுராணப்புத்தேள்புண்ணியவிடையான்சொற்ற
வாரணவழியிற்றோன்றுமாயுள்வேதத்திற்கூறுஞ்
சீரணவெண்ணில்பல்சஞ்சீவிகையரிக்கொண்டேகி
மாரணநோய்தவிர்க்குமருத்துவர்போன்றதம்மா. (உ0)

சந்தமான்மதங்கத்தூரிதக்ககோரோசனுதி
யெந்தநற்பண்டத்தோடுமிருந்திணைக்கரத்திணர்ப்பூச்
சிந்தலால்வளரொளிப்பேர்ச்சிவபிரான்றனைப்பூசிக்கு
மந்தமிலன்பரோய்க்குமத்தகுநீத்தமாதோ. (உக)

எண்ணிலாவுயிர்கட்கெல்லாமிறையெனமிறையிற்றீர்ந்த
பண்ணுலாஞ்சுருதிகூறும்பரமொன்றேயொன்பானும
நண்ணியவாறுபோலநளிதடங்கூவலேரி
தண்ணியகாலெனப்பேர்தரித்ததுபொருநைவெள்ளம். (௨௨)

வேறு.

வறுமைவாய்ப்பட்ட றமெலிந்துவருந்தாநின்றவறிஞனுக்குத்
தெறுதுன்பொழியப்பெருநிதியத்திரள்வந்தெளிதுகிடைத்தாங்கு
நறவினினிமைநிறம்படைத்தநாரம்வருநன்னிலைநோக்கிக்
கறவையெதிர்ந்தகன்றென்னக்கருங்கான்மள்ளர்களித்தணைந்தார்.

அன்னையனையாயுயிர்க்கின்பாலமுதமூட்டுந்தன்மையினன்
மன்னுமொழுக்கநிரம்புவிக்குமாண்பாற்றந்தைபுரைகின்று
யின்னலகற்றியோம்புதலாலிறைவன்றனையுமொக்கின்று
யென்னவனையமாநதியையேத்தியுழவர்விழாவயர்ந்தார். (௨௪)

பாசமகற்றித்தொண்டராத்தன்பாதநிழற்கீழ்வாழ்விக்கு
மீசனிடத்துவளர்கின்றவேழகத்தோரன்பேபோ
லோசையடுத்துமடையையுடைத்தோடிப்பாய்ந்துவெள்ளநீர்
வாசமலர்ப்பூம்பணைதோறுமன்னித்ததும்பிப்பெருகியதால். (௨௫)

வையைக்குடிஞைவளரொளிப்பேர்வள்ளல்சடைநின்றிழிந்துலக
முய்யப்பெருகிவந்தொழுகுமுலவாவீரபாண்டிபுரச்
சையக்குணத்துத்தனவணிகர்சத்திரத்துத்துத்தவர்போ
லய்யப்பாடின்றிருங்கழனியறலையார்ந்துதெவிட்டினவே. (௨௬)

வித்தவிளைவுகருதிப்பல்வேறுவகையவோடதியின்
றொத்துநிறைத்துலோகத்தைத்துகளில்சித்தர்வேதித்த
லொத்துத்தூயவாப்பிமுதலோதுபண்டக்குவைபரப்பிப்
பத்திக்கொழுவான்மள்ளரினம்பணையையூறுபடுக்கும்மே. (௨௭)

வேறு.

மந்தரநடைபெற்றென்னவருகடாக்களிறுகைக்கு
மிந்திரதெய்வம்போற்றியேரிடையொருத்தல்பூட்டிக்
கொந்தலர்க்கரஞ்சிவப்பக்கோலொடுமேழிபற்றி
யுந்தவிப்புடவியெல்லாமுழுதனருழவர்நாளால். (௨௮)

அலைகடலரவந்தள்ளியார்க்கின்றமள்ளரோதை
நிலையினைவெருவிவாளைஞெரோலெனக்குப்புற்றேகிக்
கலைமதியகடுகீண்டுகெழிசுவையமுதுகுத்துத்
தலையலர்பழனமெல்லாந்தகுபதத்தனவாச்செய்த. (௨௯)

படிமகளுடலங்கீண்டபள்ளர்காணீர்தென்பான்
முடியிறையூர்தியின்கான்முளைகளையேர்ப்பிணித்திட்
டடிவினைபுரிவீர்நுங்கட்கடுப்பவிவ்வென்றுங்கேங்கி
வடிவுடைச்சிறைக்கரத்தால்வயிறலைத்திரிந்தவன்னம். (௩௰)

தாலுமந்தரத்தான்மும்மைத்தமிழ்ப்பெருங்கடல்கடைந்து
சீலமாருலகினுக்குச்செம்பொருளமுதமீயும்
வாலுணர்வுடையாரேத்துமலயசந்தனக்குழம்பு
போலியசேறுசெய்தார்புலத்தினைவலத்தின்மள்ளர். (௩௧)

நஞ்சணிகண்டத்தெண்டோணுதனைபதிமற்றெல்லாம்
விஞ்சியபசுவென்றெண்ணும்வீரபாண்டியபுரத்தார்
தஞ்செனவடைந்தார்கட்குத்தபநியம்வீசியாங்கு
நெஞ்சகமகிழ்வினோடுநெல்விதைபாவினரால். (௩௨)

வடுவிலாவடுவினுக்குமணம்புரிகாலைமுன்னை
யுடையினையொழித்துவேறோருடையுடுத்தென்னப்பண்டைப்
படர்புனல்கவிழ்த்துநன்னீர்பாய்த்தியபின்னர்யோகத்
திடனுறுமேலோர்சின்முத்திரையெனமுளைநிவந்த. (௩௩)

புத்தெனுநரகத்துன்பம்போக்குநற்புதல்வர்தம்மைப்
பத்தியினோற்றுப்பெற்றோர்பாலனம்புரிவதேய்ப்பக்
கொத்துறுமள்ளர்கூட்டங்குறும்பயிரொழுச்சிகாணூஉத்
தத்தமிற்களித்துப்போற்றத்தளிர்ப்பொடுவளர்ந்தநாறு. (௩௪)

வேறு.

பொடியிடுவார் திரிபுரமும் பொடியிடுவார் பதத்தன்பு பொழியும் பின்னோர், படியிடுவா ரவைகொண்டு பன்மள்ளர் நாறனைத்தும் பறித்தல் செய்தே, முடியிடுவா ரவற்றினைத்தம் முடியிடுவார் கொடுபோகி முடிவி லாத, கடிமலருங் குடவளையுங் கயலினமுங் கஞலியபைங் கழனி சேர்த்தார். (௩௫)

குவலயமுந் தம்விழியும் வேறறியா வண்டரினங் குலவி மொய்ப்ப, வவமறுமென் னடைநோக்கி யனந்தொடரக் கடைசியர்க

ளங்க ணேகித், தவமலியு மாசிரியர் நிறைகுணத்து மாணவகர் த கைசா னெஞ்சு, ணவமுறுசொற் பொருணடல்போ னளிர்பணையி னுமெருங்கு நட்டார் மாதோ. (௩௬)

கருங்குவளை வெள்ளாம்பல் செங்கழுநீர் பொற்கமலங் கடி யுயிர்த்து, நெருங்குவன பிறமலரும் பைம்பயிருக் கிடையூறு நிக ழ்த்தக் கண்டு, பெரும்பயனைத் தருவதொரு பொருணிமித்தஞ் சிறுபயத்த பிறங்கும் பல்ல, முருங்கவடன் முறையென்ன வாற் றுக்களை லாட்டியரம் முழுதுங் கட்டார். (௩௭)

கலிவிரவு பாவநெறி தினைத்தனையு மனத்தகத்துக் கருது ருமே, வலிபெறுநல் வினைபுரிந்து மேதக்க மாந்தர்வயின் வாழ்வு மானப், பொலிவினொடு தினந்தோறு நனிதழைத்து வளர்ந்தோங் கிப் பொருவில் சாலி, மலிதருசூற் பசும்பாம்பின் றேற்றமெனக் கருவிருந்து வயங்கு மன்றே. (௩௮)

வாசவனு ரெழிலியினம் பருவத்தான் மழைபொழிந்து வளங் கூர் வித்து, மாசகலத் தமைநாளும் வளர்த்திட்ட நன்றியினை மதி த்தல் செய்து, தேசுறுமக் கொண்மூவைக் காணியகை யுறைகொ ண்டு சேறன் மானப், பாசொளிய பைங்கூழின் குலங்கான்ற கதிரி னொடும் படர்வா னேங்கும். (௩௯)

வேறு.

கனகநாட்டின்பெருவளத்தைக்கடிதுசென்றுதேர்ந்திடுவான்
மனனிற்கருதிமீமிசைப்போய்மன்னநோக்கிநன்குதெரீஇ
யினையநாடன்னதைப்பொருங்கொலென்னநோக்கத்தலைகவிழ்த்த
வனையவாகிக்கதிர்முற்றியணிகொள்சாலிமுடிவளைத்த. (௪௦)

எஞ்சாவிரதநியதிபூண்டெண்ணில்பகன்மாதவமுஞற்றி
யஞ்சானனத்துவளரொளிப்பேரம்மானெதிரக்கண்டனர்போற்
செஞ்சாலிச்சொற்பெருவிளைவைச்செவ்வனோக்கிக்களிகூர்ந்து
மஞ்சார்குழலார்தம்மோடுமள்ளர்குரவையாட்டயர்ந்தார். (௪௧)

மருதநிலக்குத்தெய்வதமாமன்னன்மேனுள்வலனென்பா
னுருவைவயிரவாட்படையாலொல்லையீர்ந்துமணிகுவித்தல்
பொருவநாமும்புரிதுமெனப்பொற்கால்செறித்தகூனிரும்பு
கருமைமள்ளர்கைக்கொடுநெற்கதிர்களரிந்துகுவால்செய்தார். ()

திரள்சேரரியைப்பகுத்தியாத்துச்சென்னிமேலாற்சுமந்தேகி
யுரனுருழவர்களஞ்சேர்த்தியுயருஞ்செம்பொற்கிரியனந்தம்
விரவாநின்றவென்கொலெனவெய்யபானுவையுறுமா
நிரலேவேய்ந்தார்பன்னெடும்போர்நிலமாதாற்றுண்முதுகுளுக்க ()

இவற்றின்பொருட்டுப்பண்டந்தோயாங்களேரிற்பூட்டுற்றுக்
கவற்சியடைந்தேமாதலினுற்கடிதுகறித்துவாய்குதட்டி
யுவற்றையுதைத்துமென்பனபோலுலைத்தபோரிற்கதிர்மென்று
தவத்திண்காலாற்கடாமிதிப்பத்தயங்கும்வையிற்பிரிந்துளநெல். ()

வேறு.

காலிற்றூற்றிக்களிப்பொடுகூப்புபு
காலின்முற்றுமளந்துகரியவன்
காலின்மள்ளர்கள்காணிகொள்பன்னகர்க்
காலின்வைகுகடவுளர்க்கீந்தபின். (சரு)

ஆறிலொன்றையரசர்கொளக்கொடாக்
கூறுமற்றையகோணச்சகட்டிடை
யேறுவித்துத்தம்மில்வயினுய்த்தனர்
மாறில்வேளாண்மரபினர்மன்றவே. (சசு)

தென்புலத்தினர்தெய்வம்விருந்தொக்க
லென்பவற்றினையேமுறவோம்பித்தாந்
துன்பநீத்தனர்துய்த்துமகிழ்வரா
லன்புலப்பருமன்னதொன்னாட்டினர். (சஎ)

துவரையெண்டினைசோளம்வரகுளுந்
தவரையாதியபுன்னிலத்தாயவுஞ்
சுவையவேழந்துணித்துகெட்டியு
நவையில்பண்டிநடாய்மனைச்சேர்த்துவார். (சஅ)

கதிரும்பொற்கிழிகண்டவறிஞர்போன்
மதிமிலைச்சியவானவன்றெண்டனா
யெதிர்புநோக்கியிறைஞ்சியிற்கொண்டுபோய்
முதியபல்லமுகமன்புரிந்தரோ. (சகூ)

தீனமின்றித்திருத்தும்பரிகலத்
தானையாவித்தனையநறியகுய்க்
கானளாயகருனைதுவைமுதன்
மானமார்கறிவர்க்கம்பரப்பியே. (ருo)

தளவரும்புதகைதருசொன்றியும்
பளகிற்றீர்ந்தபொன்வண்ணப்பருப்புந்தீங்
குளனுநெய்யுந்ததியுங்குறைவற
வளவியிட்டுமெகிழ்ச்சியினூட்டுவார். (ருக)

ஈசனன்பனையெவ்வுழிக்காணினு
மாசையாற்பணிந்தன்னவர்கேட்டன
நேசமுற்றுநினைந்தனயாவையும்
வீசியாங்கவரோவலின்மேவுவார். (ருஉ)

இனையமல்லன்மருதத்திலெய்திய
புனைபுகழ்ச்சிப்பொருநைபுன்னுகத்தி
னனைகளோடுநகுமுத்தம்வேற்றுமை
நினைவதற்கருநெய்தலுட்புக்கதே. (ருங)

அளியிற்சேர்த்தவலர்முகநீளறற்
குளிர்மெய்க்கூந்தற்குலவுசுழியுந்திப்
புளினக்கொங்கைப்பொருநைக்குமரிவான்
களிதுற்றாழ்கடற்காந்தனைத்தோய்ந்தனள். (ருச)

குறிஞ்சிமுல்லைகொடுஞ்சுரந்தண்பணை
நெறிந்தநீண்மலர்நெய்தலென்றைந்திணைச்
செறிந்தபண்டநிலையிற்றிறம்புபு
மறிந்தொன்றொன்றின்மயங்கிவயங்குமே. (ருரு)

ஏலஞ்சந்துபேரீந்தின்கனிநெல்லி
பாலவானினுரோசனைபாகிலை
யோலவேலைத்துகிர்முத்தமொன்றலாற்
கூலமென்னக்குலவுமொருசிறை. (ருசா)

வேறு.

அரிபரந் தகன்ற வாணெடுங் கண்ணு ராழ்கடற் பரதவ மக ளிர், வரியளி குலவும் வேங்கையிற் படர்ந்த வளர்கறிக் கருந்துண ருகுப்ப, விரியு நெட்டிலைய கைதையம் போதை விளரிபா டரியி னம் வெறுத்துப், பரிவொடு காந்தட் போதணி யெயினப் பாவை யர் கூந்தல்புக் குவக்கும். (ருஎ)

பாடிசார் புறவிற் குருந்திடை நின்று பலவின்மேற் படர்ந்தி யாத் திட்ட, பீடுறு தளவப் பைங்கொடி மேலாற் பெட்புடைக்

கடுவன்றன் மந்தி, யூடலை யொழிப்பான் முட்புறக் கனிகொண்
டொழுகுதல் விம்மிதக் கழைக்கூத், தாடுகூன் கிழவன் குடந்தலை
யேந்தி யருங்கயிற் றூர்வது கடுக்கும். (ருஅ)

வேறு.

வேதம்பரவும்வெள்ளிமலைமீதுவிளங்கும்வளரொளிப்பேர்
நாதனுறையும்வயிரவமாநகருமனைய சிவபெருமான்
காதலித்தகோயிலெலாங்கனகத்திழைக்குந்திருவணிகர்
மேதக்கிருக்கும்புல்லூரும்விரவிந்நாட்டுக்கிணையுண்டே. (ருகூ)

எல்லையில்லதேத்துறையுமெல்லாவருணத்தாருமையுஞ்
செல்லல்சாலச்செல்லலெனச்சிந்தைசெய்துதிருமாது
நல்லபுகழ்கூர்தென்பாண்டிநாட்டுவணிகர்பாலுறலாற்
பல்லசீறூரிருந்துமவர்ப்பகர்வர்நகரத்தாரென்றே. (சூ0)

நண்ணார்நண்ணும்புரமூன்றுநகைக்குவிருந்துபுரிந்தபிரான்
றண்ணார்கருணைப்பெருங்கடலுந்தாவாவுவரிக்கருங்கடலு
முண்ணுநின்றதவக்கடலினுதித்தசெய்யதமிழமுத
நுண்ணுவானுஞ்செவியானுநுகரும்புலவர்பலரிங்கண். (சூக)

ஆரந்தாங்குபோர்ச்செழியனரியமேருச்செருக்ககற்றி
யீரந்தாங்கியெனைவரையுமினிதுபுரப்பானிதிகொணர்ந்து
வீரந்தாங்கியாண்டமையான்வீரபாண்டிபுரப்பெயர்கொ
ணாரந்தாங்குவளநாட்டைநாட்டவென்னுவற்ருமே. (சூஉ)

ஆதியகோரமுகத்துதித்தவாசானருளுக்குரியவர்நன்
னீதிவழுவாதீட்டுமிருநிதியினார்வாழிந்நாட்டைப்
போதிலுறையுநான்முகற்கும்புகறலொல்லாதென்றுபராஞ்
சோதிமுனிவர்சொற்றனரோற்றுகளிற்சீர்த்தேனென்னுரைக்கேன்.

சாதியோடங்காச்சிரம்தருமத்திறையும்வழுவாமே
பூதிசிவனாரக்கமணிபொருவில்பஞ்சாக்கரமிவற்றைக்
கோதிலுயிருக்குறுதியெனக்கொண்டார்மண்டுநாடுனைத்தாம்
வீதிதோறும்பொன்கிடந்துவிளங்குநகரின்வளம்புகல்வாம். (சூச)

நாட்டுப்படல முற்றிற்று.

ஆ படலம் உ - இ செய்யுள் - அகூ.

நகரப்படலம்.

மாலவனுந்தியென்னுமலர்த்திசைப்பிறந்தான்மேனாள்
வாலறிவுடையநெஞ்சால்வகுத்தவிவ்வண்டந்தன்னுட்
பாலமைதெய்வத்தச்சர்படைத்துளபதிகட்கெல்லா
மூலமாம்வயிரவப்பேர்முழுமுதனகரமாதோ. (க)

ஓதியவிதன்கணுள்ளவுறுப்புகளனைத்துநோக்கி
மேதகவான்றோர்பண்டுவிளம்பினர்சிற்பநூலே
யேதுவென்னென்னிற்சோறுமிலக்கியங்கண்டதற்குப்
பூதலத்திலக்கணந்தான்புகல்வதுவழக்காறன்றே. (உ)

நிறமிளிர்தளிர்ப்பொதும்பர்நீடிநீல்விசும்பிற்போகி
நறமலிகற்பகத்தினறுந்துணரோடுதம்போ
தறவுகுத்திடலால்யாண்டுமெணிமலர்நிரம்பக்காணூஉப்
புறனுலாங்கடல்வையத்தைப்பூவுலகென்பமன்னோ. (ங)

புகழ்மலிவடுகநாதபுரிபுரிகிடங்கியாரு
மகழ்தராவியல்பிற்றேனுமகழியென்றுரைக்கப்பட்ட
திகழ்வறுமுவரிநீருமேனையாறுழிதாமுஞ்
சகதலமிசையேசத்தசாகரப்பெயர்பெற்றற்றால். (ச)

காலனும்வெருவுஞ்சீற்றக்கராவினங்கிடந்துழக்கப்
பாலனநீர்கலங்கிப்பாம்புரியிமிழுந்தோற்ற
மாலவிர்மணிப்பொற்கோட்டுமந்தரமதிப்பப்பண்டு
நீலமாதவன்கண்டுஞ்சுநெடுங்கடலார்ப்பதேய்க்கும். (ரு)

புண்ணியத்தலமாமிந்தப்புரத்தினைச்சுலவிக்கோல
நண்ணியதிண்ணகப்பாநிலையினைநவிலுகென்னிற்
பண்ணியல்பிலத்தையத்திபாரநீள்விசும்பைநெற்றி
மண்ணினைப்பரப்பளக்குமாண்புடைத்தென்பாமன்றே. (சூ)

மாதிரமேலால்வைகும்வளநகரனைத்தினுக்கும்
போதரவியற்றியிட்டபொன்மதிலாகிமன்னுந்
தீதுறுமணிமல்லப்பேர்த்தெவ்வினையுயிரைவெளவும்
பூதநாயகன்வாழ்மூதூர்ப்போகுயர்புரிசைமாதோ. (எ)

பண்ணவன்வடுகநாதன்பழம்பதியதனின்சீர்த்தி
கண்ணகன்புணரிசூழ்ந்தகாசினித்தலத்தையல்லால்
விண்ணவருலகின்மேலுமேவியதிறத்தைக்காண்பா
னெண்ணலுற்றெழுந்ததொக்குமெழிறிகழ்மதிலுயர்ச்சி. (அ)

அண்டபித்திகையைநேமிவாளத்தையறியகில்லார்
கண்டிடவவற்றின்றன்மைகாட்டியபடியேபோலும்
வண்டுழுதுழக்கித்தீந்தேன்வாய்மடுத்திசைமிழற்று
முண்டகந்துறுகிடங்குமுற்றியபுரிசைப்பொற்பு. (கூ)

வேறு.

கோடுயர்த்தகரிநீடுதிக்கைகொடுகுறுகுவார்தலைகடிருகுமா
லாடுமற்புதமொடுடுநின்றபரியாள்புயத்தினடிசாடியே
நாடுமொன்னலர்களோடிடும்படிநடந்துயிர்த்துநகைபுரியுமாற்
றூடுபெர்த்தகனகாளிசூலமொடுதுன்னலர்க்கெதிர்புதோன்றுமால்.

பிண்டி பாலமொடு சூலம் வெங்கதைபி றங்கு வாள்சுரிகை பேணியே, யண்ட ருங்கொடிய வனலம் வீசுவிழி யடல்கொள் பூதமெதி ரெறியுமாற், சண்ட வெம்பணிக ளேயு டைக்கரள தவள முள்ளெயிறு மின்னவே, கண்ட வொன்னலர்கள் வெருவி யோடவெழு காவ தத்தழலு யிர்க்குமால். (கக)

அமணரோவவருமாவினுருயிர்கொளாதிநந்தியடிகளைநிகர்
விமலமானபொறியம்மதிற்றலையின்மேவிவாவிவருதானவர்
தமரவாய்க்குகைகொள்சேகரக்கிரிதகர்க்குமாணிடரொதிர்த்திடிற்
சமரகத்திடையியற்றுகின்றசெயறமைவிரித்திடவும்வேண்டுமோ.

கொள்ளி வாயலகை துள்ளி வெய்யவழல் கொப்பு ளித்திரு கை கொட்டுமால், வெள்ள வூனெழுகு வாய்தி றந்துபுலி விரவு தெவ்வரினம் வீட்டுறும், பள்ள மேழ்பருகு சார தப்பொறிப டர்ந்து மேதினிந டுங்குமா, வில்லு மாற்றலுட னேற்ற வர்ப்பொருது வீர பத்திரனை நேருமே. (கந)

வருணனுதிதிசைகுலவுபாலரொடுமென்னுமேருவினைவலம்வரு
மருணசோதிமயகிரணபானுமதியாழ்பிலத்துழிநிரந்தர [ந்
முரணின்வாமுரகர்முனிவர்வேதியனாமுனிவுசெய்தசுரர்நலியினு
திரணமொத்தனையகொடியர்னையும்வகைசீறுதீப்பொறியனந்தமே

வேறு.

நாரணன்பிரமன்றேரூநாதனைப்பண்டோர்குன்றுய்ப்
பாரணவுற்றிறைஞ்சிப்பராய்ப்பெற்றபயனின்மிக்க
சீரணவேறுவேறுசிலம்புருக்கொண்டிவட்சே
ராரணநான்கேபோலுமம்மதிற்கோபுரங்கள். (கரு)

தாரணிதாயமாலுந்தாமரைமேயகோவும்
வாரணமூர்ந்தவேந்துமற்றைவானவருஞ்செற்றிப்
பூரணன்கழலிறைஞ்சப்புகுதலின்மணிப்பூண்சிந்தித்
தோரணவீதிதோறுந்தொகுபெருங்குப்பையாமால். (கசு)

அண்ணியேயாண்டுங்காண்டற்கரும்பொருள்காணவேண்டிற்
பண்ணுலாந்திவவியாழின்பாட்டினைக்கேட்டல்வேண்டின்
விண்ணவரமுதிற்சீர்த்தமிகுசுவையுணவுவேண்டிற்
பண்ணவன்வடுகநாதபதிவயினெய்தல்வேண்டும். (கள)

மகப்பெறும்பேறுவேண்டின்மாநிதிகிடைத்தல்வேண்டின்
மிகுத்ததோர்கல்விவேண்டின்மேதினிபுரத்தல்வேண்டிற்
பகைத்திறம்வேறல்வேண்டிற்படர்புகழ்வயிரவப்பேர்
நகைத்தலைத்தெரியல்பூண்டோனகருழிச்சார்தல்வேண்டும். (கஅ)

அமரருட்டிருமாலென்னவாவினுண்முனியாவென்னச்
சமர்புரிவீரர்தம்முட்டனஞ்சயக்குரிசிலென்னத்
திமிரநீக்குறுபன்னூலுட்சிவாகமமென்னவோங்கும்
தமிழ்பயில்வயிரவப்பேர்த்தலந்தலமெவற்றினுள்ளும். (கசு)

சங்கரத்தன்மைவாய்ந்தசாதியர்பிரதிலோமர்
தங்கனுலோமரொன்பார்தகுவினைபல்லசெய்ம்மா
ரிங்குளரெல்லையில்லாரிதுநிற்கதளையினீக்கி
மங்குலைப்பிணையாக்காத்தவளமையர்வளைப்புளைப்பாம். (உ0)

பசுநிரைபாதுகாத்தல்பார்வருபயன்கள்கோடல்
சுசியுடைத்தழலேயன்னதூநெறிப்பனவராதி
யிசையுமூவருணத்தாருமேவினவியற்றலின்ன
வசையறுபெருஞ்சீர்வேளாண்மரபினர்மரபாக்கொள்வார். (உக)

உண்மையிற்கனிந்தபத்தியுமாபதிமாட்டுவைத்த
வண்மையர்க்காணிற்சேணின்வணங்குபுகுறுகிநீவி
ரெண்மையினிங்ஙனெய்தவெத்தவமிழைத்தேமென்னுக்
கண்மைநீர்பெருக்கியன்னோர்கருத்தறிந்தொழுகுவாரால். (உஉ)

பின்னவர்நட்டநாற்றின்பெருமுடிதிருந்தியக்கான்
மன்னவர்முடிதிருந்துமாண்டவர்யாவர்கொல்லோ
வின்னணையொழியவேனையெண்ணிலாச்சாதிபேதத்
தென்னருமெய்வருந்தாதெத்தினுற்பிழைக்குநீரார். (உங)

சவியுடைத்தமவேளாண்மைச்சார்பினிற்றழைக்கும்வேள்வி
ய்விநனிதுய்த்துவானத்தமரருமுய்வதானுற்
புவிமனித்தனைவாழ்வித்தல்புகழ்ச்சியின்பாலதேயோ
கவியகத்தடங்காமேன்மைக்கங்கையங்குலத்தினூர்க்கே. (உச)

மிடன்மிடைமேழிச்செல்வர்வேரியூற்றெடுத்துவாரு
மடலவிழ்புண்டரீகவண்பொகுட்டும்பர்வைகி
யுடலினைத்தாங்கும்பாதத்துதித்தமையுணரினன்னோர்
கடலுடையுலகுக்கெல்லாங்களைகணுந்தன்மைதேற்றும். (உரு)

வேறு.

முயற்சியா னேனைச் சாதியா ருயிரு முறைப்படு மொழுக்கமு நிறுவி, யயர்ச்சியொன் றின்றித் தாமுமுண் டின்பத் தமர்தரா நின்ற வேளாளர், புயற்குலந் தவழுங் குடுமிய மாடப் பொன்னணி வீதியைப் புகன்று, முயர்ச்சியோ டுயர்ந்த வொலிபுகழ் வணிக ருறுகணித் துறுமறு குரைத்தும். (உசு)

வயிரமென் றுணைக்கு மரதனத் தூணின் மரகதப் போதிகை சேர்த்திச், செயிரறு சுவணச் சுவர்த்தல முயர்த்துச் செம்மணி யுத்திரம் பரப்பி, வெயில்விடு பவள விட்டமு நிரைத்து வெள்ளியின் முகடுவேய் மனைக்கட், பயில்வுறு செல்வ ரேனைய வெஃகார் பரசிவன் கண்மணி யணிவார். (உஎ)

கண்ணகன் ஞாலத் தேழுதீ வகத்துங் கஞலிய விரும்பொருண் முழுதும், விண்ணக ரதனை மேக்கெழீஇ நோக்கி வெறிதென நகைத்தென விளங்குந், தண்ணறுஞ் சுதைய தவளமா ளிகையோர் சாரமைந் துளவெனி னுய்க, ரெண்ணரு நிதியப் பெருக்கினைக் கிளத்தற் கியாவரோ வல்லுந ராப. (உஅ)

வெண்ணிலா வுமிழுந் தூயநித் திலமும் வெய்யவ னுதிக்கின்ற காலை, யொண்ணிலா விளஞ்செங் கதிரினம் விரிந்தா லொத்தொளிர் பவளத்தின் கொடியுந், தண்ணிலா வழற்றீம் பிழம்பெனச் சுடருந் தக்கமா ணிக்கமுந் துறலா, னெண்ணிலா வுயர்த்த விறைவிழி யேய்க்கு மெட்டியர் கிட்டிய விருக்கை. (உகூ)

மயிலியல் வாணி மணமகன் றலையை வள்ளுகி ரொன்றினாற் கிள்ளாக், குயிலுறுத் தங்கை யுடற்பொழி குருதி கொள்ளுவான் குறுகிய வங்கா, ளுயிரையென் கொழுநற் கியான்குறை யிரப்ப வுதவிய பேரருள் வள்ளல், வயிரவற் கன்பின் வணிகர்பா லொரு வேன் வைகலு மெனத்திரு வைகும். (கூ0)

சிசுவொடு பாலர் சீர்மழ குமரர் திறலுடைக் காளையர் கிழவர், வசுவுற முருவப் பேதையர் பெதும்பை மடவியர் மங்கைமார் மடந்தை, யிசைவுற நின்ற ரரிவையர் தெரிவை யேழையர் விருத்தைய ரொன்னும், பசைகொளிவ் விளங்கோ மக்களுட் சைவப் பற்றிலார் தமைத்தெரி வரிதே. (கூக)

பொன்னியா றுவரிக் கொண்கனைப் புணரும் பூம்புகார்ப் பெருநக ரத்து, மன்னிய திறத்தா னகரத்தா ரொன்று வழங்கிய நிற்கும்வை சியர்க்குத், துன்னின ரேற்ற வாதுல ருவப்பச் சொன்றிபொன் மணிகலை பிறவு, முன்னியாங் களித்துக் களிப்பது நாளு மூறெழி னியமத்து நியமம். (கூஉ)

மடவனப் பேட்டின் மென்னடை படைத்த மழலைவாய்ச் சிறுமியர் குழுமி, யிடநனி யகன்ற நீண்மறு கொருசா ரிலங்குசாம் பூனதப் பொன்னாற், றடநெடும் பித்தி மணியினு லறைகள் சமைத்தொளிர் சிற்றில்வா யாடக், கடவுளர் நோக்கிக் கண்பொருந் தாமே கருத்திடை நறுமுறப் புறப. (கூகூ)

மதிமலி புரிசை மாடத்தென் கூடன் மன்னிய சிவன்திரு மணத்தின், முதிர்பசி சிறிது மாற்றுத லாற்று முரட்குறட் பூதத்தின் மொய்த்துப், பதினொரா யிரவர் சாரதர் வரினும் பரிவுறப் பரிவொடு மமிழ்து, பிதிர்சுவை யடிசி லமைமென வூட்டப் பின்னிடார் மன்னவர் பின்னர். (கூச)

ஞாலமுற் றுய்ய நன்கவ தரித்த ஞானசம் பந்தர்முன் னுல்வர், சீலமெய்ம் மலர்வாய் விண்டதே வாரஞ் சீர்த்திரு வாசகம் புனைந்த, வாலயத் தோடு மற்றைய தளியு மணிபெற முன்னையின் முயன்றெக், காலமு மன்னோர் பொற்பணி புரிவார் கற்பணி புரிகலார் தமக்கே. (கூரு)

வாசவன் பதமு மலர்த்தவி சிருந்து மறைபயில் வேதியன் பதமு, நேசமுற் றவர்கட் கையைந்தின் மேலாநிலவிய நிலையினை

யளிக்கும், கேசவன் பதமு மேனைய தேவர் கெழுமிய பதங்க ளும் வெஃகா, ரீசனு னந்த குஞ்சித பதமே யெற்றைக்கும் விரும் புவ ரின்னோர். (நசு)

அண்டமா யிரத்தெட் டாண்டசூர் முதல்வ னணிபெறுந் தானையைத் துகளாக், கண்டமார்த் தாண்ட வடுகநா யகன்வாழ் கடிநகர் வணிகரா வணத்தை, விண்டன னென்ன நாவெழு மாங் கே வெள்குமா லுள்ளக மினிப்பொற், றிண்டடந் திரடோட் கா வலர் வைகுந் தெருவித மொருவிதந் தெரிப்பல். (நஎ)

மன்னிய வமரர் தலைமக னம்மை வச்சிரத் தீர்ந்தனன் சிறை யவ், வின்னலி னொருவா ஜெருருவுபு நடக்கு மியற்கையைப் பெறு துமென் றுளத்து, முன்னியீண் டடைந்து கால்பல பெற்று முதிர் கின்ற வுவகையி னோங்கித், துன்னிய வசல குலமென வயங்குஞ் சுடர்மணிக் கொடிஞ்சியந் தேர்கள். (நஅ)

வீரபாண் டியப்பேர் வேய்ந்தவோர் வேந்தன் மேலைநாள் வெந்தளை பூட்டு, நீரத நிரைபோற் கூடங்க டோறு நிகளமார் கறைபடி நெருங்கும், கூரக வேலி னவ்விறை சுவற்றுங் குரைக டன் மறிதிரை யோடு, மாரவுய்த் திட்ட வகன்சிறைச் சாலை யா மென நகும்பரிப் பந்தி. (நகூ)

முரசினக் கலிப்பு மும்மத நால்வாய் முழக்குமுட் கலினவா ம் புரவி, யரவநற் சுவணத் தியற்றிய சில்லி யணிநெடுஞ் சந்தனத் தார்ப்புப், பரவிய விளைஞர் படைபயி லமலை பகைப்புல னிடுதி றை யோசை, யிரவலர் மகிழ்வி னேத்துகம் பலையென் றிவ்வெழு கடலொலி யெதிரும். (சo)

அடலுடைக் களிற்றின் கார்மதக் கலுழி யைங்கதித் திண்கு ரத் திவுளி, கடவலிற் கடைவாய்க் கடைவழி விலாழி காளையர் தம்மொடு மூடி, மடவர லியர்க ணீத்தெறிந் திட்ட மாலையிற் பில் குறு மதுவம், படர்தலி னென்றும் விழவுகூர் தெருவு பனிப்பரு வேனிலின் ஞான்றும். (சக)

நவிலிய வொண்ணுக் கடவுளர் குழுவி னனியுயர்ந் தொப்பி கந் தோங்கு, மவிர்சடைப் பெருமான் மூர்த்தமை யைந்தி னதிக னும் வயிரவன் றுளைக், குவிகையி னிறைஞ்சுங் கவிகைமன் னவ ருங் கொடுந்திறற் றுன்னலர்க் கெல்லாம், புவிமிசைச் சாலப் பய ங்கர ராகிப் பொலிகுவ ரின்னது வழக்கே. (சஉ)

திங்களங் கவிகை யொன்றினு னிழற்றிச் செறிதரு மன்னு யிர் முழுதுந், தங்களின் னுயிர்போற் றலேயளி புரிந்து தரணியை த் தடம்புயந் தரிக்குந், துங்கவே லிறைவர் வீதியை யிறையே சொற்றன முறுதியை யவர்க்குப், பொங்கநா டோறும் புணர்க்கு மந் தணர்வாழ் புண்ணிய நெடுந்தெருப் புகல்கேம். (சங)

முகிலினம் பரவி நெடிதுறத் துயில்கூர் முழுத்தம னியத்தி யன் முடிகொ, ளகின்மணங் கமழு மேனிலே மாடத் தகந்தொறு மறையறை யோதை, சுகமுறு தவலோ கத்தினர் செவிவாய்த் துன்னியன் னாைமகிழ் விக்க, மகவினே நாளுந் திரவியக் கிரியா மந்திர நானமின் றிழைப்பார். (சச)

முத்திவேட் டான்ற மாதவ மிழைத்து முனிவரர் வைகுநை மிசமோ, சத்திய வுலகிற் சரோருகக் கிழவன் சார்வுறு வேள்வி மண் டபமோ, வெத்திசை மாட்டு மென்புகை விரவி யெல்லேயு மெல்லிசெய் கிற்ப, நித்தலும் வேத முறையுளி மேத நிகழ்த்துநர் நீண்மணி யிருக்கை. (சரு)

ஏகநா யகனுஞ் சிவபிரான் றிருவா யெழுதரு மெழுதரு மறைசொல், லாகவ னீயந் தக்கிணுக் கினியே காருக பத்திய மான, வேகவெங் தழலோர் மூன்றினும் புரியும் விதியுணை மித்திக மகமு, நாகநாட் டுறைவோ ரகனமர் பாக்கு நாடொறுந் தழைப் பன வங்கண். (சசா)

ஒலிகெழு மறிவெண் டிரையெறி முந்நீ ருடையுடை நிலவல யத்தி, லலர்தரு முதுநா லந்தணர் தம்மை யறுதொழி லாளரொன் றறையு, மலிபுக ழின்ன மாநகர்ப் பார்ப்பார் மாட்டொரு தொழி ல்குறைந் தன்ருற், கலியுரு வண்ணம் பெருநிதி யுடைமை கார ண மன்னதற் கம்மா. (சஎ)

யூபங்க ளுள்ள வல்லன வேதி யொண்டழற் குண்டமல் லன வாற், பாபஞ்செற் றுளிரும் பசுவின மல்ல பல்குபல் வகைச்ச மித் தல்ல, தாபங்கட் டறுக்குங் கௌவிய மல்ல சால்பிற கலப் பைக ளல்ல, தீபந்தம் மொளியின் மழுக்குறும் பனவர் சேக்கிய மந்திரத் திடங்கள். (சஅ)

சிருக்கொடு சிருவந் திருத்துநர் சில்லோர் செறிகுசை யாய் குநர் சில்லோ, ரிருக்கினே மறவா திசைக்குநர் சில்லோ ரொழிலுப

வீதநா னூற்றுச், சுருக்கொடு பிரமக் கிரந்தியைத் தெற்றித் தொகுத்திடுந் தொழிலினர் சில்லோ, ரருட்சிவக் குறியை வைதிக பூசை யாற்றுநர் பற்பல ராங்கே. (சகூ)

செந்தழ லோம்பல் சிவன்பெயர் நவிற றினந்திரி காலநீர் மூழ்கன், முந்திய காயத் திரிமனு வெண்ணன் முதுபெரும் பல்கலை யாய்த, லிந்தநற் றொழிலோ டெவ்வுயிர் மாட்டு மிரக்கமாந் தண்மையும் பூண்டே, யந்தண ரென்ன வமைந்ததந் நாமத் தரும்பொரு டேற்றுவர் நெறியால். (ருo)

அணியினுக் குறையு ளாகுமந் நகர்வா யமருமெய்ம் மறையவர் மாண்பு, பணியினைத் தரச னியம் பல்ல பகரினு முற்றுறு தென்னிற், றிணிதரு மடமை மனத்தினே னெடுத்துச் செப்பிய புகுந்தது நகையே, தணிவறு சைவ தபோதனர் வீதித் தன்மையுந் தன்னமீண் டுரைக்கு. (ருக)

வேறு.

ஆல யத்தல கிட்டு மெழுக்கிட்டுக்
கோல மாமலர் கொய்து தொடுத்தணீஇ
யேல வின்ன பிறவு மியற்றுபு
கால காலனைக் கைதொழு வார்பலர். (ருஉ)

மஞ்ச னம்பரி வட்ட நறுமலர்
விஞ்சு சந்து வியன்புகை பொன்சுடர்
நெஞ்ச மர்ந்த நிவேதனத் தான்முக
மஞ்சு ளான்குறி யர்ச்சிப்ப ரெண்ணிலார். (ருங)

இயமமாதியவெட்டுறுப்புந்தக
நயனவாணுதனுதனெடுவிரா
யுயருந்திங்களுருகுமமுதுண்டு
துயரிகந்துறைதூயரனேகரால். (ருச)

இரண்டிரட்டியவேழ்வகையாகமந்
திரண்டவையந்திரிபறத்தேர்ந்துபின்
னிரந்தஞாதுருஞேயமுஞானமுங்
கரந்திடச்சிவமாயோர்கணிப்பிலர். (ருரு)

பண்டைநற்றவப்பான்மையிற்றோன்றியே
மண்டுகின்றசிவானந்தமாந்துறுந்
தண்டருங்குணச்சாமுசித்தர்க்கள
வுண்டெனத்துணிந்தோதவொண்ணாதரோ. (௫௬)

வேண்டிமுப்பொழுதுந்திருமேனியைத்
தீண்டிப்பூசிக்கச்செய்தவஞ்செய்தவர்
காண்டகத்திகழ்கண்ணுதலன்னவர்
பூண்டமாட்சிமைபுல்லியர்தேர்வரோ. (௫௭)

பிறர்பொருட்டுப்பிரானைச்சபரியை
யுறவிழைத்திடுமுத்தமப்பேரரு
ளறைவரும்புகழாதிசைவக்குல
மறையவர்க்கெதிர்வையமென்னாற்றுமே. (௫௮)

மதிலுரைத்திடிற்சக்கரவாளமா
லதிலெண்கோபுரமட்ட குலாசல
முதிர்விருப்பின்வளரொளிமுன்னவன்
வதியுமாலயமேருவரையரோ. (௫௯)

இலகுதேவரிருந்துழியேநின்று
மலருநெஞ்சினர்வாழ்த்திவணங்குமா
விலகிவில்லுமிழ்வெம்மணிக்கோயிலிற்
பொலன்விமானம்பொலிந்துமிக்கோங்குமன். (௬0)

மழலைவீணையினோசையுமாதர்வேய்ங்
குழலினோசையுங்கூறிருக்கோசையும்
விழவினோசையுமெல்லியராடல்வாய்
முழவவோசையுமொய்த்தெழுமவ்வயின். (௬௧)

நித்தியத்தொடுநீடுநைமித்திக
மத்திமுற்றெறுகாமியமாகிய
முத்திறத்தனபூசைமுறைவழா
தெத்தினத்துமியங்கப்படுமவண். (௬௨)

அண்டரண்டனளப்பின்றகம்புகுந்
தொண்டர்நொய்திற்றொழுதுதனித்தனி
கண்டிடும்படிகாட்சிதந்தாலென
மண்டியெங்கும்வயங்குநெய்த்தீபங்கள். (௬௩)

ஏழகத்திருவாளரிறைவற்குத்
தோழர்பற்பலர்தொக்கனரன்னவ
ராழவுள்ளத்தராற்றியகோயிற்சீ
ரூழறிந்திசைப்பும்பர்க்குங்கூடுமே. (சுச)

மன்னன்யார்க்கும்வடுகன்பிழைத்துமே
லின்னமோர்சென்னியீருமெனவெரீஇ
நன்னர்முற்றுநணுகவயன்றருந்
தொன்னகர்க்குத்துருவினுமொப்பிலை. (சுரு)

பாவராகமுந்தாளமும்பற்றின
வோவந்தோகையுடங்குநடித்தென
பூவர்கொம்புறழ்பூவையர்செய்நட
மாவலாற்கண்டகமகிழ்வார்சிலர். (சுசு)

மதுவத்தாரையின்வார்நரப்பியாழிசை
விதுவிற்சிந்துமமிழ்தெனமின்னனார்
புதுமுகத்திற்பொழியிசையஞ்செவி
கதுவப்போக்குவர்காலமங்கட்சிலர். (சுஎ)

குரலின்றுத்தங்குளிர்கைக்கிளைநலன்
விரவுதாரம்விளரியிளியுழை
பரவுகீதம்பயின்றும்பயிற்றியு
மர்பினுய்க்குவர்வைகல்சிலர்சிலர். (சுஅ)

வாதைநீக்குமம்மாநகருட்சிலர்
மேதையார்புடைமெய்யருணூல்கற்று
மாதைமன்னத்தன்வாமத்திருத்தினேன்
காதைகேட்டுங்கழிப்பபொழுதரோ. (சுகூ)

மிகமுயன்றுவிழுப்பொருளீட்டியுந்
தகவுகூர்நர்தமக்கவ்வழங்கியு
முகவையாற்புனைந்துண்டுடுத்தின்புற்று
மகலும்போழ்துசிலர்க்கவ்வணிநகர். (எ0)

வேறு.

பூத்திசை யுள்ள தலனெலாம் பொதுவிற் புரக்கின்ற பெற்றி யே பற்றிக், கேத்திர பால னென்றொரு நாமங் கெழீஇத்திகழ்

வயிரவன் றனதா, வேத்திய வடுக நாதமா புரங்கொண் டினிதிருந் தளிக்குவ னென்று, னேத்திர மூலகுக் கன்னவிந் நகர நிறைவி னை யறைவினை யெளிதோ. (எக)

நகரப்படல முற்றிற்று.

ஆ படலம் ரு - இ செய்யுள் - கசா0.

நைமிசப்படலம்.

நன்னர்மலர்கொண் டுயர்பொழில்சூழ் நைமிசக்கானனென்றொன்றுண்
டன்னதெவ்வாறுயதெனிறுசினிகந்தமுனிவர்குழா
மன்னுதவம்யாம்புரிதற்குமனத்திற்கினியதொருவனத்தைப்
பன்னுகெனவிக்குசையாழிபடர்ந்துதங்குமிடனமலம். (க)

என்றுகமலத்திருந்தவிதியியம்புமொழிகேட்டிருந்தவர்கள்
சென்றாங்நேமியோய்ந்தவிடைச்சேக்கியரியதவமிழைத்தா
ரன்றுமுதலாவான்றோர்களனையசிறப்பினடவிதனை
யின்றுநைமிசாரணியமென்பர்வந்தவழியீதால். (உ)

வேறு.

போதகந் துதிக்கைப் புழையுறு புனலைப் பொங்கரிக் குருளை வாய் மடுக்கும், பாதவத் துலவும் பாசொளி மஞ்ஞைப் பார்ப்பினை ப் பரிவுநீஇப் பாந்த, ளாதபந் தாக்கா தரும்படம் விரிக்கு மைங் குணக் கொடியொடு கூகை, பேதக மின்றி யளவளா யொன்றிப் பிரிவில விரவுநன் பகலும். (ந)

குடம்புரை செருத்த லான்முலை வேங்கைக் குறும்பறழ் நறு ம்பயங் குடிக்கும், விடங்கலு ழெயிற்றுப் பாப்புப்பை நீழன் மென் மயிர்க் கருப்பைகண் படுக்கும், தடம்பயில் குருகி னினம்புனற் கரையிற் றத்துமீன் முதுகுதை வருமாற், றிடம்படு பேழ்வாய்க் கூருகி ருழுவை செறிபிணை யோடுநீர் பருகும். (ச)

பொன்னிதழ் விரிந்த கொன்றையம் பொதும்பர் புக்குறை பூவையி னீட்டங், துன்னிய மிருதி விதிவிலக் குரைத்த தூயமா தவத்தின ரோத, மன்னிய சுருதி பயின்றுவான் றருவின் வளர் பசுங் கிள்ளைகட் குரைப்ப, வன்னவை கற்றுக் கடவுளர் வியப்ப வனுதின மழலையிற் கழறும். (ரு)

அகரமோ டுகர மகரமென் றுய வரும்பெறற் குடிலையின் வடி வாய், புகல்பசுந் தளங்கொள் கூவிளச் சூழற் புண்ணிய நீழல்வா யுறுவ, ரகநிலை யொருங்கி யைந்தவித் துடலு மசைவிலர் சமாதியி னிருத்த, றகவுற வீசன் வடநிழ லமர்ந்த தன்மையைத் தனித்தனி தெரிக்கும் (சு)

பங்கய முதல தடம்புனற் பூவும் படர்கொடித் தளவமுற் போதுங், கொங்குமிழ் கோட்டுச் சம்பகா தியவுங் குளிர்ந்தசெவ் வந்தியின் னனவும், பொங்கியெவ் விடத்தும் பொலிவது முனி வர் புரிபல மேதத்தி னுவந்து, புங்கவர் பொழிந்த செம்மணி வெ ள்ளி பொன்கிடந் திமைப்பது போலும். (எ)

வேறு.

இத்தகையநைமிசமாம்பெருங்கானிற்றுபதர்களென்றுங்குன்று
வுத்தமவாள்கயிலாயத்தெமையாளவுமையாளோடுடங்குவைகுஞ்
சுத்தநிராமயதுரியசச்சிதாநந்தசிவச்சுடரைநெஞ்சில்
வைத்தனராயகவிருளைத்துரந்தின்பவாரிதியில்வாழுநாளில். (அ)

நண்ணீறு மாதியுந்தீர் நாயகனை யுளத்தடைத்து நன்னர் நா ளா, லெண்ணீறு கலப்பைகொடு சத்திரமா வேள்வியொன்றை யியற்று மேல்வை, வெண்ணீறுங் கண்டிகையு மஞ்செழுத்தி னுச் சரிப்பும் விளங்க வந்தா, னுண்ணீறு வரவெறிந்த சூதனெனு மபிதானத் தரவோ னங்கண். (கூ)

பொற்பவனை யான்வரலு மிருந்தவர்க ளெழுந்தனர்போய்ப் போற்று கிற்பார், விற்பனசி காமணியாம் வியாதனெனும் வேலை வாய் வீழ்ந்து மொண்டு, சொற்பொருளின் சோனைமழை யறிஞ ரெனுங் கிரித்தலைப்பெய் சூற்கொண் மூவே, கற்பரிய வீரொன் பான் புராணக்கு நிலைக்களமே கருணை வாழ்வே. (க0)

அருக்கனுயர் தவவேடம் பூண்டணைந்தா லெனநீயிங் கடை வான் யாங்கள், பெருக்கியபுண் ணியம்யாவோ வென்றின்ன பன் முகமன் பேசிப் பின்ன, ரிருக்கையளித் தருக்கியபாத் தியமுதல வுபசார மெனைய வுந்தந், தொருக்கியமெய் யுள்ளத்தோ டுவன்மு கத்தா மனைநோக்கி யுரைக்கின் றூரால். (கக)

அந்தமுமாதியுமில்லாவருஞ்சோதிப்பிழம்பாயவரனூர்காதை [று
முந்தெமக்குப்பொதுவாகமொழிந்தனையாமினித்துணிவுமுற்றுமா

சந்ததமுமழியாதசால்புடையதனிமூர்த்திதலந்தீர்த்தங்க
ளெந்தவிடத்தொருங்குள்ளவத்தானநன்றுவிரித்தியம்புகென்ன.()

குன்றுபெருங் குடையாக்கிக் கோதனத்தின் குலம்புரந்த கோமா னுந்தி, யன்றுதித்த நால்வதனத் தந்தணனே யனையவர் கூற் றவற்றி னேடும், பொன்றுதலில் சடசித்தென் றிருவகைய பிரபஞ்சப் பொருளாய் வேறாய்ச், சென்றுடனாய்த் திகழ்கின்ற சிவபிரான் றிருவடியுஞ் சிந்தை சேர்த்தி. (கரு)

வேதமெனும் பூம்பணையை யறிவெனுங்கூ ரலத்துழுது வித் தி யன்பு, நாதமுடி கடந்துவளர் சிவப்பைங்கூழ் விளைந்தபரா நந் த போக, மோதநெடுங் கடலுலகுக் குபகரித்துத் தானுமருந் துழ வ னைய, வாதரா யணகுரவன் மாமலர்த்தாள் வழிபட்டு வழுத்துஞ் சூதன். (கச)

ஈசனவ னெவ்வுயிர்க்கு மியல்பானு னெனச்சுருதி யியம்பா நின்ற, மாசுதவிர் மொழிப்பொருளை யினிதுணர்ந்து கடைப்பிடித் த மாத வத்தீ, ராசணுகா வரன்சரித வாரமிர்தை யருந்தியமிக் கருத்தி யுற்றீர், பேசுதுமீ ரேழ்பொழிலும் பிழைத்துய்ய நீர்வின வு பெற்றித் தொன்றை. (கரு)

பகிர்விலா மனத்தினீர் பத்தியாற் கேண்மினெனப் பகர லுற் றுன், மகியின்மேன் மேலாகி வயங்குதிருக் காசிநகர் வயிற்பண் டோர்நா, ளகிலநா யகன்வடிவா வகிலமுங்காண் வசிட்டனவ னளி த்த சத்தி, துகிர்துணையுஞ் சடைப்பரா சரவரதன் வியாசமுனி சுகன்வான் மீகி. (கசு)

காசிபன்சா பாலிகுச்சன் வாமதே வன்சனகன் கௌசி கன் றுன், மாசில்பிரு கியாக்கியவற் கியன்போதா யனன்பரத்து வா சன் சீர்த்தி, வீசுசனற் குமரனென வித்தகையோர் வியன்கங்கை விதியான் மூழ்கி, யீசன்விசு வாதிகனைத் தொழுதுமுத்தி மண்ட பத்தி லிருந்த காலை. (கஎ)

பெருவிந்த கிரியடக்கிக் கருங்கடலைச் செங்கரத்திற் பெய்து துய்த்தோன், மருவிந்தப் பிறவிவினை மண்டழலிற் புகுந்துய்யின் மாற்றுங் கங்கைக், குருவிந்த மணிதுன்னு மணிகன்னி கைத்து றைநீர் குளித்துக் கொன்றை, யொருவிந்தம் புனைசடிலத் தகிலே சன் பதமிறைஞ்சி யுற்று னுங்கண். (கஅ)

வேறு.

பொதியமால்வரையில்வைகும்புண்ணியன்வரவுநோக்கி
யெதிர்கொடுமுகமன்மாற்றமியம்பினரிருக்கையீந்து
முதியமெய்யருணூன்முற்றுமூவிருமுகத்தோன்மாட்டுப்
பதிதரக்கேட்டுணர்ந்தபரமசற்குருவேயென்று. (கசு)

மனத்தொடுவாழ்த்தியந்தமாதவசிரேட்டர்யாரு
மனைத்தையுமுணர்ந்தாயெங்களையமுந்திரிபும்பாற
நினைத்தமியேங்கடாவநின்றதொன்றுண்டியாதென்னின்
வினைத்துயர்ப்பவவேலைக்குவேலைபோன்மாலைத்தாமால். (உ0)

மூலமாய்ச்சுயம்புலிங்கமூர்த்தியும்பெற்றுத்தீர்த்த
மேலனகெழீஇயதாகிமேதினிவிசும்புவாழ்வுஞ்
சாலவின்புறுத்துவீடுந்தருவதாயொப்பின்றோங்குஞ்
சீலமார்தானந்தேர்ந்துசெப்புகென்றிரந்துநின்றார். (உக)

குலமலியுணர்வினீடிக்குறுகியவுருவமேலோ
னலனுறுமுனிவர்தம்மைநயந்தனனோக்கிநீயிர்
விலகுதல்விலகுமன்பின்வினையதுசீரிதம்மா
வலகிலாவுயர்பிற்றாயவப்பொருளறைதுமென்னா. (உஉ)

பாம்பணைப்பகவன்றேடும்பரன்வளரொளியையெண்ணிக்
காம்பணைபசியதோளிகவின்வடிவுடையாள்பாதத்
தேம்பணையம்புயப்பூச்சிரமிசைச்சூடிநெஞ்சில்
வாம்பணைக்கரும்பரிக்கோவயிரவன்றனையிருத்தி. (உங)

நிருவிகற்பத்தினெஞ்சநிலைபெறநிறுத்திக்கண்ணீ
ரருவிவார்ந்திழியவாகத்தணிமயிர்ப்புளகம்போர்ப்பப்
பொருவிலன்பகநிரம்பிப்புறப்பட்டாங்கரும்பவேர்வு
மருமலிசந்தவெற்பன்வாய்மலர்ந்தருளாநின்றான். (உச)

வயிரவநகரமென்னுமாட்சிமைநாமந்தாங்கி
யுயிர்களைப்பிறவிப்பௌவத்துழிநின்றுதுரியமுத்திச்
செயிரறுகரையினுய்க்குந்திறற்பெருவங்கமாகிப்
பயிலுறுமுக்காலத்தும்பாறுதலின்றிமன்னும். (உரு)

உடலுயிர்நேர்கலப்பாலுலகெலாமாகிக்கண்ணும்
விடலரும்பரிதியும்போற்பொருண்மையால்வேறாய்நோக்கிற்
சுடரொடுமான்மபோதந்துணைதரவுடனாய்நிற்கு
மடர்புகழ்வளரொளிப்பேரமலன்காண்டகவாங்கோங்கும். (உசு)

கிரியையேஞானமிச்சைகிளராதிபனாயென்றைந்தாய்
விரிகிலனின்றுகாத்துவீட்டுபுதிரோபவித்துத்
தெரியுமாறருளியெம்மைச்சிவத்துடன்செறிவித்தாடல்
புரிவடிவுடையவம்மைபொற்பவீற்றிருக்குமங்கண். (உஎ)

முத்தமிழ்க்குரியபிள்ளைமுடிவெல்வெம்படையோன்முத்தன்
சித்தன்வைரவன்கருங்குதிரையாளிவடுகன்காரி
வித்தகன்குமரன்சூலவேலன்றண்டாயுதன்னென்
றித்தகுநாமத்தண்ணலினிதவணென்றுந்துன்றும். (உஅ)

பரிசித்தாரங்கைமொண்டுபெருகியாரொருகாலேனுந்
தரிசித்தார்நினைந்தார்தோய்ந்தார்தமக்கெலாம்பவத்தொடக்குத்
துரிசித்தாலொழிமென்றீர்த்தந்தொல்வயிரவப்பேர்த்தங்குண்
டுரிசித்தாங்கத்தாருமென்றுளந்தெளிந்தொழுகவல்லீர். (உகூ)

இந்திரன்றதீசிவானத்தியவுளரிருள்கால்சீக்குஞ்
சந்திரன்றறுகட்டீயதானவர்க்காசாறுய
மந்திரிகிரிகரப்பேர்வணிக்குலத்தோன்றலின்னே
ரந்திலெம்பிரானைப்பூசித்தருங்கதிபெற்றூரன்றே. (௩0)

என்னவண்டமிழுஞ்சந்துமினியனவுயிர்க்கும்வாச
மன்னவாங்களைந்துதென்றல்வடாதுமுற்றுலவுகிற்கும்
தொன்னகந்தணவாத்தூயோன்றெருகுத்துரைத்திட்டகாதை
யன்னதுவிரித்துநுங்கட்கறைதுமென்றறையுஞ்சூதன். (௩க)

நைமிசப்படல முற்றிற்று.

ஆ படலம் ச - இ செய்யுள் - ககூக.

புராணவரலாற்றுப்படலம்.

ஆதியங்குருவாகியவைம்முகன்மாட்டுக்
கோதிலாதுணர்நந்தியெம்பிரான்சனற்குமாரற்
கோதவன்னவன்வியாதனுக்குணர்த்தலுமுந்தப்
போதனென்றலைப்புகன்றனன்புராணமூவாறு. (க)

விராவுவேதத்திற்குபவிருங்கணமெனவிளங்கி
யுராயதீவினைநல்வினையுறுபயன்விவரித்
தராவணிந்தகோவடியிணைப்பத்தியுண்டாக்கும்
புராணமப்பெயரனுதியாயுளதெனும்பொருட்டே. (உ)

மார்க்கண்டேயம்வாராகமாச்சியம்பிரமாண்ட
மேர்க்குங்கௌர்மம்வாமனஞ்சைவம்பவிடியமிலிங்கஞ்
சீர்க்குங்காந்தமென்றொருபதுபுராணமுஞ்சிவனே
யார்க்குநாயகனுந்திறம்வெளிப்படுத்திசைக்கும். (௩)

காருடத்தொடுவைணவங்கதித்தபாகவத
நாரதீயமிந்நான்குமாற்கயற்குநற்பிரம
மாரும்பாதுமமெனவிரண்டாக்கினேயந்தீக்
கோருஞ்சூரற்குப்பிரமகைவர்த்தமுமுரிய. (௪)

வாமனத்தொடுமாச்சியந்தனித்தனிபன்னூன்
காமளப்புடையாயிரஞ்சைவம்வாராகந்
தாமரிஇயவெவ்வேறுறச்சகத்திரமெண்மூன்
றேமருதபவிடியமுப்பத்தொராயிரமே. (௫)

மார்க்கண்டேயநாலிரட்டுமுச்சகத்திரமன்னுங்
கூர்க்குங்கௌர்மமாறாயிரங்குலாம்பிரமாண்ட
மார்க்கும்பன்னிராயிரம்பனோராயிரமிலிங்க
நேர்க்குங்காந்தமோர்நியுதமன்னிரம்பினகிரந்தம். (௬)

நாரதீயமையைந்துறழாயிரநலத்த
காருடந்திகழ்மூவிரண்டாயிரக்கணக்குச்
சாரவைணவமத்தொகைசாற்றுபாகவத
மீரொன்பான்சகத்திரமெனவெய்தியகிரந்தம். (௭)

பாதுமம்பெறும்பன்னொராயிரம்பிரம
மோதுகின்றவயுதந்துறுமோரெண்ணாயிரத்தை
வாதிலாக்கினேயங்கெழும்பிரமகைவர்த்த
மாதுவாதசசகத்திரகிரந்தத்தால்வயங்கும். (௮)

முத்துவாணகைமுகிழ்முலைமுழுமதிமுகத்துத்
தொத்துலாவியசுரிகுழற்றோகைசேர்வாமச்
சித்துமூர்த்திதன்புராணங்களொருபதுந்தெரிக்கிற்
சத்துவத்தனிக்குணத்தினவென்பராற்சான்றோர். (௯)

துளங்கல்காரணஞ்சோறுமால்யோகியர்ப்போத
முளங்கொளுத்துவான்றெளிபளிங்குருவத்தனுறங்கான்
கிளந்தவச்சிவன்பிராமணாதிபதியாய்க்கிளர்வான்
விளங்குசத்துவஞானசுகாகரம்வெளிதே. (௧௦)

பூமடந்தையுங்கவுத்துவாபரணமும்பொலியுந்
தாமமார்பமுந்தாமரைத்தடங்கணுஞ்சமைந்த
நாமநம்பியைநவின்றுளபுராணமோர்நான்குந்
தாமசத்தனவாமெனச்சாற்றுவர்தக்கோர். (௧௧)

தமசுநீலமுதாசினநித்திரைசோம்ப
லமரும்வஞ்சனைத்தொழில்வன்மைமயக்கமிவ்வண்முங்
கமலைகோன்பணிமிசைத்துயில்புரிபவன்கரியோன்
றிமிரமல்கியவன்பணாமோகனஞ்செய்வான். (௧௨)

இராகவண்டினம்பெடையொடுமின்னறமாந்திப்
பராகமெய்யளைஇப்பயில்கின்றபதுமபீடத்துப்
புராதனன்பொருட்டிசைந்தனபுராணங்களிரண்டு
மிராசசத்தவென்றிசைக்குவர்முற்றுணர்ந்திசினோர். (௧௩)

மிக்கபோர்விளைத்திடுமிரசோகுணம்விளம்பிற்
றுக்கத்துக்கிடஞ்சஞ்சலரூபமோர்துதைந்த
செக்கர்வண்ணத்ததாகுபுதிகழ்கிற்குஞ்சிவந்த
வக்களேபரன்படைத்தலாற்சலனத்தனயனே. (௧௪)

கக்குநீடொளிக்கதிரினாற்கனான்றபேரிருளை
நக்குவெய்யவனன்மகநடவுழிநாளும்
புக்குணக்கினியென்றிவர்க்கெய்தியபுராண
முக்குணக்கலப்பினவெனமொழிபமாமுதியோர். (௧௫)

ஆதவன்சுடர்ப்பாவகனெனவிவரங்க
ணோதநின்றனதிரிகுணயுத்தராயுறுவார்
மீதுரைத்தபுராணமூவாறினுள்விசேடம்
பாதிமாதுக்குப்பகிர்ந்தவன்பொருட்டுளபத்தும். (௧௬)

இன்னதன்மையவிருஞ்சிறப்பியைந்தனபத்து
ணன்னர்மேவியபொருளொடுநகுபிரமாண்டஞ்
சொன்னதாம்வயிரவபுரிமான்மியந்துகடீ
ரன்னகாதையிற்றலச்சிறப்பன்பினாற்கேண்மின். (௧௭)

புராணவரலாற்றுப்படல முற்றிற்று.

ஆ படலம் ௫-ஜி செய்யுள் - ௨௦௮.

தலவிசேடப்படலம்.

உவரிசூழ்நாவற்றீவத்தோங்கியபரதகண்டத்
திவர்புகழ்வேங்கடப்பேரிருங்கிரித்தென்பான்மன்னு
நவநவந்தோன்றுமின்பநற்றமிழ்நாடுமூன்றுட்
பவன்மகனம்மையாண்டபாண்டியதேயந்தன்னில். (௧)

திருப்பெருந்துறைக்குமேற்குச்செறியுநால்யோசனைத்தாய்
மருப்பொழிற்கானப்பேர்க்குவடாதுமூவோசனைத்தாய்க்
குருக்கொடுங்குன்றத்திற்குக்குணதிசையாவெள்ளாற்றிற்
கொருப்படுந்தெற்குத்திக்காவொன்றரையோசனைத்தாய். (௨)

பொலிவுறும்வடுகநாதபுரமெனுமூதூரங்கண்
வலியவெவ்வினைகடீர்க்கும்வளரொளிப்பெருமான்பாங்க
ரொலியிசையேறழிஞ்சிலொன்றுநின்றுளிராநிற்கு
மலிதருசிறப்பினஃதுமாதலவிருக்கமாமால். (௩)

மூளரியம்பொகுட்டுமேயமுன்னவன்பதவிநல்கும்
வெளிறியநாற்கோட்டும்பல்வேந்தனூர்வாழ்வுநல்குந்
துளிமதுப்பிலிற்றுங்குல்லைத்தொடையினுனுலகுநல்கு
மளிமுரல்போதுதுற்றவணிபொழில்வடுகன்மூதூர். (௪)

விரிச்சிகராசிமாட்டுவெங்கதிர்விரவுந்திங்கட்
பரித்திலாவன்பரோனும்பானுவாரத்திற்சென்று
சுரித்துளமுகத்துச்சங்கத்துவனிமாறுதவவ்வூர்த்
தரித்தொருகடிகைதங்கிற்றுங்கரும்பாவநீங்கும். (௫)

பந்தமுற்றொழிதல்வேண்டிற்பரகதிசார்தல்வேண்டிற்
சிந்தனையடங்கவேண்டிற்சிவபிரான்கருணைவேண்டி
னந்துதலின்றியென்றுநண்ணுமங்நகரின்பாங்கர்
வந்தொருநொடிப்போதேனும்வசித்திடல்வேண்டுமோதோ. (௬)

எல்லையில்சுருதியாவுமெம்பிரான்வளரொளிப்பேர்
வல்லவன்புகழையன்றிவழுத்துறுவகையுங்காணே
மல்லொடுமெணியைச்செற்றுமாதவர்க்கிடுக்கணீத்த
நல்லவன்வடுகநாதனகரினுக்கெதிருங்காணேம். (௭)

ஓதநீருலகினுள்ளவொவ்வொருநகரினுக்குஞ்
சாதனங்கற்பித்தேனோர்சாற்றுசீர்முகமனேயா
மாதவன்பற்றகர்த்தவண்ணல்வாழ்கின்றவிவ்வூ
ரோதருமேன்மைத்தென்னவுரைப்பதுசரதமம்மா. (௮)

நவமணிக்கலன்களெல்லாநவில்பெருவிலையவேனுஞ்
சிவன்விழிமணிப்பூண்போலச்சீரியவாமேயச்சோ
பவமறுபதிகள்கோடிபார்வயிற்பொலிந்தவேனுந்
தவமலிவடுகநாதன்றலத்தினிற்சாலுங்கொல்லோ. (௯)

பல்லுகங்கிரியிற்கானிற்படர்ந்துசெய்தவத்தின்பேறு
மெல்லையில்லாததீர்த்தமெவற்றினுந்தோய்ந்தபேறுஞ்
சொல்லரும்பல்லதானந்தூயவர்க்களித்தபேறு
மல்லல்கூர்வடுகன்மூதூர்வசித்தவோர்நாள்வழங்கும். (௧௦)

வட்டவார்கடல்சூழ்வையவளைப்பினைவலஞ்செய்பேறு
மெட்டுநாலாயதன்மமியற்றலாலெய்தும்பேறுஞ்
சிட்டரிப்புவியில்வைகுஞ்சிவமறையவர்தங்கையி
லெட்டுணைப்பொருளுவப்பாலீத்தவர்பெறுவர்திண்ணம். (௧௧)

ஆரணமாகமங்களனைத்துங்கற்றுங்கடங்கிக்
காரணபரமானந்தக்கடலகம்படிந்தார்நெஞ்சும்
வாரணமுரித்தவள்ளல்வயிரவன்வாழிவ்வூருஞ்
சீரணவொக்கும்வேறுசெப்பலாமுவமையின்றே. (௧௨)

திப்பியபோகந்துய்க்குந்தேவருமீண்டுவந்து
முப்புரம்பொடித்தோயெம்மைமொய்திறலவுணராற்று
மிப்பயந்தவிர்த்தியென்னவெம்பிரான்வடுகனுகி
யப்படியருளினனேலளவிற்றேயிவ்வூர்மாட்சி. (௧௩)

வயிரவநகரந்தன்னைமனக்கொள்வோன்றருமஞ்சாரும்
வயிரவநகரமென்றுவழுத்தினேனருத்தமெய்தும்
வயிரவநகரங்கண்டுவணங்கினேனின்பந்துன்றும்
வயிரவநகரிலென்றும்வதிந்தவன்வீடுமேவும். (௧௪)

பொருக்கனைத்தேமாந்தண்பூம்பொழில்புடையுடுத்துப்புக்கார்
கருக்கனைதருமாசெய்துகவினெலாமன்னிவன்னித்
திருக்கனையிகப்பிலாவித்திருநகர்சிறந்ததென்கை
சருக்கனையினிப்பிற்றென்றுசாற்றுதறகையுமன்றே. (௧௫)

காசியிலிறந்தார்தம்மைக்காலவைரவன்சூற்கோத்து
மூசியமுகூர்த்தமொன்றுமுறைசெயாப்பவந்தொலைக்கு
மாசிலிங்கர்மாண்டாரையத்துணைத்துன்புமின்றி
மாசிலாக்கயிலைசேர்ப்பன்வடுகன்றன்னூரொன்றெண்ணி. (௧௬)

அற்பகச்சசிசெவ்வாயினமுதமுண்டமரர்போற்றக்
கற்பகநீழல்வைகிக்களிக்கின்றவாழ்வினின்று
மெற்பகமிளிருமாடத்திப்பதியிடத்திருந்து
பற்பகன்மனைதோறேற்றுப்பரிவுறும்பரிசுநன்றால். (௧௭)

பொருவரும்வடுகநாதபுரத்திடைப்பிறந்தார்மீட்டுங்
கருவயிற்பிறவாராங்குக்கணத்தவரெதிர்கொள்பாக்குத்
திருவுறமரித்தார்வேறோர்தேயத்தின்மரியாரங்கண்
மருவினுருலகமூன்றின்மருவிலார்பின்னர்மன்னே. (௧௮)

நந்தனமென்றுகாரிநாகமாமுகத்தோன்சாமி
நந்தனகண்டத்துண்கணகமகணம்பனின்னோர்
நந்தனந்தியவாழிந்தநகர்வயின்மடந்தடாக
நந்தனமியற்றுகிற்போர்நரர்தமுட்சுரரின்மிக்கார். (௧௯)

தூரியமுழக்கமோவாத்தொல்வயிரவபதிக்க
ணூரியர்க்கேனுமற்றையதிதியர்யாவர்க்கேனுஞ்
சீரியவன்னதானஞ்செய்தவரெய்தும்பேறு
கூரியமதியிற்சேடன்குணிப்பவுமருங்குனாத்தே. (௨௦)

தேவியைநீங்கியாற்றிச்சில்பகல்கழிந்தபின்றை
கோவியல்கோட்டிமப்பொற்குன்றிடைவேட்டணைந்த
காவியங்களத்தெங்கோனிக்கடிநகரொருவாதென்று
மேவினனென்னினீதுவிளம்பலாம்விழுப்பத்தொன்றே. (௨௧)

இன்னகாலத்துண்டாயிற்றென்பதுதெரிகிலாமைப்
பொன்னகர்வணக்குமிஃதுபுராதனவனப்பேயெய்தும்
பின்னரோறழிஞ்சிற்காட்டம்பெட்புறத்தழைத்தவாற்று
னன்னரங்கோலகானநாமமுநண்ணிநிற்கும். (௨௨)

ஆதியாயனாதியாகியளப்பிலாவூழிதோறும்
பேதியாநிலைமைத்தாயபெருவயிரவதலச்சீ
ரோதினுமுழுதுமென்னவுன்னலுமடமைப்பாற்று
னீதியால்வடுகதீர்த்தநீர்மையினீர்மைசொல்வாம். (௨௩)

தலவிசேடப்படல முற்றிற்று.

ஆ படலம் ௬ - இ செய்யுள் - ௨௯௦.

தீர்த்தவிசேடப்படலம்.

கங்காநதியைச்சடைக்கணிந்தகண்ணுர்நெற்றிவளரொளியை
யிங்காதரவின்யாமெல்லாமினிதினுட்டவொருதீர்த்த
மங்காதென்றுந்திகழ்கிற்கும்வண்ணமிரங்கித்தருதியெனத்
துங்காமரசமூகநனிதொழுதுவணங்கியிரந்திடலும். (க)

குமரவடுகப்புத்தேடன்கோயிற்கவாசிமாதிரத்துச் [க்
சமரிற்கிளர்முத்தலைச்சூலந்தரணியூன்றப்பிலநின்று
விமலப்புனன்மேக்கெழுந்திடலும்விண்ணேர்நோக்கிவியப்புற்று
கமலவிதியைச்சிரங்கொய்தக்கங்கைவைத்ததிறன்மூர்த்தி. (உ)

அசுரர்பொடியாம்படிநூறியடியேங்குடியைநிலைநிறுத்தி
வசையினீங்கியுலகமெலாம்வாழத்தோன்றிவயிரவப்பே
ரிசையவணிந்தகாபாலியிந்நீர்த்தடத்தின்மான்மியத்தை
யசைவின்றளியேந்தெளியுமாறருளிச்செய்தல்வேண்டுமென. (௩)

விண்ணுட்டிருந்துகோலோச்சும்வேந்தன்முதலோர்வீழ்ந்திறைஞ்
கண்ணுற்கருணைநோக்களித்துக்கருங்கஞ்சுகத்துச்செங்கடவு [சக்
டண்ணுரனையதீர்த்தத்தின்றகுதிசான்றமகிமையெலா
முண்ணுரமுதமெனவன்னேருள்ளங்களிப்பவுரைக்கின்ருன். (௪)

இத்தெண்டீர்த்தம்யாந்தரலானெமதுபேரினிலங்கிடுக
வொத்தகாதலுடையராயொருமண்டலமிந்நீர்மூழ்கும்
வித்தகத்தோர்பெறலரியமிக்கமக்கள்பெறீஇவாழ்ந்து
புத்தென்றேதுங்கொடுநிரையம்புகாமேமேலையுலகுறுவார். (௫)

நாதங்கடந்தநம்முருவாய்நானுவிதத்ததேவுருவாய்ப்
பூதந்தம்முளொன்றுயபுனலினுருவாய்விளக்குறுமித்
தீதின்றுயர்ந்ததீர்த்தத்திற்சிந்தையானேர்காற்றேயி
னேதம்பாற்றிச்சிவவடிவமெய்தவளிக்குமியவுளர்காள். (௬)

குன்மநோயாரொருவாரங்கோன்மைகோடிக்குடிகெடுத்த
கன்மமுடையாரிருவாரங்கணவர்க்கிழைக்குங்கைங்கரிய
நன்மைபிழைத்தநேரிழையார்நான்குவாரம்பரமசிவ
தன்மவிரோதியோராண்டித்தடத்தின்மூழ்கக்கெழும்புனிதம். ()

துடிநேரிடையார்கற்பழித்ததுட்டன்றிங்களீரிரண்டு
படிதீர்மறையோர்க்கிடரிழைத்தபாதகத்தோனேரயனங்
கடிசேர்பிரசநறுமலரைக்கடவுட்பூங்காவனத்தெடுத்து
முடிமேலணிந்தகொடும்பாவிமூவாண்டாடவனகமுறும். (அ)

மலநீங்கவேண்டினோர்மரணம்பிறவிதெறநினைவோ
ரிலகுசெல்வவேட்கையினொண்ணார்படையைவெலக்குறித்தோ
ருலகமுழுதாள்விருப்புடையோரும்பர்பதவிவெஃகினோ
ரலகில்புகழ்சேரித்தீர்த்தத்தாடினினைத்தாங்கண்முவரால். (௯)

மாசினிகந்தமணிகொழிக்கும்வாரிசூழ்ந்தவையகத்துப்
பாசப்புணரியிடையழுந்திப்பாவவினைக்குக்கொள்கலமா
யீசன்றுணைத்தாண்மலர்ப்பத்தியென்னுமில்லாவிழுதையரும்
பேசற்கரியநமதுதடம்பேணிப்படியிற்பெரியாரே. (௰)

வேறு.

புண்ணியப்பிழம்பாய்நம்பேர்பூண்டவிப்புனிததீர்த்தந்
தண்ணியசலிலரூபந்தாங்கியதேனுந்தோய்ந்தா
ரொண்ணியுமெண்ணுமேயுமியற்றியபவம்பஞ்சாக
வண்ணியங்கெரித்தலாலேயழலெனுந்தன்மைத்தம்மா. (௧௧)

மகரமாமதியிற்பூசமருவுவாவிந்நீர்தோய்ந்தோர்
சிகரமாயுலகுக்கெல்லாஞ்செல்வத்திற்சிறந்திலங்கி
யகரமாதியவாமூன்றனக்கரத்துள்ளூநின்று
புகரறவிளங்குமீசன்பொலன்கழலருகுசார்வார். (௧௨)

மாசிமாமகநாளொன்றிமரீஇயபூரணையிலிந்நீ
ராசறுகனிந்தகாதலகத்தினர்சென்றுமூழ்கிற்
பாசவெங்கரத்துக்கூற்றூர்படர்படர்படர்தணந்து
தேசுலாஞ்சிவலோகத்தைச்சேர்வதற்கையமின்றே. (௧௩)

பங்குனியுத்திரத்திற்பான்மதிக்கிரணக்கற்றை
பொங்குபூரணையிலிந்தப்புண்ணியதீர்த்தந்தோய்ந்தார்
மங்குலிற்கறுத்துநெய்த்துவார்குழற்கவுரிவாமந்
தங்கியவைத்தபெம்மான்றன்னுருப்பெறுவரன்றே. (௧௪)

மேடமென்றோதுந்திங்கள்விளங்குசித்திரைப்பேர்நன்னாள்
கூடுறுங்காலத்திந்தக்குறைவில்சீர்வடுகதீர்த்த
மாடினரிசைபரப்பியரும்பெறற்புதல்வர்ப்பெற்று
நீடிவண்வாழ்வின்மன்னிநிமலனுருலகஞ்சார்வார். (௧௫)

இடபமாமதிவிசாகத்தித்தகுதோயந்தோய்ந்தார்
முடமதிமிலைந்தோன்கோயின்முதற்கடைக்காவனந்தி
யிடனுலாங்கணங்களெல்லாமெதிர்கொளவிமையோரேத்தக்
கடலினைவகையியங்கள்கலித்திடக்கயிலைசார்வார். (௧௬)

மிதுனமாந்துணையிராசிவெங்கதிர்ச்செல்வன்மேவு
முதியவுத்திரநாளிந்தமூரிநீர்மூழ்கப்பெற்றோர்
விதிவிலக்கறியாதுள்ளமேயசெய்துள்ளாரேனும்
பதிதபாவனராய்ப்பின்னர்ப்பசுபதிகணத்தராவார். (௧௭)

பரிதியங்கடவுளென்னப்படுபவன்கடகத்தேகு
மரியதெற்கயனத்தாதியாமதிக்குகுவிலிந்நீர்
பெருகுமன்பாற்படிந்துபிதிர்தருப்பணஞ்சிராத்த
மரபுளியியற்றியிட்டோர்வையம்வான்வணங்கவாழ்வார். (௧௮)

ஆதவன்றனக்குரித்தாயறவுயர்சிங்கத்திங்கண்
மேதகுமுற்பக்கத்துவிரவியசதுர்த்தியின்கட்
பூதலத்தென்னரேனும்புக்கிந்நீர்நெறியிற்றோய்ந்து
மோதகப்பிரியன்பூசைமுடித்தவர்முத்தரன்றே. (௧௯)

கன்னியாமாதத்தின்பாற்கலவுமாநவமிக்காலை
யின்னமாதீர்த்தந்தோய்ந்தோரெண்ணருநிதிபடைத்துத்
துன்னுபல்போகந்துய்த்துச்சுகப்பெருங்கடலுளாழ்ந்து
பின்னரெம்பெருமான்வெள்ளிப்பிறங்கலிற்பிறங்கல்செய்வார் (௨௦)

துலைமதிமுப்பானுளுந்துரிசறுமனத்தராகி
நிலைஇயவார்வத்தோடுநெறிவழாநியமந்தாங்கி
யுலைவறுசெங்கேழ்ப்பானுவுதிக்கும்போழ்தித்தடத்தி
னலைபுனல்படிந்தாரீசனடியிணையடைவர்மாதோ. (௨௧)

ஆயிரங்கரம்பரப்புமலரிதேளடுக்குந்திங்கட்
பாயிருள்பாற்றுநின்றபனிமதிவாரத்தோடு
ஞாயிறென்றிசைக்கும்வாரநாரமிஃதாடுநல்லோர்
காயிகமுதலபாவக்கட்டொரீஇக்கலப்பவீடு. (௨௨)

வில்லெனுமிராசிமாட்டுவிரிகதிரவிப்புத்தேள்
செல்லுறுதிங்கள்வாயாதிரைநாளித்தடத்துமூழ்க
வல்லவர்பிணியினீங்கிவன்றிறற்பகையைவென்று
பல்லநாளிங்கணேங்கிப்பரகதிபெறுவர்திண்ணம். (௨௩)

இத்தடநீர்வாழ்கின்றயாவையும்விமலமென்னச்
சித்தநீர்கோடிரிந்தத்தீம்புனல்படிந்தவங்கூழ்
தத்தமெய்தோயநின்றதருக்களுஞ்சுரரிற்சீர்க்கு
முத்தியையுயிர்க்குநல்கமுளைத்தகற்பகமிஃதோர்மின். (௨௪)

வே று.

இட்டசித்தியெவர்க்குமளித்தலா
லட்டமூர்த்தியையொக்குமவ்வாழ்புனற்
றுட்டரிற்றுட்டர்தோயப்பெறுவரேற்
சிட்டரிற்சிட்டராகித்திகழுவார். (உரு)

அகலிடத்திலனந்தநதிநதந்
தகவுயர்ந்ததரத்தினவுள்ளன
பகரவற்றின்பவந்தொலைத்தியாவைக்கும்
புகலிடத்ததிப்புண்ணியதீர்த்தமே. (உசா)

இத்தடத்தினிருங்கரைவைகுபு
சித்தமொன்றித்திருவைந்தெழுத்தினை
மெத்துமன்பின்விளம்பினனொன்றுயிரப்
பத்துக்கோடியிற்பல்கிப்பலிக்குமே. (உஎ)

இன்னதானவெழிற்புனற்றீரத்திற்
சொன்னதானந்துகில்புவியாதிய
வென்னதானமியற்றினுஞ்செப்புங்கா
லன்னதானமயுதநியுதமே. (உஅ)

என்றுகாரியிபம்பித்தன்கோயிலுட்
சென்றிலங்கினன்றேவர்களிசிறந்
தொன்றுமீசனையுத்தகுநீரினன்
மன்றவாட்டிவரங்கிடைத்துய்ந்தனர். (உகூ)

என்னவங்கணிசைத்தருள்சூதனை
மன்னுநைமிசவாசிகணேக்குபு
துன்னுமத்தடத்தோயத்திற்றோயயா
ரென்னவான்கதியெய்தினர்கூறென. (௩0)

சூதமாமுனி!தொன்றுநிகழ்ந்ததோர்
காதைதன்னைக்கழறுதன்மேயினன்
மாதர்வைரவமாநகருக்கரைக்
காதமேற்றிசைக்கண்ணுளதாமரோ (௩க)

கருப்புற்றார்தலில்காட்சியர்மாட்சியர்
விருப்புற்றூர்வதுவிண்ணகர்நேர்வது
திருப்புத்தூரெனுந்தெய்வப்பதியதிற்
பொருப்புப்பூண்முலைப்பூவையொருத்தியே. (௩உ)

ஆடகத்தனிப்பாவையரங்கிடை
நாடகம்புரிந்தாங்குநடிப்பவள்
வீடகத்துவிழையும்பெரியரும்
பாடகத்தளிர்பற்றியநின்றுளாள். (௩௩)

ஆடலாலுமமிழ்தினுமின்னிசை
பாடலாலும்பதுமவிழிகொடு
நாடலாலுநகைமுகங்கோட்டியே
யூடலாலும்பலரையுருக்குவாள். (௩௪)

துஞ்சியாணர்ச்சுரதவதிப்பெய
ரஞ்சிலோதியளாடவர்கைப்பொரு
ணெஞ்சினேடுகவருநெறியினள்
கொஞ்சியாருயிர்கூட்டுணுங்கூற்றனள். (௩௫)

கொக்குமானுநரையினர்கூனியார்
மிக்கபங்கர்விழியிலர்மூங்கையர்
புக்கநோயர்புலையர்களாயினுந்
தக்கபொன்றரின்வல்லைதழுவுவாள். (௩௬)

கள்ளினைக்குடித்திட்டகளியினள்
புள்ளினுக்கும்புனத்துவிலங்கிற்கும்
பள்ளநீரிற்படுவனயாவைக்கு
மெள்ளுமீம மெனுஞ்சிறுபண்டியாள். (௩௭)

நடுங்குமின்னுறழ்நன்னுசுப்பொண்டொடி
நெடுந்துன்பத்திநிரயம்வழங்குவ
விடுந்திறத்தவினைபலசெய்தலாற்
கொடும்பவங்கட்கொர்கொள்கலமாயினள். (௩௮)

இத்திறத்தினிலங்கியவேந்திழை
முத்தினைப்பொருமூரல்கழன்றிட
வொத்தகொங்கையுலைவுற்றுநாலிய
தத்திக்கோலிற்றளர்வினியங்குவாள். (௩௯)

வேறு.

குன்மநோய்வயிற்றினைக்குமைப்பக்கண்டவர்
கன்மநோயிதுவெனக்காயமும்புழுத்
தென்மனோரதமினியிறப்பதாமென
வன்மநோயுழந்தறமயங்கிமாழ்கினள். (௪0)

பல்பகலிவ்வணம்பரிந்தொழிந்தவள்
தொல்பழவினைப்பயன்றுஞ்சுநாளுற
வெல்படையந்தகன்றூதர்மேவலுங்
கொல்புலிநோக்கியகோவினேங்கினாள். (சுக)

வேறு.

வந்தவத்தூதர்சீறிமாதராளாவிவெளவிப்
பந்தமிட்டரும்பாசத்தாற்பதைக்குமாகதையாற்சாடிச்
செந்தழனரகில்வீழ்த்தார்செப்பியவன்னுண்மெய்யைப்
பந்தியினரிநாயீர்த்துப்பதிப்புறத்துப்த்துய்த்த. (சுஉ)

பழுதின்றிவிளங்காநின்றபைரவதீர்த்தநீரிற்
கழுகொன்றுதோய்ந்துமுன்னர்க்கழறியசவத்தைத்தின்ன
விழுகின்றகாற்சிறைக்கண்மேம்புனற்றுளிகிழக்கு
நழுவின்றக்குணபத்தோர்பானனைத்தலுந்தென்றிசைக்கோன். ()

ஆரழனிரயத்தாழாவருந்துயருழக்குமந்தக்
காரிகையுற்றுழிப்போய்க்கடிதவணின்றெடுத்துப்
பேரறநங்காய்முன்னைப்பிறவியிற்புரிந்தாய்போலும்
வேரொடுங்கொடியபாவவினையொரீஇப்புனிதையானாய். (சச)

தேவர்களிடுக்கணீப்பத்தெய்வநாயகனிற்றோன்றி
யேவருமிறைஞ்சியேத்துமெம்பிரான்வடுகநாதன்
றூவறுசூலத்தாக்குந்தடம்புனனினதுயாக்கை
மேவியதெனிலுனக்குமேலினிப்பெறும்பேறுண்டே. (சரு)

இம்மொழிதருமன்கூறுமேல்வையிற்கயிலைக்குன்றத்
தைம்முகம்படைத்தபெம்மானணையாலளப்பிலாதார்
கைம்மிளிர்சூரனந்திகணத்தவர்விமானங்கொண்டு
விம்முபல்லியமுழங்கவிரைந்தனராங்குப்புக்கார். (சசு)

கதிரவனீன்றதோன்றல்கைக்கமலங்கள்கூப்பி
யெதிருறவேகிப்போற்றியிறைஞ்சினனுகவிப்பான்
முதிர்சுவையமுதமன்னமொய்குழலவளையம்பொன்
விதிரொளிவிமானத்தேற்றிவிழுத்தகுகணத்தர்மீண்டார். (சஎ)

அண்ணலார்கயிலைசார்ந்தாரன்னவளகிலந்தந்த
பெண்ணலாளெம்பிராட்டிபெருங்கணத்தலைமையெய்தி
யுண்ணிலாவியவானந்தவுததியிற்குளித்தாளென்றுற்
றண்ணறூவடுகதீர்த்தத்தகைமையார்சாற்றவல்லார். (சஅ)

சகரர்கள்பண்டுகெண்டதடங்கடன்முனிவர்வானோர்
சுகமலிசுதன்மைவேந்தன்றெட்டுளதீர்த்தமாதி
யகனறவிரிஞ்சன்சென்னியரிந்துமாலதனுரித்த
புகழ்குலாம்புத்தேணல்கும்பூதநீர்போல்வதெங்ஙன். (சகூ)

மன்னியவயிரவப்பேர்வாய்த்தமாதீர்த்தச்செய்தி
யென்னுரைசெய்தாமாவியெனைத்தையும்படைத்தல்காத்தல்
பின்னுறத்துடைத்தலென்னும்பெருந்தொழிலிசைந்தமூவர்
முன்னவன்வளரொளிப்பேர்மூர்த்திமான்மியமிசைப்பாம். (ருo)

தீர்த்தவிசேடப்படல முற்றிற்று.

ஆ. படலம் எ - இ செய்யுள் - உ௪௦.

மூர்த்திவிசேடப்படலம்.

உத்தமசுயம்புக்கெல்லாமுத்தமமாகிநாத
தத்துவாதீதமாகித்தற்பரவடிவமாகிச்
சத்தியஞானனந்தத்தனிப்பொருளாகியோங்கு
மத்தியாந்தாதிதேற்றுவளரொளியிலிங்கமாதோ (க)

பாசவன்றளையிற்பட்டபசுவர்க்கமுழுதுமுய்ய
மாசறுகருணைநல்கும்வடிவுடைநாயகிக்கு
நேசனும்வளரொளிப்பேர்நின்மலமூர்த்திசீர்த்தி
பேசரிதென்றுநன்றுபேசியநிகமசாலம் (உ)

எழுஞ்சுடர்மேனிதாங்கியெங்கணுமிடையறுமே
பழஞ்சுவையெனச்செறிந்துபாரகத்தார்க்கிரங்கி
யழிஞ்சிலினடியிற்றேன்றியமரர்கோனயன்மாலேனோர்
விழுந்துவந்தனைசெய்தேத்தவிளங்குமிச்சைவலிங்கம். (ங)

வேறு.

பாரிற்சிறந்ததொண்டருளப்பதுமமலர்த்தும்வளரொளியாம்
பேரிற்பொலியுமிலிங்கத்தின்பெருமைவிரிக்கத்தொடங்குவோன்
காரிற்கிளருநெடுவிசும்பைக்கையாற்பற்றிக்கடிதெடுத்து
நாரிற்சுருட்டிக்காட்டுகெனுநயனில்பேதைமானுடால். (ச)

மாசிற்பொதிந்தவுடம்பெய்திமானூர்கலவிக்கடன்மூழ்கி
யேசிற்பொதிந்தபாதகங்களெண்ணிலாதவிழைத்தோரும்
தேசிற்பொதிந்தவளரொளியெந்தெய்வப்பெருமான்றிருநாமம்
பேசிற்பொதிந்தநலத்ததாம்பெரும்பேறடைதல்சரதமால். (௫)

எவனுந்தங்கவுரியானையெறும்மாதங்கவுரியானைக்
கவினுங்கண்டங்கறுத்தானைக்கங்கங்கண்டங்கறுத்தானை
யவிர்துவசமாதரித்தானையராக்கவசமாதரித்தானை
யுவமையரியவடுகபுரத்தொருகாற்கண்டார்பவங்காணூர். (௬)

இந்தார்வேணியெம்பெருமானினியகருணைநமர்பொருட்டு
நந்தாவிலிங்கத்திருமேனிநண்ணிநாராயணக்கடவுள் [பக்
செந்தாமரைப்பூவீற்றிருக்குஞ்செம்மன்முதலோர்செருக்கொழிப்
கொந்தார்பொழில்சூழ்வயிரவப்பேர்க்கோணநகரத்தெழுந்தன்றே

வேறு.

முன்னரொருகற்பமதின்முதுவிதிவசத்தா
லன்னவிதிமால்குலிசியாதியர்மயங்கி
யுன்னுசிவன்மன்னனெனுமுண்மையைமறந்து
பன்னருமகந்தைநனிபற்றினர்திரிந்தார். (அ)

மறைபுகலும்வாக்கியமறந்திடருழந்தார்
நிறைதருதம்வல்லமையினீடுயிர்தழைத்தே
யுறையுமெனவுன்னினருயிர்க்குயிரொனத்தான்
கறைமிடறுடைக்கடவுள்கலவியதுதேரார். (௯)

சுத்தபரதத்துவசுகப்பொருளயர்த்தார்
தத்தமமனத்தினிடைதாம்பிரமமென்று
மித்தைபசுபாசபதியாமெனவுமிக்க
பித்துவளரக்கடிதுபேரறிவிழந்தார். (௧௦)

ஐந்தொழிலியற்றுபவனன்றரணமூன்றுஞ்
செந்தழலினுக்குணவளித்தசிவமூர்த்தி
தந்தமலைதந்தபொருடந்தையெனவுன்னூர்
சிந்தைமருள்வெய்தினர்திகைத்தனர்முனைத்தார். (௧௧)

மாதவமுயற்சிமறையோதுநெறிமாறிப்
போதநனிபொன்றியவர்தங்களுள்வெகுண்டெ
யேதமுறுபோர்வினையியற்றிடநினைந்து
வேதனெடுமாலினெடுவிண்ணரசன்முன்னோர். (௧௨)

சுற்றுபடையோடமர்தொடங்குவதுகண்டு
மற்றிவர்மயக்கினையொழித்துமெனவெண்ணி
முற்றறிவுடைச்சிவன்மொழிந்தசுரர்நாப்பட்
டெற்றெனவளர்ந்தவொளியாகுபுதிகழ்ந்தான். (கஙு)

வேறு.

அண்டமெண்ணில்லகோடியமைந்துளவொளிகளெல்லா
மெண்டகுமிலிங்கரூபமேய்ந்தெழுந்தெனவிளக்கங்
கொண்டுயர்வளரொளிப்பேர்க்குறியினைச்சதமகத்தோன்
றண்டுளவணிந்தமாயோன்சதுமுகன்முதலோர்கண்டார். (கச)

வளர்ந்தபேரொளியைக்கண்டமாலயன்வேந்தனேனோ
ருளந்தடுமாறியங்கமொடுங்கிவாய்புலர்ந்துசாம்பி
யிளங்கதிரனந்தகோடியெழுந்தனைத்தச்சோவீதென்
றளர்ந்தனயாமுன்கொண்டதருக்கெனவிருக்கும்வேலை. (கரு)

அந்தரம்பாதலம்பூவகிலமுஞ்சங்கற்பத்தாற்
றந்தவையாகிவேறாய்த்தானவற்றுடனுய்நிற்குஞ்
சுந்தரவளரொளிப்பேர்ச்சோதியினருளாலாங்கே
முந்துறமொய்த்தார்கேட்பமொழியுமாகாயவாணி. (கசு)

வேறு.

இமையாரென்னநும்மைமதித்தேத்தும்பதவிவழங்கியெவ
னமையாவரம்பின்மூதண்டத்தகத்தும்புறத்துமுளன்யாவன்
சமையாதீதப்பழம்பொருளாய்ச்சமையபேதந்தானுகி
யெமையாளுடையானேவனவனிவனேயென்னவினிதுணர்மின். ()

எண்ணற்றறிதற்கரியனவாயிருக்குமிருக்குமெய்யாமை
மண்ணற்றறலற்றனலற்றுவளியுமற்றுப்பரந்தக்லி
விண்ணற்றைந்துபுலனற்றுமேவும்பொறியுங்கரணமுமற் [ன்.
றுண்ணற்றவர்காணியவிளங்குமொளியென்றுவனைக்கடைப்பிடிமி

என்றுகழறுமசரீரியினியமாற்றங்கேட்டலுமே
துன்றுமுகுந்தனுள்ளிட்டார்துண்ணென்றுடலநடுங்கிவெரீஇ
யொன்றுமுவகைதலைசிறப்பவுள்ளுந்தோறுமென்புனிற்றுக்
கன்றுபிரிந்தகாலிவரக்கண்டபொழுதிற்களிபடைத்தார். (ககூ)

ஓதம்பொங்கியுகமுடிவிலுலகைவிழுங்கவெழுமொலிபோ
னுதஞ்சென்றுவிண்முகட்டைநணுகிப்பிளப்பநான்முகத்து

வேதன்செம்பொன்னிறக்கரியோன்வெள்ளைக்கரியோன்முதலமரர்
கீதம்பொருந்தச்சுருதியினாற்கிளத்தலுற்றார்தோத்திரமே. (உo)

வேறு.

சொற்பதங்கடந்தஞானசொருபமேயெளியரோஞ்செய்
முற்பவந்தபமுளைத்தமுதுவளரொளியேமிக்க
வற்புதமெவற்றினுக்குமற்புதமாகியுள்ளாய்
பொற்புறுபுராதனக்கான்புரந்தருள்புனிதபோற்றி. (உக)

வாரணத்துரிவைபோர்த்தவளரொளிநாதவெம்மு
ளாரணங்கற்றுவல்லவயனுருவாகித்தந்து
நாரணனுருவாய்க்காத்துநம்பனதுருவாய்ச்சீத்துங்
காரணமெவைக்குமானகடவுளேபோற்றிபோற்றி. (உஉ)

எண்குணத்திறைவபோற்றியிளம்பிறைசூடிபோற்றி
பண்கனிவேதச்சென்னிபாலினெய்போல்வாய்போற்றி
தண்குலவாகமத்திற்றயிரிழுதனையாய்போற்றி
யொண்கனல்கரியதென்னவோங்கொளிப்பிழம்பேபோற்றி. (உஙு)

நிலத்திடையைந்தாய்நின்றநிராமயமூர்த்திபோற்றி
சலத்தினினான்காய்வெய்யதழல்வயின்மூன்றாய்வங்கூழ்
வலத்திரண்டாகியொன்றாய்வானகத்தமர்ந்தாய்போற்றி
மலப்பிணியெமக்குவீட்டும்வளரொளிநாதபோற்றி. (உச)

கோதிலாவமுதேபோற்றிகுணப்பெருங்குன்றேபோற்றி
யாதியுநடுவுமீறுமளக்கியவொண்ணாய்போற்றி
போதொடுபுணரிவாழ்வேம்புந்தியிற்றுறுமகந்தைத்
தீதறமேக்குயர்ந்ததிருவளரொளியேபோற்றி. (உரு)

எண்ணிலாச்சாகைவாய்ந்தவிருமறையின்னுந்தேடிக்
கண்ணினாற்காண்டலாகாக்கருணைவாரிதியேபோற்றி
விண்ணினர்பாதாளத்தார்மேதினிமீதுமேயா
ருண்ணிலாவுயிருண்மன்னுமுயர்வளரொளியேபோற்றி. (உசா)

தனத்தினாலிறுமாப்புற்றுத்தாரதம்மியங்கள்சற்று
மனத்தினாற்றேற்றாமாந்தர்மான *யாமதிமருண்டு
கனத்தியல்காட்டுகின்றகண்டநிற்பிழைத்தவெம்மைச்
சினத்திடாதிரங்கியாண்டதிருவருள்போற்றிபோற்றி. (உஎ)

* யா - அசைச்சொல்.

எல்லையில்லாதநின்சீரொட்டுணையறியகில்லேங்
கல்லேபோர்வில்லாக்கொண்டுகருதலர்புரம்பொடித்த
வல்லவபுராணுங்கோலவனத்திடைவளர்ந்தசோதி
சொல்லருநின்றுரோகந்துடைத்தெமைக்காப்பாய்போற்றி. ()

கண்ணனெண்கண்ணனேடுங்கனகநாட்டரசனாதி
விண்ணவரினையவாற்றான்விளம்பியதுதிகள்யாவு
மண்ணலெம்வளரொளிப்பேரரன்றிருச்செவியிற்சார்த்தி
யொண்ணிலவொளியினின்றுமுமையுடன்விடைமேற்றோன்றி. ()

போதநீடன்பானீவிர்புகன்றதோத்திரத்தைபாவ
ரோதினுமன்னோர்வேட்டவுறுபொருளனைத்துமாங்கே
யீதுநும்மிடுக்கணீப்பானினியொருகாலத்தியாமே
மாதர்கூர்தருமார்த்தாண்டவயிரவனாதுங்கண்டீர். (௩௰)

அமரர்களெனும்பேர்நுங்கட்களபசாரிகமென்றோநீர்
மமதைமிக்ககந்தையூழான்மருவினிர்மாழாந்திட்டீர்
நமைமனக்கினியவின்னநலத்தகுமழிஞ்சிற்கானத்
துமைவடிவுடையாளோடுமொல்லைநீரருச்சித்தும்மின். (௩௧)

இந்தவாறருளியீசனிலிங்கத்தினுன்றிப்புக்கா
னந்தரத்திமையாநாட்டத்தனைவருமச்சொற்கேளா
வந்தபேரின்பவெள்ளமாறிலாமகிழ்ச்சியிற்றோய்ந்
தெந்தையார்கருணைக்கியாங்களியற்றுவதென்னேயென்னா. (௩௨)

அரியயன்புருகூதன்னேயாதிப்புத்தேளிரொல்லா
முரியனகலப்பைமுற்றுமுழையரிற்கொணர்வித்தொல்லை
வரிமுரலிண்டைச்சென்னிவளரொளியிலிங்கந்தன்னை
விரியுமாகமத்துட்கூறும்விதிப்படிபூசையாற்றி. (௩௩)

மைவளர்நெடுந்தடங்கண்வடிவுடையாளையுந்தா
மிவ்வகைவழிபட்டும்பரனைவருஞ்சிவத்துரோகக்
கவ்வையினிகந்துதத்தங்கடிநகரிருக்கையெய்தித்
திவ்வியபோகந்துய்த்துத்திருவத்தின்வதிந்தார்மன்னோ. (௩௪)

வேறு.

பாசாடவியிற்றிரிந்துழன்றுபஃறீவினைகள்பரிந்தீட்டி
மாசார்மனத்துக்கொடியோருமதியமுடித்தவளரொளியெம்

மீசாவெம்மைக்காத்தியெனவேத்தியன்பாலிறைஞ்சுவரோற்
றேசாற்பொலியுந்திருக்கயிலைச்செம்பொற்சிகரச்சிலம்பணைவார்.

மந்தத்தியன்றமதியினரும்வைகரேறும்வளரொளியைச்
சிந்தித்தெழுதல்பெறுவரோற்றீராப்பிறவிக்கடனீந்தி
முந்திப்பன்னுேணுன்புழந்தமுனிபுங்கவருந்துன்னரிய
கந்தக்கடவுடனித்தாதைகழலினிழலிற்கலவுவரே. (கூகு)

தீதிலுத்தராயணமுற்றிங்கட்பூசப்பூரணைவாய்
மாதினுருவாத்திருவருளைவாமம்வைத்தவளரொளிக்கந்
காதிசைவவேதியர்க்கொண்டருச்சனைதிபுரிவிப்போர்
மேதினிக்குட்பெருவாழ்வின்மேவியீற்றிற்சிவஞ்சார்வார். (கூஎ)

உள்ளாற்புகுந்துவளரொளியினுருவநன்குதரிசிக்க
வெள்ளாசௌசத்தாற்சாதியிழிவாலிசையாமானவரும்
விள்ளாதென்றுமப்பெருமான்விளங்குங்கோயில்விமானத்தைக்
கள்ளார்மலர்தூய்த்தொழுதிறைஞ்சிற்கடியவினையின்கட்டறுமே ()

கஞ்சத்திருக்குநான்முகனுங்கடலிற்கிடக்குங்கரியோனு
நஞ்சத்திருக்குச்சசிகோனுநவிலுமேனைப்பண்ணவரு
நெஞ்சத்திருக்குநீத்தடைந்துநித்தல்பரவும்வளரொளிசீர்
புஞ்சத்திருக்குமுழுதாற்றும்புயங்கத்திறைக்கும்புகலரிதால். ()

பொங்குமரவம்பொன்முடிமேற்புனைந்தவளருமொளிப்பெருமான்
றங்குதிருமுன்னறுந்தூபஞ்சாலுமார்வத்திடுந்தொண்டர்
செங்கண்மாலுமேக்கறுப்பச்சிவலோகத்திற்சேக்குவரோற்
புங்கநீடுபெரும்பணிகள்புரிந்தார்பெறும்பேறலகிற்றே. (சo)

வானயாற்றின்செருக்கொழித்தவட்டச்சடிலவளரொளிமுன்
பானநெய்யாலெண்ணெயினுனவிருந்தீபம்பலநிறைத்தோர்
தானயாகசபதபங்கள்சதுர்மாமறையிற்சாற்றியவா
றானமின்றியிழைத்தவருமுறுதற்கரியபதத்துறுவார். (சக)

அருணாசலமாய்மால்விரிஞ்சியகம்பாவத்தைத்தொலைத்திடப்பண்
டொருகாலெழுந்தானிறையெனநாலோதுமேனும்வளரொளியாந்
திருநாமத்தைத்தரித்திந்தச்செய்யமூர்த்திபோலுலகோர்
தெருளாவுய்யத்தேற்றுதிறஞ்செப்புமனையமலைக்குண்டே. (சஉ)

வேறு.

வளரொளிப்பெயர்வாழ்முதன்மான்மியம்
பளகுதீரப்பகர்ந்தனமோர்வகை
யளவிலாதவமரர்சரண்புகூஉத்
தளர்வுநீத்தசரிதம்விரித்துமால். (சங)

மூர்த்திவிசேடப்படல முற்றிற்று.

ஆ படலம் அ - இ செய்யுள் - ஙஉங.

தேவர் சரண்புகுபடலம்.

திங்கள்வாளராக்கங்கைபொற்கொன்றையந்தெரிய
றங்குவேணியனருள்பெறுகாசிபத்தக்கோன்
பொங்குபேரொழின்மாயையைப்புணர்தலும்பிறந்தா
ரிங்குசூர்முதலரிமுகன்றாரகனென்பார். (க)

எண்ணிகந்தவண்டப்பரப்பியற்றியபாவப்
பண்ணைமூன்றுருவெய்தியதன்னவப்பதகர்
புண்ணியத்தனித்தந்தைசொல்சிவநெறிபோக்கித்
திண்ணமாகயாய்செப்பியவவநெறிச்சேக்கி. (உ)

போகமின்னதன்மேலிலையெனும்படிபொருந்தி
யேகவானையந்திகிரியெப்புவனமுமேக
நாகநாட்டினர்நைதரநலிவதுநாடி
யாகம்யாவர்க்குமரியதொன்றியற்றுதலுற்றார். (ங)

ஏகநாயகனிமையவர்நாயகனென்மை
யோகநாயகனுமையவளுயகனாங்கு
வேகமாத்தமமுன்வரல்வேண்டுமென்றெண்ணுப்
போகபூமிமுற்றும்பெருங்குண்டமாப்புழைத்து. (ச)

மலையிலுள்ளவும்வனத்திடையுள்ளவும்பாலைத்
தலையிலுள்ளவுந்தண்பணையுள்ளவுந்தடநீ
ரலையிலுள்ளவுமாகியபொருளெலாமட்டி
நிலையினின்றெழவங்கிவாயாவுதிநேர்ந்தார் (ரு)

இந்தவாறிவர்மூவருந்துயிலுணவின்றிச்
சந்தமாமகமயுதவாண்டாற்றியுந்தநேர்
வெந்தநீறணிவேதியன்வெளிப்படாமையினுன்
முந்துகுண்டவாரழல்விழாமுடிந்தனன்மூத்தோன். (சு)

மெய்யயர்ந்தனரோனையரிருவரும்விம்மி
மையனெஞ்சினர்தாய்களுமாட்சியைமதிப்பக்
கையுலாவியகதிர்மணியுரகக்கணத்தோ
னெய்தினுங்கொருபனவனிற்றேன்றினனுவலும். (எ)

முன்னர்வெவ்வழல்வீழ்ச்சியினீங்குமின்மொழிமி
னின்னதெங்களால்வேண்டியபடுவதென்றெனலு
மன்னதம்முனேவேண்டுமென்றிரந்திடவனையா
னுன்னுமாத்திரத்தொல்லைவந்தெழுந்தனனுவனே. (அ)

இத்திறத்தினுலெழுந்துளசூரனேடினையார்
சித்தநெக்குநெக்களவளாயின்களிதிளைப்ப
வித்தகத்திருவேதியவேடமாங்ககற்றி
யத்தனம்மையோர்புடையுறவிடையின்மேலாகி. (கூ)

காதுசூர்முகநோக்கிநின்றிறங்கண்டுகளித்தாம்
யாதுவேட்டனையியம்பெனவெம்பிரானிசைப்பப்
போதுமேவியபுங்கவன்புரந்தரனெடுமா
லோதுமெண்டிசைப்பாலர்முன்னெனைவருமொடுங்கி. (கo)

அல்லொடும்பகலேவியபணிமருதாற்ற
வெல்லைகாண்பருமாயிரத்தெட்டெனுமண்ட
மல்லல்கூரவீற்றிருந்தரசாட்சிசெய்மாண்புஞ்
செல்லவெண்ணியதேத்தெலாஞ்சென்றுமீடேரும். (கக)

அழிவிலாதபேராயுளுமமரகத்துய்ப்பின்
வழுவலன்றியாருயிருணும்வடிக்கணைபலவும்
பழுதுநீத்தொளிர்வச்சிரப்படிவமுநின்பா
லுழுவலன்புமேதமியனேற்குதவுகென்றிரந்தான். (கஉ)

என்றுகேட்டனவரமெலாமீந்துபின்னிருவர்
நன்றுவேட்டவுங்கருணையானல்கினன்கரந்து
சென்றுபுக்கனன்கயிலைத்தன்கோயிலுட்செழும்பொன்
மன்றுநின்றுலகுய்யுமாறுடருள்வள்ளல். (கங)

வேறு.

சங்கரன்கரந்தபின்னர்த்தானைசூழ்வரமூவோருஞ்
சுங்கனையடைந்தாராகச்சொற்றவச்சூழ்ச்சிவல்லோ
னங்கவர்தம்முண்மூத்தவடுதிறற்சூரனோக்கிப்
பொங்கியநகைமுகத்தான்புகலுவான்வேறுகொண்டு. (கச)

தண்ணிலாவிரிக்குந்தூயசசிகண்டசிகண்டன்றன்பா
லெண்ணிலாவரங்கள்பெற்றவிறைவவாயிரத்தெட்டண்டத்
துண்ணிலாஞ்செல்வமெல்லாமுனவெனினேனோர்நின்முன்
விண்ணுலாஞ்சூரனேரின்மின்மினித்தன்மையாரோ. (கரு)

அண்டமென்பதுவெண்டிங்களாதித்தனரியமேரு
வெண்டிசைகாவலாளரிருங்குலாசலமோடொட்டுத்
தண்டிரையுததியேழ்சூழ்தரைமுதலுலகீரேழு
கொண்டதுபித்திதாகிக்கோளமாய்மன்னுமன்றே. (கசு)

இவ்வகைப்பட்டவோராயிரத்தெட்டண்டத்தினுக்கு
மெவ்வமிலொருகோலோச்சுமிறையவனீயேயென்றாற்
செவ்வியகமலவாழ்க்கைத்தேவனுஞ்செங்கண்மாலும்
வெவ்வியற்குலிசக்கோவும்வீழ்ந்துனைத்தொழல்வியப்பே (கஎ)

ஆனதாலையநீசென்றாயிரத்தெட்டாமண்ட
வானவர்தம்மையெல்லாம்வழிவழியடிமைகொண்டே
கோனெனவெவரும்போற்றக்குறைவிலாப்பெருவாழ்வெய்தி
யேனையபுவனத்துள்ளுமிரும்புகழ்பரப்பிவாழ்தி. (கஅ)

நின்குலத்தொல்லோராயநீண்டகாவலனையெல்லா
மின்குலமலியுமேகவாகனன்மெலியவாட்டித்
தன்குலமலியும்வண்ணந்தழைப்பித்தத்தகுவர்தம்மைப்
புன்குலநீசர்போலப்புறக்கணித்திறுமாக்கின்றான். (ககூ)

அன்னவனுதியாகவறைதருசுரரைவல்லே
கொன்னுனைப்பகழிதூவிக்கொடுஞ்சமரிழைத்துவென்று
நின்னடிப்படுத்துவப்பினீடுநீவாழ்கவென்னப்
புன்னகைசிறிதரும்பப்புகர்விடைகொடுத்தானிப்பால். (உ0)

மந்தரகிரியோமேருமால்வரைகொல்லோவென்னச்
சந்திரமௌலியெம்மான்றனக்கெனவருளிச்செய்த
விந்திரஞாலத்தேர்மேலேறினன்சூரனென்பான்
றந்திரமானமானச்சலதியினடுவட்போந்தான். (உக)

பயக்கடற்றுயின்றமாயன்பயக்கடற்றுயிலாநின்றான்
வியத்தகுமுளரியுள்ளான்வெந்துயர்முளரியுள்ளான்
கயக்கமேவுற்றவேந்தன்கயக்கமேவுற்றானந்தோ
மயக்குறுமாயையீன்றமைந்தரதெழுச்சிதேர்ந்தே. (உஉ)

வடவனலெழுந்துசீறிவையமேற்படர்ந்தாலென்னத்
தடநெடுந்தேரிற்சென்றுசதமகன்விரிஞ்சன்மாய
னிடமெலாம்புக்குமற்றையியவுளர்நாட்டுமெய்திக்
கொடியபோர்புரிந்துவென்றுகொற்றத்தைநிறுவிமீண்டான் (உங)

விண்ணவர்தச்சனுயவிச்சுவகன்மனைக்கூஉ
யெண்ணுறுசிற்பநூலுளியம்பியமுறைவழாமே
கண்ணுதலுலகுகண்ணன்கடிநகரயனூர்நாணப்
பண்ணுதிதென்கடற்குட்பட்டினமொன்றென்றேது. (உச)

அன்னவன்சொன்னவாறேயணிநகர்கண்டானுக
மன்னுறநோக்கிவீரமகேந்திரபுரப்பேர்வேய்ந்து
துன்னுசீரதன்கட்டொல்லைச்சுற்றத்தாற்சுற்றப்பட்டுத்
தன்னிகரில்லான்புக்குத்தனியரசிருந்தான்மாதோ. (உரு)

தன்னடிவணங்குமாறுந்தகாதனசெய்யுமாறு
முன்னறன்மீன்பிடித்துமுடித்தலைச்சுமக்குமாறும்
பொன்னகர்ப்போகந்துய்த்தபுலவரையேவல்கொண்டு
பன்னரிதாயசெல்வப்படுதிரையழுவத்தாழ்ந்தான். (உசு)

வேறு.

எண்ணரியபேரண்டமெவற்றினையுந்தனவாக்கி
விண்ணவருமவர்கோவுமெய்நடுங்கிவியன்முன்றிற்
கண்ணகலார்குற்றேவல்கடைக்கணித்தசெய்தொழுகப்
புண்ணறவுகமழ்பேழ்வாய்ப்பொருசூரோராணியத்தில். (உஎ)

புரந்தரனூர்மனைக்கிழத்திபுலோமசையின்பொற்பனைத்து
மரந்தையுறவாடவரையடற்கரத்தால்வலிந்தீர்த்து
நிரந்தரமும்புணரவுணர்நேரிழையார்சொலக்கேட்டுச்
சரந்துனைவின்மதனுய்ப்பத்தளர்வெய்திக்கவல்கின்றான். (உஅ)

பாங்குடையபெருவாழ்க்கைப்பரிசுமுழுதொருங்கிழக்குந்
தீங்குபெறுதியவூழ்செறிந்துபிடர்பிடித்துந்த
வோங்குமலரமளியின்வாயுருவெளித்தோற்றத்தினைக்கண்
டேங்குமயிலியல்வருதியென்னவிவையெடுத்திசைக்கும். (உகூ)

வல்லவரும்வகுத்துரைக்கவல்லாதபல்லண்டத்
தெல்லவருங்கழல்வணங்கியென்னுணைவழிநிற்பப்
பல்லவமார்கோகிலமேபனித்திங்கண்முகத்துநுதல்
வில்லவளேயானுனதாள்வீழவுநீயிரங்கிலையால். (ஙo)

மாசுபொதிமதியமுதுன்வாயமுதுக்கொப்பாமே
வீசொளிவன்மேருநின்றன்மென்முலையைநேர்வதெங்ஙு
னேசலில்யானேவியக்காலிழிந்தனவுந்தொழுதியற்றும்
வாசவனைமென்னுயிர்நீமணத்தல்வசையாமன்றே. (௩௧)

மனமுருகியுருவெளியின்மாதுடனிவ்வணம்புலம்பாக்
கனகநகரினிதுறையுங்கதிர்மணிப்பூட்கடவுளர்தம்
மினமுழுதுங்கொணர்ந்துதளையிடினெண்ணமுற்றுமென
வனலனெனுமொற்றனைப்பார்த்தறையுமுருமேறஞ்ச. (௩௨)

படிமுதலீரேழுலகும்பாங்குளவண்டப்பரப்பும்
கடிபுரியும்பேராற்றற்கனற்கண்ணன்மணிமல்லர்
பொடிபடுத்துப்பகைஞருடல்புகழ்புனையுங்கும்பாண்டன்
முடியணிவக்கிரதமிட்டன்முதலோரைத்தருகென்றான். (௩௩)

மாயைமுதன்மகனுரைத்தவாய்மையினைச்சிரந்தாங்கி
யாயதிசைபத்தினும்வாழசுரகுலப்படைத்தலைவர்க்
கேயபணியிசைத்திடலுமெழுகடலுமிரைத்தீண்டித்
தாயவெனத்தானையெலாந்தமைச்சூழவருகின்றார். (௩௪)

வேறு.

தூதுதொழு தவர்வரவு சொல்லுமுனர்க் கும்பாண்ட துட்ட னேடு, வேதனெடு மானடுங்கும் விறற்றேவ கண்டகனெண் விள ம்ப வொண்ணு, மோதுபடை வக்கிரத மிட்டிரன்மா தமிட்டிரன் செம் முளரிப் பங்கித், தீதுமலி மணிமல்ல ராதியர்சூ ரவைக்கள த்துச் செற்றி னரால். (௩௫)

வான்கொண்ட புத்தேளிர் மனங்கவற்றுந் தீவினைபல் வடிவு ற் றன்ன, வூன்கொண்ட தெவ்வரா ருயிருண்ட படைத்தடக்கை யுரவோ ரெல்லாந், தேன்கொண்ட தொடையலணி திண்புயத் துத் தானவர்தஞ் செம்ம ருளி, னேன்கொண்டல் வரைச்சாரல் படிந்தாங்கு வீழ்ந்திறைஞ்சி நுவலா நின்றார். (௩௬)

வையுலவு வாட்கரத்து வல்லசுரர் பெருமானே வையம் யாவு ம், பொய்யுலவாப் புகழ்போக்கிப் புரந்தருளும் போரேறே பொ ன்னங் குன்றே, துய்யுலவு சுடர்விடுவெவ் வடவையென வமரோற் ற துன்ன லாரை, நெய்யுலவு மெமதுகொடுங் கூர்வாளி நீறுக்கு நிமிடத் தம்மா. (௩௭)

வாரிதிக ளேழினையு மறப்பருகித் திடர்செய்ய மதித்துக் கொல்லோ, மாரிபொழி மலைமுழக்குமுழுவை வன்கரத்தாற் பிசைந்து பிழிஇ வாய்ப்பெய் தற்கோ, பாரிலெழுந் தோங்குவரை யனைத்தினையு நுண்பொடியாப் படுத்தற் கேயோ, நாரிபா கனைத்தொழு வான் கயிலைகொணர்ந் திவ்வூரி னுட்டு தற்கோ. (ருஅ)

வேறு.

பிரமர்களியற்றுகின்றபெருவினைபுரியவென்றோ
வரனுடைமுகுந்தர்செய்யும்வண்டொழிலுஞற்றவென்றோ
வுரனுறுபுடவிதன்னையுயர்ந்தவாணுக்கவென்றோ
கருதிநீயெமைவிளித்தகாரணமென்னையென்றார். (ருகூ)

அங்கவர்பணிந்துகூறுமம்மொழிசெவியிற்சாரப்
பொங்கடற்சூரனும்மபொறுத்தமைநாகநோக்கி
யுங்களதாற்றற்கேற்றவுறுபொருளில்லையேனு
மிங்கெளிதொன்றுசெய்கென்றியம்புதலுற்றதன்றே. (சo)

பொன்னுலகாளாநின்றபுரந்தரனென்பானென்பான்
மன்னியவடிமைபூண்டுவமுவலனுழுவலன்பா
லுன்னியபணியியற்றியொழுகினனொருநல்காறு
மின்னலுமிழிவுமாமென்றிகந்தனனின்றொளித்தான். (சக)

நிருதனைத்தகுவர்தம்மைநெறிபிறழ்ந்தடர்த்தவந்தக்
கருமுகில்வாகனத்துக்கள்வனைமனைவியோடுந்
தருதிரோலெனக்குமானந்துந்தனிராதிரொன்னப்
பொருபடையனந்தநல்கிப்போக்கலுமவரொழுந்தே. (சஉ)

மாதிரவரைப்பிற்சில்லோர்மாநிலவரைப்பிற்சில்லோர்
போதனுருலகிற்சில்லோர்புரந்தரனுலகிற்சில்லோர்
பாதலத்தூடுசில்லோர்பதுமைகோனுட்டிற்சில்லோர்
வாதமேமானச்சென்றுவயின்றொறுந்துருவலுற்றார். (சங)

இன்னதோர்நிகழ்ச்சியொற்றரியம்புமுனிந்திரப்பேர்
மன்னவன்சசியினேடும்வானவர்தொடர்ந்துபோதப்
பொன்னணிமேருக்கோட்டிப்புரம்பொடிபடுத்தவண்ண
லின்னருள்வழங்கிவைகுமெழிற்பொழிற்காழிசார்ந்தான். ()

நந்தனமொன்றுகண்டுநாரணன்பிரமன்காணுக்
கந்தரமனையநீலகந்தரன்றன்னைநாளுங்

கொந்தலர்கொய்துதூவிக்குறையறவழிபட்டேத்தி
யிந்திரன்வேணுவாகியிருந்தனன்கரந்துபன்னாள். (௪௫)

வஞ்சனைக்குறையுளாயவாளெயிற்றசுரர்க்கஞ்சி
நெஞ்சகந்தளர்ந்துவிம்மிநெட்டுயிர்ப்பெறிந்துகண்ணீர்
மஞ்சினின்றெழுகுஞ்சோனைமழையெனமார்பில்வார
வெஞ்சினரங்கணெய்தியிமையவரிருந்தகாலை. (௪௬)

அணங்குறுமமரர்தம்முனமிழ்தினின்னிசைபிலிற்றும்
வணங்கியசென்னித்தாயமகதியாழ்வல்லோன்புக்குக்
கணங்கொள்புத்தேளிர்நீவிர்கலங்கலிரினையதுன்பந்
தணந்திடவோருபாயஞ்சாற்றுவலினிதுகேண்மின். (௪௭)

பூவலமாகயான்முன்புரிசடைப்புராந்தகப்பேர்த்
தேவன்வாழ்தலங்கள்பல்லதெரிசித்துச்செல்லும்போழ்தத்
தாவயிற்கண்டேனோர்கானன்னதன்பெயர்யாதென்னிற்
போவதெஞ்ஞான்றுமில்லாப்புராதனவனமாமன்றே. (௪௮)

படிமுதலுலகனைத்தும்பரிவின்றியுயிர்த்தளிக்கும்
வடிவுடையம்மையோடுவளரொளிப்பெயர்புனைந்த
வடிமுடியயன்மால்காண்டற்கரியவன்வீற்றிருக்குங்
கடிமதிற்கோவிலங்கட்கனகமால்வரையினேங்கும். (௪௯)

அத்தகுதலத்தைநீயிரரசுடன்சென்றணைந்து
புத்தியுமுத்தியின்பும்பொள்ளெனச்சரணம்புக்க
பத்தருக்குதவுமன்னபரமனைப்பணிதிரோலுஞ்
சித்தமார்துயர்தீர்ந்துய்தறிண்ணமென்றுரைத்தகன்றான். ()

வேறு.

புங்கவர்க்கிவ்வணம்பொருவினாரதன்
பொங்கருட்டிறத்தினாற்புகன்றவாசக
மங்கியாருயிருடல்வழுவுஞான்றது
தங்கியதந்தசஞ்சீவித்தன்மைய. (௫௧)

அண்டர்தங்குலகுருவவணடைந்திடக்
கண்டனரோத்தினர்கழல்வணங்கினர்
மண்டியவுவகையர்மகதியாழ்முனி
விண்டதுவிண்டினிமேலிழைப்பதென். (௫௨)

உரைத்தியென்றலுமவருடங்குசூழ்வர
வரைப்படிவெய்தியமன்னன்பாலுறீஇப்
புரைத்தபுபஃறலம்போற்றிச்சார்துநாங்
குரைப்புனற்பண்ணையங்கோலகானனம். (ருங)

வல்லையின்வலாரிநீவருதியென்றலுங்
கல்லைவன்சிறையறைகண்டவாளினு
னல்லைநேர்குழலயிராணியாகிய
வில்லையங்கையன்மாட்டிருவியேகினன். (ருச)

பொன்னுடனிந்திரன்புலவர்யாவருந்
துன்னினர்வழிக்கொளாச்சுகபுரத்தினை
மன்னினரங்கர்வரம்புநீங்கிய
பன்னருமான்மியம்படைத்தநீரதே. (ருரு)

பாவகன்முழுதுணும்பாவம்பாற்றுவான்
காவகமுலவுபைங்கதிர்கொள்கிள்ளையாய்
நாவகத்தைவணங்கின்றநாதனைப்
பூவகங்கைக்கொடுபோற்றப்பெற்றது. (ருசு)

எரியழல்கிரத்தின்வடிவமெய்துபு
கரியவன்காணருங்கமலச்சேவடிப்
பெரியவற்போற்றியபெற்றியெண்ணியப்
புரியினைக்கீரனூரென்பபுண்ணியர். (ருஎ)

அன்னதன்பால்வளரக்கினீச்சுரன்
றன்னிருதாண்மலர்தலைமிலைச்சினன்
பொன்னவிர்சுணங்கலர்பூண்முலைச்சசி
மின்னிடையின்னலம்வெறுப்பவுண்டவன். (ருஅ)

பூவிரிமதுவிளம்பொழில்வளர்த்திடு
நாவிரிசீர்த்தியங்கரினின்றுரீஇத்
தாவிரிசுரரொடுசதமகத்தவன்
காவிரித்தடநெறிகடிதுபோயினன். (ருசு)

இருகரைமருங்கினுமெங்கடம்பிரான்
மருவியசினகரம்வழிபட்டேத்தியே
குருமணிவியாழனுங்குழுமுதேவரு
மருகுறவண்மினுனைக்காவரோ. (சுo)

முப்பகைவென்றமாமுனிவர்யோகியர்
செப்பமார்பழமறைச்சென்னிதேறலா
வப்புலிங்கத்தினையமுதவாரியை
வெப்பறவெல்லையில்விழியிற்றுய்த்தனன். (சுக)

மும்முறைவலம்புரீஇமுன்னர்வீழ்ந்தெழா
வைம்முறையாற்றுதிநவின்றுகைதொழு
தம்முறையேயகிலாண்டநாயகி
செம்முறைமலர்ப்பதந்திருந்தப்போற்றினன். (சுஉ)

வீயுமாறின்றிலாமெய்ம்மையன்பினுண்
மாயுறுதாண்டுபோய்மகவுயிர்த்தநாட்
டாயுமாய்த்தலையளிபுரிந்ததற்பரன்
மீயுலாஞ்சிராப்பளிவெற்பைமேவினன். (சுங)

மட்டுவார்குழலியைமணத்தனீங்கிடாச்
சிட்டனைப்பொருவருந்தெய்வநாதனை
மொட்டறுமலரினன்முன்னிப்போற்றியவ்
வட்டமூர்த்தியைவிடைகொண்டகன்றனன். (சுச)

வேறு.

திருமித்தென்றிசைச்சேணெறிச்செல்வுழி
யிருமைப்போகமுமெண்ணியயாவையுந்
தருதலுண்மையிற்சத்தியவெற்பெனும்
புரிகண்டாரப்புரந்தரனாதியோர். (சுரு)

சத்தியக்கிரிதங்கித்தொழும்பர்க்கு
முத்திநல்குமுதல்வன்றிருமுன்போய்ப்
பத்தியோடுபணிந்துவலங்கொளீஇத்
துத்தியஞ்செயுமாறுதொடங்கினர். (சுசு)

மிகுத்தசீலமிருகண்டுமைந்தனைச்
செகுப்பவொய்யெனச்செற்றியவந்தக
னுகுத்தவாவியனாகவுதைத்தநீ
பகுத்தவெந்துயர்பாற்றிலையென்கொலோ. (சுஎ)

தியங்குதன்புஞ்செருக்குமெம்பாற்றப
வியங்குவெய்யவெயிலொருமூன்றையு
நயந்துபுன்மைநகையிற்பொடித்தநீ
யயர்ந்துளேமுக்கருளிலையென்கொலோ. (சுஅ)

மாவலம்பெறுமாலயன்வானகம்
பூவலம்பப்புணரிவருநஞ்சை
நாவலங்கனிபோலுண்டுநல்குநீ
காவலற்றெமைக்கைவிடனீதியோ. (சுகூ)

விளித்தியாவையும்வெம்பிலவாய்ப்பெயுங்
களிற்றுருக்கொண்டகைதவனுருபி
ரொளித்துலப்பவுரித்ததள்போர்த்தநீ
யளித்திலாதின்றமர்வதுநீதியோ. (எ0)

அலந்தலைப்பட்டழியவுலகடுஞ்
சலந்தரப்பெயர்த்தானவனுவியை
நிலம்பொறித்ததிகிரியினீக்குநீ
கலங்குவேமைக்கடைக்கணியாயந்தோ. (எக)

புரண்டுயிர்த்திரள்பொன்றப்புரிந்துழல்
குரண்டமேனிக்கொடியதயித்திய
னரந்தையெய்தியலமரச்செற்றநீ
யிரங்கியேங்குமெமக்கிரங்காயந்தோ. (எஉ)

நீலகண்டநிராமயசின்மய
காலகாலகபாலதரகர
வாலமன்னவசுரருக்கஞ்சினே
மோலமோலமுனகழற்கோலமே. (எங)

அத்தவோலமனுதியிலேமல
முத்தவோலமுழுதுமாயல்லையா
மெத்தவோலமிமயவரைமகள்
சித்தவோலஞ்சிவசிவவோலமன். (எச)

இந்தவண்ணமியவுளரோத்தொலி
யெந்தையீசனெழிற்செவிசார்தலு
முந்துகன்றையுறுபுனிற்றுவென
வந்தணுளனிற்றோன்றியறையுமால். (எரு)

இன்னலோப்புதிரோமைக்கடவுளீர்
நன்னரன்பினஞரதன்செப்பிய
வன்னதானவழிஞ்சில்வனம்புகு
முன்னரெண்ணியமுற்றிமகிழ்கிற்பீர். (எசு)

என்றெளித்தவிருபிறப்பாளனைக்
குன்றவார்சிலைகோட்டியகோவென
வொன்றவுள்ளத்துணர்ந்தனரும்பரார்
நின்றுநீடிநிரம்பியவோகையார். (எஎ)

மெய்யமென்னும்வியன்பதிவிட்டெழீஇச்
செய்யசேட்கதிர்த்தெய்வமணிமுடி
யய்யர்யாருமழிஞ்சிலங்கான்புகுந்
துய்யவெண்ணினரொல்லையொதுங்குழி. (எஅ)

வேறு.

பாதவம்பூத்துக்காய்த்தபசுங்கொம்பர்மலையவாத
மோதலினசையநிற்பமொய்த்தவானவரைநோக்கி
நோதகவொழிதிரின்னேநும்மையாட்கொள்ளுமீச
னுதலினிங்கண்வம்மென்றணிக்கரத்தழைப்பபோன்ற. (எகூ)

சுடுங்கனற்சினத்தவேழஞ்சுண்டநான்றுழலநிற்ப
நடுங்குறுபையுளெய்தினைதருமனத்துநாகர்க்
கடுஞ்சரமுராரியாக்கியாலயம்படருமார்க்க
நெடுங்கையாலீதாமென்னநெறிமையிற்றெரிப்பநேர்வ. (அ0)

பறவைகளனைத்துந்தத்தம்பைஞ்சிறைப்பந்தர்செய்வ
நறைகமழலங்கலோதிநல்லரமகளிர்தம்பாற்
றுறையறிந்தின்பந்துய்த்தசுரரிவர்கொடியவெய்யோ
னிறைவெயிற்காற்றுறொன்னநிழற்றுவநிகர்த்தவன்றே. (அக)

அரும்பவிழசோகுகோங்கமணிகுராச்செருந்திபுன்னை
விரும்புசந்தனம்பூஞ்செச்சைவேங்கைமாதவிதமாலங்
குரும்பையார்தெங்குதேமாக்கொழும்பலாவகுளமாதி
நெருங்கியெஞ்ஞான்றுமென்றூழ்நீள்கதிர்வழக்கறுக்கும். (அஉ)

மாசறுதவத்தர்பல்லோர்வைகலும்வைகலாற்றுந்
தேசுடைக்கானனத்திற்செறிந்திருண்டுயர்ந்தகன்று
மூசுதேன்ஞிமிறுதும்பிமுரல்பொழில்விசும்புமானும்
வீசொளிப்பன்னிறத்தமீன்கணமெல்வீவீழும். (அங)

இத்தகுவளங்களுன்றவெழிற்புராதனவனத்தைத்
துத்தமுதுடல்வருந்தாச்சுரகணங்குறுகலோடு
மத்தலையன்னுருற்றவருந்துயர்தேய்ந்தழிந்த
புத்தியினுட்பமில்லாப்புல்லியர்கல்விபோன்றே. (அச)

பப்பியகானத்தேகும்பண்ணவர்பண்ணைபண்டு
தப்பறவியற்றியிட்டதவப்பயன்பலித்ததென்ன
வொப்புயர்விகந்தவின்பமுள்ளகந்ததும்பியோங்க
விப்பரிசுறுதற்கேதுவென்னெனத்தம்முட்சொல்வார். (௮௫)

வானகத்தமர்ந்தசெல்வவளமுழுதறத்துறந்திக்
கானகமுழலுந்தன்மைகண்டிடினசுரர்நம்மைப்
போனகமென்னத்தின்பர்பொள்ளெனப்புரமெரித்துப்
பானகக்கயிலைமேயபரனடிபராவல்வேண்டும். (௮௬)

காமனம்பொறுக்குமேனுங்கற்பினாள்கணவன்கூட்ட
மாமனம்பொறுக்குமன்றிமற்றையர்க்கருதுங்கொல்லோ
தீமனத்தகுவரின்னுந்தெறுதுயர்பலசெய்தாலு
நாமனத்தகுவமேயோநக்கனன்றேனையோரை. (௮௭)

இவ்வணமியம்பியேகுமிமையவரெதிரிற்கண்டார்
மைவணவார்ந்தகூந்தல்வடிவுடைவஞ்சியோடு
மவ்வணமெழுத்தினிற்குமாறுபோலுயிர்நின்றுய்க்குஞ்
செவ்வணவளரொளிப்பேர்ச்சிவனுறைசெழும்பொற்கோயில். ()

காபுரவாற்றியாதிக்கடவுளர்கடவுளாராய்க்
கோபுரமுற்பணிந்துகுறுகுபுதிருத்தளிக்குண்
மாபுரகரனைப்பல்கால்வணங்கினர்வலஞ்செய்தன்பே
யாபுரவொலிபான்முந்நீரடக்கினர்பழிச்சலுற்றார். (௮௯)

வேறு.

மண்ணிலெளியேம்பொருட்டிரங்கிவந்துமுளைத்தவளரொளியே
கண்ணிற்கருத்திற்றனிவாக்கிற்காணற்கரியகருப்பொருளே
விண்ணின்மிளிரும்வெண்மதியைவேணிவேய்ந்துமெலிவொழித்தா
யெண்ணிலுயிருக்குள்ளுயிராமிறையேயாமுன்னடைக்கலமே. ()

நாலுமறையின்முடியானேநவிலினென்றுமுடியானே
யேலுமிடபக்கொடியானேயெண்ணுக்கலர்க்குக்கொடியானே
மாலுமறியாவடியானேவழுதியடித்தவடியானே
சாலுஞ்சாலுமையாப்புத்தமியேமினியுன்னடைக்கலமே. (௯௧)

மாலாற்கமலமலர்ப்பொகுட்டுவாழுமயனால்வேதமுத
னூலானோன்மைமுனிவரானோக்கலாகாநுண்சுடரே
யாலாகலத்தையுலகுய்யவமுதுசெய்தவாரமுதே
சேலார்கண்ணியிடப்பாகாசிறியேநின்றனடைக்கலமே. (௯௨)

பந்தக்கொடியபழவினையாற்பதவியிழந்தவானுட
ரிந்தவண்ணமடைக்கலமென்றேத்திமுக்கான்முறையிடலு
மந்திவண்ணத்தவிர்சடையானருளாற்காயத்தொருவாக்குச்
சிந்தைதளரீர்வானவர்காள்செப்பல்கேண்மினெனச்செப்பும். ()

முன்னர்முளைத்தமுதுமறையின்மொழியப்பட்டபாவத்து
ளென்னபாவமிழைத்தாலுமெளிதினீக்கவுளகழுவாய்
துன்னவுணர்ந்துபுரிந்தசிவத்துரோகத்துக்குத்தீர்வில்லை
யென்னவெடுத்துவிதந்துரைக்குமிருபத்தெட்டாகமங்களுமே. ()

தக்கன்சாலவிறுமாந்துசாம்பமூர்த்திதனையிகழ்ந்து
மிக்ககலப்பைகொண்டிழைத்தவெந்தீவேள்விச்சாலையுழைப்
புக்கங்கனையான்புரிந்தீந்தபொல்லாவூனைநுகர்ந்தபவந்
தொக்கதகுவருருவாகிச்சூழ்ந்துநும்மைத்துயர்த்தன்றால். (௯௫)

சிவநிந்தனைக்கோர்கொள்கலமாந்தீயபாவிசிறுவிதிதான்
றவமென்றிழைத்தவவமகக்குச்சார்பாயிருந்தவபராத
மிவணின்றெய்திச்சரண்புக்கீரென்னவிரங்கியிறைபொறுத்தான்
கவலுந்தன்மையினிநுமக்கில்கற்பநாட்டீர்கடைப்பிடிமின். (௯௬)

முன்னோர்காலத்தரிமுதலோர்முழுத்தமுதன்மைச்சிவனைமறந்
தன்னோதாமேபிரமமெனவறைந்தெவ்வெவருமதிமான்றே
யென்னோரானுமிசைப்பதனுக்கிசையாப்பெரும்போர்விளைவித்து
வின்னோன்கணைவாள்வேன்முதலவெய்யபடையாற்பொருவேலை()

சோதியுருவாயவர்நடுவெட்டோன்றுமினையவிலிங்கங்கண்
டாதியந்தமில்லாதானரனென்றுள்கியகந்தையொரீஇ
நீதிகெழுமப்பணிந்தகன்றுநெறியினின்றாரன்றுதொடர்ந்
தோதிக்குறிக்குவளரொளியென்றுணாக்குமுலகந்திருநாமம். ()

வண்டார்மலர்க்காப்புராதனமாவனப்பேர்வாய்ந்தவித்தலத்து
மண்டியுறையுமுயர்திணையுமருவாநின்றவஃறிணையுங்
கண்டவிடத்துப்பரன்வடிவாக்கண்டமனத்தீராயுறைமின்
மிண்டர்தம்மாலுமக்கிடுக்கண்மேவாதென்றமொழிகேட்டு. (௯௯)

வேறு.

குங்கும மெழுகும் புலோமசை கொங்கைக் கோடுழு துழக்கிய மார்ப, னங்கணெம் பெருமான் கருணையா லெழுந்த வசரீரி வாக்கெனு மமுதைப், புங்கவ ரோடு செவியினுற் பருகிப் புராந்த

கன் பண்டுசொல் பொருளுஞ், சங்கையின் றுளத்துத் தோன்றிட வொத்த தன்மையாற் றவமகிழ்ந் தனனால். (௧௦௦)

மாயிரு ஞாலம் பாதலம் விசும்பு வைகலும் புரக்கின்ற மன்ன, னுயிரத் திரண்டு நயனமுங் களிப்ப வகநெக வளரொளி நாதன், சேயபொன் மேனி யிமைத்தில னேக்கிச் செய்தவக் கௌதம னிட்ட, தீயவெஞ் சாபம் நல்லதோர் வரமாய்ச் சீர்த்ததா லிற்றைநா ளென்றான். (௧௦௧)

பன்னகஞ் சுமந்த பாரகத் திர்தப் பழம்பதி பதிதரும் பதியை, யுன்னரு மறையும் புராணமு மேனை யொண்கலை பலவுமந் தணமாப், பன்னியேத் தெடுக்கு நுணுகிய வுணர்ச்சி படைத்தவர் தெளிகுந ரல்லா, லென்னனை யார்க ளறிவரோ வினைய விலிங்கத்தின் மான்மிய மென்னு. (௧௦௨)

தனதரு கிருக்குந் தெய்வகம் மியனைச் சசிமுக சசிதவ னேக்கிப், பனகபூ டணற்குத் திருநக ரொடுத்தல் படியிடைப் படியில்புண் ணியமென், றனகசித் தாந்த முதற்பெரு நூல்க ளறைந்திடு மாதலா லீண்டுச், சினகரங் கயிலை வெள்குமா றரிதிற் செய்தியீ துயிர்க்குரிச் செய்தி. (௧௦௩)

அயர்வற வல்லை யிப்பொருள் வல்லை யாதியென் றவனியை வளர்ப்பப், பெயன்மழை பிலிற்றும் பெருந்தகைக் கொண்மூப் பியன்மிசை யிவர்ந்துலா வருவோன், பயனுறப் பகர்ந்த வானையை முடியிற் பரித்தனன் பண்ணவத் தச்சன், வியனிலம் வியப்ப வுறுப்பெலா நிரம்ப விதித்தனன் விழுத்தகு கோட்டம். (௧௦௪)

உலகெலா நிறைந்த வளரொளிப் பிழம்பை யுவமைதீர் கருணைவா ரிதியை, யலகிலா தனபஃ திருவிளை யாட லடியவர் பொருட்டிழைப் பவனைக், கலகவாள் விழியார் மையனீத் தவர்க்குக் கரதலா மலகநேர் வானைப், புலவரோ டயிரா வதக்களி றுகைக்கும் புரந்தரன் பூசனை புரிந்தே. (௧௦௫)

நித்தலும் வழிபட் டின்பமே யுருவாய் நெறிவழா தைந்தெழுத் தோதிப், புத்தமிழ் திப்போழ் தருந்தினன் போன்று பொங்கிய வுவகையம் புணரி, தத்தலை பெறிந்து பெரிதுவட் டெடுப்பத் தங்கினன் குறையொன்று மின்றி, யுத்தம சுயம்பு வளரொளிப் பரன்பா லுற்றவர்க் குறுகணு முண்டோ. (௧௦௬)

சொற்றவித் தூய புராதன வனத்திற் றுன்னிய தொன்னிய மத்திற், கற்றமுற் றிடாது விற்றுவிற் ருக வாச்சிர மம்பல வமைத்துப், பொற்றதங் நாமம் புணர்த்தவற் றிருந்தார் புலவரச் சூழல்க ளனைத்தும், பெற்றன வாய பெயர்திரிந் தேனைப் பெயர்கொடு பிறங்குமா லினியே. (கoஎ)

காமரங் கோல வனத்திடை யடைந்து கடவுளர் வளரொளி நாதன், ருமமைச் சரணிற் சரண்புகுந் தின்பச் சலதியிற் றங்கிய சரிதந், தோமற வுரைத்தா மவர்பகை துமியத் துணிக்குமா துணிந்தனன் சயிலக், கோமகள் கொண்கன் வயிரவக் கோலங் கொண்டது கூறுவா னுற்றும். (கoஅ)

தேவர் சரண்புகுபடல முற்றிற்று.

ஆ படலம் கூ - இ செய்யுள் - சஙக.



வயிரவப்படலம்.

தேவர்தம்மைமுற்றேடியசென்றவர்
மீவயங்கியவிண்ணுலகத்தினு
மாவகீழுலகெங்கணுமாய்ந்தனர்
மேவக்கண்டிலர்மீண்டனர்மேதினி. (௧)

இரதம்யானையிவுளிபதாதிநா
னரலைபொங்கிநடப்பதுபோன்மெனச்
சிரநடுங்கினன்சேடனெளித்திடப்
பரவிமேருத்தென்பாற்படர்கின்றவே. (௨)

ஆனகம்படகாதிதழங்குறத்
தானவர்க்குட்டலைவர்நெடும்படை
போனவாற்றெழும்பூழிமிடைதலால்
வானத்துள்ளவுமண்ணுலகாயவே. (௩)

கரியமேகங்கரியிற்கரிந்தன
விரியும்வெண்டிரைவேலைகொதித்தன
பெரியகுன்றமிடியுண்டபெற்றிய
வெரிகட்டீயரிரைப்பினரேகவே. (௪)

கங்கைகாளிந்திகௌதமைநன்மதை
துங்கபத்திரையாதியதொன்னதிப்
புங்கநாடெங்கும்புக்கனர்நேடிப்பின்
றங்குபொன்னிச்சனபதஞ்சார்ந்தனர். (௫)

இன்னபாதகர்யாவரும்வீவது
முன்னிநாரதனென்னுமுனிவர
னன்னர்முன்னரடைந்துவிபுதர்தா
மன்னினர்களங்கோலவனத்தென்றான். (௬)

என்றகூற்றினைக்கேட்டவிமுதையோர்
பொன்றுகாலம்புணர்ந்ததுணர்ந்திலர்
மன்றவோகைமடுத்தமனத்தின
ரன்றுதுள்ளினராடினர்பாடினர். (எ)

மாக்கடும்பகன்மண்டியபேரிரு
ளாக்கும்யாக்கையவுணப்பெருங்கடல்
போக்குநீக்குபுராதனகானன
நோக்கிச்சென்றதெதிர்ந்தனதுங்கியே. (அ)

இந்தவண்ணமிரும்புவியெங்கணும்
பந்தியாகப்பதகர்விழிகளிற்
கொந்தழற்பொறிகொப்புளித்தேகலான்
முந்துகான்முதல்யாவுமுளிந்தவே. (௯)

ஓலமிட்டுலகத்துளமன்பதை
யாலமுண்டனவாமெனச்சாம்பின
மூலமீதெனமுன்னியுணர்ந்தில
வேலவாய்த்தவிடங்தோறுளித்தன, (௧௦)

வழுதிநாட்டைமருவிவெள்ளாறுரீஇத்
தழுவினர்வெந்தறுகட்டயித்தியர்
தொழுதடைக்கலம்புக்குச்சுரரெலாங்
குழுமியோங்குமங்கோலவிபினமே. (௧௧)

வேறு.

தூரியபேதமாயதுடிவயிர்முழவுதக்கை
பேரிகாகளந்தடாரிபெருவளைமுருடுமொந்தை
வாரிதியேழினோடுமாறுகொண்டொலிப்பபோன்று
பாரிருவிசும்புவிள்ளும்படிநெடிதார்த்தவன்றே. (௧௨)

அதிர்ந்ததுபுடவிமேருவசைந்ததுசேடன்கண்கள்
பிதிர்ந்தனவண்டகூடம்பிளந்ததுவிண்ணினின்று
முதிர்ந்தனகோளுநாளுமொடுங்கினதிசைமால்யானை
யெதிர்ந்தபல்விலங்கினீட்டமிரும்பிலவாய்க்கரந்த. (௧௩)

இத்திறத்தவுணரீண்டவெழுந்தபேரமலேகேளாச்
சித்தமிக்குடைந்துதேவர்சீயத்தின்றெழிப்புக்கேட்ட
மத்தமாதங்கமானமயங்கினர்வல்லேயோடி
யத்தனுர்வீற்றிருக்குமாலயத்துட்புகுந்தார். (கச)

ஆதிநான்முகத்தோன்மாலோனுதியவமரர்யாரும்
வாதினுற்பிரமம்யாமேமற்றிலேயெனச்செருக்கி
யோதினர்தம்முளன்றவுவண்வளரொளியாய்த்தோன்றித்
தீதினேச்செகுத்துக்காத்தசிவபரஞ்சுடர்த்துதிப்பார். (கரு)

வே று.

அடலுறு குரண்டத் துருக்கொளு மவுணர்க் கரசினே யழித் தவ னிறைகைப், படர்சடை யணிந்த பரமநா யகனே பார்ப்பதி தேவியோர் பாகா, புடவியே முதலாப் பொலியுமெண் மூர்த்தீ புண்ணிய மால்விடைப் பாகா, கடல்வரு களத்தைக் களத்தமைத் தெம்மைக் கடைக்கணித் ததுகண்கூ டன்றே. (கசு)

வரம்பெறு மவுணர் வாழ்புர மூன்று மதன்புர மொன்றுநீ றுக்கி, யரந்தையுற் றுவி சலந்தர னீப்ப வரியமா வாழியை விடுத் துச், சிரந்துகைப் புண்டு தசமுக னலறச் சேவடி விரலினுற் செ ய்த, கரந்தையஞ் சடையாய் நீமுனி வெல்லாங் கடையரோ முய்வ தற் கன்ருே. (கஎ)

முக்கண னென்ருேர் பெயருனக் குறைப்ப மூதக்கார் தூலல க் கணத்தா, லக்கர மாகி யணுவினுக் கணுவா யகண்டமா மகத் திற்கு மகத்தாய்ச், சக்கரந் தரித்த செக்கரத் தவனுந் தண்மலர்த் தாதையுங் காணு, மிக்கதோ ருருவோய்க் கெங்குங்கண் ணுள வெம் விழுமநீ காணுரு தெவனே. (கஅ)

ஓசையா யெழுத்தா யொண்பத மாகி யுறுபொரு ளாயுயிர்க் குயிராய்த், தேசமாய்த் திசையாய்க் காலமா யைந்தாய்த் திகழ்ந் துள பூதமாய்ச் செறிந்த, வீசனே யெந்தா யிடைவிடா துன்னே யிறுகுறப் பிடித்தினி திருக்கு, நேசருக் கிடுக்க ணேர்வது முண் டோ நீயலாற் றுணையெமக் கியாரோ. (ககூ)

அன்பருக் கன்ப னற்றவர்க் கனேயா னுகுமாற் சிவபிரா னெ ன்ன, வன்புறை கொண்டு நிகிலவே தாந்தம் வழுத்துமங் தணப் பொரு ளுணர்ந்து, துன்பறு பாக்குத் துணைநின பாதத் துணை

யென வபயம்புக் கேமை, முன்பனீ யின்னு மிரங்கலை யிருத்தி
முறைகொலோ முறைகொலோ முறையோ. (௨௦)

வேறு.

அண்டரிவ்வண்ணமோலிட்டருள்வளர்சந்நிதிக்கண்
விண்டபேரமலையெம்மான்வியன்குழைக்காதினூடு
மண்டுவெம்பசிகனற்றமகார்கலுழ்ந்தழுதவோசை
யெண்டகுதாய்செவிக்குளிவர்ந்தெனநுழைந்தகாலை. (௨௧)

திடுக்கிடவசுரர்நெஞ்சஞ்செல்கதிபிறழுவென்றாழ்
வெடிப்புறவண்டகோளமேருமால்வரைநடுங்கப்
படித்தலஞ்சுமந்தபாந்தள்பஃறலைகோட்டிமாழ்கத்
தடக்கடனீர்வறப்பத்தாரகையாதியுட்க. (௨௨)

இயமனென்செய்ம்மோவென்னவிருதயங்கலங்கியேங்க
வயனமையின்னுஞ்சென்னியரியுங்கொலென்றழுங்கப்
புயல்வண்ணனதளுரித்துப்போர்க்குமேயெனப்புழுங்க
வுயலுறுபிறர்நெய்த்தோரற்றுலத்துமென்றுள்ளஞ்சாம்ப. (௨௩)

சுத்தபோகத்தவீரசுவர்க்கமீதசுரரேறப்
பத்தராயுள்ளோரெல்லாம்பவாம்புதிக்கரையிலேற
வித்தராதலம்பாதாளமிருவிசும்புயர்ந்தீடேற
வத்தனுர்பதிகடம்மையழிஞ்சிலங்கான்வென்றேற. (௨௪)

அரிதுறுமடிச்சிலம்பார்ப்பகிலமுஞ்செவிடுசெய்ய
வரியரவரைஞாணுச்சிமணியொளிகுருடிமைப்ப
வுரிநிருவாணமிற்றென்றுரைப்பின்றியூனமயாக்க
விரியெழின்மார்பின்ஞான்றவெண்டலைத்தொடைசிரிப்ப (௨௫)

உரம்பெறுபுடவிசூழ்ந்தவுததியொன்றிரண்டுமூன்றும்
பரந்தெழீஇச்சோரியாகிப்பாயினும்பாதியானு
நிரம்புருக்கபாலஞ்சூலநெடுந்துடிபாசமின்ன
கரங்களிற்கலவிவெய்யகடுங்கனல்கான்றுசீற. (௨௬)

மதிவகிர்செருகியாங்குவக்கிரதந்தமின்ன
முதிர்சினம்புறத்துப்பொங்கிமொய்த்தெனமுறுவரேூன்ற
விதிர்விதிர்ப்புறக்கும்மைவிழிகளிற்புலிங்கஞ்சிந்தக்
கொதியழல்வடவைத்தீயிற்கொழுந்துவிட்டெரியவேணி. (௨௭)

கிளர்முடியண்டகோளங்கெழுமநாற்புயமுமெண்டிக்
களவினைக்காட்டமேனியனந்தசூரியரிற்சீர்ப்பத்
தளர்வுறுசுரர்பால்வைத்ததண்ணியகருணையாலே
வளரொளிநாமத்தீசன்வயிரவக்கோலங்கொண்டான். (௨௮)

சிருட்டித்துத்திதித்துச்செற்றுத்திரோபவித்தருளுஞ்செய்கை
யிருட்டற்றவிதயத்தொண்டரிமைப்பின்முன்னிழைப்பவென்று
லருட்டுற்றவைம்முகத்தெம்மண்ணலாரடைந்தவானோர்
பொருட்டிற்றைஞான்றிக்கோலம்பூண்டதோர்புகழின்பாற்றே. ()

உலகெலாமாகிவேறாயுடனுமாயொருவராலு
மலகுசெய்தறியவொண்ணாதகந்தொறுமொளித்தகள்வன்
கலகவாளவுணரொன்னுங்களைகளைகளைகணுவித்
தலமிசைவடுகவேடந்தாங்கிற்றுமிறும்பூதிற்றே. (௩௦)

ஒப்பவர்மிக்காரின்றியொளிர்கின்றவயிரவப்பே
ரப்பன்மெய்ம்மயிர்க்காறாறுமரும்பியவியர்வினின்றுந்
தப்பறவுதித்தார்பல்லோர்சாரதவீரரன்னார்க்
குப்படிமுதலபன்னுன்குலகமும்போதப்போதா. (௩௧)

கனலெனவண்ணஞ்சேர்ந்துகறங்கெனச்சுழற்சியெய்திச்
சினனகத்துண்மையாருந்தேறுமாபுகையுயிர்த்து
நனிகுழிந்தாழ்ந்துவட்டநண்ணியாரருடீர்க்கட்
பனலரும்பாரிடந்திண்பாரிடம்பரந்தபம்பி. (௩௨)

இத்தகுபூதரொண்டானிராயிரவெள்ளமென்ப
முத்தலைச்சூலநேமிமுசலநாந்தகங்கணிச்சி
குத்துறுமீட்டிதண்டங்கொடுமரம்பகழிகுந்தஞ்
சத்திமுற்படைபரித்ததடக்கையரன்னர்மாதோ. (௩௩)

கரடிகையுடுக்கைதக்கைகாகளந்தாரைபீலி
முருடுகள்கொம்புபம்பைமொந்தைதண்ணுமைகைத்தாளங்
குரன்மலிகுடமுழாவேய்ங்குழன்முதலியமுழக்கி
யுரனுடைப்பூதவீரரொய்யெனக்களிப்பிற்சூழ்ந்தார். (௩௪)

கரங்கொடுமேருவாதிகழங்கெறிந்தாடவல்லார்
சிரந்துளக்குற்றுச்சேடன்றெருமரத்தாள்பெயர்ப்பார்
தரங்கநான்கிரண்டொருங்கேதனித்தனிபருகத்தக்கார்
வரம்பிலனாயன்முன்னர்வந்தடிவணங்கிநின்றார். (௩௫)

குமரமாவடுகமூர்த்திகுனைகழற்ருட்கீழ்வீழா
வமரருங்குருவும்வேந்துமபயமீத்தருடியென்ற
தமரமாதிரத்தினின்றதந்தியின்செவியைச்செம்ம
விமகரசடிலசித்தனியவுளீரஞ்சரஞ்சல். (கூசு)

வேறு.

உங்கடமக்கிங்குறுகணுறவொட்டோமுண்ணீருடையற்க
பங்கவினேயேசந்ததமும்பரிந்துபுரிந்துதிரிந்துழலும்
வெங்கணசுரருடல்பிளந்துவீழ்ந்துபெருகுங்குருதியினுற்
பொங்குங்கரியபுணரியைச்செம்புணரியாகப்புதுக்குதுமால். (கூஎ)

அலகையினந்தானவர்தலேயையங்கைக்கொடுபெந்தாட்டயரச்
சுலவுங்கங்கமவர்குடராற்ருேரணங்கள்பலதொடுப்ப
வுலவிநரிநாயன்னவர்மெய்யுறுப்புத்தோறுங்கறித்தீர்ப்பக்
கலர்தங்காயநமர்காயக்காயத்துயருந்திறங்காண்மின். (கூஅ)

என்றுதிருவாய்மலர்ந்தனகேட்டின்பவெள்ளத்திடைப்படிந்து
குன்றுபறக்கும்பரிசொழித்தகொற்றக்குலிசப்படையானு
மன்றல்கமழும்பசும்பொனரிமாலேமிலேந்தமற்றையருங்
கன்றுநவ்விகரம்பொறுத்தோன்கழற்காற்சார்பினின்றிடலும். ()

அந்தமாதிநடுவிவற்றையாருமளந்துதெரிவரிய
சுந்தரப்பொற்சுடர்வடிவத்தோன்றல்வடுகத்தனிமூர்த்தி
சிந்தலில்லாநம்படைக்கோர்சேனேத்தலேவன்வேண்டுமென
நந்திதேவன்வருமாறுநாடியிட்டான்றிருவுளத்தில். (சo)

வேறு.

மோக்கமாத்தானமென்னமொழிந்திடப்பட்டகைலே
காக்குமால்விடைமுகத்துக்கருணேகூர்முக்கணுற்ருேண்
மேக்குலாஞ்சீர்த்திநந்திமேவினன்பணிந்துநாத
நோக்கம்யாதருளுகென்னநுவலுமான்ஞாளியூர்தி. (சக)

ஆரியர்தங்கட்கெல்லாமருந்துயரிழைத்துக்கற்ப
வேரியந்தொடையல்வேய்ந்தவிண்ணவர்வேந்தற்பற்றி
வாரிமீன்சுமப்பவைத்தவன்றிறலவுணன்ருனே
யோரிமைப்போழ்தின்முன்னருலப்பிப்பதுளத்தடைத்தாம். ()

கிருத்திமப்படிவந்தாங்கிக்கெழுமியநம்படைக்குப்
பொருத்தபுதலேவனுகப்பொலிந்துநீபோந்துவல்லே
செருப்புரிந்தசுரர்தம்மைச்செற்றிவண்மீடியென்னக்
குருக்களின்முந்துநிற்குங்குரிசிலாங்கிறைஞ்சிக்கூறும். (சஉ)

அடியனேன்றந்திரத்திற்கதிபதியெனச்சென்றூனு
மொடிவில்போருளுற்றுமேல்வைவொருபெருமுதல்வன்வேண்டும்
படியிடையிடையூறெல்லாம்பாற்றுவானிமயப்பச்சைப்
பிடிதருகயமுகத்துப்பிள்ளையேயதற்குத்தக்கோன். (௪௪)

திக்குலாமிசைகொளந்தத்தெய்வநாயகன்பின்னேகித்
தொக்கவாளவுணராவிதொலைத்துநின்பாதப்போதின்
பக்கல்வாழ்கின்றதேவர்பதவியைநிறுவியெந்தா
யிக்கடையடையும்வண்ணமெளியனேற்கருளுகென்றான். (௪௫)

அன்னதாகென்னமன்னவருள்சுரந்துவகைமீதூர்ந்
துன்னலுமைங்கைநால்வாயொழுகும்மதத்திரண்டு
பொன்னடியொருகோட்டும்பல்பொள்ளெனப்போதவந்த
முன்னவன்றன்னைநோக்கிமுழுமுதன்மொழியுமன்றே. (௪௬)

துட்டதையவுணர்மொய்த்திச்சூழல்வாய்நமையடைந்த
சிட்டரையிடுக்கணுற்றித்தெறுவதுகுறித்துவந்தார்
மட்டறுமனையதீயோர்மன்னுயிரொழிந்துமாள
வட்டனைவருகவையவவாயதுநினையிதற்கே (௪௭)

அரத்தவார்சடையெம்மண்ணலறைந்தனமாற்றங்கேளா
வொருத்தன்மாமுகங்கொண்டுற்ற வொருத்தனுண்மகிழ்ந்தோமெ
னருத்தியாலன்ன * னேமென்றளவினிற்பூதவெள்ளம் [ன்று
பெருக்கியபூசனைணிப்பெரும்புறப்பௌவஞ்சேய்த்தே. (௪௮)

முகிறவழ்குடுமிக்கோட்டுமொய்ம்மணிக்கனகமேரு
மகிமிசைநடந்தான்மானமாதங்கவதனன்செல்ல
வகிகரத்தசைத்தநந்தியடிகட்குமேனையோர்க்கும்
விகிர்தவேடத்துமுத்தன்விடையளித்திருந்தானன்றே. (௪௯)

பசுபதிவடுகரூபம்பரித்தமைபகர்ந்தாமன்ன
சிசுமதிமிலைந்தானைங்கைத்தேவுடனந்தியாதி
வசுவரிவிழிக்கணத்தைமகிழ்ந்துப்த்துத்தானும்பிற்சென்
றசுரனாச்சங்கரித்தவாட்டறைதரநின்றன்றே. (௫௦)

வயிரவப்படல முற்றிற்று.

ஆ படலம் ௧௦ - இ செய்யுள் - ௪௮௫.

---

* ஓம்—அங்கீகாரம்.

அசுரசங்காரப்படலம்.

விரிகடலென்னச்சூழ்ந்துவிண்ணவரோத்தெடுப்பப்
பெரியசாரதரனந்தர்பின்னினர்முன்னிப்போற்ற
முரிவில்பன்மணிசெய்கோயின்முன்றில்வந்திறுத்தமுக்கட்
கரிமுகன்விடைமுகற்கூஉய்க்கட்டுரைக்கின்றான்மாதோ. (௧)

மாடுடைவைப்பில்வைகும்வானவர்வருந்தவாட்டும்
பாடுறுமவுணத்தீயோர்பாடுறப்பரவையேபோ
னீடுநங்கணங்கட்கெல்லாநீபெருந்தலைமைமேவிக்
கூடுதிபறந்தலைக்கட்குறுகுதும்பின்னரென்றான். (௨)

விண்ணவர்மெலிவுவீட்டும்விநாயகனாணைதாங்கிக்
கண்ணகன்புவியீறூழிக்காலமென்றயிர்க்குமாறு
வண்ணவான்றேர்மால்யானைவாம்பரிபதாதிசூழ
வெண்ணலர்க்கிடிநேர்நந்தியிரதத்தின்மேலான்சென்றான். (௩)

வேறு.

அன்றுபுருகூதனதயிற்குலிசமீரப்
பொன்றியனபோயசிறைபொம்மெனமுளைத்துக்
குன்றுகள்பறந்தனையகொள்கையினவாகிச்
சென்றனகொடிஞ்சிகெழுதேர்நிரைவிரைந்தே. (௪)

ஓசைமலிமோதுதிரையோதவறலுண்டு
பேசுமளவில்லனபெரும்புயன்முழங்கிக்
காசினியினூடொழுகுகாட்சியையளித்து
மூசுமததந்தியினமுந்தினநடந்த. (௫)

ஓதியலகிட்டிடவுமுன்னவுமொணாமே
மாதிரவரைப்பினைமறைத்தபடையாமம்
போதியிலெழுந்தவலைபோலுமெனவானிற்
சாதியசுவங்கள்பலதாய்ப்படர்வமாதோ. (௬)

தண்டமுடைவாள்பரிசைசக்கரநெடுஞ்சூல்
பிண்டியயில்வார்சிலைபிறங்குநுதிவாளி
கொண்டுவடவைக்கனல்கொதித்தளவிலாவாய்
மண்டியதெனக்கணர்வழிக்கொடுபெயர்ந்தார். (௭)

இத்திறநடந்தவனிகத்துகணிவந்தே
யுத்தமரிருக்குமுயரும்பருறுதோற்ற

நித்தவளமேவுமினிநீடுதுயர்தீர்மென்
றுத்தரையெழுந்துசொலவுற்றசெயலொக்கும். (அ)

அங்கதுநிகழ்ந்திடவடுக்கலிறைதந்த
மங்கையொருபங்கனருண்மாக்கயமுகத்தோன்
பொங்குதிறல்வாகைமிகுபூதரைவிளித்துப்
பங்கமிலிர்நம்படைபடர்ந்தெழுகவென்று. (கூ)

திருந்தலரிருந்தலர்செழும்புரமொர்மூன்றும்
விருந்தெனவெரிக்கருளுமென்மைநகையாளன்
பொருந்தியமறைப்புரவிபூட்டுமிரதத்தி
னருந்தொழிலமைந்திலகுதேர்மிசையனானன். (கo)

கின்னரர்மிடற்றிசைகெழுந்திவவியாழி
னின்னிசைபருந்துநிழலென்னும்வகைதுன்ன
முன்னுலவுபேரிகைமுழக்குமொலிசென்று
மன்னியதிசைக்கரியின்வார்செவியடைப்ப. (கக)

பொன்னகரிருந்துபுரவுத்தொழில்புரிந்த
மன்னவனுமெண்ணரியமற்றையவிஞேரு
மென்னபணியேழையமியற்றுவனவென்னுத்
தன்னடியிறைஞ்சினர்ததைந்தனரிரப்ப. (கஉ)

வேறு.

ஆலகாலன்காலவேகனழலுமங்கிபிரளையன்
கோலநீலமேனிகொண்டகும்பனேவிபாண்டகன்
சாலனீடுதண்டிசாம்பன்சக்கிரன்கதாதர
னேனுமின்னரெண்ணிலாரிரும்படைத்தலைவரே. (கங)

அரிகொள்வாள்பரித்தகையரங்குசந்தரித்துளார்
விரிதருஞ்சுடர்ப்பொலிந்தவேற்படைப்புயத்தின
ரொரிபாந்தமழுவினேடிருப்புலக்கையேந்தினர்
கிரிபடர்ந்தபோன்மெனக்கிளர்ந்துடன்றொடர்ந்திட. (கச)

மூலமாமறைக்குளேமுளைத்தெழுந்தபிரணவக்
கோலமாயகுஞ்சரத்துதித்தவெங்கள்கொற்றவன்
சூலமேன்மறிக்குழாந்தனைச்சினந்துசெல்புலி
போலநொய்யவசுரர்பாற்பொருக்கெனப்படர்ந்தனன். (கரு)

எண்ணிறந்தபூதவெள்ளமிந்திராதிதேவர்கள்
விண்ணகத்தைமண்ணெடும்விழுங்கிமொய்த்துடன்ருகக்
கண்ணிறைந்தகவினுடைக்களிற்றுமாமுகத்தவ
னண்ணனந்தியைக்கலப்பவார்த்தவீரமலைபோய். (கசு)

மூவருக்குமுதல்வனுயமுக்கணெந்தைவளரொளித்
தேவதேவன்முந்துதந்தசெல்வனும்விநாயகன்
காவல்கொண்டதானையோடுகெடிதமர்க்குவருதிற
மோவிலாற்றலவுணருக்குரைத்தலுங்கும்பாண்டகன். (கஎ)

சீற்றமாயவேலையிற்றிளைத்தழன்றசிந்தையன்
கூற்றமன்னகாட்சியன்குறட்படைத்திரட்சிகண்
டாற்றநன்றுதேவர்சூட்சியாற்றலின்றியாற்றலா
தேற்றபோரிலஞ்சுவேன்கொலீசன்வந்தெதிர்ப்பினும். (கஅ)

என்றுரைக்குமுன்னராலமெனவெழுந்துதானவர்
குன்றநேமிமுசலமங்கைகொண்டெழுந்துகோடைநாண்
மின்றுறுத்தவுருமினுர்த்துவெய்யபூதவீரரோ
டன்றிவென்றிகோடலெண்ணியாங்கெதிர்ந்தமர்த்தனர். (ககூ)

நீரதத்துமேனியார்நெடுங்கரத்துவாளினுற்
சாரதக்குலத்தினைத்தலைத்தலைத்தறித்திட
வேரதத்தபாதவங்கள்மேதினிக்கண்வீழ்ந்தென
மாரதத்தர்கண்டுசாலமாழ்குமாறுசாய்ந்தனர். (உ0)

பந்திகொண்டவவுணர்தம்படைக்கலந்துகைத்திடச்
சந்துதாள்கரஞ்சிதைந்துதலைதகர்ந்துசாம்பினுர்
வெந்தழற்குழுந்துபட்டவிஞ்சுபஞ்சுமானவே
சிந்திமிக்கழிந்தபூதர்செயலுணர்ந்தபிரளையன். (உக)

ஆதிதேவனருள்படைத்தவளவில்கூளிசிதையுமா
காதுகின்றகலருடம்புகண்டதுண்டமாக்கியே
மோதுபாறுகாகமாதிமொய்த்துணச்செயேனெனி
னுதனைங்கைமாமுகற்குநானெர்தொண்டனல்லனுல். (உஉ)

வீரமிக்குளீரெனின்விரைந்துடற்றவம்மெனப்
பாரவில்லினுணெறிந்தபடியிலோசைசெவிமடூஉக்
கோரமிக்கதானவக்குலங்கலங்கிவெந்நிட
வாரணத்திடைச்செல்சிங்கமானவந்தெதிர்த்தனன். (உஙு)

படைபரித்தவன்கைகொண்டபதகர்சென்னிசிதறிய
கடையுகத்தின்முடிவெழுந்துகாரினம்பொழிந்திடு
மிடைவிடாதமாரிநேரவெஃகவாளியேவுபு
மிடையுமைந்திரண்டுதிக்கும்வெருவுகிற்பவார்த்தனன். (உச)

ஆர்த்தவோசையவுணரோகையறவறச்சுவற்றலும்
வேர்த்தவங்கம்வெந்தநெஞ்சமேவியாவிபுலர்தமர்ப்
பார்த்ததேவகண்டநாமபாவகாரிவல்விரைஇச்
சீர்த்தவங்கிபிரளையற்செருக்குறித்துமுன்னினன். (உரு)

வந்ததேவகண்டகன்வளைத்தவில்லினேக்கொளீஇ
முந்திநின்றபிரளையற்குமுடிதொடங்கியடிவரைப்
பந்தியாயிரத்தவாரிபாயமேனிபாய்ச்சினு
னந்தரத்திருந்துதேவராவலித்திரங்கவே. (உசு)

அசுரனுய்த்தவிசிகமுற்றுமக்கணத்துமாற்றியங்
கிசிசரன்சிரத்திலூன்றநெஞ்சிலூன்றவேவலுங்
கசிவிலாததேவகண்டன்கண்ணிலங்கிகான்றுடன்
வசிகொள்வாளிபிரளையன்றன்மார்பின்மூன்றுவிட்டனன். (உஎ)

உருத்துவந்துபாணமார்பிலூன்றவுள்ளுடைந்தவன்
பருத்தயாக்கைதாங்கியோங்குபாவிதேவகண்டகன்
கரத்துவைத்தபாரவில்லொர்கணைவிடுத்தறுத்தலுஞ்
சிரிப்பவானுளார்கள்வேறுசேமவில்லைவாங்கினன். (உஅ)

பொறியுமிழ்ந்தகண்ணினன்பொறுக்கலாதவெகுளியன்
வெறியன்வெற்றிமாலைமார்பன்விட்பகைவனேவலுங்
குறிகொள்வாளியொன்றையாடல்கொண்டவங்கிபிரளைய
னெறிகதிர்ப்பொலன்செய்தேரிழந்துபூமிசாய்ந்தனன். (உகூ)

சாய்ந்தவன்னெழுந்திருந்தொர்தண்டுகொண்டுமொத்தியர்
காய்ந்ததேவகண்டகன்கனற்பொரச்சிவந்துமுற்
பாய்ந்துநாந்தகத்தினப்பருத்ததண்டுபோழ்தலும்
வாய்ந்தவாலகாலனேரின்வந்துநின்றுகூறுவான். (௩௦)

வேறு.

எண்ணிலாவண்டத்துள்ளவின்னுயிர்த்தொகுதியுள்ளா
லண்ணலெங்கரிமுகத்தெம்மையனைவணங்காதார்யார்
தண்ணிலவணிந்தவந்தத்தம்பிரான்கருணைகூர்ந்து
விண்ணவர்மாட்டுமேயவெவ்வியவிழுமநோயை. (௩க)

மட்டிலாவவுணர்தங்கண்மரபுடன்றுடைக்கும்வண்ண
மெட்டினேடிரண்டுதிக்குமீண்டுநாற்சேனைசூழக்
கிட்டினனத்தானைக்குட்கெழுமியசிறியேன்சிங்கக்
குட்டிநீவேழநின்பாற் *குருகுயிர்கொள ‡வந்தென்றுன். (௩௨)

களிப்புறவாலகாலன்கழறியமாற்றங்கேளாத்
துளிப்புயலிடித்தாலென்னத்துண்ணெனநகைத்துச்சொல்லு
மொளிக்கயமுகத்தெங்கோனுக்குள்வெரீஇயியற்கைமெய்நீத்
தளித்தகையாகுவானேற்கன்பனுயுழலுவானே. (௩௩)

பாரெலாம்போற்றுகின்றபண்ணவனென்னநன்கு
சீரெலாஞ்சொற்றுயன்னுன்சேவகனுயினீநின்
பேரெலாமொருங்குமாளப்பிறங்குமென்சராசனத்தின்
காரெலாம்பிலிற்றும்வாளிக்கமேழைகாத்தியென்றுன். (௩௪)

அணிபெறவவனுரைத்தவஞ்செவிப்புகலுஞ்சீறிக்
கணிதமில்பிறைவாயம்புகார்முகங்கோட்டியுய்த்துத்
துணிபடுத்திவுளிவையந்தூங்குகைத்தூங்கனூறித்
தணிவிலாக்குருதியாறுதரைமிசைத்தவழ்வித்தார்த்தான். (௩௫)

ஆர்த்தபேரமலைகேளாவடலுடைத்தேவகண்டன்
போர்த்தனுவொன்றுவாங்கிப்புவியெலாமஞ்சநாணி
யிர்த்தனன்றெறித்துவாளியிரண்டுய்த்திட்டாலகாலன்
சீர்த்ததேர்சிதைத்துநீண்டசிலையையுமிறுத்தான்மாதோ. (௩௬)

வில்லொடுதேரிழந்துவெள்கியவாலகால
னெல்லொளிமழுக்குஞ்சேமவிரதமுஞ்சிலையும்பெற்றுக்
கல்லினைப்பொழியுகாந்தகாலசீமூதம்போலப்
பல்லவரவுணர்பாறப்பகழிமாமாரிபெய்தான். (௩௭)

நடுவனுநடுங்குமாறுநம்மவன்கார்முகத்திற்
றொடுகணைக்குலத்துட்சில்லதுகண்மலியவுணர்ச்செற்ற
படுமதக்களிற்றைச்சில்லபடுத்தனசில்லதேரா
யடுவனகலினவாசியடர்ப்பனசில்லவம்மா. (௩௮)

இன்னதுதேவகண்டனெரியுகுவிழியினேக்கி
யென்னுழைப்பண்டைக்காலத்திரணியகருப்பனீந்த
நன்னர்பல்வரமும்வெற்புநாணுறுதோளும்வாளுந்
துன்னினவிருப்பயானேதோற்பதோர்கூளிக்கம்மா. (௩௯)

---

* குருகு - யானைத்தலையின்மூளை. ‡ வந்து - வந்தேனென்னும்பொருட்டு.

கிருத்திமர்தம்மையெல்லாங்கீடத்தையிரவிமானப்
பருத்திநையயங்கியென்னப்பண்ணுதலெனக்கெஞ்ஞான்றும்
விருத்தியாங்காண்டியென்னவிண்ணவர்துண்ணென்றேங்க
வுருத்தனன்சிலீமுகங்களுந்தினனையுதமன்னே. (சo)

தாளினைச்சிதைத்துப்பூதர்தலைகளைச்சிதைத்துத்தீகால்
வாளிவர்கரஞ்சிதைத்துமதகரியினஞ்சிதைத்து
நாளிறப்பரிசிதைத்துநலத்தபஃறேர்சிதைத்துத்
தூளிசெய்திட்டவந்தத்துட்டனேவியகூர்வாளி. (சக)

பிறைமுகப்பகழியொன்றுபின்னருமவன்மார்புய்த்தா
னறைகழலாலகாலனதனையோரம்பின்மாற்ற
விறையுறுபொழுதிற்றீயோனீரைந்துகணைதொடுத்துத்
தறைவிழவாலகாலன்சந்தனம்பொடிபடுத்தான். (சஉ)

அக்கினிகாலவேகனதிபலகும்பன்றண்டி
சக்கிரன்விபாண்டகன்னேசாலன்மாசாம்பன்வென்றி
யக்கதாதரனென்றின்னவடல்கெழுதலைவர்யாரும்
புக்கனர்தேவகண்டன்போர்க்களத்தழன்றுபொங்கி. (சங)

மோதினாரசுரர்சென்னிமுசலத்தாற்பிதிர்களாகக்
காதினார்கொடிஞ்சியந்தேர்கரிபரிவெற்றிச்சங்க
மூதினார்நெய்த்தோர்வெள்ளமுவரிவாயோடுவித்தார்
பூதிசாதனம்புனைந்தபூதமெய்ப்பூதவீரர். (சச)

தேரொடுமவுணர்தம்மைத்தெண்டிரைக்கடலுள்வீசுங்
காரெனவயிர்க்குமாறுகளிற்றினைக்காயத்தோச்சும்
பாரகஞ்சேப்பிற்றென்னப்பரிகளைப்பதத்தரைக்கும்
வேரினால்வடுகன்றந்தவிழுமியபூதவெள்ளம். (சரு)

விண்ணிடையுலாவுமெண்கண்விரிஞ்சன்வாழ்நாட்டுலாவுங்
கண்ணனார்வைகுந்தத்தின்கண்ணுஞ்சென்றுலாவுமிந்த
மண்ணகமுழுதுலாவுமாதிரக்கடையுலாவு
மண்ணல்வெம்பாரிடத்தினதிபர்கள்விடுத்தவாளி. (சசூ)

கண்டகர்களேபரத்தைக்களேபரமாக்குவிக்குந்
திண்டிறல்வையம்பூழிசெய்துபின்வையமாக்கு
மெண்டகுசிந்துரஞ்செற்றிரத்தஞ்சிந்துரங்கொளுத்து
மண்டியகூளிவேந்தர்வார்சிலையுமிழ்ந்தவாளி. (சஎ)

வாள்சிதைந்தாருஞ்சில்லோர்வரையறுத்தலரோன்றீட்டு
நாள்சிதைந்தாருஞ்சில்லோர்நடுச்சிதைந்தாருஞ்சில்லோர்
தாள்சிதைந்தாருஞ்சில்லோர்தடம்புயஞ்சிதைந்தார்சில்லோர்
கோள்சிதைந்திடாதபூதக்கொற்றவர்விடுத்தவம்பால். (சஅ)

இரத்தவெள்ளத்தின்மாட்டோரிரும்பிணமீதிலேறி
யரத்தநேர்சுழல்கட்பேழ்வாயணங்குறுகுணுங்கரொன்று
விருப்புடனுகைத்துப்போதன்மீன்கவர்நுளையனாவாய்த்
திளைப்பொலிகடலுளூர்ந்தான்செல்லுதல்சிவனாமன்றே. (சகூ)

பந்திகொளசுரர்தானைப்பரவைவைச்சுவற்றிப்பூதர்
சிந்தியதிறமும்வானோர்சிந்தனைக்களிப்புநோக்கிக்
கந்தடுதிணிதோட்டேவகண்டகன்கனன்றுமிக்கான்
கொந்தழலுருமேறென்னக்குமுறினனமரருட்க. (ருo)

வாளெயிறிலங்கநக்குவடிக்கணைத்தொடையால்வெய்ய
பூளைவீசண்டவாதம்பொருதலிற்படும்பாடெல்லாங்
கோளுறுபாரிடத்தின்குழுவொடுதலைவரொய்த
வேளையின்னதிற்செய்கென்றுவிறற்சிலைகால்வளைத்து. (ருக)

எண்ணிலாச்சரமுகாந்தத்திழிமழையெனப்பொழிந்து
மண்ணிலாவுயிர்கள்பல்லமயங்கினமடிந்துசாயத்
திண்ணியவாலகாலனாதியதிறலின்மிக்கோ
ரண்ணியதேருமாவுமழிந்தனவாக்கிமன்னோ. (ருஉ)

கரத்தமர்சராசனத்தைக்கண்டதுண்டம்படுத்துக்
கிருத்திமப்படையையச்சங்கெழுமுவித்திரியல்போக்கிச்
செருத்தொழில்புரியுந்தன்மைதிருவுளத்தினிதுதேர்ந்தா
ணிருத்தனார்கயிலைகாக்குநிருமலநந்திப்புத்தேள். (ருங)

பொன்றுறவசுரரெல்லாம்பொருவதுகுறித்துமேருக்
குன்றெனநிவந்ததேர்மேற்கொண்டனன்போரின்கோலந்
துன்றினனிறுதிநாளிற்றோன்றியவுருத்திரன்போ
னின்றனன்சிலைவணக்கிநெடுங்குணத்துவனிசெய்தான். (ருச)

பாணிக்கட்கொண்டவில்லின்படரொலியண்டங்கீற
வாணிப்பொன்வரைநடுங்கவலைகடலடங்கிமாழ்க
மாணிக்கமயத்தசோதிவானநாட்டவருவப்பத்
தூணிக்குட்செங்கைபோக்கிச்சுடுசரந்தெரிந்தெடுத்தான். (ருரு)

ஐயன்றன்கார்முகத்திலமைத்தனன்றொடுத்தவாளி
நெய்யுறவெழுந்ததீயினீடுலகனைத்துந்தாவிப்
பையரவனையசீற்றப்பாதகத்தவுணராய
மையிருண்முழுதும்போழ்ந்துமற்றையபடையும்வீட்டி. (ருசு)

அண்டர்பண்டிழைத்தபாவமகிலமுந்திரண்டோர்மேனி
கொண்டதுபோலுந்தேவகண்டகக்கொடியோன்மேய
திண்டடந்தேருமந்தத்தேர்த்திசையாத்தமாவுந்
தண்டலில்பாகுஞ்செற்றுத்தனுவினையிருகூறாக்கி. (ருஎ)

அம்பறாத்தூணிபீறவறுத்தவன்சேமமாகப்
பம்புவித்திட்டவெல்லாப்படையையுந்தொலைத்துமீண்ட
தும்பரார்மகிழ்வினார்த்தாருளாத்தவத்தீயோனாழ்த்த
கொம்பரும்விடபமுற்றுங்குறைந்துளதருவுமொத்தான். (ருஅ)

முளரியந்தவிசின்மேலான்முந்தைநாண்முடிப்பொறித்த
வளவியவாளுளந்தம்வந்ததின்றிவனுக்கென்ன
வுளமிசையும்பர்யாருமுவகையர்குப்புற்றாடக்
களனிடைக்கலங்கித்தேவகண்டகன்மயர்ந்தயர்ந்து. (ருகூ)

கொடிஞ்சியந்தேருமின்றிக்கூரியகொடுங்கோலின்றி
யடுந்திறற்பதாதியின்றியரும்பெறற்புரவியின்றி
நெடுங்கைமால்யானையின்றிநிழன்மணிவையமின்றி
யொடுங்கினன்வறியனந்தோவொருவனாய்நின்றொழிந்தான். (சுo)

நின்றவன்றன்னைநோக்கிநித்தலுமண்டவாணர்
சென்றடியிறைஞ்சுநந்திதேவனோர்மாற்றஞ்செப்பும்
பொன்றுநாளசுரர்கட்குப்புணர்ந்தமையோரகில்லாய்
வென்றியையெங்கள்பாலும்வெஃகினைமுழுத்தபேதாய். (சுக)

ஆயினுந்தமியைநின்னையடலடலன்றாலின்று
போயினைநாளைவந்துபொருதொழில்புரிதியென்றான்
றாயினுமினியனாயதம்பிரான்றங்குங்கைலைக்
கோயிலின்காவல்பூண்டகுறைவிலாக்கருணைவள்ளல். (சுஉ)

வேறு.

அடிகணந்தியருளியவாசகங்
கொடியன்கேட்டுக்கொதித்தனன்வல்லைதாய்ப்
படிபெயர்த்தொர்பருப்பதம்வீசுபு
பொடிபடுத்தனன்பூதர்பலரையே. (சுங)

பாவிசெய்கையெம்பண்ணவன்கண்டிவ
ஞவிகோடியென்ருணை தந்தோர்கணை
யேவினனஃதிருங்கடற்கிட்டது
தேவகண்டன்றிணிதலைநான்கையும் (சுச)

நாங்களுய்ந்தனநந்தியருளினுற்
றீங்கினீங்கின்றுதெண்டிரைவையகம்
பாங்குபெற்றதுபாதலமென்மனர்
தேங்கொள்பூமழைசிந்தினர்வானவர். (சுரு)

கங்கங்காகங்கழுகுகுளுமலிகள்
செங்கணேரிசெடிதலைப்பேய்க்கணங்
தங்களுள்ளுஞ்சமரம்விளைந்தன
வங்கண்வெய்யரழன்கறித்துண்புழி. (சுசு)

தேவகண்டகன்றென்றிசைச்சென்றமை
யாவியெஞ்சினரன்றிநின்றெஞ்சினர்
பாவகாரிகும்பாண்டகன்பாற்புகுந்
தாவவென்னவழுதுரைத்தாரரோ. (சுஎ)

கேட்டகும்பன்கிளர்ச்சியொரீஇயின
ணட்டந்தியுகநாட்டுமொருமொழி
யீட்டின்மாண்டவனொன்னருமெம்பெயர்
தீட்டுவாளியைக்காண்முனர்த்தேம்புவார். (சுஅ)

புற்புதத்தைப்பொருவும்புலவரை
வெற்புப்போலமதித்தனைவேந்தவென்
றற்புதச்சொலறைந்துவந்தேஞ்சமர்
விற்பனக்குறள்வீட்டமெலிந்துளேம். (சுகூ)

தேரைபாம்பிணைத்தின்றதிறமெனப்
போரின்வல்லபுலவர்தங்கண்டகன்
பேரொழித்தபெருந்திறனந்தியை
யோரம்பாலுயிருண்குவிரைந்தரோ. (எo)

என்றுரைப்பிரதத்திவர்ந்தனன்
குன்றெூர்குன்றிடைக்குப்புறுகொள்கைபோ
லன்றுகோட்டிலவனியையேந்திய
பன்றியாற்றற்கும்பாண்டப்பதகனே. (எக)

வானகத்தொடுவையகமாழ்பில
மானமும்மையுலகமுமஞ்சுமா
மீனவார்கலிமேதினிபோர்த்தெனத்
தானைநீடித்தழங்குரன்மிக்கதே.					(எஉ)

யானைவையமிவுளிபதமெனுஞ்
சேனைசூழவத்தியன்வருதலு
மானையானனனுதிகணத்தரு
மேனையோருமிபமுகற்சார்ந்தனர்.					(எங)

திக்கும்பாருஞ்செறிந்தனதிண்ணிய
வெக்குன்றங்களுமீண்டியபோன்மெனத்
தொக்குநின்றுசுடருமிரதமுங்
கக்குதானக்கவுட்கரியீட்டமும்.					(எச)

அரியபோருக்கமைந்தனகல்விய
பரியும்பூதப்படையும்புடையுறப்
புரியும்பல்பணிபுங்கவராற்றிடப்
பரிவினந்திபணிந்தனுக்கந்தக.					(எரு)

வேதத்திற்கும்விரித்தவுபநிடப்
போதத்திற்கும்புலப்படலின்றித்தன்
பாதக்கன்பினர்பார்ப்பவெளிவரு
மாதர்ப்போதகமாமுகன்வைகுதல்.					(எசு)

கண்டகும்பன்கனன்றனனண்டமும்
விண்டதாமெனவீரநகைசெயாத்
தண்டமொன்றைத்தனுதுதடக்கையிற்
கொண்டவூர்திகுலேயவெறிந்தனன்.					(எஎ)

தேவர்நெஞ்சந்திடுக்கிடவோலிடத்
தாவியெய்துதழலுமிழ்தண்டையென்
னுவியன்னவருட்கடனந்தியோ
ரேவினுலிருதுண்டமியற்றினன்.					(எஅ)

அண்டர்கோனையடுதல்குறித்தவெந்
தண்டநுண்டுகளாகியதன்மையைக்
கண்டுகும்பன்கதித்தவெகுளியுட்
கொண்டுவார்சிலேகோட்டினனென்பவே.					(எகூ)

மிசையுலாம்புகழ்வேய்ந்துளநந்திமேல்
விசிகமெண்ணிலவில்லினின்றுந்தின
னசைவிலாதமிக்காற்றற்கணத்தவர்
வசமிழந்துமறுகிமயங்கவே. (அ0)

ஊழியாரழலொத்தபகழியொன்
றுழிவான்றடந்தேர்நந்தியண்ணலுய்த்
தேழிருங்கடலேய்க்கும்பிறன்படை
பூழியாகப்புரிந்தனன்பொள்ளென. (அக)

திக்குமுற்றச்செறிந்ததன்பல்படை
செக்கிலிட்டதிலமெனலாயதை
யக்கணத்திலசுரனுணர்ந்தனன்
சக்கரப்படையொன்றினைத்தான்விட. (அஉ)

அங்கணந்தியரியதோரத்திரஞ்
செங்கையுய்த்திடத்தீயன்றிகிரிவாய்
நுங்கியிட்டதங்நோன்மைப்படையினைப்
புங்கவக்குழுவேங்கிப்புலம்பியர். (அங)

வேறு.

பன்னருந்தவத்தின்மாண்டபழமறைக்குலச்சிலாத
முன்னவனினிதுபெற்றமுதிர்புகழ்நந்திப்பெம்மா
னன்னதுநோக்கிநோன்பாலளப்பிலாவரத்தினின்றேன்
றன்னுயிர்கோடற்கொற்றைத்தந்தனேவலியனென்னு. (அச)

கயவனுமினையானம்மேற்கடாவியதிகிரியச்சோ
வயமுறயாம்விடுத்தவாளியைச்சிதைத்ததென்றுற்
பயனுறுவானோர்வேந்தன்பங்கயன்முதலியோருக்
கியமன்மற்றிவனேயென்னுமேல்வையிலனையவாழி. (அரு)

மேலெழுந்துருத்துச்சிறிவெவ்வனல்கான்றிரைத்துக்
காலனுங்கலங்குமாற்றுற்கடுகுபுகுறுகல்கண்ணுற்
றுலமுன்கண்டான்மானவமரரும்பூதர்யாரு
மோலமிட்டுளைந்துசாம்பியுலைந்தனரிரியல்போனர். (அசு)

தாரணியிடமின்றென்னச்சாரதர்படர்ந்தாரோட
வாரணனுதிவானேர்வருந்துறுநிகழ்ச்சிகண்ட
வாரணவிதயத்துள்ளவரும்பொருளாயவைங்கைப்
பூரணப்புத்தேள்கூறும்பொலந்திருவாய்மலர்ந்து. (அஎ)

எண்ணலன்றகுவனையெரிதுறுதிகிரியஞ்சிப்
புண்ணியன்மனத்தீராகிப்பூதவன்கணத்தர்நீயிர்
துண்ணெனவெங்கிட்டிங்கட்டுன்னினிர்போலுந்தூய
புண்ணியந்தன்னைப்பாவம்பொருதுவென்றிடுவதுண்டோ. (அஅ)

ஆகையாற்சற்றுநெஞ்சமஞ்சன்மினஞ்சன்மின்னீ
ரோகையாலுறைதிரென்றானோங்காரப்பொருளாமந்த
நாகமாமுகத்தெம்மையனவின்றனமாற்றங்கேளா
வேகமாவின்பவெள்ளத்திடைத்திளைத்தினிதுநின்றார். (அகூ)

நின்றவர்மகிழ்ந்துநோக்கநெடியதோர்கனகமேருக்
குன்றநேர்கோலமேனிக்குஞ்சரமுகத்துக்கோமான்
வென்றிகொளகோரவீரவிழுப்பெயர்ப்படைக்கலத்தைப்
பொன்றினாரசுரரென்னப்புலவர்போற்றிசைப்பவுய்த்தான். (கூ0)

விசையொடுகொதித்தியாரும்வெருவத்தீப்பொறிசிதர்த்துத்
திசையிருள்சீத்துச்சென்றத்தீயகும்பாண்டன்விட்ட
வசைமொழிதெவ்வர்க்கார்த்தவல்லவெங்கிரிதன்னை
மிசைதலுற்றனையவாளிவேறுபல்விளையாட்டாற்றும். (கூக)

அரத்தநீர்ப்புலவுவைவேலவுணர்தஞ்சிரந்துணிக்குங்
கரத்தினையிரும்பார்த்தகண்களைக்கீளும்வன்மை
யுரத்தினைப்போழுங்காழ்த்தவுடம்பினைக்கிழித்துவீசும்
புரத்தொகைபொடித்தான்செல்வன்போக்கியபகழியம்மா. (கூஉ)

போதகநிரையுட்புக்குப்புழைக்கையின்மூலஞ்செற்றுப்
பேதகமெய்தக்கும்பம்பிளந்திடாக்குருகுசிந்திக்
காதறைசெய்துகோடுகழலியபறித்துழக்கு
மோதகச்செங்கையெங்கண்முன்னவன்விசிகமன்றோ. (கூங)

கொல்லுலைவேற்கட்பூத்தகொம்பனார்கற்புமிக்கார்
நல்லவானனத்திற்கோட்டுநகைகெழுசுழிமுகத்த
பல்லுளர்பரிமாவெல்லாம்பல்லிலர்பரிமாவாக்கும்
வல்லவைதனைத்தழீஇயவானவனம்புமாதோ. (கூச)

தேரெனுங்கிரிக்குலத்துட்சென்றுயர்கொடிஞ்சிதள்ளி
யாருறுசில்லிசாடியணிமணிக்கிடுகுநூறிப்
பேரியலச்சிறுத்துப்பிறங்குதட்டழியச்செய்யுஞ்
சீரியகரிமுகத்துச்செம்மலார்சிலீமுகந்தான். (கூரு)

துள்ளிமுன்பமர்க்குப்போந்துதுற்றநால்வகையசேனை
யள்ளியப்புறத்துவீசியலையெறிகடலைத்தூர்த்து
வெள்ளிடையழனின்மாற்றிமீண்டதோரிமைப்போழ்தத்துப்
புள்ளியவதளுடுத்தோன்புத்திரன்புனிதபாணம். (கூ௬)

கருங்கொடிகழுகுசேனங்காளிபல்கூளிகூடி
யொருங்குநல்விருந்தருந்தியுவகையம்புணரிமூழ்கிப்
பெருங்குணத்தைங்கரத்துப்பிள்ளையார்சீர்த்திபாடி
யிருங்களத்தாடலாற்றியிரைத்தனகளியாலீண்டி (கூ௭)

கவந்தமெண்ணிலாதவெண்பற்கறித்தனகுழுமியாட
நிவந்தமாகுருதிவெள்ளநெடுங்கடனேடியோடச்
சிவந்தகட்கறுத்தயாக்கைத்தியகும்பாண்டன்கண்டா
னவந்தனக்காவதோரானகங்கரித்தகம்புழுங்கி. (கூ௮)

கரத்துறுவில்லைநோக்குங்கழிந்தனசேனைநோக்கு
முரத்ததன்றடந்தோணோக்குமொப்புயர்வில்லான்விட்ட
சரத்திறல்பெரிதுநோக்குஞ்சாரதர்தம்மைநோக்கும்
வரத்தினரிறுமாக்கின்றவானவர்குழாத்தைநோக்கும். (கூ௯)

பார்த்தனபொருள்களெல்லாம்பகைப்பொருளாகத்தோன்ற
வேர்த்ததன்னுடம்புமுற்றும்விளைந்ததுவெகுளிமேன்மேற்
கூர்த்தனகோல்கால்பாரக்கொடுமரங்கோட்டிநாணீர்த்
தார்த்தனன்புடவிவிள்ளவமலனைநோக்கிக்கூறும். (௧00)

ஈங்குவந்தென்முனிற்குமெறுழ்வலிப்பூதரோடு
பாங்குளதலைவரெல்லாம்பதறினர்கதறப்பாற்றி
யோங்குவானவனைப்பற்றியொண்கழனிகளம்யாத்து
வீங்குசீர்ச்சூரபன்மன்வேத்தவைவிடுப்பலென்றான். (௧0௧)

நீரதம்வாரிவாரிநிரல்படப்பொழிந்தான்மானக்
கோரநீள்சாயகம்விற்கொளீஇயினனென்றுபத்தா
யாரநூறுயிரம்மேயயுதமோர்நியுதமாகப்
பாரகமுழுதுஞ்சிந்திப்பரப்பினனிரப்பிலாமே. (௧0௨)

பாரிடம்யாண்டுந்துஞ்சும்பான்மையாற்பாரிடப்பேர்
காரிடுகடல்சூழிந்தக்காசினிபெற்றதென்னச்
சீரியபூதராவிசிதைந்தனர்துதைந்தார்மண்மேல்
யாரிவற்காற்றகிற்பாரென்றனர்கரந்தார்விண்ணோர். (௧0௩)

நம்படைப்பூதவீரர்நைவுற்நாகரோங்கக்
கும்பனுங்கொடியபாவிகுமைத்தலானனையானெஞ்ச
வம்பினித்துரத்தல்சாலவவசியமென்னவுன்னி
யெம்பிரான்பிரமன்வாளியெடுத்தனன்றொடுத்தானன்றே. (௧0௪)

அண்டங்களனைத்துஞ்சிந்தவாழியினடுவட்சேக்கு
மொண்டங்குவடவைச்செந்தீயுருத்தெழுந்தாங்குச்சீறி
வண்டங்கமலைநடுங்கவல்லைபோய்மாற்றானேய
கண்டங்களுறிப்பற்பல்கண்டங்கள்செய்ததஃதே. (௧0௫)

அடலினர்சுலவிநின்றவசுரனையங்கந்தோறுங்
குடைதராக்கறையடித்திண்குஞ்சரம்வகிர்ந்துவீசூஉ
நடையுடைக்கலனைவாசிநைத்துப்பஃறிரளைசெய்பு
பொடிபமித்திரதசாலம்பொலிந்ததவ்விரிஞ்சனம்பு. (௧0௬)

எந்தையைங்கரத்துநம்பியேவியசிலீமுகங்கார்த்
தந்திபாயரியேறென்னத்தாய்க்கும்பாண்டகனிருந்த
பந்திகொண்மணித்தேரோடுபரியினம்பாகுமாட்டி
யந்திவான்வழுக்கிற்றென்னவவனியிற்குருதிபோக்கி. (௧0௭)

தளர்ச்சியெக்காலுமில்லாத்தனுவினைத்தனுவின்றாக்கி
வளத்தகுதூணிமுன்னோர்மாத்திரைகுறுகச்செய்து
திளைத்தமெய்க்கவயமோர்மாத்திரைநீடப்புரிந்துசென்ற
துளைப்பினன்கலன்கழிந்தவொருத்தியிற்கும்பனின்றான் (௧0௮)

அனந்தமாமுலகத்துள்ளவாருயிர்த்தொகுதியுள்ள
நினைந்தனமுழுதுமங்கைநெல்லியங்கனியிற்றேருங்
கனந்திகழ்மணிக்களத்தெங்கற்பகக்கனிகும்பாண்டன்
மனந்தமோற்றந்துற்றமாலையையுணர்ந்துரைக்கும். (௧0௯)

வல்லமையிள்மைசெல்வம்வளரதிகாரமென்று
சொல்லிபவாழ்வுமற்றுந்தோன்றுபுற்புதத்தினீர
நல்லவாலறிஞரிவ்வெஞ்ஞான்றுநித்தியத்தவென்னார்
புல்லியநின்குலத்தோர்பொன்றலில்பொருளாக்கொண்டார். (௧௧0)

தருமம்வேற்றுமைப்படுப்பார்சாற்றுமல்வழியிற்செல்வா
ரருமறையியல்புநோக்காரகத்திடைவிகாரங்கொள்வார்
பருவரலியற்றியாவிப்பகுதியைவிகுதிசெய்வார்
திருவுடையேமென்றெண்ணிச்செருக்கினர்நுமர்களந்தோ. (௧௧௧)

எரித்தெழாநின்றவெந்தீயியற்கையிற்றட்பமெய்தின்
வரத்தமிழ்முனிவனுணேமறுத்துமேல்விந்தமோங்கி
னுருப்பவல்விடம்பிரானையுருத்தடவல்லுமென்னி
னருத்தியினெமையடைந்தவமரர்நும்வசத்தராப. (ககஉ)

வடவரைபெயர்த்துப்பாணிவைத்துப்பந்தாடவல்ல
மிடலுடையவுணவீரர்விரைசெலற்கந்துகங்கள்
கடகரியிவற்றைநாய்பேய்கழுகுணவொருங்கிழந்த
மடமையோய்நின்னைக்கோறன்மரபன்றுசேறியென்றான். (ககங)

வேறு.

அக்கர மைந்தன் பொருளுறு மைந்த னளித்தரு டனிமுதன் மைந்தன், விக்கின நாதன் றிருவுள மிரங்கி விண்டசொற் கேட்டகும் பாண்டன், றிக்கெலாந் தனதிண் புயத்தொடு குலுங்கச் சிறுபிறைப் பேரெயி றிலங்க, நக்கனன் முடைகூர் புலவுவாய் திறந்து நவிலுமன் சிலவெதிர் மாற்றம். (ககச)

முன்னமொம் மரபிற் சிந்துர னென்னு முதல்வனை யுயிர்செகுத் தொழிந்தா, யன்னநின் றன்னை யெம்மனோ ரரன்சே யாதிபென்றடர்த்தில ரிருந்தா, ரின்னமு மெம்மைப் பொருதிட றுறுப்பானேழைவா னவர்சொலா லேற்று, யுன்னுயி ருண்டென் வெகுளியை யொருவா றெருவிய புரிகென வுரைத்தான். (ககரு)

சீற்றமீக் கூரச் செருத்தொழி லஞ்சிச் சிற்சிலர் தானவரிரிந்து, நாற்றிசைப் புறத்துந் தம்முருக் கரந்து நண்ணினர் யானையும் விளித்துக், கூற்றனு முட்குங் கொடியவல் லவுணக் குலத்திடைப் பிறந்தனிர் போரிற், றோற்றுயிர் சுமந்து வாழ்தலிற் சாதலாக்குங்காற் சாலவு மினிதே. (ககசு)

தோன்றிடிற் புகழிற் றோன்றுக வில்லார் தோன்றலிற் றோன்றுத லுறுமை, யான்றதென் றொன்ற முதியவே தத்து ளறைமறையறிந்திலி ரோனுங், கான்றிரி கின்ற பகுப்புணர் வில்லாக் கவரிமாவெனப்படு விலங்கு, நான்றவோ ருரோம நீப்பினு மாங்கே நல்லுயிர் துறத்தல்காண் கிலிரோ. (ககஎ)

அழிவுறு மியற்கை பண்டைய வினையா லாக்கையைப் பெற்றவா ருயிர்க்கு, மொழியுமெக் காலத் தானுமுண் டென்கை மூதுலகத்திடைக் கண்கூ, டிழிபழி யெய்தி யரும்பெறன் மான மிழந்

துடுத் துண்டுவோழ் வெற்றே, தொழுதகு வீர சுவர்க்கமும் புகழுந் துன்னலாஞ் சமர்பொரு திறந்தால். (கக அ)

ஆங்கவ னிவ்வா றுகமங் காட்சி யனுமிதி யளவைகள் கொண்டு, பாங்குற வுரைத்த நயமொழி கேட்டுப் பரந்தனர் திசைதொறுஞ் சிதர்ந்த, தீங்குறு மவுணக் குலத்தினர் யாருந் திரண்டனர் சூழ்வரத் தீயோ, னோங்கிய கொடிஞ்சித் தேர்மிசை யிவர்ந்தா னொருசிலை பொருசிலை வாங்கி. (ககக)

வே று.

வெம்பழலுமிழ்ந்துகூர்த்தவிளைசெலல்விசிகங்கோடி
யம்புதிவறப்பமாந்தியம்பரமறையப்போர்த்துப்
பைம்புயல்பொழிந்தாலென்னப்பாரிடப்படையிற்பெய்ய
விம்பர்நிற்பாற்றுராகியிரிந்தனர்திசைகளெங்கும். (கஉ0)

கதிரவன்மறைந்தான்றிக்கின்காவலரொளித்தார்பூவாழ்
விதியொடுமொலுமேங்கிவிட்புலங்கரந்துபுக்கா
ரதிரதராலகாலனுதியதலைவரஞ்சிக்
கதியினிவேறின்றென்னக்கணபதிதிருமுன்புற்றார். (கஉக)

நஞ்சுவாரானையஞ்சிநாரணனுதியோர்பண்
டஞ்சுமாமுகத்தெம்மையனடியிணையடைந்தாற்போல
விஞ்சுபோர்வினையின்வல்லவியத்தகுகணத்தர்யாரு
முஞ்சுபோக்கருடியென்னவொருமருப்பிறைவற்சார்ந்தார். (கஉஉ)

மூலமுமுடிவுமின்றிமுன்புபின்பின்றிமூன்று
காலமுமிகந்துசிவகற்பனைகடந்துநின்ற
சீலமாஞானதானசிந்துரவதனசிங்க
ஞாலமேழிரண்டுமுய்யநலத்ததண்கருணைபூத்து. (கஉங)

அத்திரமழைபிலிற்றுமதுலகும்பாண்டகன்கைச்
சித்திரமழகிதென்னுச்சிறுநகைசெய்துதீயோ
னித்திறமோர்முகூர்த்தமியற்றுமேற்சரதம்பொன்றன்
முத்திறத்துலகுமென்னமுளரியந்திருக்கரத்தில். (கஉச)

அங்குசப்பெயரினேங்குமடுமுரட்படையைநோக்கிச்
செங்கனிவாய்மலர்ந்துசெப்புமோர்கூற்றமாங்கே
யிங்கண்வந்தடைந்ததேவர்க்கிடர்புரிந்தேற்றமாற்றார்
தங்கணஞ்சேரவின்னேசாடுபுதனைப்படுத்து. (கஉரு)

வல்லுருப்படைத்தோன்சாலவஞ்சன்கும்பாண்டனென்னச்
சொல்லுறுநாமத்தானைத்துணிபடத்தலைக்கட்செற்றுப்
புல்லியமிறைதீர்பாக்குப்புனிதநீர்ப்புணரிமூழ்கி
யொல்லையின்மீடியென்னுவுரைத்தனனுய்த்தான்மன்னே. (கஉசு)

எண்ணருங்கிரணபானுவிராயிரப்பத்துக்கோடி
நண்ணியோருருப்பெற்ருங்குநக்கெழுந்ததுபடர்ந்து
விண்ணெடுபிலமுமேனைவிரிதிசையெட்டுமஞ்சத்
துண்ணெனநமனுமேங்கச்சுடுதழற்படலைகான்று. (கஉஎ)

இமைக்குமுன்னளப்பிலாதவெரிசரந்துரந்துதெவ்வர்க்
குமைத்தடுகும்பாண்டப்பேர்க்கொடியவன்கொடியவன்றேர்ச்
சமைத்தனதுரகராசிசாரதியொருங்கழித்துச்
சுமைத்தடஞ்சிலையேபுட்டிறுறுவலிக்கவசநூறி. (கஉஅ)

நெட்டுடற்பெண்ணைபோலநின்றவந்நிசாசரன்பாற்
பட்டுளவங்கந்தோறும்பாய்ந்துசித்திரவதஞ்செய்
தட்டவன்சென்னியண்டத்தப்புறஞ்செல்லமேக்கு
விட்டெறிந்தன்னேனுக்குவியன்றுணையாகிமொய்த்த. (கஉகூ)

இத்துணைத்தென்னலாகாவிரும்படைக்கடல்சுவற்றிச்
சுத்தமாதோயப்பௌவந்தோய்ந்துவந்தினிதிருந்த
துத்திவாளரவுவன்னியொண்பிறையறுகுவேய்ந்த
வித்தகன்விமலனெந்தைவிநாயகன்செங்கைப்பாங்கர். (கநூ0)

அங்கதுகண்டவானோராவலங்கொட்டாநின்ருர்
பொங்கியகழிபேரோகைப்புணரியுட்டிளைத்தார்கற்பத்
துங்கவின்னறும்பூமாரிதூர்த்தனர்பரவசத்தர்
தங்களையுணரார்முன்னேன்ருண்மலர்முடிக்கணிந்தார். (கநூக)

மட்டிலாவசுரனென்னவழுத்திடப்பட்டபேர்போய்ப்
பட்டனர்குணபமாகிப்பறந்தலைப்பிழைத்தசில்லோர்
தட்டறுவென்றிசான்றதமிட்டிரரிருவர்தம்பாற்
கிட்டினர்கலுழுநீரார்கேதமுற்றுளாயாநின்ருர். (கநூஉ)

மாதிரமனைத்தும்போர்த்துமாநிலமுதகுளுக்க
வோதநேர்தானையோடுமுற்றகும்பாண்டன்றன்னைப்
போதகமுகத்துப்பிள்ளைபோக்கியவொற்றைத்தோட்டி
யாதவன்பனியைச்செய்யுமாறெனவியற்றிற்றென்றே. (கநூநூ)

உழையர்களுளைந்துசொற்றவுரைத்தழல்செவியினுள்ளா
னுழைதலுஞ்சிந்தைவெந்துநொய்துபட்டுயிருந்தியத்
தழைதருகோபச்செந்தீத்தாவுபுநவத்துவாரத்
துழையினுங்கொழுந்துவிட்டன்றுருய்யெனவெரியச்சொல்வார்.()

மசகமோர்கலுழன்றன்னைமாட்டியவண்ணமான
வசமிடற்சிங்கவேற்றையடர்த்துயிருண்டாலென்னப்
புசகபூடணத்தான்றந்தபோதகக்கன்றுகையங்
குசமெனும்படையாற்கும்பற்கொன்றதுமிறும்பூதென்றூர்.(கசரு)

வக்கிரதமிட்டிரப்பேர்வாய்ந்தவனங்கணின்று
திக்கிரண்டிரண்டுநான்குந்திசைகடற்புவியுமேங்கச்
செக்கரஞ்சடையானீன்றசிறுகரிக்குருளைதன்னை
யிக்கணத்துயிரினீக்குகென்றெழீஇத்தேர்மேற்கொண்டான். ()

இணைதவிரிரதங்கோடியெறுழ்க்கரியிரண்டுகோடி
பணைகொளைங்கதியபாய்மாப்பரப்பொருநான்குகோடி
கணைசிலைபுட்டின்மற்றைக்கதிர்ப்படைசுமந்தபாணித்
துணைகெழுமவுணவீரர்தொகையுமெண்கோடியாமால். (கசஎ)

மண்ணினையளக்குந்தாள்கள்மாதிரமளக்குந்தோள்கள்
விண்ணினையளக்குஞ்சென்னிவிதிபதியளக்குமோதை
கண்ணிடைப்பிறந்தவெய்யகாலாங்கியுலகளக்கும்
பண்ணவர்த்தெறுமித்தன்மைப்பதாதிசூழ்தரப்படர்ந்தான். ()

வேறு.

அலகையாயிரங்கோளரியாயிரமாயிரமதவேழ
மிலகுவாம்பரியாயிரம்பூட்டிய்விரதத்தின்மிசையேறி
யுலவைமா்மரனனையமாதமிட்டிரனுத்தரதிசைநின்றும்
வலன்மிகுத்தநால்வகைப்படுதானைதன்மருங்குமொய்த்திடவந்தான்.

இவ்வகைப்பெரும்படைதிரண்டேகலுமிருண்டனதிசையெல்லா
முவ்வகைத்தனியுலகமுநடுங்கினமுத்தருமருளுற்றூர்
கவ்வையங்கடல்வாயடைத்தன்றரோகதிரவனொளிமாழ்கி
யெவ்வமெய்தினன்சாரதவீரருமேங்கினர்திகைத்தாரால். (கசo)

கம்பமுற்றனைத்துலகமுமோலிடக்கடுகுபுவருசேனை
யம்பரத்தொடுமவனியைமறைத்தனவணுகலுங்கண்ணுற்றே
யும்பர்நாட்டுறையும்பருமும்ப * ரூர்ந்துலாவருமகவானு
மிம்பரித்துணைக்குழுவினையடக்கிவைத்திருந்ததெங்ஙனமென்னு()

* உம்பரீறு - போலி.

அரமடந்தையரணிகிளர்புணர்முலையல்குல்வாயிவையிற்றின்
விரவுபேரின்பம்பெறநின்றவிண்ணவர்மீட்டுமோங்கறைகிற்பா
ரிரணமாக்களத்தேற்றமரர்டுவாளெய்தியவிவர்க்கெல்லா
மரணமோர்தினத்தாகியவெழுதியமலரயன்வாழ்கென்றார். (கசஉ)

வன்னியுந்துணர்க்கொன்றையுந்தும்பையுமத்தமுந்றுந்தாது
துன்னுதாதகித்தொங்கலுந்தங்கியசுடர்விடுநெடுவேணி
முன்னவன்முனம்பனிவரைப்பிடியினைமுயங்கினன்மகிழ்ந்தீன்ற
வென்னையாளுடையேரம்பனப்படையெழுச்சிகண்டிருந்தானல்()

வேறு.

அன்னவனைவக்கிரதமிட்டிரனுமண்மிப்
பன்னுதிறறுன்னியகும்பாண்டகனைச்செற்ற
வின்னனைவெங்கூளியொடிமைப்பொழுதடர்ப்பே
னென்னவொரிருங்கிரியெடுத்தனனெறிந்தான். (கசச)

வக்கிரதமிட்டிரன்வழங்குவரைநேரோ
புக்கவளவிற்பெரிதுபொருமினர்பல்பூதர்
நக்கன்மகனைக்குறுகிநற்கருணைநல்கி
யிக்கணமளித்தியெமையென்றனரிரந்தார் (கசரு)

வேதமுடிமீதுறையும்வேழவதனத்தோன்
பூதர்நனிவாடினர்புலம்பறவொழிப்பா
னுதன்விடநேர்புவருமவ்வரையைவல்லே
மோதியடநெஞ்சினிடைமுன்னுதல்புரிந்து. (கசசு)

பங்கயநிகர்த்திலகுபாணியுழைவைகும்
வெங்குலிசவாட்படைவிரைந்தனன்விடுத்தா
னிங்கினியெமக்குநலெழிற்றளிமமாகத்
துங்கமலியிவ்வரைதுளைத்துவருகென்னு. (கசஎ)

மாதிரநடுங்கியவரும்பெரியவெற்பை
யாதவரனந்தர்நிகரப்படையடைந்து
கோதுநனிநீங்கியகுடைந்துகுகையாக்கி
நாதனதுசெங்கைவயினண்ணியதையன்றே. (கசஅ)

வண்ணமலிகோயிலெனவாய்ப்பவதின்மன்னி
யண்ணலெமதைங்கரனமர்ந்திடலுநோக்கி
விண்ணவர்களெம்பகையைவீட்டியபினிங்க
ணண்ணியருள்வாயெனநவின்றனரிறைஞ்ச. (கசகூ)

அங்குசமணிந்திலகுமாதிபரமூர்த்தி
மங்கியமனத்தமரர்வாய்மையையிரங்கி
யுங்களிடர்போக்குதுமுளைந்திடன்மினென்னுப்
பொங்குகுருதித்தமர்செய்போர்க்களனடுத்தான். (கருo)

உக்கிரமிகுந்தவலியோங்குசிலைதாங்கும்
வக்கிரதமிட்டிரனெனும்பெயர்கொள்வஞ்ச
னிக்குவலயத்திலுளவெவ்வுயிருமேங்க
வக்கமிசைவெங்கனலடர்ந்துகவிழித்து. (கருக)

பொங்குகடலூழியினெழுந்தபொலிவென்ன
வங்கமொருநான்கினையடுத்தவனிகத்துட்
டங்கசுரர்தங்களைவிளித்தடறரித்தீர்
நுங்குதிர்குறட்படைநொடிப்பொழுதினென்முன். (கருஉ)

பந்தியினெழுந்தவசுரப்பதகர்சீறி
யந்திலளவில்லனவரும்படைகள்கொண்டு
முந்தமர்விளைத்தனர்முருக்குதலுமஞ்சிச்
சிந்தினர்புறக்கொடையர்செற்றுகுறள்வீரர். (கருங)

ஈண்டிதனைநோக்கிவிறலெண்டகையதண்டி
தூண்டருபெருங்கதைதுணைக்கரனெடுத்தான்
சேண்டொடுகொடிஞ்சிமிளிர்தேர்நிரைபொடித்துத்
தாண்டுகெலினப்புரவிசாடுபுதகர்த்தே. (கருச)

பம்பரமெனச்சுழல்புபாயசெவிநால்வாய்க்
கம்பமதகும்பகரடக்கரிசிதைத்து
வெம்புசினமிக்கவவுணக்குழுவைவீட்டி
யும்பருடனிம்பரதிரும்படியொலித்தான். (கருரு)

ஆரழலினேடுதுணையாகிவளிதுற்ற
நீரதெனவன்னபெருநீடிசையதண்டிப்
பேரவனுடங்குதலைப்பெய்தனர்துனைந்து
சாரதவினத்தலைவர்சாம்பன்முதலோரே. (கருசா)

பாரிடநிரைக்குறுபடைத்தலைவராயோர்
கோரமலிவீரநகைகொண்டுசிலைகோட்டி
நாரியினையீர்த்துருமினுதமெழுவிப்ப
வீரமிலர்தானவரிரங்கொலிமிக்கன்றே. (கருஎ)

முப்புரமுடிந்திட முதற்பொருள் விடுத்த
வப்பனையகூர்ங்கணையளப்பிலதொடுத்துச்
செப்பரியதானவர் திரட்சியையொருங்கே
துப்புரவுசெய்தனர் தொழுந்தகையமேலோர். (கருஅ)

வண்டலையறுத்திடுவர் வாம்பரியினத்தைப்
புண்டலைபடும்படி புடைப்பர் மதமாவை
மிண்டுதிதிபுத்திரர் மிடற்றினையரிந்து
முண்டநிரையெண்டிசையு மொய்ப்பவெறிகிற்பார். (கருகூ)

கிருத்திமர் தனித்தலைவர் கேடில்விசிகத்தா
லுருத்தெதிர்புவந்தவர் தமுள்ளுயிரைவௌவி
நரித்திரள்சிறைக்கழுகுநாய்கழுதிவைக்கு
விருத்தெனவுடற்குவையளித்தனர் விருப்பால். (கசூ0)

பாரதமியற்றிவருபல்லவுணர் தம்மைச்
சாரதர் முனிந்துகரதண்டுகொடு தாக்கி
வாருலவுவாசிகள் வலித்தவிரதத்தை
வீரநகையாறொளிது வீசிடுவர் மேக்கே. (கசூக)

கிட்டுதனுசக்கொடியர் கேழ்கிளர் சிரத்தை
முட்டில்வலிபெற்றனமுழாவனையமொய்ம்பை
வெட்டியிடுவாரவைவியன்றிசைமுயங்க
விட்டெறிவர் பாரிடவிழுத்தகையவீரர். (கசூஉ)

வாசியதிராசியொடுவாரணவகுப்பு
மூசுபலதானவருமொட்டிலகுதேரு
நாசமுறுமாறுகுறணுயகரடர்த்த
தோசைமலிவக்கிரதமிட்டிரனுணர்ந்தான். (கசூஙு)

வேறு.

தீதெலாந்தவத்திரண்டுருக்கொண்டெனத்திகழு
மேதமிக்கவக்கிரதமிட்டிரப்பெயரிழுதை
காதுசக்கரப்படையனுதியசுரர்காண
மோதுபோர்வயிற்பேர்வயிற்பாரிடமுழுதும். (கசூச)

கூற்றனூரிடைக்குடிபுகச்செய்துகும்பரண்டன்
மாற்றலன்கரியானென்பித்தனுர்மைந்தன்
ரேற்றுமூவகைவடிவினன்றுண்டத்தைத்துண்ட
மாற்றுகிற்பனென்றாத்தைவாய்திறந்தனனறைந்தான். (கசூரு)

ஆலகாலமுமணிகொழித்தலையெறியாழிப்
பாலதாகியேபடர்ந்தெரிபரிமுகத்தழலும்
போலவக்கிரதமிட்டிரனழன்றனன்பொங்கிக்
காலனுட்கியதேர்மிசைவந்தனன்கடிது. (௧௬௬)

விந்தமால்வரைவீறுகொண்டெழீஇவியனுலகைச்
சிந்துகிற்பதுசிந்தனைசெய்தடைந்தென்ன
வந்திலன்னவனனுகலுமவுணமாவெள்ளம்
வந்துதொக்கதுபரிகரிதேரொடுமண்டி. (௧௬௭)

ஆரவாரத்திற்கிளர்வுறுதானவரனிகம்
பேரவங்கணின்றெழுந்துளநுண்டுகள்பெரிய
தூரவட்டவெண்டிசைக்கரிகரத்துளைதூர்ப்பச்
சாரதப்படைவாய்வெரீஇத்தலைத்தலையிரிந்த. (௧௬௮)

எண்ணரும்பெருந்துன்பமுற்றிமையவர்யாரு
மண்ணனந்திதாளடைந்தனரசுரர்கணிவப்பு
நண்ணுபாரிடர்தளர்ச்சியுநவிலவப்பெருமான்
விண்ணகத்தினிர்வெருவலிர்வெருவலிரொன்னு. (௧௬௯)

ஆசகன்றனவருமறைச்சென்னியுமளவா
வீசனூர்தருமிபமுகத்தெந்தைமுன்னெய்திப்
பூசன்மேற்கொளுந்தயித்தியர்பொம்மலும்பூதர்
வேசற்றெஞ்சியவிம்மலும்பணிந்தனன்விளம்ப. (௧௭௦)

நன்றுநன்றெனநகைசிறிதரும்பினனந்தீ
துன்றியிக்கணத்தசுரரைவேரறத்தொலைத்து
மென்றுதாமரைச்செய்யவாய்மலர்ந்தனனெழுந்தான்
குன்றவார்சிலைகுனித்தவெங்கோமுதற்குமரன். (௧௭௧)

ஏமமாமலையனையதோரிரதமீதிவர்ந்து
தாமமாரிமசயிலநேர்சராசனந்தாங்கிப்
பூமடந்தைதன்புலம்பறப்பொருகளம்புக்கான்
சோமசேகரச்சோதியிற்றோன்றியதோன்றல். (௧௭௨)

வேறு.

ஐங்கரப்புத்தேள்சந்தனுருடனுகிகிற்பை
மங்குநாளண்மைபெற்றவக்கிரதமிட்டிரன்கண்
டெங்கனமொளித்துறைந்தாயிதுபொழுதளவுமுன்னைப்
பொங்கியபூதரோடுபொள்ளெனவுயிருண்கென்றான். (௧௭௩)

வம்புளாவழங்கிநின்றவக்கிரதமிட்டிரன்பாற்
பம்பியபடிறர்தம்மைப்பாரிடர்படர்ந்துசீறித்
தம்பமாமுசலங்கொண்டுதாக்கலுந்தலைசிதர்ந்து
செம்புனன்மூளைசிந்தித்திசைதொறும்பரந்தமாதோ. (களச)

மலையினும்பெரியராயவாளெயிற்றவுணர்தானை
கொலையுறுகொள்கைநோக்கிக்கொடுஞ்சினங்கதுவநெஞ்சத்
தலையெறிகடலிற்பொங்கியருந்தவவரத்தான்வந்த
விலையயிலொன்றையங்கையேந்திவக்கிரதமிட்டன். (களரு)

இற்றதுன்வலியுஞ்சீருமென்றுரைத்தோச்சலோடு
மற்றதுபுலிங்கங்கான்றுவடவையங்கனலிமானத்
துற்றதுவன்புமன்புந்தோயிருதிறத்தினர்க்கு
முற்றியதுன்பமல்கமுன்னுறுமுன்னேன்முன்னர். (களசு)

கற்பகவிநாயகப்பேர்க்கருணையங்கடல்சிரித்துப்
பொற்புறுதனதுசெங்கைப்பூப்பொலியங்குசத்தை
யிப்பொழுதேகியிந்தவிழிதகனுவிவௌவிச்
செப்பியவேனைச்சேனைத்திரளையுமொருங்குநூறி. (களஎ)

பாதகன்விடுத்தவேலைப்படிபடிபொடிபடுத்துப்
பூதரமன்னதானப்போதகம்பிளிறச்செற்றுக்
கோதகல்வங்கூழ்வேகக்கொய்யுளையிவுளிசாடி
மேதகுவையம்வீட்டிவிரைந்தனைவருதியென்றான். (களஅ)

சிற்பரனுணைதாங்கித்திருக்கரத்தஃதெழுந்து
கற்பவீற்றுருத்துத்தோன்றுங்காலருத்திரன்கடுப்பப்
பற்பலதிக்கும்வானும்பாரொடுமெறுகியேங்கக்
கொற்படுசிவையுலாந்தீக்கொழுந்தெனச்சுவாலைபோக்கி. (களகூ)

உக்கிரவடிவிற்றுகியொளியுமிழ்ந்தெதிரநோக்கி
வக்கிரதமிட்டிரப்பேர்வாய்த்தபோர்வல்லமீளி
சிக்கெனத்தண்டமொன்றுதிண்ணியகையிற்பற்றிப்
புக்கனன்புடவிமேலாற்பொலன்மணித்தேரிழிந்து. (கஅ0)

திரண்டனபூதவெள்ளந்திடுக்கிட்டுச்சிதறியோட
விருண்டிடத்திசையனைத்துமேழிரண்டுலகத்தின்கட்
பரந்துளசீவராசிபதைபதைத்திரியல்போக
மருண்டனர்மலரோனுதிவானவர்மறுக்கங்கொள்ள. (கஅக)

வந்தனனனையவெய்யோன்வரவினையங்குசங்கண்
டுந்தியவவன்கைத்தண்டமொசித்துப்பன்னூறுகூறு
நந்துமாதுகளியற்றிநாந்தகத்தடம்புயத்தைச்
சிந்தியதவலமிக்கதேவர்களுவகைதூங்க. (கஅஉ)

புண்ணியமூர்த்தியாயபுழைக்கரத்தெந்தைநிந்தை
பண்ணியதியநாவைப்பற்றியீர்த்தீர்ந்தப்பாவி
கண்ணினைக்குடைந்துகுன்றுகண்டத்தைக்கண்டங்கண்டு
விண்ணினுக்குயிரையுய்த்துவிரிந்தநாற்படையும்வீட்டி. (கஅஙு)

ஆதவன்சும்புளிப்பவவிர்சுடர்பரப்பிச்சென்று
பூதநீர்ப்புணரியாடிப்பொருக்கெனத்திருமியைய்கை
நாதனுர்கமலபாணிநண்ணிவீற்றிருந்ததாங்கே
போதன்மாலாதிவானோர்பொழிந்தனர்புட்பமாரி. (கஅச)

அரியயன்வெருவும்வண்ணமண்டமாயிரத்தெட்டாளும்
பெரியவாளவுணர்பெம்மான்பிறங்கெழிற்சிரத்திற்சூட்டு
முரிமைமாமகுடங்கீழாலொரீஇயதுவீழ்ந்ததென்னக்
கரியவக்கிரதமிட்டன்காயஞ்சாய்ந்தன்றுபாரில். (கஅரு)

கவந்தமோர்சார்குனிப்பக்கழுதினமோர்சாராடக்
குவிந்தனகுணபக்குன்றக்கோடுமேய்க்கழுகுவப்ப
நிவந்துபாயரத்தச்சோரிநீத்தமெங்கணும்பரந்து
சிவங்கொள்பூதேவிதன்னைச்செய்யவளாக்கிற்றன்றே. (கஅசு)

இன்னனநிகழ்ச்சியாவுமிணைவிழிகொண்டுகண்ட
துன்னலன்றூதர்சாலத்துனைந்தனரினைந்துசென்று
மன்னியவென்றிதுன்றுவக்கிரதமிட்டிரன்சீர்
துன்னுமாமுகத்தானையதோட்டியாலிறந்தானென்று. (கஅஎ)

மாதமிட்டிரன்முள்வீழ்ந்துவாய்குழறுற்றுக்கூற
நோதகுதகையவாயநுவன்றவம்மாற்றங்கேளாப்
பூதலத்திடியேறுண்டபொருப்பெனப்பொருமிச்சாய்ந்து
பேதுறலெய்திப்பேழ்வாய்ப்பிலந்திறந்தரற்றலுற்முன். (கஅஅ)

வேறு.

எண்ணுதாராவியிரும்புகழினேடுகெவர்ந்
துண்ணுப்பெரிதுமுவக்கும்படைத்தடக்கை
யண்ணுவொருசிறியவானைப்பறமைவெல்ல
வொண்ணுதுயிர்நீத்தொழிந்தாயிறும்பூதே. (கஅகூ)

அண்டரொனுந்தந்திக்கரியேறனையவண்ணு
பண்டுபெயந்துபதுங்கிக்கிடந்ததயர்த்
தொண்டிறலின்மிக்கவுனதாருயிரையுங்கைக்
கொண்டகலவெய்யகொடுங்கூற்றன்றுணிந்ததெவன். ()

காயெரிக்கும்பன்றேவகண்டனிவர்மாண்டதுன்ப
நீயிருத்தியென்றெண்ணிநீங்கப்பெற்றுய்ந்தேனுற்
போயொளித்துவானிற்புகுதவுனைவிட்டேனு
மாயினன்றியண்ணுவோவன்றுயரமாருதே. (கசுக)

என்னுடையகண்ணேயினியபெருந்துணையே
முன்னவனேதெவ்வைமுருக்கிப்புகழ்புனைந்தோய்
துன்னவரியசுடலையிற்கூத்தாடிமக
னுன்னையிரப்பவுயிர்நீயுதவினையோ. (கசுஉ)

வாளிகலிற்சேர்த்ததிறல்வக்கிரதமிட்டிரவோ
வாளிநிகரண்ணுவோவண்ணுவோவண்ணுவோ
நாளிழந்தாயென்றுநவிலேனுனைவறியேன்
றேளிழந்தேனென்பேன்றுயருழப்பவைத்தனையே. (கசுரு)

வேறு.

அல்லலுற்றிவ்வணமழுததியவன்
மெல்லவேயெழுந்தனன்வெய்துயிர்த்தனன்
பல்லிதழதுக்கினன்பாயதிக்கெலாஞ்
செல்லியவிழிகளிற்றீயுகுத்தனன். (கசுச)

பாரினைப்போழ்கெனும்பரவையுண்கெனும்
மேருவைப்பொடிக்கெனும்விரிந்தவண்டத்தை
வேரறச்சிதைக்கெனும்விசும்புதேய்க்கெனு
மாரவன்வெகுளியையறையுநீரரோ. (கசுரு)

முந்துநம்மிறையவன்மூசுதேவரைத்
தந்திடுமின்னெனச்சாற்றியேயநாள்
பந்தனைக்காலனூர்ப்பயணநாளதாய்
வந்ததிங்கிதனினும்பேறுமற்றுண்டோ. (கசுசு)

வஞ்சனைக்கொள்கலமனையவாசவன்
கஞ்சமாமலருறைகடவுணாரண
னெஞ்சியவின்மையவரொங்குலத்தவர்க்
கஞ்சினரவரொமையசிப்பநேர்ந்ததே. (கசுஎ)

அரிமுனநரியினமணியவாடலு
மெரியழலுழைப்புழுவினனுலாவலுந்
தெரிதரிற்சிவணுமாற்றேவர்தானவ
விரிகடலூடுளமெலிவின்றேங்கலே. (கசூஅ)

இறையெனவியல்பொழுதிறுதன்முன்னரோ
யறைகழல்வீக்கியவானைக்கன்றொடு
குறைதவிர்பாரிடக்கொள்ளைகொள்ளைகொண்
டுறைபடவுடல்பொழியுதிரந்தோய்கெனு. (கசூசூ)

ஈங்கிவனின்னணமியம்புமேல்வையிற்
றூங்குறுதுதிக்கையந்தும்பியானனந்
தாங்கியதனிமுதற்றன்மைநாயகன்
பாங்கரிற்பயில்சுரர்ப்பார்த்தொன்றேதுவான். (உ00)

பகைஞர்தம்படைக்கடல்பாதிபாற்றினு
மகைவுறவனைத்தையுமடுதும்யாமெனி
னகையொலிச்சிலம்படிஞமலியூர்பெருந்
தகைபெறுசீர்த்தியைத்தகைந்துமாதுமால். (உ0க)

ஆகையால்வெற்பின்முன்னமைந்தவாலயத்
தோகையாலுறைதுநீரொய்யெனப்படர்ந்
திகையாற்சிறந்தவவ்வேந்தல்பாலுறீஇ
வாகையாற்பொலிமினும்மாறுநூறியே. (உ0உ)

எனவுரைத்தத்தளியெய்திவைகினு
னனையதோர்காரணம்பற்றியவ்வுழி
பனலரும்பிள்ளையார்பட்டியென்பதோ
ரினியபேர்பெற்றதாலென்றுமன்னவே. (உ0ங)

கடிபடுகடவுள்கணேசன்றண்மலர்
முடிபுனைஇவைரவன்முன்னர்த்துன்னினர்
வடிநெடுவாட்கையம்மாதமிட்டிரக்
கொடியவன்செயலினிக்கூறுவாமரோ. (உ0ச)

கல்லெனத்திரண்டவன்கரியதோளினன்
புல்லெனவெவரையும்புந்திசெய்பவன்
வல்லவன்போர்த்தொழின்மாதமிட்டிர
னெல்லையினம்படையெழுகென்றனரோ. (உ0ரு)

திக்கொடுவானமுந்திடுக்கிட்டேங்குற
மைக்கரும்புயல்களுமறைந்தொளித்திட
மிக்கதாரகைக்குலம்விசும்பினின்றுகப்
புக்கசாதுரங்கமாப்புணரிசென்றதே. (உ0சு)

இரும்படைசெல்வுழியெழுந்ததூளிபோ
யுரிஞ்சிவிண்ணுலகைமண்ணுலகெனப்புரிந்
தருங்கவினீடிமையாதவம்பகத்
திருந்தியதேவரைநரரிற்செய்ததே. (உ0எ)

சங்கொலிபேரிகைதழங்கும்பேரொலி
யங்குடமுழாவொலியதிர்க்குந்தண்ணுமைப்
பொங்கொலியிவ்வெலாம்பொலியுமூழிநாண்
மங்குலினொலியெனமருளவையமே. (உ0அ)

வேறு.

மலைதிரண்டனையமேனிமாதமிட்டிரப்பேர்வாய்ந்தோ
னலைதிரண்டெழுந்தியங்கிற்றன்னதாம்படையினாப்பண்
விலைதிரண்டுயர்ந்தவையமீதிவர்ந்தொதுங்கக்கண்ட
கொலைதிரண்டுற்றதொக்குங்குலிசியாதியருரைப்பார். (உ0கூ)

போரினில்வலியராகிப்புவனத்திலுள்ளார்தம்மு
ளாரிவற்காற்றகிற்பாரண்டகோடிகளனைத்துந்
தாரெனத்தரித்தவெங்கடம்பிரான்வடுகநாதன்
மூரியம்புயக்கையேந்துமுத்தலைவேலையன்றி. (உக0)

இங்கிவன்றனைச்செற்றெம்மையிடுக்கணின்றெடுக்கச்சால
நங்கள்பாற்கருணைவைத்துநாயகன்வடுகனாகித்
தங்கினனாதலாலேதளர்விலேமென்றுமென்று
புங்கவருரைக்கும்வேலைபுக்கதவ்விரைக்கும்வேலை. (உகக)

மண்ணினும்பரப்புமிக்கார்மலையினுந்தோற்றமாண்டார்
விண்ணினும்படருகிற்பார்விரிதிரைபருகவல்லா
ரெண்ணினுமெண்ணவொண்ணாரிசையினாற்றிசையைவென்றார்
கண்ணினுமுளத்தின்கண்ணுங்கனல்வன்றிக்குளிர்தழேற்றார். ()

பாரகம்பரித்தபைத்தபாந்தளைப்பயமுறுப்பார்
நாருளத்தென்னுமில்லார்நமனுக்குநமனாயுள்ளார்
போரெனக்கிளர்ந்துபொங்கிப்பூரிக்கும்புயப்பொருப்பா
ரோருடையுலகமூன்றுமெதிர்ப்பினுமிறுக்குமீட்டார். (உகங)

சீர்த்தவித்தகையராகிச்செறிதருதகுவரொல்லா
மார்த்தபேராரவாரத்தண்டபித்திகையும்விண்ட
பார்த்தவர்கண்புதைத்துப்பதைபதைத்திரியல்போனர்
வேர்த்துவெங்கனலிமேனிவிதிர்விதிர்ப்புற்றதன்றே. (உகச)

தானவர்வரவுநோக்கித்தகுதிசாலிடபவேற்றி
ஞானப்பெருமானென்றுமஞ்சன்மின்வடுகநாதன்
வானவர்பொருட்டாலிங்ஙன்வதிந்துளன்போர்க்குச்சேறி
ரூனமில்கணங்காளென்னவூக்கத்தினெழுந்தார்பூதர். (உகரு)

எடுத்தனர்குந்தநேமியேந்தினர்பாதவங்க
ளடுத்தனரசுரர்தம்மையறைந்தனரெயிறுசிந்தக்
கொடிற்றிடைத்தலைப்புடைத்தார்கொழுப்புவெண்மூளைகால
வொடித்தனர்முதுகந்தண்டையுரந்துளைபடுப்பர்குத்தி. (உகசு)

புலிங்கங்காலெற்றிநாட்டப்புண்ணியன்வளரொளிப்பே
ரிலிங்கஞ்சேரிதயத்தான்றவெண்டகுபூதவீர
ரலிங்கண்மொய்த்தன்னயாக்கையவுணர்களளப்பிலாரைக்
கலிங்கந்தீவெந்ததென்னக்களத்திடைத்துமித்தார்மன்னே. ()

நெடுந்தடிமுசலநேமிநெருப்புமிழ்சூலங்குந்தங்
கொடுந்தொழிற்பிண்டிபாலங்கூரியசுடர்வேனுஞ்சி
லடுந்திறக்கமைந்தவின்னவாயுதத்தசுரர்சீறிப்
படுங்களத்தெதிர்ந்தபற்பல்பாரிடர்ப்பாற்றினரால். (உகஅ)

கரங்களுமற்றுரூன்றுகால்களுந்தோளுமற்றூர்
சிரங்களுமற்றூர்தம்பாற்சேக்கியபடையுமற்று
ருரங்களுமற்றூர்நெஞ்சத்துறுதியுமற்றூர்மிக்க
வரங்கொளும்பெருந்தவத்துமாண்டசாதகராந்தக்கோர். (உகக)

அன்பர்தந்துன்பநீக்கியருள்வதுவிரதம்பூண்ட
முன்பனர்கயிலாயத்தின்முழுக்கணத்தலைமையெய்தி
மன்பதையுய்யவிங்ஙன்வந்தருணந்தியண்ண
றன்படைத்தளர்வுநோக்கிச்சந்தனமுயர்ந்ததேறி. (உஉ0)

எண்ணகவிருங்கார்கோண்மேக்கெழுந்தனவினைத்தாலென்ன
விண்ணகரிமையோரைந்துவிதத்ததுந்துபிமுழக்கப்
புண்ணகத்தொருவப்பெற்றுப்பூதரும்புடைவந்தீண்டக்
கண்ணகன்ஞாலக்கன்னிகளிப்புறக்கடிதுவந்தான். (உஉக)

தித்திரட்பங்கியாளர்திண்ணியகுடவயிற்றர்
நேத்திரமிகக்குழிந்தார்நீட்சியிற்குறுகின்றார்
காத்திரம்பிறங்கல்போல்வார்கண்ணுதல்கருணைக்கேற்ற
பாத்திரர்குணிக்கலாகாப்பாரிடர்பூசலிட்டார். (உஉஉ)

அடலுடைக்கூளிவெள்ளமார்த்தபேரமலைகேளாப்
படர்சிறைக்கலுழனேதைபடவராக்கண்ணிற்றேர்ந்தே
யுடல்சினமீக்கூர்ந்தென்னவுறவெகுண்டழன்றுநோக்கித்
தடநெடுந்தேர்மேலான்மாதமிட்டிரன்சாற்றுகின்றான். (உஉங)

அந்திவான்மதியஞ்சூடுமரனுக்குமஞ்சுகில்லே
நந்தியநந்திமுன்னேநந்திறநந்திநிற்பேஞ்
சிந்தியாதுற்றவன்னாற்சிந்திமாசிந்திற்சூழ்ந்து
பந்தியாப்பரந்தபூதம்பந்தியாப்படர்துமென்றான். (உஉச)

கிடுகிடென்றதிர்வுற்றண்டங்கீறியவாவிவாய்ப்பெய்
நடுவனுங்கைவிதிர்த்துநடுங்கினனெடுங்கவென்றிக்
கொடுமரம்வாங்கிவாங்கிக்குணத்தொனிபெரிதுசெய்தான்
சுடுதழலுள்ளக்கள்ளத்துட்டரிற்றுட்டனாயோன். (உஉரு)

மாதிரந்தோன்றாவாறுமறைதரவாளிதூர்த்துக்
காதிவெம்பூதர்தங்கள்களத்தினைக்களத்தில்வீட்டி
மாதர்கூர்வள்ளூரத்தைவள்ளூரஞ்சிதறப்போழா
வாதரத்தறுவகைக்காலறுவகைக்காலாச்செய்தான். (உஉசு)

கண்ணுதற்பெருமான்மாட்டுக்கரிசற முழுதுந்தேர்ந்த
பண்ணவனந்தியெந்தைபாதகன்செய்திநோக்கி
விண்ணவருவகைபூப்பமேவலர்துயருழப்ப
வண்ணவார்சிலையொன்றேந்திவணக்கினாணெறிந்தான்மாதோ. ()

ஊழியின்முடிவீதென்னவுலகெலாமதிக்கும்வண்ண
மாழியைவறப்மாந்தியற்றைநாள்விட்புலத்த
வேழிரும்புயலும்பெய்தாலெனக்கணைமாரிதூர்த்தான்
பாழியந்தடந்தோண்மொய்ம்பிற்பண்ணவனந்திமன்னே. (உஉஅ)

பூசலின்பொருட்டுப்புக்கபொங்கியவசுரவெள்ள
நாசமாய்ப்பிரேதநாமநண்ணியநடையிற்சான்ற
வாசியுங்கார்த்ததானமழைபொழிமத்தமாவுங்
காசவிர்கனகத்தேருங்கழிந்துருவழிந்தவன்றே. (உஉகூ)

தோற்றதுதனதுதானைத்தொலைவுமாதமிட்டிரன்கண்
டாற்றலன்வெகுளிமிக்கானடலுடைத்தனுவினுணி
யேற்றினன்வரத்தாற்பெற்றவிருட்படைதுரந்தானென்று
நாற்றிசைமருட்சிகொள்ளநந்தியெம்பெருமான்மீது. (உகூ0)

ஓதநீருவரிசூழ்ந்தவுலகெலாங்குருடுசெய்து
பாதகன்விடுத்தவந்தப்படைவரப்பூதருள்ளம்
பேதுறுந்தன்மைநந்திப்பெருந்தகைநோக்கிவல்லே
யாதவன்படையைத்தூண்டியஃதிருதுணிபடுத்தான். (உகூக)

பின்னருமவுணன்சீறிப்பிறங்குமாயாத்திரத்தைக்
கன்னவிரேற்றாற்பற்றிக்கதுமெனவிருடிசந்த
மின்னனமந்திரஞ்சொற்றிறைஞ்சினன்விடுத்தலோடு
முன்னிறந்தாரையெல்லாமுதுகளத்தூடுகாட்டி. (உகூஉ)

அப்படைவருதனோக்கியாற்றல்சாரேவகண்டன்
றுப்படைகும்பாண்டன்முற்றுஞ்சியதலைவரோனேர்
கைப்படையோடும்வந்தார்காத்தருளெம்மையென்ன
வெப்படைகூளிவேந்தர்விளம்பலுநந்திமேலோன். (உகூகூ)

அஞ்சலீரஞ்சலீரொன்றன்னவர்க்கபயநல்கி
வஞ்சனைமாயையாற்றும்வண்ணமீதென்னவுன்னி
மஞ்சுறழ்மிடற்றெங்கோவைவழுத்தினன்ஞானவாளி
செஞ்சவேயுய்ப்பமாயச்செயன்முழுதழிந்தமன்னே. (உகூச)

தன்றிருநாமமன்பிற்சாற்றுறுதொண்டர்மாட்டுந்
துன்றுதலரியமாயைச்சூழ்ச்சிவான்கயிலையென்னுங்
குன்றினைமுதற்றடைக்கட்குறுகினன்காக்குநந்தி
பொன்றுவித்தனனென்றேதல்புகழ்கொலோவீரங்கொல்லோ. ()

நினைந்துமாதமிட்டிரப்பேர்நீசனெனென்செய்துமென்னுச்
சினந்துளம்பதைபதைத்துத்தெளிந்தனன்றெய்வத்தன்மை
புனைந்ததுவெகுளியன்றிப்பொறுமையையறிகலாத
தனந்தவெம்புலிங்கங்கால்வதயிலொன்றுதுரந்தான்மாதோ. ()

மாயிருஞாலத்தோடுவானமுந்திசையுமுட்க
வாயிரம்பரிதிமானவனையவேலணைதல்காணூஉப்
பாயினசீர்த்திநந்திபகவனும்பரமன்சத்தி
யாயதோர்சத்திதன்னையபிமந்திரித்துவிட்டான். (உகூஎ)

பன்னகமெனக்கூற்றென்னப்படர்கின்றவன்னவேலு
மொன்னலன்முன்னருய்த்தவுடம்பிடியுந்தலைப்பெய்
தின்னலுற்றிரவிதிங்களிவர்தலைதடுமாற்றெய்த
வென்னருந்திகைத்தாரோங்கவிருஞ்சமரியற்றுநின்ற. (உ௩அ)

பாழிமால்வரையிற்செல்லும்பரவியதிகந்தத்தேகு
மாழியினடுவட்போதுமகல்விசும்புலகத்தண்மு
மேழுடைப்பிலத்தியங்குமின்னிலவரைப்பளக்கும்
வாழியெந்நந்திதேவும்வஞ்சனும்விடுத்தவெஃகம். (உ௩௯)

ஒன்றினையொன்றுசிறுமுலகிடையெதிர்ந்தநூறுந்
துன்றியமலைக்குலத்தைத்துகள்படுத்தட்டிவீசுங்
குன்றுதலில்லாவண்டகோளத்தைமோழைசெய்யு
மென்றனித்துணையுந்தெவ்வுமேவியஞாங்கரம்மா. (உ௪0)

இத்திறத்துடன்றமர்த்தவிரண்டினுணந்திசத்தி
யத்தகுதகுவன்வேலையடர்த்துதிர்செய்துகுத்துப்
பத்தியினின்றவேனைப்படையுமுழுதொழித்து
மத்தமாதமிட்டிரன்றன்மகுடத்தைச்சிதைத்ததன்றே. (உ௪க)

வம்பவிழ்மாலைமார்பர்வானரமகளிர்போகத்
தும்பராருவகைமிக்காருடுத்தனவுரிந்துவீசி
யம்பரமறைத்துநின்றாரலர்மழைபொழியாநின்றார்
நம்பருவரலைநீவுநந்திநீவாழ்கவென்றார். (உ௪உ)

வேறு.

ஆதரத்தினளிப்பத்துணையெனப்
போதலுற்றபொருபடையாழியு
மேதமற்றமுடியுமிழத்தலான்
மாதமிட்டிரன்மத்தரின்மான்றனன். (உ௪௩)

கரந்தரித்தகடும்படைசோர்ந்தன
வுரம்புதைத்தகவசமுலைந்ததா
லரந்தையம்படராவங்கழன்றது
புரந்தரைப்படவீழ்ந்தனன்புல்லியோன். (உ௪௪)

இன்னணயவிவனுயிர்வெளவுத
லென்னுநீதியன்றென்னுமனத்தின
னன்னர்நந்தியிருப்பநடுக்குறீஇச்
சின்னபின்னமுற்றோடினர்தீயரே. (உ௪௫)

தீயரோடுபுசேய்மைக்கண்வைகிய
மாயமிக்கமணிமல்லர்தாள்பணிந்
தேயதானையுளெஞ்சினம்யாங்களே
மாயலுற்றனர்மற்றையனைவரும். (உசகூ)

மாதமிட்டிரப்பேர்புனைவாகையான்
சாதலெய்தினன்போரற்புவிசாய்ந்தன
ஞேதமொத்தவுமாதுபடையொடும்
போதிர்போதிர்பொருக்கெனப்போதிரால். (உசஎ)

என்றவாசகங்கேட்டவிருவருங்
கன்றுநெஞ்சினர்காந்தியகண்ணின
ரொன்றுதூமமுயிர்க்கின்றநாசியர்
மென்றபல்லர்வெகுளியுருவினர். (உசஅ)

யானைவையமிவுளிவயவராந்
தானையாவுந்தமபுடைச்சூழ்வர
வானைமண்ணினைமுற்றுமறைத்துவிட்
கோனையோவெனக்கூடினர்போர்க்களன் (உசகூ)

அனையகாலையறிவுகலங்கியே
தனைமறந்ததமிட்டிரனெஞ்சக
மினைவினீங்கியெழுந்துதெளிந்தனன்
வனையுஞ்சீர்மணிமல்லனைநோக்கினன் (உருo)

அவருமன்னனைநோக்கியறைகுவார்
புவனம்யாவையும்போர்வயின்வென்றநீ
சிவன்மலைக்கடைசாக்குமொர்சேவின
லவமதிப்படைந்தாயிதழகிதே (உருக)

தேவராகசிவந்தசரோருகப்
பூவருந்தியராகபுலமக
ணுவராகநமக்கெதிர்நண்ணினற்
சாவரல்லதுதப்புநராவரோ (உருஉ)

என்றியம்பினரோனையன்றன்னெடுங்
குன்றிவர்ந்தமுக்கோளரியேறெண
நன்றியம்பநரலையிற்பல்லிய
மென்றிகழ்ந்தவிரதத்திலேறினர். (உருங)

மண்டுபூதப்படையைவளைத்தன
ரண்டகூடமதிர்ந்துபிதிர்ந்துக
வெண்டகுஞ்சிலைநாணெறிந்துழியிற்
கொண்டல்போற்பொழிந்தார்சரக்குப்பையே. (உருச)

தலையிழந்தனர்தாளிழந்தார்புய
மலையிழந்தனர்மார்பிழந்தார்கரச்
சிலையிழந்தனர்தேரிழந்தார்நிற்கு
நிலையிழந்தனர்நீள்குறள்வீரரே (உருரு)

பெருமைவெற்பிற்பிணங்கள்குவிந்தன
வருவியென்னவரத்தமொழுகின
வெருவுபேயும்வெரீஇயிரிந்தோடுமா
கருநிறப்பல்கவந்தங்குனித்தன. (உருசு)

பாரிடப்படைமுற்றும்பறைந்தமை
வாரிடத்தவனமுலைமெல்லிய
லாரிடத்தனகத்தன்றிவேறியாம்
யாரிடத்தறைவாமென்றிமையவர். (உருஎ)

வல்லையோடிவயிரவக்கோலங்கொ
ளல்லைநேர்களத்தண்ணலடிவிழாச்
சில்லைவெய்யர்செகுப்பக்கணமெலா
மில்லையாயினநந்திமையின்றியே. (உருஅ)

ஐயவல்விரைந்தக்கொடியோர்தமை
மையநூறிநமையுயிர்ப்பித்தல்
செய்யவேண்டுந்திருவுளம்பற்றுதி
நொய்யரோமுய்யவென்றுநுவறலும். (உருகூ)

வீரமாநகைசெய்தனன்விச்சுவப்
பாரமேனிபரித்தனன்வாயினு
லாரவாரமொன்ருக்கினனவ்வொலி
தீரவஞ்சகர்சேனைமுற்றுண்டதே. (உசுo)

அரியயற்குமரியவயிரவன்
முரிவில்செங்கையின்முத்தலைவேலினைப்
பரிவினேக்கினன்பாதகர்மூவர்மெய்
யெரிகொணின்னுதிகோத்திவணீண்டென்றுன். (உசுக)

ஆணைதாங்கியயிற்கழுமுட்படை
சேணைமேவியதேவரிமைத்திட
நாணையுட்கொடுநாட்கதிருட்கிய
கோணையாரழல்கொப்புளித்தேகின்றே. (உசுஉ)

மாதமிட்டிரன்மல்லன்மணியென்பார்
சாதலெய்திடத்தன்னுதியாலுர
மீதுகுத்துபுகோத்துவிரைவின
னுதன்சந்நிதிநண்ணியிறைஞ்சிற்றே. (உசுரு)

வடுகநாதன்மலர்க்கண்பரப்பின
னிடுகதெற்கிலிவற்றினையென்றலு
மடுவெஞ்சூலமதுசெயவன்னவை
கொடுமுடிக்கிரியாகிக்குலாயவால். (உசுச)

பின்புமுத்தலையெஃகம்பெயர்ந்துபோய்
நன்புனற்கடலாடுபுநம்பிரான்
றன்புயத்திற்றயங்கித்தணப்பற
முன்புபோலமுறையின்வதிந்ததே. (உசுரு)

ஆண்டவையனருமறைவாக்கினன்
மாண்டசாரதர்யாரும்வருகென
நீண்டகண்டியினீத்தனராமென
வாண்டெழுந்தனரார்த்தனர்பாரிடர். (உசுசு)

வானகத்தர்மலர்மழைசிந்தினர்
மேனகாதியர்மின்னினடித்தனர்
மோனமுற்றமுனிவரர்வாழ்த்தின
ரானகம்படகஞ்சங்கதிர்ந்தன (உசுஎ)

வீரகர்ச்சனைகேட்டுவெருக்கொளாப்
போரதாற்றப்புகுந்ததயித்தியர்
சேரவாவிசிதைந்ததிறத்தினாற்
சூரபன்மற்குச்சொல்லுநரில்லையால். (உசுஅ)

பூதவெள்ளம்புடைவரநந்தியு
மாதர்துஞ்சுமடுகளனீங்கினன்
வேதவாய்மைவிநாயகன்பாற்செலாப்
பாதமீதுபணிந்துவிடைபெறீஇ. (உசுகூ)

வயிரவத்திருக்கோலம்வகித்தவ
னுயிரினுக்குயிராகியுறைந்துளான்
றயிரினெய்யெனத்தோன்றித்தமியெனேச்
செயிரினீப்பவன்சேவடிபோற்றினன். (உ௭0)

வேறு.

கொண்டலின்வண்ணங்கொண்டகுரிசிலுந்துரிசினீங்கும்
புண்டரீகத்துவைகும்புனிதனுந்தனிதவானூ
ரண்டர்நாயகனுமற்றையனைவருமினைவருஞ்சீர்த்
தண்டலில்பேரானந்தத்தடங்கடற்படிந்துமன்னே. (உ௭௧)

உள்ளகமுடைந்துசாலவுருகினரருவிமான
வெள்ளநீர்பொழியுங்கண்ணர்விதிர்விதிர்க்கின்றமெய்ய
ரெள்ளரும்புளகப்போர்வையெய்தினருய்திதந்த
வள்ளலையெம்பிரானைவடுகனைவழுத்தலுற்றார். (உ௭உ)

மாறியல்வினைபுரிந்துவைகலுமெம்மனோரைச்
சீறியகொடியதீயசிதடராமவுணர்யாரு
நூறியமுழக்கியேற்றநோன்பெருங்களத்தொருங்கு
பாறியமுனிந்தாய்போன்றபரமகாருணியபோற்றி. (உ௭௩)

நாயினுமிழிந்தேமாகிநண்ணியவெமக்கிரங்கித்
தீயினுமாலகாலத்திரளினும்வெய்யதெவ்வை
வாயினுங்குருதிகக்கவல்விரைந்தடர்த்துப்பெற்ற
தாயினுமினிமைமிக்கதயாநிதியெந்தாய்போற்றி. (உ௭௪)

நற்றுளிமழைமுகிற்குநானிலம்பிரதியாற்றிற்
சிற்றறிவுடையேநிற்குச்செய்வதோர்கைம்மாறுண்டாற்
குற்றமுங்குணமாக்கொண்டுகோதாட்டியன்பர்க்காக்குங்
கொற்றவவடுகநாதகுரூஉச்சடைக்குமரபோற்றி. (உ௭௫)

இத்திறம்பழிச்சாநின்றவிந்திரன்வாணிகேள்வ
னத்திருமறுவின்மார்பனுதியர்தம்மைநோக்கி
முத்தனெண்குணத்தான்காரிமுடுவல்வெம்படையோன்கூறுந்
தத்துறறவிரும்வண்ணந்தன்றிருவாய்மலர்ந்து. (உ௭௬)

மூலமுமுடிவுமில்லாமுழுமுதற்கருணைமூர்த்தி
பாலலோசனத்தினின்றும்பன்னிருதடந்தோளாறு
கோலமாவதனந்தாங்கிக்குமரவேள்வருஞ்சின்னாளின்
ஞாலமுற்றுய்யவந்தநம்பியாற்சூரன்றுஞ்சும். (உ௭௭)

ஆதலாலங்நாள்காறியாமறைதலத்துறைமினஃதி
யாதெனிற்றன்கட்சார்ந்தவெனைவர்க்குஞ்சிரமந்தீர்க்கு
மேதுவாலினிதுபெற்றதிளையாற்றுக்குடியெனும்பேர்
போதநீள்வளத்ததிந்தப்புராதனவனத்துண்மன்னும். (உஎஅ)

நித்தியகல்யாணிப்பேர்நிமலையோர்பாகம்வைகச்
சத்தியஞானனந்ததத்துவாதீதமுத்த
சித்தியட்டகதனுனதிருக்கயிலாயநாத
னத்தியவனைத்துநல்கிநாளும்வீற்றிருக்குமங்கண் (உஎகூ)

இத்தலக்கனிலதிக்கிலியோசனையாைத்தாய்த்தங்கு
மத்தகுதானக்கேகியயர்வுயிர்த்தமர்திறென்றான்
பத்தரைப்பாதுகாக்கும்பரமனுரமுதவாக்காற்
சித்தமிக்குவகைபூத்ததேவர்விண்ணப்பஞ்செய்வார். (உஅ0)

செவ்வணவடுகநாததிருவுளம்பற்றிச்சொற்ற
வவ்வணம்புரியாநின்றேமகன்றிலேநீயெஞ்ஞான்றுங்
கைவணச்சூலந்தாங்கிக்களித்துறப்பெறுதல்வேண்டு
மைவணப்பொழில்சூழிவ்வூர்வயிரவன்கோவினுமம். (உஅக)

பன்னிதிபூரணுயுள்பகைவரிற்பிணியிற்றீர்த
னன்னிதியனையமக்கணுலிருபோகங்கல்வி
யின்னிதிற்கொள்ளப்பட்டவின்னனமுழுதொருங்குன்
சன்னிதியடைந்தார்பெற்றுத்தழைத்தனர்வாழ்தல்வேண்டும். ()

என்றனரிமையாநாட்டத்தியவுளரிசைப்பவைய
னென்றநீர்வேட்ட.ாங்காகென்றுரைத்தனன்விடையளித்துக்
குன்றுறழ்பொலன்விமானக்கோயிலுட்குலாய்வதிந்தான்
றன்றனியானையாற்ருற்சயிலாதி * கயிலாயத்தான். (உஅங)

இருளறுதுறக்கவாணரிருங்கிரியாலயத்திற்
கருணைவாரிதியாய்வைகுங்கற்பகப்பிள்ளையானை
மருளிரிதந்திரத்தின்மரபுளிபூசையாற்ற
வருமையதிரவியங்தேர்ந்தன்பொடுகொணர்ந்துபுக்கார். (உஅச)

அங்குசதீர்த்தமென்னவகிலமும்புகலநின்ற
பொங்குநீர்த்தடத்திற்றோய்ந்துபூதிமெய்ப்பூசிமுத்தித்
துங்கசாதனமணிந்துதூயவைந்தெழுத்துமெண்ணிச்
சங்கரன்பெருஞ்சேய்முன்றிற்றண்டத்திற்றண்டஞ்செய்தார். ()

* கயிலாயத்தான்—குறிப்புவினைமுற்று.

எழுந்துகைமுட்டியாலேயிளகத்தஞ்சிரத்துக்குட்டிச்
செழுங்கரங்கொண்டுமோறிச்செவிபற்றித்தாழ்ந்துயர்ந்து
தொழுந்தொறுமன்புகூரச்சுலாய்வலம்வந்துசைவக்
கொழுந்தினையருச்சித்தற்காய்கொள்கையின்முயன்றாரன்றே. ()

ஆகமம்விதித்தவாறேயணித்திருமஞ்சனத்தை
யோகையாலியற்றிப்பின்னரொற்றாடைசாத்தியீரம்
போகியபுரிந்துபட்டுப்பொற்பரிவட்டஞ்சூழ்ந்து
பாகமார்புழுகளாயபனிநறுஞ்சாந்தணிந்து (உஅஎ)

பதமுறுதயிர்நெய்பாலிற்பல்வகையமைத்தசொன்றி
யிதமலிமோதகாதியினியனபண்ணியங்கள்
கதலிமாவருக்கைவெள்ளில்கழறிருவேறுநாவ
லுதவியமிக்கினிப்பவொண்கனிகளைமுன்வைத்து. (உஅஅ)

நன்மணங்கமழுந்தூபநகுசுடர்த்தீபங்காட்டி
நின்மலவுட்கொளென்னநிவேதித்துக்கண்டையார்ப்பப்
பொன்மலரளப்பிலாதபுதியனகொண்டருச்சித்
தன்மலமகலநின்றவமரரோத்தெடுக்கலுற்றார். (உஅகூ)

வன்னமும்பதமுமூலமந்திரந்தானுமான
பின்னமில்குடிலையின்கட்பேரொளிப்பிழம்பாய்த்தோன்ற
முன்னவமுன்னத்தூடுமுன்னினைமுன்னுவார்கட்
கென்னகாரியமுமுற்றவின்னருள்புரிவாய்போற்றி. (உகூ0)

தேவியைப்பாகம்வைத்தசிவனுனைநினையானூர்ந்த
கூவிரமணித்தசும்புக்கூவிரதத்தின்கோப்பு
நீவியபாரவச்சுநெறுநெறுமுறியச்செய்து
கோவியன்முதன்மைதேற்றுங்குரிசிலேபோற்றிபோற்றி. (உகூக)

உன்றிருமேனிதன்னையுணர்விலாப்பிள்ளைத்திங்க
ளன்றிகழ்பெற்றிநாடியனையற்குப்புலைமைநல்கி
நின்றியாமிரப்பவந்தநீள்பழிசிங்கபூர்வத்
தொன்றியசதுர்த்தித்தாகவுறுத்தருளொருவபோற்றி. (உகூஉ)

நீரதநிரைமிலைந்தநிமிர்சடைநிமலமூர்த்தி
பூரதபுராணன்மேன்மைபுலப்படுப்பஃதென்றெண்ணிச்
சீரதமுறாதகோட்டாற்செம்பொன்மால்வரையகத்துப்
பாரதகதையைத்தீட்டும்பண்ணவபோற்றிபோற்றி. (உகூங)

சித்தியேபுத்தியென்னச்செப்பியவருமிரண்டு
சத்திகணீபெற்ருங்குத்தம்பியும்பெறுதல்வேண்டி
யத்தியின்குமரியோடுமெள்ளெழில்வள்ளிமானை
முத்திறமதமாவாகிமுயக்குவானுற்ருய்போற்றி. (உ௯௪)

இந்தவாறிசைத்துப்போற்றியிதயமிக்குருகிநிற்குஞ்
சந்தவானவர்த்திருக்கண்சாத்தினன்கணேசன்சாற்று
நுந்தமதேத்துவந்தாநுவன்றவித்துநமக்குக்
கந்தமாக்கனியிற்றேனிற்கன்னலினினியவாமால். (உ௯௫)

இடையூறுசிறிதுநுங்கட்கினியிலையீதுதிண்ணந்
தொடையூறுநறைநனைக்குந்தோள்வலியெம்பிசெவ்வேற்
படையூறுபடுக்குஞ்சூரபன்மனுதியனைவானக்
கடையூறுதளிரோயன்னூர்க்கலந்தினிதுறைவிர்நீவிர். (உ௯௬)

இன்னனவபயவாய்மையியம்பினன்விடுப்பவிண்ணோ
ரன்னவனம்புயத்தாளகத்திடையிடைவிடாராய்த்
தென்னமர்சோலைமாலைசெறிவயிரவன்கோயிற்கட்
பின்னர்வந்திருந்தார்முத்திப்பேற்றினரொனக்களித்தே. (உ௯௭)

அடைக்கலம்புக்கார்க்காகவசுரசங்காரஞ்சூலப்
படைக்கலம்பரித்தபாணிப்பண்ணவன்புரிந்தவண்ண
நடைக்கலங்காரநண்ணநவின்றனநாகநாட்டார்
புடைக்கலந்துமையாள்கொண்கற்பூசித்தவாறுஞ்சோறும். (உ௯௮)

அசுரசங்காரப்படல முற்றிற்று.

ஆ படலம் கக-இ செய்யுள்-௭௮௦.

தேவர் பூசித்தபடலம்.

வடிவுடைநாயகிக்கும்வளரொளிநாதனுக்குங்
கடிதினிற்பூசையாற்றக்கருதினரிந்திராணி
மிடியினையிடைக்களிக்கும்வீங்கிளங்கொங்கைபுல்லி
முடிவிலாவின்பந்துய்ப்போன்முதலியோரிணைத்தெழுந்தார். (க)

நண்ணலருயிர்நமற்குநல்கியவயிரவப்பே
ரண்ணல்செங்கையிற்சூலத்தகழ்தலானெழுந்துதோய்ந்தா
ரெண்ணியவெல்லாமீயுமிருஞ்சிவதீர்த்தமூழ்கிப்
புண்ணியசாந்தப்பூதிபுண்டரமிலங்கவேய்ந்து. (உ)

அஞ்சனக்களத்துப்பெம்மானருள்விழிமணிவடம்பூண்
டெஞ்சலிலஞ்செழுத்துமிடையறுதிதயத்தெண்ணி
மஞ்சுதோயிஞ்சிசூழ்ந்தவளரொளிகோயின்முன்றிற்
றஞ்சமென்றெட்டுறுப்புந்தரையுறப்பணிந்தெழுந்தார். (ங)

எழுதருங்கிளவிதேறுமெம்பிரான்வளரொளிப்பேர்
முழுமுதற்கடவுடன்னைமும்முறைவலம்புரிந்து
தொழுதனரனையநாதன்றூயபூசனைக்குவேண்டும்
பழுதறுபொருள்களோடுபரிவினரீண்டிமொய்த்தார். (ச)

அய்யனூர்செய்யமேனிக்கமைந்தனநறியவாசத்
துய்யனபலவுமாட்டிச்சுவணத்தினியன்றதூசு
தெய்யநன்கணிந்துசாந்தந்திமிர்ந்துவான்சிலையைமான
மய்யறமிளிராநின்றமணியணிநிரம்பச்சாத்தி. (ரு)

ஐந்தருவன்றுபூத்தவலர்களுமகவான்வேட்கை
நந்தனநறியவீயுநான்மறைக்கிழவன்மூதூ
ருந்தியமானதப்பேரொண்மடுமலருஞ்சோமன்
சந்தவுய்யானப்போதுந்தகைபெறத்தொடுத்துச்சூட்டி. (சு)

சித்திரவருக்கத்தன்னந்தித்திக்கும்பல்சிற்றுண்டி
மெத்தியமதுபருக்கம்விழுத்தகுசுவைப்பழங்கள்
பத்தியிற்றிருமுன்னுகப்பரப்புபுமந்திரித்துச்
சுத்தியினிவேதித்திட்டார்தூபதீபந்தெரித்து. (எ)

விளக்கமும்விரையுமிக்கமென்மலர்தூயருச்சித்
துளக்கமலங்கள்விள்ளவொழுகவானந்தபாட்பம்
வளத்தநாத்தழுதழுத்துவாய்நனிகுழறத்தேவ
ரளக்கருங்கருணைவாரியளக்கரைப்பழிச்சுகின்றார். (அ)

வேறு.

மண்ணற லங்கி மாருதங் காயம் வாண்மதி யிரவியான் மா வென், றெண்ணிய வெட்டு மெழிற்றிரு மேனி யெனக்கொண்டு முழுதுமாய் நின்றாய், விண்ணுறு வேமை வெந்துயர் தீர்ப்பான் மேதினி மீதுளோர் யாருங், கண்ணுற வடுக வடிவெடுத் தவுண ர்க் கடிதடு வளரொளி போற்றி. (கூ)

கடம்படி முளைத்துக் கவுரிய ருய்வான் கணிப்பருந் திருவிளை யாட, றிடம்பட விழைத்த திறமெனச் சாலச் சிறியரோம் பொருட்

டுள மிரங்கி, யடம்படு தனுச ராருயி ரகற்றி யலகிலா வின்பெமக் ககற்றி, மடம்படு மிதயத் தக்கிருள் குமைக்கும் வளரொளி நாத னே போற்றி. (க0)

பண்டைமா மறையின் சென்னியு நினது பரிசினை யுள்ளவா றுணரா, கொண்டனேர் வானுங் கோகன கத்துக் குரிசிலு மன்னரோ யாம்வாய், விண்டுனை வழுத்தன் மூங்கையர் சில்லோர் வியன்க லைக் குலைவிரித் தற்றுன், மண்டிய நாக கங்கணச் செங்கை வள ரொளி நாயக போற்றி. (கக)

வேறு.

இன்னவாறேத்தியீசனின்னருணிரம்பவெய்தி
மன்னியவனந்தகோடிமன்பதைமுற்றும்பெற்றுங்
கன்னியென்றுகமாதிகழறுமறும்வடிவுடைத்தாய்
பொன்னடிக்கமலப்போதுபுனைந்தனருச்சிமேலால். (கஉ)

வளரொளிப்பெருமான்பொற்றேருள்வளைவிளையாடுந்தோகாய்
பளகருமன்பர்நெஞ்சப்பஞ்சரத்தெற்றைஞான்றுங்
கிளர்வுறுங்கிளியேமேனைகேழ்கெழுகரசரோசத்
தளவிவாழன்னப்பேடேயடைக்கலமடியேங்கண்டாய். (கங)

எனப்பராய்க்கருணைவாங்கியிருபிறையெயிறிலங்கக்
கனற்சிகைவேணிமின்னக்கறைப்பலிக்கலத்தினேடு
சினத்தழுவிலைப்பசூலந்திகழ்தரக்கரதலத்தில்
வனப்பெலாங்குடிகொண்டுள்ளமானவெற்றரையிமைப்ப. (கச)

இருருசங்காரன்சண்டனிகற்குரோதன்கபாலி
யருளின்வீடணனுன்மத்தனசிதாங்கனென்றிவ்வெண்மர்
வெருவரவட்டதிக்குமேயினர்காவலாற்றக்
குருமணிக்கோயினுள்ளாற்குலவியகுமரற்சார்ந்து (கரு)

வெண்டலைமாலைவாழிவிலையிலாப்பணிப்பூண்வாழி
புண்டலைக்கழுமுள்பாசம்பொருதுடிகபாலம்வாழி
மண்டலைவாரிவாய்ப்பெய்மணியரிச்சிலம்புவாழி
கண்டலைமொழிமார்பன்றேறற்கரியகஞ்சுகமும்வாழி. (கசு)

வஞ்சகரஞ்சத்தக்கவாணகைவதனம்வாழி
வெஞ்சமத்தசுரர்ச்செற்றவீராட்டகாசம்வாழி
புஞ்சவல்லிருள்வெலோதிப்பொறியிணையடக்குநல்லார்
நெஞ்சகங்கவராநின்றநிருவாணக்கோலம்வாழி. (கஎ)

வாக்கியவிலாழிவாய்த்துமணியணிமிடற்றதிம்பர்
நோக்கியகட்டுநீலநொதில்வயப்புரவிவாழி
தூக்கியதுளிர்மென்ருலுச்சுருண்டவாற்சுணங்கன்வாழி
பாக்கியவடுகநாதபைரவவாழிவாழி. (கஅ)

இன்னணம்வாழ்த்துகின்றவிமையவர்குழாத்தைநோக்கி
முன்னவன்றனதுசெய்யமுளரிவாய்மலர்ந்தொன்ருேது
மன்னநீடன்பானீயிர்வழுத்தியதொடர்புமூன்றுஞ்
சொன்னவர்நினைத்தவெல்லாந்துறத்துதுந்துனேவினென்ருன். ()

என்றவன்விடைதரக்கொண்டியவுளரரிதினீங்கிச்
சென்றுவிண்ணுரிஞ்சுபைங்காச்சிரமாபனேதனப்பே
ரொன்றியபதியுட்புக்காருயர்கயிலாயநாதன்
மன்றனித்தியகல்யாணிமலர்ப்பதந்தொழுதிருந்தார். (உ0)

ஆனியஞ்சிலகழிந்தவனந்தரம்விண்ணேராக்குங்
கோனேயன்றருச்சித்திட்டகோணேமாப்புண்ணியத்தாற்
றேனலர்நறுங்கடுக்கைத்தெரியலந்திணிதோட்பெம்மான்
மோனநல்யோகிற்றீர்ந்துமுயக்கமுற்றிமயமானே. (உக)

தன்னுடைநெற்றிநாட்டத்தலத்தறுபுலிங்கநல்க
வன்னவற்றினேவான்கங்கையணிச்சரவணத்திலுய்ப்ப
மின்னிகருமையணேத்தவேலேயின்முகமொராறும்
பன்னிருதோளுமெய்திப்பாலகனுயவம்மா. (உஉ)

அவ்விளஞ்சேய்க்குச்சத்தியயிற்சத்தியாக்கியீந்து
நொவ்வினேயமரர்க்காற்றுநோன்மைசால்சூரனுவி
வவ்வினேவருதியென்னமணிகண்டன்விடுத்தலோடுஞ்
செவ்வியவிலக்கத்தொன்பான்றிறல்கெழுதம்பிமாரும். (உ௩)

பாரிடப்படையுஞ்சூழப்பைந்துணர்க்கடம்பன்சேற
லாரிடத்துணர்ந்ததேவரனேவருஞெரோலென்றேகித்
தேரிடற்கரியவந்தச்சேய்கழல்சென்னிசேர்த்தி
யாரிடத்திசைப்பேந்தியேமின்னலேகின்கணின்றி. (உச)

என்றனரழுதுசாலவிரங்கினர்மாழாக்கின்ற
குன்றிறகரிந்தோனுதிக்குழாங்கொள்வானவனைநோக்கிக்
கன்றலிர்நெஞ்சமஞ்சிக்கலங்குதலொழிமின்றெவ்வைப்
பொன்றியபுரிதுமென்ருன்புலவர்க்கேயவதரித்தோன். (உரு)

யாவருந்தொடருமாபோங்தெறுழ்வலிச்சூரை முன்னு
மேவலர்தம்மைவஞ்சவேரொடுங்களைந்துமீண்டான்
காவியங்கண்டத்தெந்தைகண்மணியாயமைந்தன்
மேவினன்செந்தில்பின்னர்வியன்பரங்குன்றடைந்தான். (உசு)

இந்திரன்வேண்டுகோளுக்கிசைந்தனன்காழிநின்றும்
வந்திடுசசியினேடம்மகபதிவிதியானல்கச்
செந்திருமகளிற்சீர்த்ததெய்வவான்பிடியைவேட்டா
னந்திலன்னவள்பாலின்பமார்ந்தனன்சின்னுள்வைகி. (உஎ)

பொன்னகர்க்கிறைவன்றன்னைப்புலவர்கள்போற்றிசைப்ப
நன்னெடுமோலிசூட்டிநகுசுடர்க்கந்தவெற்பிற்
றுன்னினன்முருகனிப்பாற்சுரரொடுசுவர்க்கத்தின்கட்
பன்னரும்பேரானந்தப்பரவைதோய்ந்திருந்தான்வேந்தன். (உஅ)

வயிரவன்கோயின்மேயவளரொளிப்பெருமான்றன்னைச்
செயிரறவிபுதர்பூசைசெய்தமைசிறிதுசொற்று
மயில்செவிநுழைந்தாலென்னவடர்சிவகிந்தைகேட்ட
சயிலநேர்பவந்தொலைக்குந்ததிசிபூசனையுரைத்தும். (உகூ)

தேவர்பூசித்தபடல முற்றிற்று.

ஆ படலம் கஉ-இ செய்யுள்-அ0கூ.

ததிசிமுனிவரர் பூசித்தபடலம்.

முளரியம்பொகுட்டுறையுநான்முகத்தனிமுதியோ
னுளமகிழ்ச்சியினுதவியபதின்மருளொருவன்
றளர்வில்சிந்தையான்றக்கனென்றுக்கிளைதரித்தா
னளவுமன்பினுற்றுதையைவணங்கியீதறையும். (க)

அனைத்தினுக்குமோர்காரணமாய்த்தனக்கஃதின்
முனைப்பராபரமுதல்வன்யார்மொழிந்தருளெனலு
மெனைத்தினுந்தவச்சிறந்ததுவினுயினையென்னுக்
கனைத்துவண்டுளர்முண்டகத்தவிசினேன்கழறும். (உ)

நாரணப்பெயர்நண்ணியவெந்தையுநானும்
பூரணப்பரம்பிரமம்யாம்யாமெனப்புகன்று
வீரவெஞ்சமர்விளைத்தலுமிகுதருக்கொழிய
வாரழற்பிழம்பாய்நின்றவமலனேயிறைவன் (ங)

அனையநாயகன்றனைநினைந்தருந்தவமாற்றி
வினையினீங்கினைவிழுப்பொருள்பெறுகெனவிளம்பத்
தனையனுங்கதற்கிசைந்தனன்மானதத்தடத்தைத்
துனைவினெய்தினனேற்றனன்றுயர்க்குளந்துளங்கான் (ச)

அலகில்பற்பகல்சிவபிரானடித்துணையன்றி
யுலகியற்கையைமறந்தனன்றவஞ்செயவுவந்து
நிலவுலாவியநீர்மலிவேணியந்நிமல
னிலகமாதொருபுடைவிடையிவர்ந்தவணெதிர்ந்தான். (ரு)

நாட்டமூன்றுடைப்பரன்வரவுணர்தலுநமது
வாட்டந்தீர்ந்ததென்றாடினன்பாடினன்வணங்கி
நீட்டவன்பினானின்றுளதக்கனைநீயென்
வேட்டதோதுதிவிரைந்தனையென்றனன்விகிர்தன். (சா)

புத்திமான்றனன்றக்கனுமூழ்வினைப்புணர்ப்பான்
முத்திவேண்டலன்மொழியுமாலரியயன்முதல
வெத்திறத்தருமெனதுபேராணையினியங்கல்
பத்தியாலுனைப்பணிபவர்யாருமெற்பணிதல். (எ)

அளப்பிலாதநன்மக்களைப்பெறுதலன்னவருட்
கிளப்பருந்தகையுமையுமோர்மகளெனக்கெழுமல்
வளத்தின்வந்துநீயத்தகுபிராட்டியைமணத்தல்
கொளக்கிடந்தனவிவ்வெனவிரந்தனன்கூற. (அ)

பூதிமேனியெம்புண்ணியன்புன்னகைபுரியா
வாதிவேதியன்மைந்தநீயவாயினவளித்தா
நீதிநிற்றியேனிலைக்குமிச்சீரெனநிகழ்த்திச்
சோதிதுன்றியகயிலையந்தொல்வரைபுக்கான். (கூ)

அன்னதன்மையாற்சிறுவிதிபெருமகிழ்வடைந்து
பின்னர்வந்தொருநகர்கண்டுபிறங்கரிபீட
மன்னவைகுபுமாலயன்வாசவனாதி
யென்னருந்தனதேவலாற்றொழுகியவிருந்தான். (க0)

வேதவல்லியைவேட்டணைஇவிழுத்தகுமைந்தர்
மாதரொண்ணிலர்ப்பயந்தனன்மணம்புணர்வித்தான்
சீதவெண்மதிபிறர்த்துறந்துரோணியைத்திளைத்துக்
காதல்கோடலாற்கனன்றவன்கலைகுறைகென்று. (கக)

சாபமீத்தனனருகுபுசந்திரன்சாம்பித்
தாபரத்தனித்தாணுவைச்சரண்புகச்சசியை
மாபரன்சடைமிலைந்துதேய்வொழித்தருண்மாண்பாற்
கோபமூண்டுபின்பாறினன்சிறுவிதிக்குமதி. (கஉ)

அனககாளிந்தியலர்மிசைவலம்புரியாகிச்
சனனிதங்கினளவ்வளையெடுத்தனன்றக்கன்
வனமிகுந்தபெண்மகவெனவயங்குதல்காணூஉ
மனமுவந்தனன்மறைக்கொடிமலர்க்கரத்தளித்தான். (கங)

போற்றியங்கவர்வளர்த்தனராண்டைந்துபோத
வேற்றுவந்தரன்வேட்டனன்கடிவினையேன
வாற்றுகிற்புழிக்கரந்தனன்மீண்டணைந்தமலை
கோற்றொடிக்கைதொட்டுடன்கொடுகுறுகினன்கயிலை. (கச)

புராரிபுல்லியர்புந்தியுட்புணர்கலான்புரிந்த
பராபவத்தினைநினைதொறுமனம்பதைபதைக்கும்
விராயவிண்ணவர்வெருவுறத்தழலெழவிழிக்கு
மராவினுந்தவச்சீறுமாலழிதகன்றக்கன். (கரு)

கொடியவார்த்தையாலீசனைக்குரைத்தனன்கொதிப்பக்
கடிகொண்முண்டகன்கழறுவான்கான்முளாய்கனலல்
வடிவினின்மகண்மருகனைக்கண்டனைவருகென்
றொடிவில்காதலினுரைப்பமற்றுதற்குடம்பட்டு. (கசு)

தக்கன்வெள்ளியங்கிரியுறீஇக்காவலர்தடையான்
மிக்கமானமும்வெகுளியும்விழுமமும்விரவித்
தொக்கவுள்ளத்தன்றிருமினன்றுனைந்துதன்சூழற்
பக்கலெய்தினன்பண்ணவர்க்கூயிதுபணிக்கும். (கஎ)

இடையிற்சூழவோர்கலையின்றிநக்கனாயிருப்போன்
புடையிற்போகலிர்வணங்கலிரொன்னநின்புரத்துக்
கடையிற்காப்பன்றியென்றொழிலெமக்கெனக்கலங்கி
நடையிற்கோடினேனவின்றவாறியங்கினர்நாகர். (கஅ)

பின்னரோர்பகற்பெருமகமியற்றுறுபிரமன்
பன்னகப்பணிப்பரன்கழல்பணிந்திரந்தழைத்து
நன்னர்நந்தியைவிடுப்பவந்நம்பிதாளிறைஞ்சி
முன்னர்நல்கினனுதனஞ்சாலையுண்முறையால். (ககூ)

அதனைநோக்கியவயன்மகன்வாயில்காப்பாளோ
வுததிமேயமாலாதியருறையுமிவ்வவைப்பான்
முதன்மையெய்துவோன்விடமுணிக்கேயவிமுந்த
வுதவலென்றினபிதற்றலுஞ்சிலாதன்சேயுருத்து. (௨0)

அரனைவைதவாய்நின்றலைபுன்றலையாக
வரனையின்றியேவேள்விசெய்வார்சிரமறுக
வரனையஞ்சலருனக்கஞ்சியமர்கின்றவமர
ரரனைநோற்றுயர்சூரனாலடரிடரடைக. (௨௧)

என்றெழுந்திருங்கணத்தொடுமிரசிதத்தியன்ற
குன்றிறுத்தனன்முனிவரர்சுரருளங்குலைந்தா
ரொன்றுமோதிலன்மம்மரானோதிமனோய்ந்த
வென்றிமாயன்முன்னெனைவருந்தத்தமூர்விரைந்தார். (௨௨)

ஆனியம்பலவகன்றபின்பகந்தைகூர்தக்கன்
வானிருந்தவர்தமைவிளித்துலகினர்மகஞ்செய்
வேனிகந்தனனெனச்சிவனவிதடுத்திட்டாய்
மேனிகழ்த்தினானந்தியோர்சாபமிவ்விளைவால். (௨௩)

யாதுநேர்ங்கொலோவென்றயிர்த்தியாகமொன்றேனு
மூதுரைப்படிமுயறிறமோயினர்முதியோ
யேதுவேறிலையென்றனரற்றெனின்யான்முன்
போதுமேதமொன்றாற்றுவன்முடியுமேலுப்பால். (௨௪)

நீயிர்செய்ம்மெனவிட்டியொன்றியற்றியநேர்ந்தான்
றாயினுங்நலதயாகரசங்கரற்றவிர்த்துப்
பேயினீண்முலையுண்ணியைத்தலைவனாப்பேணிக்
கூயினானடுக்கிழக்குமேக்குலவுயிர்க்குழுவை. (௨௫)

சிவனுக்கன்புடைத்தாபதர்சிற்சிலரொழிய
வவண்மொய்த்தீண்டினரிருடியர்விப்பிரரமர
ரிவனைத்தூநெறியிடைப்படுப்பதுமனத்தெண்ணி
யுவணத்தூர்தியைவெல்புகழ்த்ததீசியூங்குற்றான். (௨௬)

அன்னதக்கனைநோக்கினனருந்தவர்க்கரசன்
பன்னுகென்னையிங்கழைத்ததென்னென்றலும்பதகன்
முன்னிகழ்ந்தனமுழுவதுமுறையுளிமொழிய
வென்னகாரியமிழைத்தனையிழுதைகேளென்னா. (௨௭)

மாதவன்சொலுமாதவனுள்ளிட்டவானோர்
பூதலத்தினரோனயர்தமைத்தந்துபுரந்து
சாதலெய்துவித்தியன்மறைத்தருள்கின்றசம்பு
நாதனைத்துறந்தோமகநடத்தியநயந்தாய். (உஅ)

யாகத்துக்குநீடெரிக்குமாங்கிடுதலையவியின்
பாகத்துக்குநற்பனவர்க்குமதிபன்முப்பாச
மோகத்தாவிகட்காவியாம்பசுபதிமுதல்வ
னேகத்தீசனென்றியாரைநால்வேதமேத்திசைக்கும். (உகூ)

ஆன்மநாயகனைம்முகத்தொருவனேயல்லா
ரான்மவர்க்கமாலாருயிருயிர்த்துணையாமோ
வான்மகோடிகளனைத்தொருங்கலக்கணெய்தாவா
ருன்மவூதியங்கடைப்பிடித்தரற்கவியளித்தி. (ஙo)

என்றுபற்பலகாரணங்காட்டினனிசைப்ப
நன்றுநன்றெனநகைசெயாச்சிறுவிதிநவிலும்
பொன்றினருடற்சாம்பரும்புன்றலைத்தொகையும்
பன்றிவாளெயிறும்புனைவான்கொலோபரமன். (ஙக)

வடமெனப்புலாலென்பினைமார்பகம்வனைந்து
விடமுமிழ்ந்திடுவெம்பணிமேனிமுற்றணிந்து
சுடலையூடுநள்ளிருளிடைப்பேய்க்கணந்துன்ன
நடனநாடொறுமாடுகிற்பான்கொலோநாதன். (ஙஉ)

மானமின்றியேவெற்றரையுடையனுய்வதியு
மீனமுற்றபுன்மயிர்க்கயிறசைத்தனனிருக்கு
மூனசும்பியபுலியதள்சில்பகலுடுக்குந்
தீனரிற்பலியேற்குமித்தகையனேதேவன். (ஙங)

மிகக்கசப்புடையாலகாலத்தினைமிசையுஞ்
சகத்துளார்நகவொருத்தியைத்தலைத்தலைச்சுமக்கு
முகப்பினுற்கிழவெருதின்மேலேறினனுலாவு
மிகப்பிலான்றமோகுணத்தொழிலிவன்கொலோவிறைவன். (ஙச)

என்னவின்னனவிகழ்மொழிபுலம்பினனிசைப்பத்
தன்னதஞ்செவிகரத்தினற்புதைத்துமாததீசி
யன்னதீயவனிழிவெனவறைந்தவையனைத்து
மன்னமேதகுமுயர்வையேவழங்குதல்வழங்கி. (ஙரு)

சுருதியுத்தியோடனுபவவளவைகடுறுத்துப்
பெருகவோதியுஞ்சிறுவிதியதுகடைப்பிடியா
தொருவுநீயெனத்ததீசிமிக்குருத்தனன்யாரிற்
றிருவமெய்தினைசெய்நன்றியறக்கொன்றுதின்றாய். (௩சு)

சிவனைநீத்தனைதக்கநீசெய்மகஞ்சிதைக
விவணுறைந்திடுமியவுளருறுப்பழிந்திழிக
பவனெடன்பனைக்கண்டிகைநீற்றினைப்பழித்துத்
தவகுலத்துதித்துழல்கவீண்டமருமந்தணர்கள். (௩எ)

வேறு.

என்றுசாபமியம்புபு
துன்றிமாதவர்சூழ்வர
நின்றுசாலையினீங்கினன்
றன்றுணைந்தததீசியே. (௩அ)

ஈசற்பற்றியிழிப்புரை
பேசக்கேட்டபெரும்பிழை
மாசிற்றீரும்வகைச்செயல்
யோசித்துற்றனன்யோகிடை. (௩கூ)

பாயிரும்புகழ்ப்பாண்டிநாட்
டேயுமேன்மையினென்றுமே
மாயுருதுறும்வைரவன்
கோயிலென்றொருகோநகர். (சo)

வளரொளிப்பெயர்மன்னியங்
களவுமீசனையன்பொடும்
பளகில்பூசனைபண்ணிடி
னிளகிவேரறுமிப்பவம். (சக)

என்பதோர்ந்தனனிம்மெனத்
துன்பநீக்குமத்தொல்பதி
யன்பரோடுசென்றண்மினு
னின்பவாரியிருந்தவன். (சஉ)

வயிரவத்தடவண்புன
றுயல்வரச்சடைதோய்ந்தனன்
சயவெணீற்றொடுசாதனம்
பயிலமேனிபரித்தனன் (ச௩)

அஞ்செழுத்தினையாசற
நெஞ்சகத்துநினைந்தனன்
குஞ்சரத்தையொர்கொம்பனை
வஞ்சமற்றடிவாழ்த்தினான் (சச)

ஆலயத்துளடைந்துபின்
மாலயற்கருவளரொளி
மூலமூர்த்தியைமும்முறை
யேலுமாற்றினிறைஞ்சினன். (சரு)

வலம்புரிந்தெதிர்வந்தனன்
றலந்தொழுஞ்சிவதந்திர
நலம்பொருந்தநவின்றவா
றிலங்குபூசையியற்றினன். (சசு)

ஓங்கொளிப்பரனெண்கழற்
பாங்கர்நின்றுபராவுவான்
வீங்குகாதலுண்மெய்ம்மையாற்
றூங்குகின்றததீசியே. (சஎ)

வேறு.

பந்தித்தபாசப்பகையேவளரொளியே
சிந்திப்பவர்க்குமிகத்தித்திக்குந்தெள்ளமுதே
யந்திப்பிறையையணிந்தாயுனையந்தோ
நிந்திக்கக்கேட்டநெடும்பாவந்தீர்த்தருளே. (சஅ)

கைதவர்க்குத்தோன்றாக்கதித்தவளரொளியே
மைதவழுங்கோட்டிமவான்மாதுமணவாளா
நைதலடியார்க்கொழிக்குநாயகனேநின்னையச்சோ
வைதவுரைகேட்டொழிந்தவன்பாவந்தீர்த்தருளே. (சகூ)

கொழித்ததிரைக்கூலக்குரைகடல்வாய்நஞ்சைச்
செழித்தமரருய்வான்றிருவமுதுசெய்த
வழித்துணையேமன்னும்வளரொளியேயுன்னைப்
பழித்தமொழிகேட்டபருஉப்பாவந்தீர்த்தருளே. (ருo)

அகரவுயிர்போன்றுயிர்தோறண்மியியக்கிச்
சகசபரஞானந்தங்கந்தமலநீவி
மகவெனவின்பூட்டும்வளரொளியேநின்னை
யிகழ்வசனங்கேட்டவிரும்பாவந்தீர்த்தருளே. (ருக)

அள்ளிலைவேற்சேயையழைத்துமடிமீதிருத்தி
வள்ளியசெங்கஞ்சமலர்வாய்முத்தங்கொண்டுவெப்போ
யுள்ளியனமுற்றளிக்குமோங்கொளியேயெந்தையுனை
யெள்ளியசொற்கேட்டவிருட்பாவந்தீர்த்தருளே. (ருஉ)

என்னாநனிபரிவுற்றேத்துந்ததீசியென்பான்
முன்னாகச்செங்கண்வெள்ளேறூரிமழவிடைமேன்
மின்னாருமெல்லியலாண்மேனியிடமேவியிடத்
துன்னார்புரம்பொடித்ததோன்றல்வந்துதோன்றல்செய்தான். ()

எந்தைபெருமானெழுந்தருளநேர்நோக்கிச்
சிந்தைவசமற்றுநின்றசீலன்றனைப்பார்த்தம்
முந்தைமுதல்வன்மொழிவான்முனிவரவெந்
நிந்தைமொழிகாதார்த்தநீடுபவநீத்தனையால். (ருச)

நீதுதித்தபஞ்சகத்தைநேசத்தானெக்குருகி
யோதுநர்க்குமத்தகைபவுன்னரியபாதகந்தீர்ம்
போதுகிற்றியென்றுபுகன்றிலிங்கத்துட்கரந்தான்
சாதுமிக்கவந்தத்தபோதனனுமாங்கொரீஇ. (ருரு)

அடியவனாயன்பாலருள்சுரந்துநோக்கிக்
கடிமுழுதுநல்கிக் * கபாலியைவெல்காமன்
கொடியெனவுலாய்மிளிருங்கோலத்தடங்கண்
வடிவுடையநாயகியைவந்தித்துவாழ்த்தெடுத்து. (ருசு)

பார்த்தாண்டநீண்டபரன்முதலோர்பையுளெலாந்
தீர்த்தாண்டதேவன்றிறலவுணர்நீறுக
வேர்த்தாண்டகைக்குரிசில்வேதமுடிமீதமர்வோன்
மார்த்தாண்டவைரவன்றாள்வாரிசத்தில்வீழ்ந்திறைஞ்சி. (ருஎ)

காணவினியகவினார்முருகுகமழல்
பேணல்புரிந்துசண்டிப்பெம்மான்பாற்பேறெய்தி
மாணவர்கடற்சூழமாயைகருமத்திைெடு
மாணவத்தினீங்கிதனதாச்சிரமஞ்சென்றணைந்தான். (ருஅ)

தெற்றுசடிலச்சிவனையன்றிமற்றையனைச்
சற்றுமதியாத்ததீசிசபரியைச்சீர்
சொற்றுங்குருபன்னிதோளிணையைத்தோய்ந்தமையான்
முற்றுபவந்திங்கண்முடித்ததெடுத்துரைப்பாம். (ருகூ)

ததீசிமுனிவரர் பூசித்தபடல முற்றிற்று.

ஆ படலம் கரு-இ செய்யுள் - அகூஅ.

---

* கபாலியை வெல்காமன்கொடி - இல்பொருளுவமை.

சந்திரன் பூசித்தபடலம்.

தேசிகத்திற்றிகழுமெய்த்தேவர்தந்
தேசிகற்குரித்தேவிமணஞ்சுவை
தேசிகத்தலில்சில்லியல்குற்பிர
தேசிகற்றறத்தேர்மதநூலினள். (க)

தொடிக்கைமாதரிரதிமுற்சொல்லியார்
முடிக்கொளத்தகுமுற்றெழில்வாய்ந்துளாள்
வடிக்கடைக்கணின்மைந்தருயிரொலா
நொடிக்குள்வெளவிநொடிக்குமென்னேக்கினள். (உ)

அணிசெய்பொற்குடத்தாரமுதார்த்திநீண்
மணியிலச்சினைவைத்தனகொங்கையாள்
பணிமொழிப்பிழிப்பங்கயவாயினு
டணிவுருத்தகைத்தாரையென்னுமத்தாள். (ங)

இன்மதிக்குவழியுமிதழுடைப்
பொன்மதிக்குமிப்பூவையைப்புல்லுமா
தன்மதிக்குமறைஇவிதிசார்தலா
னன்மதிக்குமொர்துன்மதிநண்ணிற்றே. (ச)

இவன்மயங்குதலென்னிறும்பூதுமா
தவன்மயங்குஞ்சதுர்மறையோர்ந்தமுன்
னவன்மயங்குமனங்கத்தைவேட்கருள்
சிவன்மயங்குமிச்செல்வியைக்கண்ணுறின். (ரு)

தொண்டயர்ந்திடல்போலன்னதோகைதன்
றண்டளிர்ப்பதமிந்துகைதைவரு
மெண்டகக்கண்ணிணைமிசையொற்றுமம்
முண்டகத்தினைமோந்துமுத்தங்கொளும். (சு)

இனையசெய்துழியூற்றினிமைகூர்
நனைபனிக்கதிர்நல்லமிர்தங்கொடு
வனையுமேனிவடிவுளமீர்த்தலா
லனையசந்திரற்குறுமவாயினள். (எ)

திங்கள்கால்வயிற்றீர்ந்துநின்செங்கையா
லங்கமெங்குமளாவிவருடினிச்
சங்கையோப்பெனச்சாற்றலுஞ்செய்தனன்
கொங்குயிர்க்குங்குறியுட்கரிகரம். (அ)

சூசுகத்தின்றுணையைநெருடலான்
மாசுகப்பெருவாரியுவட்டெழ
வாசுகற்றைக்கதிர்மதிபாகத்தைக்
காசுகத்தன்கனதனக்கோட்டுழா. (கூ)

தாரைகாமந்தரிப்பருநீர்மையாள்
வீரைவந்தவியன்மதிவாயிதழ்
நீரையாரமிழ்தத்தினெடிதுண்டாள்
யாரைவிட்டசிற்றின்பத்தில்வேட்கையே. (க௦)

பனிபடுங்கதிர்ப்பண்ணவன்றுனுமத்
தனியுறுங்கவின்றுங்கியதையறன்
னினியகோபத்திலங்கதரத்தினைக்
கனியிற்கட்டிக்கரும்பிற்சுவைத்தனன். (கக)

அல்குலாகியவம்புயப்பூவிடைப்
புல்குமின்பப்புதுமதுவத்தினைப்
பல்குரற்களிவண்டொன்றெனப்படீஇ
யொல்குதிரப்பருகியுவந்தனன். (கஉ)

அலகிலாதனவாலிங்கனவகை
பலநகக்குறிபற்குறிதாடனை
மலருமன்பினுயிர்த்திடன்மர்த்தன
மிலகவின்னனயாவுமியற்றினன். (கங)

மேகலைக்கலன்மெல்லடிநூபுர
மாகமுட்டியமன்னவொலித்திட
போகநன்கரணங்களுஞற்றினு
ளுகர்நாணிப்பிலத்துழைநண்ணியர். (கச)

ஒருவலின்றியுபரிசுரதத்தால்
வருவதாயபேரின்பமுமாந்தினன்
றருணவிந்துதரையெழிற்றாயென்
திருதிறத்தருமெய்த்திலராடபு. (கரு)

அவசமெய்தினரன்னவண்மாமுலைத்
தவளவாண்மதிதங்கினன்றுஞ்சிறு
னவநிகழ்ச்சியதனைநணுகியாங்
குவமைதீர்குருநோக்கியுரப்பலும்.　　　　(கசு)

விதுவுந்தாரையுமெல்லத்துயிலொரீஇக்
கதுமெனப்புறத்தேகிக்கடிநகர்
குதுகலத்திற்குறுகிவதிந்தனர்
மதுவினுங்கொடுங்காமமருட்சியார்.　　　　(கள)

தன்னகர்த்தலைத்தாரையைச்சந்திரன்
மன்னவைத்துமருவிமகிழுநா
ளன்னமன்னவனையள்கருவுறீஇப்
பின்னமற்றொளிர்புந்தியைப்பெற்றனள்.　　　　(கஅ)

இனையசெய்தியெனைத்துமறிந்தனன்
வினையமிக்கவியாழப்பெருந்தகை
நனையவேரிநளினப்பொகுட்டுவாழ்
முனைவன்பாற்சென்றுமுற்றுமொழிந்தனன்.　　　　(கசு)

அன்னவூர்தியலவனையாங்கழைத்
தென்னதாற்றினையேழைமதிமதி
பொன்னவன்வயிற்போக்குதிதாரையை
நின்னருஞ்சுதனீகொளற்பாலனல்.　　　　(உ0)

என்றுவேதனியம்பலுமம்புலி
நன்றெனக்கொடுவந்தனனல்கினன்
மின்றிரண்டனமெல்லியல்வேல்விழிப்
பொன்றிணிந்தபுணர்முலைத்தாரையை.　　　　(உக)

மருவிரிந்தமலரவனேவலாற்
குருவும்பன்னியைக்கொண்டுநடந்தன
னிருளிரிக்குமியற்கைக்கலாதரன்
பெருகுபேரொளிப்பெற்றிபிரிந்தனன்.　　　　(உஉ)

அழுதுசோர்தருமாவவென்றேங்குங்கீழ்
விழுமெழுந்துளம்விம்மிப்பொருமுமா
லிழுதுதீயுற்றதென்னவுருகுமிப்
பழுதுதீரும்பரிசெவனோவெனும்.　　　　(உங)

வெய்துயிர்க்கும்விதிர்க்குங்கரங்களை
நொய்துபட்டதென்னேன்மைமுழுதெனு
மெய்துமிப்பழியேகுதற்கென்னினிச்
செய்துமென்னுந்திகைக்குநகைக்குமால். (உச)

இத்திறத்தினிடருழந்தோதியில்
பித்தர்போனனிபேதுறுஞ்சந்திர
னத்தண்மாமலராளியைநோக்குபு
பத்தியோடுபராவிவினவுவான். (உரு)

வேதமுற்றுணர்வித்தகயான்செய்மா
பாதகக்கழுவாயென்பகர்கென
வாதரத்தினறைகுவனந்தணன்
பூதலத்திற்பொலியுந்தென்னாட்டிடை. (உசு)

ஓடிவில்வைரவன்கோயிலென்றோர்பதி
நெடிதுவைகுமங்நீணகரத்தின்வாய்
வடிவுடைத்திருவோடுவளரொளி
குடியிருக்கும்பொற்கோயில்கொண்டென்றுமே. (உஎ)

ஆசைநீடிசையப்புரியெய்திநீ
மாசைவண்ணவளரொளிநாதனைப்
பூசையாற்றுதியேற்பவம்போமென
வோசைமல்கவுனைத்தவளவினில். (உஅ)

கடுகநான்முகன்கால்விடைபெற்றெழீஇ
யுடுபதிப்பெயருற்றுளவும்பரான்
றொடுகடற்புவித்துன்னுபுதொல்புகழ்
வடுகநாதபுரத்தைமருவினன். (உகூ)

சங்கற்பந்தகச்சாற்றிவயிரவப்
புங்கத்தீர்த்தப்புனலிற்படிந்துமெய்
தங்கச்சைவசின்னங்கடரித்தன
னுங்கட்பஞ்சாக்கரமனுவோதினன். (௩0)

ஆலயத்தையடைந்துவளரொளி
மூலமூர்த்தியைமுக்கால்வணங்குபு
கோலவார்மதில்கோவினனம்முறை
சீலவாகமஞ்செப்பியவாற்றினல். (௩க)

சிவக்குறிக்குத்திருமஞ்சனம்புரீஇ
நிவப்பினேத்திரநீழன்மணிப்பணி
யுவப்பினலணிந்தொண்ணறுஞ்சாந்துவேய்ந்
தெவர்க்கும்வாய்ப்பருமின்னமுதம்பல. (௩௨)

பரிகலத்திற்படைத்துநிவேதியா
விரிநறும்புகையீந்துவிளக்கொடு
முரிவிலாப்பதினறுமுகமனும்
பெரியவார்வத்திற்பேணியபின்பரோ. (௩௩)

பூத்திரட்கொடுபொன்னடியர்ச்சியாப்
பாத்திரத்தொளிர்பாளிதப்பல்சுடர்
சாத்திரப்படிசந்நிதிக்காட்டியே
தோத்திரத்தொகைசொல்லத்தொடங்கினன். (௩௪)

வேறு.

போதேந்தும் புரிசடையெம் புண்ணியனே புராணமறைப் பொருளே செய்ய, காதேந்தும் வெண்சங்கப் பைங்குழையாய் கருதலர்கள் களித்து வாழ்ந்த, தீதேந்து மூவெயிலுஞ் சிறுநகையாலடலைபடச் செய்தாய் வாம, மாதேந்தும் வளரொளியே மாபாதகந்தொலைத்தி வஞ்ச னேற்கே. (௩௫)

வார்தாங்கும் வனமுலையாள் வடிவுடைய நாயகியைப வண்ண மெய்யோர், சார்தாங்குந் தனிமுதலே கடவுளர்நின் சரணமே சரண மென்னக், கார்தாங்கு நிறத்தவுணர் கிளைமுழுதுங் களைகட்டுக் களைக ணுனய், சீர்தாங்கும் வளரொளியே மாபாதகந்தொலைத்தி தீய னேற்கே. (௩௬)

நஞ்சடர வஞ்சமர ருஞ்சமர விஞ்சதனை நன்கு துய்த்தாய், துஞ்சலைநன் மறைக்குலத்துச் சிறுமாணிக் கியற்றுமா துணிந்து வந்த, வெஞ்சமனுர் நஞ்சொழியக் கஞ்சநிகர் செஞ்சரணின் வெகுண்டு தைத்தா, யெஞ்சலிலா வளரொளியே மாபாதகந்தொலைத்தி யிழுதை யேற்கே. (௩௭)

மணிவண்ணன் கண்ணிடந்து மலர்க்குறையை நிரப்பினை வாசத் தாளிற், பணிவண்ணம் பார்த்திரங்கிப் பரிதியுறழ் பரிதிதனைப் பண்ட ளித்தாய், கணிவண்ணங் கொடுமானை வந்தனைசெய் கந்தனையுட் கனிந்து தந்தா, யணிவண்ண வளரொளியே மாபாதகந்தொலைத்தி யாத னேற்கே. (௩௮)

புண்ணியமால் வெள்ளேற்றின் மிசையேறும் போரேறே பூசித் தோர்க, ளெண்ணியன வெப்பொருளு மெளிதெய்த வினித ருளு மியல்பி னெந்தாய், தண்ணியபா கீரதியைச் சிரதியை யக் குடில சடிலம் வைத்தாய், பண்ணியலும் வளரொளியே மாபாத கந்தொலேத்தி படிற னேற்கே. (௩௯)

இப்பிரபஞ் சத்துமய லிதயத்தி லிகந்துநினே யெண்ணு நின்ற, விப்பிரர்தம் வேள்வியவி மெய்வடிவத் தெதிர்தோன்றி விருப் பிற் றுய்ப்போ, யப்பிரமே யப்பொருளா யப்பாலேக் கப்பாலேக் கப்பா லானு, யுப்பிரத வளரொளியே மாபாத கந்தொலேத்தி யுணர் வி லேற்கே. (௪0)

வாரணத்தி னுரிபோர்த்த வானவனே மோனநிலே வைப்பே முந்தை, யாரணத்தின் முடியாய வுபநிடத மளந்தின்னு மறிய லாய், காரணத்தின் காரணமே யுயிர்க்குயிரே யெண்ணெயெனக் கலந்து நின்ருய், பூரணத்து வளரொளியே மாபாத கந்தொலேத்தி புலேய னேற்கே. (௪க)

கருதற்ப மைந்துள்ள மைந்துள்ள விண்ணவரைக் காக்கும் வண்ணம், பொருதற்ப வவுணருயிர் பொன்றுவித்த வளரொளி யே புந்தி நந்தி, வருதற்பங் கந்தற்பன் றனக்கொழியக் கண்முளரி மலர்த்த வண்ணல், குருதற்ப கமனமெனு மாபாத கந்தொலேத்தி கொடிய னேற்கே. (௪உ)

வே று.

இன்னவா துதி
கன்னனேர்தரச்
சொன்ன தூமதி
முன்னர்வல்லேயில். (௪௩)

ஏற்றின்மேலொரு
கூற்றின்மாதொடு
நீற்றின்மேனியன்
ருேற்றிநின்றனன். (க௪)

நின்றகோலநேர்
துன்றநாடியிங்
தொன் றுமன்பிஞ
ணன்றிறைஞ்சினுன். (௪௫)

பனிகொடிங்களை
யினிதுநோக்குபு
புனிதநாயகன்
கனிவினுற்சொலும். (சகூ)

குருவினன்மனை
மருவுபாதக
மொருவிவிட்டது
வெருவுறேலினி. (சஎ)

யாதுவேட்டனை
யோதுகென்றலுந்
தீதுதீர்மதி
யீதுரைக்குமால் (சஅ)

நெடியன்காணு
வடியிலுற்றயற்
கொடிவுதந்தநின்
முடியில்வைகினேன். (சகூ)

பெறுவதற்கினி
யுறுதிமெய்ப்பொருள்
பிறிதுமுண்டென
வறியகிற்றிலேன். (ருo)

அன்னதாயினு
மின்னுமொன்றுள
துன்னபொன்னடி
மன்னுபத்தியே. (ருக)

இடையறுதெனக்
கடையுமாறருள்
புடையினுளொடும்
விடையுலாவுவாய். (ரு௨)

எனவிரத்தலும்
பனகபூடண
னனையதாகெனத்
தனைமறைத்தனன். (ருங)

பின்புசோமனுந்
தன்புரத்தினைக்
கொன்பெறப்புகுந்
தின்பின்மன்னினன். (ருச)

தேசுமாசசி
பூசைபேசின
மாசுவாசவன்
வீசுமாசொல்வாம். (ருரு)

சந்திரன்பூசித்தபடல முற்றிற்று.

ஆ படலம் கச - இ செய்யுள் - கூஉரு.

இந்திரன்பூசித்தபடலம்.

பரந்தமதனூற்பொருள்சுருக்கிப்பகரும்பரிசினபினயித்துக்
கரஞ்செல்வழியில்விழிபடரக்கண்சார்நெறியிற்கருத்தேக
விரங்கமருங்குன்மணிக்காஞ்சியினியகுரற்பொற்சிலம்பலம்ப
வரம்பைமடவாரயர்நடம்பார்த்தாகண்டலன்மான்றமர்வேலை. (க)

தெய்வகுரவனங்கணைபச்சிங்கஞ்சுமந்ததவிசினெழான்
செய்வகடனுளொன்றேனுந்திருந்தவியற்றுன்செம்மாப்பா
னுய்வதுணராப்புருகூதனுறுதனோக்கியருண்மாரி
பெய்வண்முகினேர்தேசிகனும்பெயர்ந்துகரப்பப்பின்னறிந்து. ()

மகவான்யாண்டுந்துருவினன்மாற்றில்பொன்னைக்கண்டிலான்
மிகமாழாந்துவிரிஞ்சியுழைமேவிமுன்னர்ப்பட்டவெலா
மிகவாதியம்பவாசானையிகழ்ந்தபாவப்பயன்றுய்க்குந்
தகவாற்சூழ்ந்துசாற்றுவான்சதுரமறையைத்தலைதெரிந்தோன். ()

தூயகுரவற்காண்பளவுந்துவட்டாமகன்விச்சுவரூப
னுயதகுவமேலோனையாசிரியனுக்கோடியென
நேயமிக்கான்போன்றியம்பநேர்ந்தம்மும்மைச்சேகரனை
மேயகுருவிற்பேணியொருவேள்விபுரிவித்தனன்சசிகோன். (ச)

வாக்குமனமும்வேருய்த்தீவளர்ப்பான்றன்மைமுதுக்குறைவி
னோக்கியந்தக்கொடியனுயிர்நுதிவச்சிரத்தானுங்குதலுந்
தாக்குபிரமகத்திநெடுஞ்சாயைதொடரச்சுரரதனைப்
போக்கினர்நாற்கூறுக்கிப்புனன்மண்மரமங்கையர்மாட்டு. (ரு)

தனயன்மாட்சிதுவட்டாப்பேர்த்தாதைகேட்டிந்திரனுள்கோ
ணினைபுமேதமொன்றியற்றநெருப்புக்குண்டத்திடையெழுந்தான்
பனையினீட்சிமலைவீக்கம்படைத்துவிருத்திரக்கொடியோ
னனையன்விடைபெற்றேகினனண்டர்கோனையடுபோக்கு. (சு)

அன்னான்வந்துபோராற்றவாற்றலாதுவலாரியினி
யென்னுஞ்செய்துமெனமால்பாலேகியிணைத்தாளிறைஞ்சித்தன்
னின்னுவிசைப்பவவனிசைக்குமெண்ணற்கரியகண்ணகே
ளுன்னுதங்கைவயிரவாளுறைப்பண்டையதுவலித்தன்றால். (எ)

புதியதொன்றுவேண்டுமெதுபுகுதும்வகுந்தும்வகுத்துமியா
முதிருமிசையான்குபனென்னுமூரிவேந்தன்முனிந்துமுனி
ததிசியுடல்போழ்தரப்புகரோன்சார்ந்தத்தவனையுயிர்ப்பித்துக்
கதிசெய்காஞ்சியிட்டசித்திக்கடவுட்பூசைபுரிவிப்ப. (அ)

வச்சிரத்திண்யாக்கைபெறீஇவயங்குந்ததீசியதாஅன்று
கச்சமொருவுபாற்கடலைக்கடையப்புகுங்காற்சுராசுரர்கை
வைச்சபடைகண்முழுவதுமம்மாதவத்தோனிடத்தடைத்தாம்[த.
வெச்சென்றுளிறுமவ்வன்னோன்விழுங்கவெந்தண்டொடுசெறிந்

அந்தமுதுகந்தண்டென்பேயடருங்குலிசக்கறநன்றாற்
சிந்தையுவப்பினிரக்குமுனச்செய்யதவத்தோன்றந்தருளு
மிந்தவண்ணம்புரிந்துபகையிரியவாட்டிவாழ்தியெனக்
கந்தமலர்க்கற்பகநாடன்களித்தமனத்தானுடன்மீண்டு. (கo)

வேறு.

அனையமாதவனண்மிய
வனையுமாச்சிரமத்திடைத்
துனைவின்வந்துசுராதிப
னினைவுரைத்துமுனிற்றலும். (கக)

நாயினேடுநரிக்குமாம்
பேயருந்துபிணப்புலான்
மேயவிவ்வுடல்விட்டுநான்
மீயுயர்ந்தநல்வீட்டினே. (கஉ)

நண்ணுகென்றுநவின்றுமிக்
குண்ணிவந்தவுவப்பின
னண்ணல்யோகினினுவியை
விண்ணினூடுவிடுத்தனன். (கங)

அத்ததீசியருந்தவ
முத்தன்மெய்ம்முதுகென்பினைத்
தத்தொளிக்குலிசம்புரிந்
துத்தமன்பொறுத்தோங்கினுன். (கச)

வரதமாதவன்மாய்வுற
விரவுகாரணவேந்தனை
யரவமானவழன்றுபோய்ப்
பிரமசாயைபிடித்ததே. (கரு)

வேதனுலொன்றுமேயவன்
ருதையாலிதுசார்ந்துளே
ஞதலாலினியன்னர்கட்
போதரோனெனும்புந்தியான். (கசு)

தேசிகன்றனைச்சிந்தியா
வாசைகூரவரற்றலு
மாசில்பொன்னவன்வந்தவ
ணுசிகூறலுமண்டர்கோன். (கஎ)

மீண்டுவெம்பசிமேவினே
னெண்டகுஞ்சுவையின்பதங்
கண்டதன்னகளிப்பினுன்
றண்டின்வீழ்ந்தடிதாழ்ந்தனன். (கஅ)

நிகழ்ந்தயாவுநிகழ்த்தினுன்
றிகந்தநீடியசீர்த்திசே
ரகந்தைதீர்குருவஞ்சலென்
றுகந்தநெஞ்சினனேதுவான். (ககூ)

வேறு.

பாரகத்துமாபாண்டிநாட்டொருபகுப்பினதாம்
வீரபாண்டியபுரத்திடையோர்பதிமேவும்
வேரறத்துயர்களேந்துளம்வேட்டவைவிளைவி
ஞரநல்கிடும்வைரவநகர்ப்பெயர்த்தஃதே. (உ0)

அங்கணங்கணன்வளரொளிநாயகனமலன்
றிங்கள்வாண்முகத்தொளிர்நிலவிளநகைச்செல்வி
பங்கமில்லவள்வடிவுடையம்மையோர்பாகந்
தங்கநாடொறும்வீற்றிருந்தருள்வனத்தலக்கு. (உக)

சென்றுவைரவதீர்த்தநீர்மூழ்குபுசிவனை
யொன்றுமன்பினலருச்சனைபுரிதியேலுன்னைத்
துன்றுவெம்பழிபாதகம்யாவையுந்தொலையு
மென்றியம்பலுமகிழ்ந்தனன்வரைச்சிறையீர்ந்தோன். (உஉ)

வடுகநாதமாபுரத்தினைக்குறுகியவ்வலாரி
துடுமெனப்புகூஉக்காரியந்தடப்புனலாேய்ந்து
கடுமிடற்றவர்க்குரியடையாளமெய்கலப்பித்
திடுகுமோசையான்மானதத்தைந்தெழுத்தெண்ணி. (உங)

நிவந்தகோபுரம்வணங்கினனைந்துகைநிமலன்
சிவந்ததாளிணையிறைஞ்சினன்கோயிலுட்சென்றான்
பவஞ்சவாதனையடியர்க்குப்பாற்றுறுபரம
னுவந்தசந்நிதியுறுப்பெட்டுநிலத்திடையொன்ற. (உச)

தாழ்ந்தெழுந்தனன்மென்மெலவலம்படத்தளியைச்
சூழ்ந்துபஃறரம்போந்தனன்பூசனைதுறுத்த
வீழ்ந்தநெஞ்சினன்சுரபியைந்தருவினைவிளித்தான்
வாழ்ந்துளேமெனவன்னவைவல்லையின்வந்த. (உரு)

தேனுகேண்மியாவளரொளிதனைநிவேதித்தற்
கானவின்னமுதியாவையுமமைக்குதியைந்தாய்க்
கானுயிர்த்தபூந்தருக்கணீர்நறுமலர்கதிர்த்த
வானவில்லுறழ்நவமணிக்கலன்பலவகுத்திர். (உசு)

என்றுவாசவன்வியோமகங்காசலமிழித்துக்
குன்றவார்சிலைகோட்டியவளரொளிக்குழகன்
பொன்றயங்கியமேனியையானைந்தும்புணர
நன்றுமஞ்சனஞ்செய்தனன்றருதருநல்ல. (உஎ)

கோசிகத்தினைப்புனைந்தனன்குழங்கலங்கோதை
யாசில்பொன்னரிமாலைமற்றின்னவுமணிந்து
வாசநன்னறுஞ்சாந்தமுஞ்சாத்துபுவரம்பில்
காசுலாம்பலவகைப்பணிசூட்டினன்கனிந்தே. (உஅ)

கன்னல்பாலிழுதாதியோடியன்றனகடல்வாய்
முன்னெழுந்துளவமிழ்தினுமினியனமுதிர்ந்த
வின்னறுஞ்சுவையடிசில்சிற்றுண்டியிவ்வெல்லா
மின்னுபொற்கலமீமிசைவீற்றுவீற்றாக. (உகூ)

பரப்பிவைத்தனனின்குரன்மணியொலிபடுத்தான்
விரைத்ததூபமுந்தீபமும்வழங்கினன்விதியா
லுரைத்துமந்திரநிவேதியாவுபசரித்தொண்பூக்
கரத்தெடுத்தருச்சனைபுரிந்தேத்துமுட்கரைந்து. (௩0)

வேதநாயகவாகமச்சென்னியின்விரித்த
போதநாயகபுற்கலர்நாயகபொருப்பின்
மாதர்நாயகவளரொளிநாயகவலிசால்
பூதநாயகபுகல்புக்கேன்புறத்தெனைப்போக்கேல். (௩௧)

கோடியாதவர்குழூமியாங்கிலங்குமெய்க்கோல
நீடியானந்தநிருத்தஞ்செய்யாநின்றநிமலா
தேடிமாலயன்றெரிகலாவளரொளிச்செம்மால்
வாடினேனுனகழனிழன்மருமெனைவரையேல். (௩௨)

ஆதிமத்தியமந்தமென்றின்னவையரியா
யோதியின்னமுநான்மறையளந்தறியொண்ணுப்
பூதிமேனியவளரொளிமுழுமுதற்பொருளே
நீதியின்மையேனெனினுநிற்பற்றினேனீக்கேல். (௩௩)

இந்தவாறுரைந்தேத்தியவிந்திரனெதிரோ
கந்தவார்குழலுமையவளிடப்புறங்கவினச்
சந்தவெள்ளிமால்வரைமிசைப்பொன்மலைதயங்கி
வந்ததாமெனவிடையின்மேல்வந்தனன்வரதன். (௩௪)

வரதற்காண்டலுமுடல்புளகரும்பினன்வண்கை
சிரம்வைத்தாடினன்செய்வதொன்றறிந்திலன்சிந்தை
பரவற்றன்மையற்றெருங்கியசதமகற்பாராப்
புரமுற்றட்டவனீயுளம்புகன்றதென்புகறி. (௩௫)

என்னவென்னயான்வேட்குமாறிருந்தவிங்கெய்து
முன்னரோபழிபவமுழுதொழிந்தனமுதல்வ
வின்னமெப்பவமேழையேனுறினுநின்னிணையில்
பொன்னடித்துணைக்கன்பருதமர்தரப்புரிதி. (௩௬)

என்றவாசவன்முகத்தினையெம்பிரானோக்கி
நன்றுநன்றுநின்பத்திமைவிருத்திரநாமந்
துன்றுதீயவற்கோறிநீகோறலுங்கொடிய
வன்றிறற்பழியுருக்கொடுதொடர்ந்துனைவளைக்கும். (௩௭)

அச்சங்கொள்ளலேயாலவாயணிநகரடைந்து
பொச்சந்தீர்ந்தநங்குறிவயிற்பூசனைபுரிதி
துச்சந்தீயுழிப்பட்டதுபோற்பவந்தொலேயு
முச்சங்கூர்பதத்தினிதுவாழ்கெனவுரைத்தொளித்தான். (ஙஅ)

வளரொளிப்பிரான்வழுத்தியவணமெலாமியற்றிக்
கிளர்மணிக்கணங்குயின்றுமிக்கொளிர்தனிக்கிரீடம்
வளமுடிப்புனைஇச்செய்யகோலோச்சினன்வானத்
துளமகிழ்ச்சியிற்போகிமாபோகியாயுற்முன். (ஙசு)

இந்திரன்றனைப்பற்றியபெரும்பழியிரிப்பான்
றந்திரஞ்சொனமுறையினுல்வளரொளிதாளின்
முந்திரங்கினன்பூசித்தமரபினைமொழிந்தா
மந்திரந்தகுவர்ச்செய்வான்பூசனைவகுத்தும். (சo)

இந்திரன்பூசித்தபடல முற்றிற்று.

ஆ படலம் கரு-இ செய்யுள்-கூகூ.

சுக்கிரன் பூசித்தபடலம்.

தேவர்கடேவனதாலயதீப
மோவறநெய்த்திரியுந்துகருப்பை
மூவுலகத்தையும்வென்றிகொண்மொய்ம்பின்
மாவலியாய்ப்பவமன்னியதன்றே. (க)

அன்னவடற்றிறன்மாவலியண்ண
றன்னிகர்தானவசக்கரவர்த்தி
யென்னவராலுமியற்றரிதென்னப்
பன்னுமொர்வேள்விபரிந்துசெய்தானுல். (உ)

ஆயதொர்போழ்துநலந்தணர்வேட்ட
வீயவலித்தனனென்பதுணர்ந்து
மேயவவன்புரிவெந்தொழில்விண்ணோர்
போயரிமாட்டுவிரைந்துபுகன்முர். (ங)

இயவுளிரஞ்சலிரஞ்சலிதென்னு
மயர்வறுகாசிபன்மாமனைகற்பின்
வயவதிதிப்பெயர்மாதுவயிற்றிற்
புயலுறமுங்குறண்மெய்யொடுபோந்தான். (ச)

தொன்மரவித்தியரேற்றியமாணி
பொன்மலர்முஞ்சிவடங்கடிபூண்டோ
னன்மறைநூல்பயினுவினன்முன்னு
றன்மருமத்தொளிரத்தனிசார்ந்தான். (ரு)

சார்தலுமாவலிதானெதிர்கொண்டே
நேர்தருவானாயினீயிவணெய்தப்
பார்தனில்யான்புரிபாக்கியமென்னே
கார்தகைவாயுனாகாரியமென்முன். (சு)

வாமனன்மற்றிலேமூன்றடிமண்ணே
யீமதியென்னலுமேந்தலிசைந்தான்
றீமதிவெள்ளிதெரிந்திவைசெப்புங்
கோமககைதவமாமிதுகோலம். (எ)

மண்டலம்யாவையும்வாரிமுன்வாய்ப்பெய்
துண்டவனன்றியுமுங்குலனுற்றோர்
பண்டளவில்லவர்பற்பலராவி
கொண்டகொடும்பகையிச்சிறுகொண்டல். (அ)

கடவுளர்வேண்டியவித்தகுகள்வ
னுடல்பொருளாவியொருங்குனேவெளவப்
படர்திறமுய்த்துணர்பாரினிநல்கேல்
கடனெனவென்சொல்கடைப்பிடியென்முன். (கூ)

வெள்ளியிவ்வாறுதடுத்திடவேந்த
னுள்ளியநல்லுறுதிப்பொருளோதும்
பள்ளிநெடுங்கடன்மேயபரன்கை
கொள்ளியவென்கைகொடுப்பதினன்றென். (க0)

நண்ணினர்நண்ணலவொன்பதுநாட்டார்
நுண்ணியதூநெறிநூலவர்யாரு
மண்ணியதானமளித்தன்மிக்கார்க்கென்
றெண்ணினரீங்கிவனிற்பெரியார்யார். (கக)

பவ்வம்வளைந்துகிடந்தபடிக்கட்
செவ்வழியாயினுமேற்பதுதீதே
யவ்வழியின்றெனுமீதனன்றமா
லெவ்வமெனச்சிலவெண்ணுவவென்னே. (க௨)

வருந்தியிரந்தவர்மானவிழப்பா
விருந்துமிறந்தவரோபிறிதின்றால்
விரும்பியமுற்றும்வெறுப்பிலரீந்தோர்
திருந்தவதிந்துளர்செத்தனரோனும். (௧௩)

ஆதலினீவதையல்லதுலோவேன்
காதலையென்வயின்மேயகலப்பா
னீதகைவுற்றுநெடும்பழிபூண்டாய்
னோதகவெய்துதல்சுற்றமுநோக்காய். (௧௪)

புகரவனென்றபெயர்ப்பொருடந்தா
யுகவையினேக்கியுறைந்திடுகென்னுத்
தகவுடைநீள்குறடன்முகநோக்கிப்
பகவமண்மூன்றடிநின்னபதத்தால். (௧௫)

அளந்தனைகொள்கெனவன்னவனங்கைக்
களம்புகநற்கரகப்புனல்வார்ப்ப
வுளந்தனில்வெள்ளியொர்சூட்சியையுன்னு
வளந்தருமச்சிரகத்துளைவாயை. (௧௬)

வண்டுருவெய்துபுசென்றுமறைப்ப
மண்டறல்வீழ்ந்திலதாதலுமாயன்
கொண்டதருப்பைநுனிக்கொடுகுத்தக்
கண்டலமொன்றுதொலைந்துகவிக்கோள். (௧௭)

நீங்கினனவ்வழிநீருகவேற்று
வாங்கருமங்கலமார்புடைமாணி
யோங்கிநிலத்தினையோரடிமற்றொன்
றுங்குவிசும்பையளந்தனனன்றே. (௧௮)

எஞ்சொரடிக்கிடமின்மையினீந்தோன்
விஞ்சுமுடித்தலைமீதுமிதித்தான்
மஞ்சுநடத்தியைவையகால்கி
யஞ்சனவண்ணனகன்றனனம்மா. (௧௯)

வேறு.

குண்டிகைப்புனற்றுளைதூர்த்தகோளினு
னெண்டிசையிடந்தொறுமேகியாண்டுள
திண்டிறற்கடவுளைத்தெரிசித்தும்வரக்
கண்டிலன்சூன்றுமால்கட்டகண்ணுனி. (௨௦)

சத்தியவுலகுழைச்சார்ந்துதாதைதாள்
பத்தியன்பணிந்துமுற்பட்டமுற்றவு
மெத்தியவின்னலன்விளம்பியென்னினி
நித்தியயான்செயநின்றதென்றனன். (உக)

நிசைக்கடைநிலவெனநிலவுவானிவை
யிசைத்தலுநான்முகத்தேந்தல்கூறுவான்
பிசைப்பரும்பழிபவங்குருடுபெற்றனை
தசைத்தவம்மூன்றினுந்தணப்புவேட்கையேல். (உஉ)

முப்புவனத்துளுமுதலுகின்றநீர்த்
தொப்புடனுயர்வினையொரீஇயிற்றென்றுமே
தப்புதலில்லதுதனையுற்றார்க்கெலாம்
வைப்புறழ்மாண்பதுவடுகவைப்புமன் (உங)

அமர்வதுபூத்தலையணித்தென்னாட்டிடைக்
குமரமாவயிரவக்கோலந்தாங்குபு
சமர்பொருதசுரரைச்சவட்டியெம்பிரா
ணிமையவர்குழூஉப்புரந்திருக்கப்பெற்றன்றே. (உச)

ஆயிடைவளரொளியமலநாயகன்
றேயிடைவடிவுடைச்செல்வமாதொடு
மேயிடையூறறவிளங்குமொல்லையிற்
போயிடையாதுநீபூசையாற்றுதி. (உரு)

தேவதுந்துபியொலிசெவிக்கின்பஞ்செயப்
*பூவதுமன்னுமப்புரியைக்காண்முன
மீவதுவிலக்கியவிருமைப்பாவமுங்
கூவதுவசைச்சொலுங்குருடுந்தீர்மெனு. (உசு)

ஒண்ணறுஞ்சரோருகனுய்ப்பச்சுக்கிரன்
விண்ணகர்வழுக்கிற்றுவீழ்ந்ததாமென
நண்ணுசீர்வயிரவநகரியுட்புகூஉத்
தண்ணியகாரியந்தடம்படிந்தனன் (உள)

பற்பலவுபநிடம்படித்துப்போற்றுறும்
பொற்பலரற்புதப்பூதிபூசின
னற்பலரணுகொணுவாதிகண்வரு
சிற்பலநல்குகண்டிகைமெய்சேர்த்தினன். (உஅ)

* பூவது - இலக்குமி.

விரசியவைந்தொழில்விளைக்குமூலமாய்ப்
பரசிவனருளுயிர்திரோதைபாசமா
யரசுமந்திரக்கெலாமாகியோங்கிய
வரதபஞ்சாக்கரமனுவையெண்ணினான். (உகூ)

ஏனவுங்கடன்முறையியற்றிக்கோயிலின்
வானளாங்கோபுரவாயின்முன்னனு
மூனமுற்றொளித்தகண்*ணொளித்தலர்ந்ததாற்
றூனவர்குலகுருதாய்க்குனித்தனன். (௩0)

உள்ளுதொறுவகையூற்றெடுக்குமுள்ளத்தான்
றுள்ளினன்றுகளுடல்கதுவவீழ்ந்தெழீஇ
யொள்ளியவிதியினையுங்கட்டான்புகத்
தள்ளியவிதியொடுசாலவாழ்த்தியே. (௩க)

ஒருமருப்பிருமதமொளிருமூவிழி
யருவரைநாற்புயமைங்கைகொண்டகோன்
றிருவளர்தாமரைச்செய்யசீறடி
யுருகியகாதலானுவந்திறைஞ்சினான். (௩உ)

வளரொளித்தம்பிரான்மாட்டுச்சேறலும்
புளகமெய்போர்த்ததுபுந்திநெக்குமிக்
கிளகுப்பரவசமெய்திவிட்டது
களகளவுதிர்ந்தனகண்ணினுலியே. (௩௩)

இம்முறைச்செயலொருவாறிகந்துபின்
மும்முறைவணங்கினன்முற்றகத்தெயி
லம்முறைவலம்புரிந்தண்டவாணர்தந்
தெம்முறைதெறுசிவன்றிருமுனண்மையான். (௩ச)

பளகறுமாகமம்பகர்ந்தவாற்றினு
லுளமகிழ்பூசனையுஞற்றலுற்றனன்
வளரொளிப்பெயரினைமருவிலிங்கத்தி
னளவறுபானுவேயனையமேனியில். (௩ரு)

கந்தமார்தயிலமைங்கெளவியஞ்சுவை
நந்தியபலரசநறும்பனிப்புன
லுந்திளநீர்கரும்புடைத்தசாறுதேன்
சந்தனமுதலமஞ்சனஞ்செய்தானரோ. (௩சா)

---

* ஒளித்து - ஒளியைச்செய்து.

அக்காட்சிக்கரப்பினேயேயகத்துன்னியயர்ந்தொழிந்தா
னக்காட்சிகிடைத்தமைக்குநவிலரியகொடும்பாவந்
திக்காட்சிசெய்தபழிதீர்ந்தமைக்குமகிழ்ந்திலன்பின்
புக்காட்சிப்புகர்தேறியுவந்துதனதுலகடைந்தான். (சரு)

அரியவொருசிறுமாணிக்கரசளித்தபெருந்தானந்
தரியலன்போய்த்தடுத்தமையாற்ருனிழந்தநயனம்பெற்
றுரியவசையறன்கடைநீத்தொண்பளிங்குய்வோதிற்றுக்
கிரிகரன்றன்வழிபாடுகிளத்தியநின்றன்றன்றே. (சசா)

சுக்கிரன்பூசித்தபடல முற்றிற்று.

ஆ படலம் கசா - இ செய்யுள் - ௯00சா.

கிரிகரப்படலம்.

கூம்புகார்தொடுவங்கங்குவானிதி
யோம்புகார்வலர்தம்மையென்றுய்த்தலிற்
ருேம்புகார்கொடைதுன்னினர்துய்த்துவாழ்
பூம்புகார்நகரொன்ருெருபொற்பதி. (க)

பன்னும்பல்புகழ்ப்பல்லவனீச்சர
மென்னுஞ்சைவநியமத்ததீர்ம்பொன்னி
பொன்னுந்திப்பைம்புணரிப்புணர்தலான்
மன்னுஞ்சங்கமநாமமரீஇயதே. (உ)

வளமுமின்பமுமல்கித்தழைத்தலி
னளகையோடமராவதியன்னதாய்த்
தளர்வுநீங்கியதத்தநெறிப்படர்
பளகில்சாதிப்பயிற்சியின்வென்றதால். (ங)

இன்னகாவிரிப்பூம்பட்டினத்திடை
மன்னர்பின்னர்மரபிலுதித்துளான்
கின்னவைரிகிரிகரப்பேரினு
னென்னநன்னருமெய்திநிரம்பியான். (ச)

ஆடகத்தனியம்பலத்தானந்த
நாடகத்தைநவிற்றும்பிரான்றிரு
வேடமெய்ப்பொருளென்னவிரும்புபு
சேடவர்க்கஞ்செழிப்பச்செழிக்கின்ருன். (ரு)

எய்வகுத்துவவென்பவற்றானமன்
மெய்வருத்தும்விழுமத்தினீங்குவான்
றெய்வமிக்கசிவத்தலயாத்திரை
செய்வதற்குவலித்தனன்சிந்தையுள். (சு)

காஞ்சிகாளத்திகாசிகமலைசீ
வாஞ்சியந்தென்மதுரைமுதலிய
நாஞ்சினீள்மதினற்பதிபற்பல
தோஞ்சிதைப்பத்தொழுதனன்செல்வுழி. (எ)

ஆகலூழ்வந்தடுத்துப்பிடித்துந்தப்
போகநீடுபுராதனகானனத்
தேகன்வைரவமாபுரத்தெல்லையோர்
சோகமோப்புமணிவரைத்துன்னினான். (அ)

அந்திலன்னவனண்மிவதிதலுஞ்
சந்திவந்தனையாற்றியதண்புனன்
முந்தியாடன்முயன்றனனாமென
வெந்திவாகரன்மேல்கடன்மூழ்கினான். (கூ)

தேமன்முண்டகச்செங்கையப்புங்கவ
னோமகுண்டத்தொளிரவளர்த்தநீ
மேவங்கிதுணைதரநாறின்றாற்
காமர்மாலையங்காலத்துச்செக்கரோ. (க0)

அரவநான்மறையாற்றழல்வாயவி
விரவநல்கவிரைந்தெடுக்கின்றதோ
ரிரதமல்கியவின்னறும்பாளிதத்*
திரளையேய்ப்பவெழுந்ததுதிங்களே. (கக)

பரிக்குமேழ்பரித்தேரவன்பாயொளி
யெரிக்கட்பெய்வுழியேர்புசிதர்ந்துள
பொரிக்கணத்திற்பொலிந்துமலிந்தன
தரித்தவொண்சுடர்த்தாரகையொளியே (கஉ)

அதிர்திரைப்புவியாருயிர்யாவையும்
விதிர்விதிர்ப்பித்தவெய்யவன்வீதலும்
முதிர்கலைத்தண்முழுமதிக்கொற்றவன்
கதிர்பரப்பிக்களிப்புறுத்தானரோ. (கங)

* பாளிதம் - பாற்சோறு.

மிளிர்தரும்பல்விலங்கினந்துஞ்சின
வளியுறங்கினவன்றில்வெள்ளோதிமங்
கிளிதுயின்றகிரிகரனேர்சிறைக்
களிகொணெஞ்சினன்கண்வளர்ந்தானவண். (கச)

முக்குறும்பில்வளரொளிமூர்த்தியைத்
திக்குளீரித்திருநகர்ப்பொன்னகர்ப்
புக்குநோக்கியர்போதுமினென்பபோற்
குக்குடக்குலங்*கூவலவோவல. (கரு)

பொம்மல்சாலுமப்புண்ணியநாய்கன்றன்
மும்மலத்தைமுனிவன்சிதானந்தச்
செம்மல்போக்குந்திறந்தெரிப்பானென
வம்மவல்லிருளட்டினன்ருேன்றினன். (கசூ)

வெயிலெழுந்துவிரிதருமுன்னரோ
குயிலெழுந்தகுரண்டமெழுந்தன
மயிலெழுந்தனமாக்களெழுந்தன
துயிலெழுந்தனன்சொற்றவணிகர்கோன். (கஎ)

காலையாற்றுங்கடன்கழித்தப்புரி
மாலைவீதிவலம்புரிந்தேகுவான்
வேலைபோலும்வினைப்பரமுற்ருெரீஇ
மேலையின்பம்விரவவிளம்புவான். (கஅ)

விண்டுபாசம்விலங்கவுளத்திடைப்
பண்டுகண்டறியாதபரானந்த
மண்டுகின்றதுமாசறுதேசுமெய்
கொண்டுதிப்பியக்கோலம்படைத்தன்றே. (ககூ)

புனைமதிச்சடைப்புண்ணியனண்ணிய
வனைபெரும்புகழ்வைப்பளவாதன
நினைவினுற்றுநெறியுளியேத்தினேற்
கினையவூதியமெங்கணுமெய்தில. (உ0)

வலந்துடித்தனவாதலின்வல்லையீண்
டிலங்குமானிடயாக்கையினற்பெறு
மலந்திடாதவுறுதித்தகையதோர்
நலங்கிடைக்குநமக்கிதுதிண்ணமே. (உக)

---

* கூவல - உடன்பாட்டுக் குறிப்புமுற்று.

எனவியம்பியியங்குறுமேல்வையி
லனகம்பனுக்கன்பர்வெண்பூதிய
ரினநிரம்பியிருங்கயிலாயம்போல்
வனமலிந்தமடனென்றுநோக்கினன். (உஉ)

அந்திவானத்தவிர்தரவார்சடை
யிந்துமானவிமைப்பநுதலினீ
றுந்துதெள்ளமிழ்தத்தினெழுக்கென
வந்துபொங்கிவழியவிழியருள். (உங)

மலருமாம்பன்மலர்வயின்வண்கதிர்
நிலவுநேரநிலவக்குறுநகை
யுலவியும்பருடுவினெளிரமெய்ப்
பலநிறத்த*பராக்கமணிக்கணம். (உச)

விண்வழுக்குபுவீழ்ந்துமிளிர்ந்தெனக்
கண்வழுக்குமொளியிற்கவின்றுறை
புண்வழுத்தவிர்புந்தியின்யோகியை
மண்வழுத்துமடத்துட்புகுந்தரோ. (உரு)

அடுத்துக்கண்ணுற்றட்டாங்கபஞ்சாங்கத்தாற்
படிப்படிந்துவணங்கினன்பன்முறை
பொடிப்பமேனிபுளகநயனநீர்
வடிப்பவுள்ளமலர்ந்துநின்றன்றனே (உசு)

யாரைநீயிவணெய்தியதற்கெவன்
காரணங்கழறென்றுகருணைமீ
தூரவன்னேனுரைப்பக்கிரிகரன்
வாரமிக்குவழுத்தலுறுகின்றான். (உஎ)

வேறு.

பொன்னிநாட்டெழிற்பூம்புகாரெனும்பெரும்புரியுண்
மன்னுமாதனவைசியர்மரபிடைவந்தே
னென்னதாகியநாமமுங்கிரிகரனென்ப
பன்னுபாப்பணிப்பரன்பதிபலதொழூஉப்படர்வேன். (உஅ)

பவங்கடோறும்யான்பண்ணியபுண்ணியம்பலிப்ப
நிவந்தவிந்நகர்நென்னலுற்றிற்றைநாணினதா
ளுவந்துசார்ந்தனனென்வரலாறிதென்றுரைத்துத்
தவந்திரண்டனவுறுவனைமறுவலுந்தாழ்ந்தான். (உகூ)

---

* பராக்கம் - உருத்திராக்கம்.

தாழ்ந்தவன்றனையுயர்ந்தவன்பார்த்துளந்தன்னி
லாழ்ந்தவெண்புனற்செஞ்சடைக்கருமிடற்றரன்றாள்
சூழ்ந்துதேர்ந்துநின்றொல்பவத்தொடர்பெலாஞ்சோறும்
வீழ்ந்தநெஞ்சினைகேட்கெனவிளம்புவான்விரித்து. (௩௦)

முன்னர்வேட்டுவச்சாதியிற்றோன்றியோர்முனிவ
னன்னர்மாதவநலிந்தனைமீண்டுமிஞ்ஞாலத்
தன்னகேழலாயுதித்துவேதியருயிரலைத்துப்
பின்னர்நீளியகோளியந்தருவெனப்பிறந்தாய். (௩௧)

சொற்றதொன்மரநீழலில்வேனில்வாய்த்துவன்றிக்
கற்றமேலவர்காமிகமுதலவாகமத்துண்
முற்றரும்பொருளோதியபதியறமுதிர்வாற்
பெற்றதாகுநீயிங்கின்றபெறலரும்பிறவி. (௩௨)

இப்பவத்திடையலகிலதிருப்பதியிறைஞ்சி
யெப்பகற்கணுமீசனையிதயமீதிருவிச்
செப்பமிக்கபஃறருமமுஞ்செய்திவட்சேர்ந்தா
யொப்பகற்றியகதியினியுறுதியென்றுரைத்தான். (௩௩)

அனையவாசகமனைத்தையுமஞ்செவியார்த்திக்
கனைபுனிற்றிளங்கன்றெதிர்கறவைபோற்கனிந்து
நனையினஞ்சலிபுரிகரகிரிகரநாமன்
வினையினீங்கியயோகியையிரந்திதுவேண்டும். (௩௪)

மூன்றுகாலத்துநிகழ்ச்சியுமுழுதொருங்குணர்வோ
யேன்றதொண்டனேன்குலத்தவர்பண்டையவியல்புந்
தோன்றநிற்பதோர்போழ்தத்திலன்னவர்துன்னு
மான்றசெய்தியுநனிவிதந்தருளுதியெனலும். (௩௫)

இன்புநீடியமுகமலர்ந்திளநகையரும்பி
யன்புசால்கிரிகரன்மிசைக்கருணைநோக்களித்துத்
துன்புதோன்றருஞ்சுகப்பெருவாரியுட்டோய்ந்த
நன்புலத்தவனுய்கர்தம்வரன்முறைநவில்வான். (௩௬)

உகாதுபொன்னியாறொழுகலான்வளஞ்சுரந்தோங்கி
மகாரின்மன்பதைதவைகலும்வளர்க்கின்றவளவன்
விகாதமின்றியேயாட்சிசெய்நாட்டதுவியன்பூம்
புகாரெனும்பெயர்ப்பட்டினம்பொற்பொடுபொலியும். (௩௭)

அங்கணுல்வருணத்தருங்கலப்புடையவருந்
தங்கடங்களுக்கியன்றனதருமத்திற்றவரு
தெங்கணுவினுலிணையவென்றியம்புதற்கரிய
துங்கநீள்பெரும்போகமார்ந்தளப்பிலர்தொக்கார். (ஙஅ)

அவருண்மன்னவர்பின்னவரதீதசித்தாந்த
வுவமையோவிபசைவநன்னெறிவழாதோம்பிச்
சிவபிரானையுட்டிளைத்தனரெழுத்தைந்துஞ்செப்பித்
தவநிரம்பியசாதனம்பூதிமெய்தரிப்பார். (ஙகூ)

அடல்விடைப்பரனடியிணைப்பத்திமையானுந்
தடவுமேருமால்வரைபுரைதருதனத்தானு
மிடரினெய்தியார்க்கீத்திடுமிருங்கொடையானும்
வடபுறத்திறைநறுமுறுப்புறவுறவாழ்ந்தார். (சo)

பண்டைவல்வினைவயத்திஞற்பரசிவபத்திக்
கண்டருஞ்செழுங்கதிர்விளக்கவிதலுங்கதித்து
மண்டுநல்குரவெனுமிருள்போர்த்தலான்மருட்சி
கொண்டுகூர்துயர்க்குழியுள்வீழ்ந்தனரிளங்கோக்கள். (சக)

செய்வதின்னதென்றறிகலர்சிந்தனைதிகைத்து
மொய்வளத்ததங்கரொரீஇத்திங்களோர்மூன்றின்
மெய்வருந்தியவிரைந்துகாவிரிக்கரைமீப்போய்த்
தெய்வதத்தனிச்சையமாமலைத்தலைச்சேர்ந்தார். (சஉ)

ஆங்குமேவலுமன்னவர்க்குடம்புநோவகன்ற
வோங்குவெம்பசிதாகமாதியமுழுதொழிந்த
தீங்குநீங்கியவுணர்ச்சியுமுன்னையிற்சிறந்த
தாங்குதற்கொணுவுவகையுஞ்சிந்தையுட்சார்ந்த. (சங)

ஓதுநாய்கர்யாவருங்குழீஇயுலப்பிலூழ்த்திறனே
தீதுதீர்தருசையத்தின்மான்மியச்செயலோ
சாதுவாயவிவ்வுறுதிகணமையினிச்சார்தற்
கேதுவேதுகொலென்றனரிருந்துளவேல்லை. (சச)

திங்கள்சேக்கியவேணியுந்திருக்குளத்திருக்கும்
வெங்கணீள்பணிப்பணிகளுமணிமணிமிடறும்
புங்கமான்மழுப்பாணியுங்கரந்தனன்போந்த
நங்கணுதனிற்கலிங்கமாதவனவணணுக. (சரு)

வணிகரோடினராடினர்பாடினர்வந்து
பணிபுவீழ்ந்தனரானந்தபாட்பநீர்பாய்ந்து
திணிநிலத்தையுங்குழைத்திடவெழுந்துளந்தேருப்
பிணியின்வாடியவெமக்கருமருந்துறழ்பெரியோய். (சசு)

கொய்யுநாண்மலர்க்குளிர்பொழிற்புகார்வணிக்குலத்தேம்
பெய்யுமாமுகிலூர்தியுந்தனதனும்பெட்ப
மெய்யுலாந்திருமிசைந்தயாநிரப்புமீதூர
வுய்யுமாறென்றுமுணர்கிலாதுறுதுயருழந்து. (சஎ)

பொற்றைபோன்றுயர்மாளிகைபொலியுமெம்புரிநீத்
திற்றைநாளிவணெய்தினேமிடர்க்கடலேற
வொற்றைவான்புணையுனசரணிரண்டெனவுற்றுங்
கற்றைவேணியாய்காமியாவென்றலுங்கலிங்கன். (சஅ)

மறுமையிம்மைவீடெனவிவற்றுறுமைசுவரிய
மறுதியற்றவீசுவரசம்பந்தத்ததன்றே
வுறுதிபொன்றியவுயர்சிவபத்தியினெறிவால்
வறுமைவாளராவாய்ப்பட்டீர்மதிவிதிவழித்தே. (சகூ)

கடந்தசெய்தியைக்கருதலிற்பயனெவன்கண்டீர்
மடந்தபுத்தநும்மனத்திடையான்புகன்மாற்றம்
படர்ந்தபைந்தருப்பாய்ச்சுகூராணியிற்பதித்துத்
தொடர்ந்ததுன்பொரீஇத்தொண்டர்காளுய்ம்மெனச்சொல்லும். ()

பொன்னியாற்றிருமருங்குளசிவநகர்போற்றி
வன்னிகூவிளங்கரந்தைசேர்செஞ்சடாமகுடச்
சென்னிநாதனைாங்தொழினடகஞ்செய்து
மன்னிவாழ்சிதம்பரத்தினைவழிபடூஉவதிமின். (ருக)

ஆயிடைச்சிலவானியம்வைகுழியன்பா
லாயிடைச்சியென்றவள்வயின்வளர்ந்தமாற்கரிய
வாயிடைச்சிறுநறுநுதற்பணாயிறையருளே
யாயிடைச்சிவாசாரியனொருவனையடைதிர். (ருஉ)

அவனுமக்குமெய்யாகமத்தியம்பியவாற்று
லுவமைசெற்றுயர்தீக்கைகள்பக்குவமோர்ந்து
பவமறப்புரிந்தஞ்செழுத்தஞ்செவிப்பகருந்
தவமதெய்தலுமுன்னையிற்பல்வளந்தழைக்கும். (ருங)

அன்னதேசிகனுறொனினறைகுவன்கேண்மின்
முன்னரோர்பகன்முதிரொளிக்கயிலேயின்முதல்வன்
மன்னகக்குலமன்னவன்றன்னருமகட்குப்
பொன்னவாங்கடிபொழிலெழில்காட்டினன்போந்தான். (ருச)

போயகாலையிலகோரவத்திரத்துழிப்பொள்ளென்
ருயவேர்த்துளியொன்றுகீழிழிதலுமதனேத்
தூயபைந்தொடிச்செங்கையாலேற்றனடோகை
மேயசாயலினுயகிகங்கையுள்விடுத்தாள். (ருரு)

அச்சுவேதநீர்சேயுருவாகவாறுறு
விச்சுவேசனூர்விளிபவர்க்கிருண்மலவீக்கப்
பிச்சுவீத்தருள்பிறக்கிடுங்காசியிற்பெரியோர்
நச்சுமாமணிகன்னிகைச்சேர்த்ததுநலக்க. (ருசு)

வரதனுகமத்துறைமறையறைநெறிவாழ
மரணமற்றவர்மற்றவர்மானிடர்வாழச்
சரவணப்பெயர்ப்பொய்கையிற்சாமிவாழ்ந்தாய்குக்
குரவநாண்மலர்வாழ்ந்ததாலனையபைங்குழவி. (ருஎ)

அன்றுவேதியனரியமாசைவன்மெய்யாற்றி
னன்றுநாடொறுநடப்பவன்கோவிந்தநாமந்
துன்றுகின்றவன்மகவிலியத்தகுதுறைக்கட்
டன்றுணேப்பிடியோடுநீராடுமோசார்ந்தான் (ருஅ)

மழவிளங்கதிர்தொழவிளங்கதிர்வருமழலேக்
குழவிநோக்கியாதுலன்பொலன்குவையெதிர்கொளல்போன்
முழவுநேர்புயத்தெடுத்தணேஇமோந்துச்சிமுத்துண்
டழகுதண்மொழிநிறைநிறைபன்னிபாலளித்தான் (ருகூ)

அவலநீங்கினள்வாங்கினளணிமுகிற்கோட்டுப்
பவளவெற்பிழியருவியின்முலேவழிபாலேத்
தவலில்கேண்மையாலூட்டியாள்பார்ப்பதிதகைந்தா
ளுவகையுற்றுறுமைந்தனுங்கந்தனேயொத்தான். (சுo)

மக்களின்மையின்மனமுனமகிழ்ந்தவர்பின்ன
ரொக்குலத்தெழுசேய்கொலோவிதனேயின்றெம்மிற்
பக்கமேவியகொண்டுபோய்வளர்த்திடிற்பகைவர்
நக்கவர்க்கெவனவில்வெனநலிவுகூரோல்வை. (சுக)

சங்கையென்னுநீர்கொள்ளவீரித்தகுதநயன்
மங்கைபங்கனகோரமா்முகனகன்வந்தா
னுங்கணேன்பினுற்கிடைத்தனன்மறைச்சடங்குனுற்றித்
திங்கள்யாண்டுதோரேம்புமென்றதுநபதெய்வம். (கூஉ)

என்றவானசரீரியையினிதுகேட்டிறும்பூ
தொன்றமுன்னேயினுண்மலர்ந்திருவருமுயிரு
ணின்றநின்மலனருணினேஇநீர்க்கடனிரப்பிப்
பொன்றரும்புதல்வனேமனேயிடைக்கொடுபுக்கார். (கூகூ)

அகரவாழ்க்கையரனேவர்க்குநிகழ்ந்தவாறறைந்து
புகரில்சாதகவினேமுதன்மரபுளிபுரிந்து
தகவினேம்பவகோரசிவாக்கியைதரித்தோ
னிகமவாகமமோதுரூதுணர்ந்தனனெறியால். (கூச)

ஆண்டுபன்னிரண்டணேந்தபின்பரன்பதியான
காண்டல்வேட்கையாற்றந்தைதாய்கடும்புடன்கலவ
நீண்டநீர்மையங்காசியினீங்கினனியமம்
பூண்டுபஃறலம்போற்றுபுசார்ந்தனன்புலியூர். (கூரு)

பொற்பொதுக்கணெம்புண்ணியன்புவியுயப்புரியு
மற்புதத்திருக்கூத்துநேர்நோக்கியுள்ளகமு
மெற்புநெக்குநெக்குருகியதன்வசமிழந்து
சிற்பரத்தெழுபேரின்பவாரியுட்டினேத்தான் (கூகூ)

அன்னபோழ்துசிற்றம்பலத்தெம்பிரானருளாற்
கொன்னகோரசிவாரியவிங்கர்க்குடபாற்
றென்னராமுனியாச்சிரமத்திசைச்சேக்கி
மன்னுசைவசித்தாந்தபோதகனெனவாழ்தி. (கூஎ)

எனநிவந்தவாக்கியாவருஞ்செவிமடுத்தேத்த
வனகஞானவாசாரியன்சீரியவாணே
தனதுசென்னியிற்றுங்கினன்றங்குமத்தானக்
குனலரும்பெருந்திருவுறப்படர்மினென்றுய்த்தான். (கூஅ)

உய்த்தவன்றனேயிறைஞ்சிமீண்டிருவர்தேடொருவர்
பொய்த்தவம்படாப்பயன்றரும்புரிபலபோற்றி
மொய்த்தவன்பினுற்குறுகிலர்குறுகினர்மோன
மெய்த்தவப்புலிபணிபணிசிதம்பரவியலூர். (கூகூ)

துன்னுங்காலமுன்யாமமாதலிற்பசிதொலைத்தற்
கென்னுங்கண்டிலாரினைவுறுமெட்டியர்யார்க்கும்
பன்னும்பார்ப்பனியாகியூண்பாத்தனள்பனையாங்
கன்னம்பாலிக்குந்தில்லையென்பதுபிழையாமோ. (௭௰)

புகழ்ச்சிசால்சிவகங்கைநீர்புலரியிற்புறத்து
மகத்துமுள்ளனவழுக்குறவழுக்குறவாடீஉ
நகத்தனுக்கரநம்பனூர்நாடகநாடி
யுகப்பினோங்கினர்சிலபகல்வணிகராண்டுறைந்தார். (௭௧)

உழுவலன்பினருணைத்தவாவொழுகுநாளொருநாண்
மழுமறிப்பறழ்களக்களக்களக்களமறைத்து
விழுதுகற்பகம்விட்டெனமிளிர்தளிர்வேணி
தழுமகோரசிவன்றிருநடந்தொழூஉச்சார்வோன். (௭௨)

தெருவினுய்கணைச்சேய்மையிற்கண்டவர்சிந்தை
மருவுறும்பரிபாகமுற்றோதியான்மதித்தெம்
மருகுதம்மிவர்தம்மையென்றுழையர்மாட்டறைந்து
பொருவில்பொன்னெடுவரைபுனைமடத்தினுட்புக்கான். (௭௩)

வேறு.

ஏவலரிமைப்பினேகியிப்பர்தம்மினத்தையெய்தி
மேவலர்புரங்கள்செற்றவெள்விடைப்பாகனீன்ற
கூவலர்சீர்த்திமூர்த்திகுறிப்புணர்த்தலுமகிழ்ந்து
காவலர்பின்னர்நன்னர்க்கையுறையேந்திப்போந்தார். (௭௪)

கலிங்கமாமுனிவன்சொற்றகருணையங்குரவன்றேசு
மலிந்தவிப்பெரியோனென்னவலித்தவன்றிருமுனண்மி
வலிந்துவந்தாண்டுகொண்டவள்ளலேசரண்புக்கேமை
நலிந்தவெந்துயரினீக்கிநல்கெனப்பணிந்துநிற்ப. (௭௫)

அனையனையருளினோக்கியகோரவாசிரியனோது
மினையலீர்வணிகீர்நுங்களெண்ணமுஞ்செயலுமெல்லா
நினைவிடைவைத்துணர்ந்தாநீடுபல்வளமீண்டோங்கிப்
பினையுமக்கழிவிலாதபேரின்பவீடுங்கூடும். (௭௬)

என்றுதன்கையால்வெண்ணீறீந்துகண்மணிபூண்பித்தாங்
கொன்றியமரபிற்றீக்கையுஞற்றுபுபல்லதிங்க
டுன்றுமாவவணிருத்தித்தொல்பதிநூற்கருத்து
நன்றறிவுறுத்துத்தம்மூர்நண்ணியவிடைகொடுத்தான். (௭௭)

அச்சிவாசாரியன்சேவடிமுடிபடியவீழ்ந்து
நச்சிலேங்கட்குமிக்கநலந்தருகருணையாய்க்கியா
மிச்சையிற்செய்யுங்கைம்மாறின்னதென்றறிதறேற்ரு
*மச்செலாம்பொறுத்திட்டெம்மைவழிவழியடிமைகோடி. (எஅ)

எனக்கரைந்தேத்திப்பல்காலிறைஞ்சினர்துனேஇப்படர்ந்து
தனக்குநேர்தானேயாயதண்புகார்தலைப்பெய்துற்று
மனக்கவல்விகந்துமுன்னின்வாணிகத்துறைநடாத்திக்
கனப்பெருநிதிபடைத்துக்களிசிறந்துமர்கள்வாழ்ந்தார். (எகூ)

இன்னருட்டிருவெண்காடனெனும்பெயர்மிலைந்தார்யார்க்கு
மன்னருட்கடைக்கண்செய்கௌமாரியைக்குமாரியாகத்
தென்னருட்குவராதுய்த்தசிவபிரான்குறியர்ச்சிப்ப
நன்னருட்டிளைத்தவன்பாணுடொறுநையாநின்ருர். (அ0)

அவரதுகனவிற்ரேன்றியங்கணனருளுகின்ருன்
கவலையினெழிதிவெள்ளைக்கானிலோர்பனவமேலோ
னுவமையில்சுவணப்பேழையுதவுவனுதன்கணேங்கித்
தவழுநம்மிலிங்கத்திற்குத்தகவழிபாடியற்றி. (அக)

வருதிநம்பக்கலென்றுமறைதலுந்திருவெண்காட
ருருகியவுளத்தர்சாலவுணாதடுமாறும்வாயர்
கருமயிர்சிலிர்த்தமெய்யர்கண்வழிவழிநீர்மூழ்கி
யருடொழுதெழுந்தாரோகையளவியாமளக்கவற்ரே. (அஉ)

பரிசிவணின்னதாகப்பரமனுரகோரவாசாற்
குரியவாச்சிரமத்தின்பாலொருதனிச்சித்தரிற்போய்த்
தரிசனநல்கியிந்தத்தமனியப்பேடகத்தை
யரியயனிறைஞ்சுவெண்காட்டாலயமுன்றில்வைத்தே. (அங)

ஊங்கணேவாளைக்கூயொவ்வொருவராத்தொடுமொசெய்தி
பூங்கரஞ்சேர்த்தியாவர்பொருக்கெனத்திறப்பித்தாரோ
வாங்கவர்கண்வழங்கியதனுள்வாழ்குறியின்பூசை
பாங்குறப்புரிதற்கேற்றபான்மையுநிகழ்த்துகென்னு. (அச)

கரப்பமிக்கிறும்பூதோடுகளாயறுமுவகையெய்திச்
சிரத்தினுஞ்சிந்தைமாட்டுஞ்சிவனருள்சுவணப்பெட்டி
வரத்தனிவார்த்தையேற்றுவல்லையிற்சிதவனத்தை
யரக்கெறிகமலத்தாற்சென்றடைந்தனனகோரவாசான். (அரு)

* மச்சு - குற்றம்.

வழிவழியெம்மையாள்வோன்மாயிருங்கோயில்வாயி
லெழில்வளர்மாழைப்பேழையிருவினன்வருநர்தம்மைப்
பழிதபவேறுவேறுபாணியாற்றீண்டுவித்தும்
பொழிகதிர்த்தாயவஃதுபூட்டுவிட்டிலதுமன்னே. (அசு)

யாதினியிழைத்தற்பாலதெனச்சிவாசாரியன்சொல்
போதினிற்றிருவெண்காடர்புகூஉவரன்முறைகேட்டத்தின்
மீதினிதங்கைசற்றுவிரவுவித்திடுதலோடு
மேதினிவியக்கும்வண்ணமிகவிளைஇத்திறப்புண்டன்றே. (அஎ)

திறத்தலுமகன்விளங்குந்திப்பியக்குறியைநோக்கி
யறப்பெருஞ்செல்விபாகத்தமலனைரணைந்துசொற்ற
திறத்தினையகோரவாசான்றிருவுளத்தடைத்துத்தீக்கை
பிறக்கியதிருவெண்காடர்பெற்றனரிலிங்கப்பேழை. (அஅ)

வணங்குபுபல்கால்வாழ்த்திமகிழ்ச்சியாலனுவையைமாண்ட
குணங்கெழுதேசிகன்பாற்கொண்டனர்புகாவைப்போகி
மணந்தனர்வடதிசைக்கோன்வளத்தினிள்வளத்துமன்னி
யணங்குதுற்றிணங்குமேனியண்ணல்பூசனைசெய்தார்ந்தார். (அகூ)

பின்புசின்ஞான்றிற்பெம்மான்பேரருள்பதியப்பெற்றுத்
துன்புடைத்திவ்வாழ்வென்னுத்துறந்துமெய்ஞ்ஞானமேவி
யன்புமீதூரவீசற்கலகில்பாமாலைசாத்தி
வன்புசான்மலந்துமித்துவார்கடலொற்றிவைகி. (கூ0)

தமதுபௌதிகசரீரந்தனியொளியிலிங்கமாக
யமனைமுன்படர்த்ததாளிலிரண்டறக்கலந்துநின்று
ரிமமலைவில்லிக்கில்லையில்லையென்னுமேயீந்த
துமர்குலப்புகழ்ச்சியெம்மானுவன்றுமுற்றுறதொன்றே. (கூக)

இனிப்பனுள்சென்றபின்றையிப்பனாக்கிள்ளியெள்ளிப்
பனிப்புறுந்தகையசெய்யப்பரிந்துதங்குரவன்பாற்போய்க்
குனித்தனர்சென்னிசென்னிகொடுமையைக்கூறலோடும்
புனிற்றிளங்கன்றெதிர்ந்தபொருவருங்கபிலைபோல்வான். (கூஉ)

ஈண்டுநீரிருமினென்னவிறுத்தனரொழுகும்போழ்து
பாண்டியன்றன்றேத்துக்குப்பசுங்குடிநல்லபல்ல
வேண்டுமென்றீசானப்பேர்மேயதேசிகனைக்கொண்டு
தூண்டுவனகோரவாசாற்றுன்னவோர்திருமுகம்மே. (கூங)

அத்திருமுகத்தைநோக்கியவன்றிருமுகமலர்ந்து
பத்திமையரற்கேவைத்தபஞ்சவனேடுநீயி
ருத்திசைவம்மினென்னவுத்தரந்தீட்டியுய்த்து
மெத்திசையவனைத்தில்லேவியனகர்வருவித்தன்றே. (கூச)

வளவனேவழுதியுட்.கோண்மருதுடம்படுத்தியந்த
வுளமகிழ்வுற்றகேண்மையொருவருமிருவருஞ்சீ
ரளவியகுணத்தீசானவனகனும்வணிகர்யாருங்
கிளர்வொடுமுடங்குபோதக்கேடிலித்தென்னுடெய்தும். (கூரு)

தொகைமிகமல்கியோங்கித்துலங்குவைசியனையொன்பான்
வகையினராக்கிவைகவளநகரங்கள்போற்றத்
தகைநவசிவாலயம்பஃறண்ணடைபிறசிறப்பு
நகைமதிமருமானுலங்நாய்கர்க்குநல்குவித்து. (கூசு)

ஒன்பதுகோயில்வாய்ந்தவுயர்தலனிளசைமாற்றூர்
பொன்பயில்வடுகநாதபுரமிருப்பைக்குடிப்பேர்க்
கொன்புரிநேமஞ்சூரைக்குடிவேலன்குடிகணேச
நன்பதியிரணியூரிங்நகர்கட்குமுன்னர்ச்சொன்னர். (கூஎ)

யாவருமீண்டவேகியீன்றுகாத்திறுதியேய்க்கு
மூவருமுளேத்தமூலமுதல்வனைமுன்னிப்போற்றி
நாவருநலத்தகூடனண்ணியங்கயற்கணங்கை
யோவருஞ்சுந்தரேசனெண்கழலிறைஞ்சிமன்னே. (கூஅ)

செந்தமிழ்வெற்பனேரிச்சிலம்பனெட்டியரீசான
வுந்தமிழ்தனையவாசானுவரொடுகுமாரமூர்த்தி
யந்தமிழ்மென்சொலம்மையப்பர்பண்டரசுகைத்த
சிந்தமிழ்முரசார்கோயில்சேக்கிவைசியர்க்குச்செப்பும். (கூகூ)

அன்னவூர்திகவான்றேன்றியளகைமன்மகவான்போன்றீ
ரின்னதொல்பாண்டிப்*பாண்டிலிருங்குருசரிதங்கேண்மின்
முன்னரோர்விளையாட்டுன்னிமுழுமுதற்கடவுள்வெற்றிப்
பொன்னகமொருவிக்கௌரிபுடைநகவிடைமேல்கொண்டான். ()

பாரிடம்பாங்குமொய்ப்பப்பவனிசெல்வுழிப்பவானி
பாரிடம்பவுத்தமாதிப்பாயிருண்மூழ்கப்பார்த்தவ்
வாரிடர்நீப்பிரந்தாளகிலமுமளித்தா†ளாயிட்
டாரிடநூல்புராணமருமறையறியொணுனே. (கoக)

---

* பாண்டில் - நாடு. † ஆயிட்டு - என்பது ஆயிட்லால் என்னும் பொருட்டு.

அதற்கவன்மகிழ்ந்தீசானத்தற்றைநாட்சேயாய்நல்கி
யிதக்கொடுங்குன்றுதுன்றுமிலஞ்சியின்மருங்குசேர்த்த
விதப்புகழ்நீண்டமாண்டவியன்வியன்கோத்திரத்திற்
சதத்தின்மேன்மேதஞ்செய்போதாயனசூத்திரத்தான். (க௦உ)

அந்தணனொருவன்றூநீராடுவானணைந்தான்கொண்டு
மைந்தனின்வளர்க்குநாளில்வரம்பிலற்புதந்தெரித்துப்
பிந்தவந்தவர்க்குச்சைவப்பெருமுறையேற்பவாற்றிப்
பந்தமுற்றொழிக்கின்றானிப்பரமதேசிகன்றான்மன்னோ. (க௦௩)

ஆதலாற்குரவனாகவடைமினீரிவனையென்று
காதலாலுரைத்தின்னோர்துங்கையடையெனச்சிவன்றாட்
போதலாற்றொழாவீசானபுனிதர்க்குச்செழியற்கோதி
யீதலாற்றபயனேடுமெழீஇத்தனதிருக்கைசாரும். (க௦௪)

பிரான்மலைவளரீசானப்பெருந்தகைமரபிற்பன்னாள்
விராவுபுவணிகர்சைவமெய்யுபதேசம்பெற்றுப்
பராவருவளம்படைத்துப்பல்குறுஞான்றவ்வாசா
னிராமயன்காசிக்கேகிநெடும்பகல்வராமையாலே. (க௦௫)

அனையருட்பலரகோரவாசிரியன்பாலன்பால்
வினையமுற்றெய்திப்போற்றிவேறொருகுருவைக்கோடற்
கினைவுதீராணைவாங்கியெழிற்*பழம்பதியிலுள்ளான்
வனையுநூன்†முதலாக்கூறும்வருணவாச்சிரமத்தானே. (க௦௬)

ஞானதேசிகனைக்கொண்டுநலஞ்செறியில்லஞ்சேரி
யானதோர்மேன்மைப்பான்மையாடகபுரத்திருத்தி
மானவாகமம்விதித்தமரபுளிதீக்கைபெற்று
வானவேந்தழுக்கறுப்பவளநனிநுகர்ந்துவாழ்வார். (க௦௭)

சிவன்றளிசிறந்தபல்லசீரணோத்தாரணஞ்செய்
தவன்பொருட்டானவேனையறமெலாம்புரிந்துவாவி
தவந்தவர்‡வருணூல்வேதசாத்திரபாடசாலை
நிவந்தசத்திரசீர்ப்பந்தர்நித்தலுநிறுவுகிற்பார். (க௦௮)

---

* பழம்பதி - திருப்புனவாயில்.

† முதலாக்கூறும்வருணம் ஆச்சிரமமென்பன - பிராமணவருணமும் பிரமசரிய வாச்சிரமமுமாம்.

‡ அருணூல் - சிவாகமம்.

இன்னனதருமமோவாதியற்றிளங்கோக்கள்போற்று
மன்னவாலயத்துளிந்தவயிரவன்கோயிற்சேர்க்கை
நன்னர்நின்வழியிற்றெய்வநாயகனென்பான்றோன்றித்
தென்னமர்வளரொளிக்குத்திருப்பணியனந்தஞ்செய்வான். (கoகூ)

தெய்வநாயகனெனும்பேர்தெயினனென்றிவண்மருஉவா
முய்வகையோதுமாசியுருத்திடுஞ்சாபம்பார்த்த
னெய்வடிக்கணேயிற்றப்பாவிவன்வழியுதிப்பார்க்கென்றும்
பெய்வளைத்தோளிபாகன்பிரசாதமுன்னிற்கும்மே. (ககo)

என்றினியுறுவவெல்லாமெழிற்சிதானந்தன்கூற
நன்றிகூர்கிரிகரப்பேர்நாய்கன்கேட்டுவகைபூத்து
மின்றிகழ்வேணியெந்தாய்விழுத்தகுசித்தாந்தத்தி
னொன்றியவுண்மைநாயேற்குபதேசித்தருள்கவென்றான். (ககக)

அவ்வுரைசெவியுட்சார்த்தியவனிருகருமவொப்பு
வெவ்வியமலத்தின்பாகமிளிர்சத்திநிபாதமேவுஞ்
செவ்வியீதெனவுணர்ந்துசேலொடுகமடங்கோழி
யுவ்வியலெனப்பார்த்துன்னியுடம்புதைவந்துமாதோ. (ககஉ)

விழியினுன்மனத்தாற்கையான்மெய்ஞ்ஞானதீக்கையாற்றிப்
பழிதபுசிவாகமத்துப்பதிபசுபாசமென்ன
மொழியுமுப்பொருளின்றன்மைமுழுவதுந்தவச்சுருக்கித்
தெழிபுகழ்ச்சாமுசித்தசிதானந்தயோகிசெப்பும். (ககங)

முழுதுணர்வனுதிபோதமுதிருண்முடிவிலாற்றல்
வழுவொழிதூயமேனிமலங்களினியல்பாநீங்க
ளெழுதகுவரம்பிலின்பஞ்சுதந்தரமுடைமையாய
பழுதறுமெண்குணத்துப்பரசிவன்பதியென்றோர்தி. (ககச)

ஆருயிர்த்தொகைபிணித்தவாணவமனுக்கவெஃகுஞ்
சீரியவிச்சைபாங்கேசெயத்தகுமுபாயமெல்லா
மோருநன்ஞானமவ்வாறுஞற்றுறுங்கிரியையென்னச்
சேருமுச்சத்திகொண்டுசிவபிரான்விளையாடுங்காண். (ககரு)

கற்றநூற்பொருளுஞ்சொல்லுங்கருத்திடையடங்கித்தோன்ற
மற்றதுவிகாரியாகாவண்ணமேபோலவீச
னற்றமிலிலயபோகவதிகாரவவத்தைப்பட்டுஞ்
சற்றெனுந்துடக்கெஞ்ஞான்றுந்தனக்கின்றியிலங்கிநிற்பன். (ககசு)

அனுதிகேவலத்தழுந்துமாவிகள்பாசநீத்து
மனுதிகட்கதிதானந்தவாழ்வுறும்பொருட்டெம்பெம்மான்
றனுதிருமாயையாலேதனுமுதனுன்குஞ்சேர்த்தி
யினுதினிதென்னுங்கன்மத்தியைபயனுட்டித்தீர்க்கும். (ககஎ)

தானையினமுக்கேகாலிசாணியேயுவர்மண்ணுதி
யேனையவழுக்காற்போக்கல்யாவர்க்குங்கண்கூடன்றே
யானதோர்செயல்போற்சீவர்க்காணவமலத்தைநீக்க
*மானமிலாற்றன்மாயாமலத்தையும்புணர்ப்பன்வள்ளல். (க்கஅ)

நன்பழந்தேன்பால்கண்டுநயந்தளித்துஞ்சிலர்க்கு
வன்பின்மெய்வாளாலீர்ந்துமருத்துவனேயொழிப்ப
தன்பினுலாய்தற்றேயளற்றில்வானிற்றுன்பின்பு
மன்பதைக்கருத்தியண்ணன்மலப்பிணிமாற்றுநீர்மை. (ககசூ)

தாதைமாலரன்மகேசன்சதாசிவன்விந்துநாதந்
தீதிலாச்சத்தியோடுசிவமெனுமொன்பான்மேனி
நாதனேதரித்தியாவுநல்குபுபுரந்தழித்துப்
பேதுறத்திரோபவித்துப்பின்பனுக்கிரகஞ்செய்யும். (கஉ0)

உலகெலாமாகிவேருயுடனுயக்கரத்தகாரத்
திலகியமுதன்மையெய்தியியக்கியேயெண்ணில்கண்ணுக்
கலரிபோலளவிறந்தவான்மாவுக்கறிவித்தென்று
நலமிகவுபகரித்துநாயகனருளின்மன்னும் (கஉக)

கேவலத்தாணவத்தாற்கிரியையோடிச்சைஞான
†மாவரிப்புண்டுகன்மத்தளவினிற்றேகமாதி
மேவியசகலத்தீசன்மிடைத்தபல்போகந்துய்த்துத்
தாவருஞ்சுத்தத்தன்னேன்றருபேரின்புண்பவான்மா. (கஉஉ)

சத்தசத்தெனுமிரண்டுட்சார்ந்ததன்வண்ணமாகி
நித்தமாய்வசிக்கப்பட்டநீள்வியாபகத்துத்தூல
சித்துமாய்ச்சிவன்றெரிப்பத்தெரீஇச்சுதந்தரமொன்றின்றி
யத்தகுபரனுக்கென்றுமடிமையாமுயிர்களெல்லாம். (கஉங)

ஏகமாய்த்தத்தங்காலவெல்லேயினமுவும்பற்பல்
வேகமார்சத்தித்தாகிவிழிக்கிருட்படலஞ்செம்புக்
காகியகளிம்புபோற்சேர்ந்தான்மாவுக்‡கணுதையீத்து
மோகநீடகந்தை§யோக்கிமூலவன்மலங்குலாவும். (கஉச)

---

* மானம் - அளவு. † ஆவரிப்புண்ணல் - மறைக்கப்படுதல்.
‡ அணுதை - அணுத்தன்மை. § ஒக்கி - ஓங்குவித்து.

இறைபரிக்கிரகசத்தியென்னவுற்றெவ்வுயிர்க்கும்
பொறையுடல்கரணம்போகம்புவனம்வந்தொடுங்கநின்று
நிறைவதாயுலகவித்தாய்நித்தமாய்மூவகைத்தாய்
மறைவுசற்றிரித்துணர்த்திமயக்கமுஞ்செய்யுமாயை (கஉரு)

சதசத்தாமுயிர்முனேந்துசந்ததமியற்றலாலே
யிதமற்றையகிதமென்றுவிருவிதமாகியின்பை
விதனத்தைவிளைத்துக்கட்டாய்விமலனுணையினடக்குங்
கதமிக்கபிறப்பினுக்குக்காரண*கான்மியந்தான். (கஉசு)

மாயாகாரியத்தையீண்டுமாமாயையென்றுங்கீழ்மே
லோயாமையுழல்பசுக்கட்குறுகணீத்துறுதிகூட்டுந்
தாயானவாதிசத்திதனைத்திரோதாயியென்றுந்
தூயாரிவ்விரண்டனேடுதொன்மலமைந்தாச்சொல்ப. (கஉஎ)

மெய்வகையுணர்ந்தவாசான்மேனியையதிட்டித்தீச
னுய்வகையத்துவாக்களோராறும்பரிசோதித்திட்
டய்வகைப்பாசமோப்பியனனியமாக்கிக்கொள்ளச்
செய்வகைதவிர்ந்தவான்மாச்சிவத்துவவியத்திசேரும். (கஉஅ)

இத்திறஞ்சிவானுபூதியெய்தியசீவன்முத்தர்
முத்திபஞ்சாக்கரத்தைமுன்னேவாதனேயேருமே
நித்தியநினைந்திலிங்கநேசர்தேசிகனென்றின்னேர்ப்
பத்தியிற்கனிந்திறைஞ்சிப்பரவுபுகளியாநிற்பார். (கஉகூ)

வளர்பதிபுண்ணியத்தான்மலபரிபாகமப்பாற்
றளர்வுதீர்நால்வகைத்தாஞ்சத்திநிபாதமப்பாற்
கிளரிருவினையொப்பப்பாற்கேடருமுத்தியப்பா
லளவிலானந்தப்பேறுமடைவினிற்கிடைக்குமன்றே. (கஙo)

என்றுபதேசித்திங்கணெழில்வளரொளிப்பிரானே
வென்றிசால்வடுகத்தேவைமெய்வடிவுடையதாயை
நன்றுநீதொழுதுநேமநகர்வயினிருத்தியென்னு
மின்றிகழ்சடிலயோகிவிடைகொடுத்தருளினனே. (கஙக)

வேறு.

அரும்பர ஞான குருகுலம் பிரித லாற்றல னுயினு மன்னே
ன், றருந்திரு வாணை மறுப்பதற் கஞ்சித் தாண்மலர் தன்முடிச்
சாத்தி, யொருங்கிய வுளத்துக் கிரிகர னெருவா ரெருருவினன்

---

* கான்மியம் - கன்மமலம்.

வயிரவ தீர்த்தத், திருந்துநீர் படிந்து வளரொளி நாதன் சினகரஞ் சேர்ந்தனன் சென்று. (கநூஉ)

அஞ்சுகை யன்பர்க் கல்லவர்க்*ககற்று மஞ்சுகை யமலனை வணங்கி, விஞ்சிய வென்றி வேற்படை யேந்தி விளங்குசெவ் வேள்கழ லிறைஞ்சி, நஞ்சிலா தன்சே யருள்பெறீஇப் பிரான்முன் னணுகுபு பணிந்துசூழ் வந்து, நெஞ்சுநெக் குருக நீர்விழி வார நெடுந்துதி நிகழ்த்துத லுற்றான். (கநூங)

அலகிலாக் கால மைம்பொறி யடக்கி யறமுயன் றிருந்தவ மயர்ந்த, புலர்வறு புகழ்ச்சிப் பகீரதன் பொருட்டுப் பொள்ளென ப் புடவிவான் போர்த்தெவ், வுலகமு மொழிக்கு மூழிவெள் ளத்தினோராயிர முகத்துட னுற்ற, சலமலி கங்கை நங்கையைக் கரந்த சடாடவித் தனிமுடி போற்றி. (கநூச)

இரதிதோய் விடலை யுடலைவெள் ளடலை யெனப்புரி கண்ணுதல் போற்றி, கரவடத் தக்கன் மகந்தப நிவந்த கரும்புரு வக்கொடி போற்றி, வரதைமுன் புதைப்ப வையகக் கிருளை மலர்த்திய விருவிழி போற்றி, சுரவியன் மகதி நாரதன் கானத் தும்புரு வாழ்செவி போற்றி. (கநூரு)

உயர்ச்சியு முறழ்வு மோவுநால் வேத முயிர்த்திடு நாசிகை போற்றி, யயர்த்தமுப் புரம்வெந் தவியிய முறுவ லரும்புசெம் பவளவாய் போற்றி, யியக்கமெய் தாங்கித் †துரானிறீஇ யசையாதிதழுதுக் கெயிற்றினம் போற்றி, பெயற்புயல் வெள்க வருள்பொழி பஞ்சப் பிரமமாந் திருமுகம் போற்றி. (கநூசா)

எவ்வமின் றிமையோ ரமிழ்துண விடமுண் டிருண்டொளிர் கந்தரம் போற்றி, தெவ்வடு சிலைக்கை விசயன திரடோட் டிளைத்தமற் றிண்புயம் போற்றி, யிவ்வழி யுய்வா னன்பர்சொல் கோவை யேட்டிடை யெழுதுகை போற்றி, செவ்வரிக் கருங்கட் பசியவெண் கொடியோன் சிரங்கவர் கூருகிர் போற்றி. (கநூஎ)

ஒருமருப் புவாவோ டறுமுக சிங்க முலாவரும் வரையுரம் போற்றி, பெருகொளிப் புகரைப் பேணிவைத் திருந்து பின்பருள் பெருவயின் போற்றி, வெருவரற் பாந்தட் கச்சணி நுசுப்பும் விமலைமே லூருவும் போற்றி, தெருமரத் தொண்டற் செறிந்தவெங் கூற்றைத் தெறுதிறற் சேவடி போற்றி. (கநூஅ)

---

* அகற்றல் - நீக்கலும் பரம்பச்செய்தலும் என இருபொருட்டு.

† துரால் - துரும்பு.

எனத்துதித் தாதி சைவராற் பூசை யியற்றினன் விபூதியேற் றணிந்து, கனக்கனக் குழலி வடிவுடை யாளைக் கான்மலர் கான்ம லர் வழுத்தி, மனத்தெழு மன்பால் வடுகநா யகன்றன் மலிபரங் கருணைநேர் வாங்கித், துனற்கரும் பத்சசண் டேசனைத் தொழுது தொடர்கணத் தனுஞையின் மீண்டான். (கநகூ)

இத்தலப் பாங்கர் நேமமா நகரத் தெய்தினன் பல்பகல் வதி ந்து, நித்தமுத் தனது பத்தராம்*பத்தர் நினைத்தன வனைத்தையு நேர்ந்து, சுத்தவத் துவித சைவசித் தாந்தத் தெர்ல்பொருள் குர வன்வாய்க் கேட்ட, சித்தம்வைத் தினிது தெளிந்துமெய்ந் நிட் டை திளைத்தரன் கழனிழல் செறிந்தான். (கசO)

என்று†மா ணுக்கன் வியாதன்மா ணுக்க னியம்பலு நைமிச முனிவர், குன்றுயர் மாடங் கோபுரம் பதாகை குயில்பயில் பொ ழிலெழில் குலவும், பொன்றரு துறக்கக் கணிசெய்வை ரவனூர்ப் பொன்றரு மான்மியங் கேட்டு, மன்றநீ டின்பத் தகம்புறங் குளிர் ந்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார். (கசக)

வளரொளி நாதன் வடிவுடை யம்மை மார்த்தாண்ட வயிரவ மூர்த்தி, கிளர்வுறு மொருத்தன் முகன்குகன் முதலோர் கெழும லிற் குழுமியார் யாருந், தளர்வொழி தருமங் கோலக்கா மகிமை தண்சுவைத் தமிழினுற் சாற்றும், பளகறு பரிசு படைத்துளேன் பண்டைப் பாக்கியம் பலித்தது‡ நன்றே. (கசஉ)

ஆ படலம் கஎ-இ செய்யுள் - ககருக.

வாழிவைரவன்கோயில்வளர்புகழ்
வாழிவண்மைவணிகர்பெருங்குலம்
வாழிமாதுமைமன்னனடியவர்
வாழிவைதிகசைவமரபெலாம்.

வைரவன்கோயிற் புராணம்
முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

---

* பத்தர் - பத்துத் தொழிலையுடையார். அடியார்க்கு இவையுண்மை "பத்துக்கொலாமடியார் செய்கைதானே" என்னுந் திருநாவுக்கரசரது தேவா ரத்தான் உணர்க. † மாண் நாக்கன் - மாட்சிமையுற்ற நாவையுடையான்.

‡ நன்று - பெரிதென்னுங் குறிப்புணர்த்துவதோர் வினையெச்ச வுரிச் சொல். இதனைத் தொல்காப்பியச் சொல்லதிகார வுரியியல் நாற்பத்தேழாஞ் சூத்திரத்திற் காண்க.